# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2166/12 - 2020 මාර්තු මස 11 වැනි බදාදා - 2020.03.11

*2166/ 12 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 11 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1995 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க இலங்கைக் கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்**

**பிரிவு 4 (2) இன் படியான பிரசுரித்தல்**

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு (இதன் பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, 1995 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் தேவைகளுக்காக இத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கைக் கணக்காயவு நியமங்களுக்கான மாற்றங்களை இரண்டாயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டு சனவரி மாதம் பதினைந்தாம் திகதியிலிருந்து அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் காலத்தை அடக்கும் நிதிக் கூற்றுக்களுக்கு நடைமுறைக்கு வருகின்றது.

நிறுவகச் சபையின் கட்டளைப்படி,

**பிரசன்ன லியனகே,**
செயலாளர்

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம்,
இலக்கம் 30A,
மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07,
2020, மாச்சு 11.

**15 டிசம்பர் 2019 மற்றும் அதற்குப்பின்னரான கணக்கீட்டுக் காலப்பகுதிகளுக்கு வலுவுடையதான இலங்கை கணக்காய்வு நியமத்தின் மாற்றங்கள்.**

| விபரம் | 2017 | 2020 |
|---|---|---|
| **சொற்களஞ்சியம்** | | |
| *கணக்கீட்டு மதிப்பீடுகள்* | ஒரு நாணய பெறுமதிக்கான துல்லியமான அளவீடு இல்லாதபோது அண்ணளவான மதிப்பீடாகும். இந்தப் பதம் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை உள்ளபோது சீர் மதிப்பில் அளவிடப்பட்ட தொகை மற்றும் மதிப்பீடு தேவைப்படும் வேறு தொகைக்கு உபயோகிக்கப்படும். SLAuS 540* சீர் மதிப்பிலான கணக்கீட்டு மதிப்பீடுகளை விபரிக்கும்போது, ''சீர் மதிப்புக் கணக்கீட்டு மதிப்பீடுகள்'' எனும் சொற்றொடர் உபயோகிக்கப்படும். * SLAuS 540, ~~*சீர்மதிப்பிலான கணக்கீட்டு மதிப்பீடுகளை உள்ளடக்கிய*~~ *கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப் படுத்தல்களின் கணக்காய்வு.* | ஒரு நாணயப் பெறுமதிக்கான துல்லியமான அளவீடு இல்லாதபோதான அண்ணளவான மதிப்பீடாகும். இப்பதம் மதிப்பீட்டுநிச்சயமற்ற தன்மை உள்ளபோது சீர்மதிப்பில் அளவிட்ட தொகைக்கும் மதிப்பீடு தேவைப்படும் வேறு தொகைகளுக்கும் உபயோகிக்கப்படும். SLAuS; 540 <u>(மறுசீரமைக்கப்பட்டது)</u>* சீர் மதிப்பிலான கணக்கீட்டு மதிப்பீடுகளை விபரிக்கும்போது, ''சீர்மதிப்புக் கணக்கீட்டு மதிப்பீடுகள்'' என்னும் சொற்றொடரை உபயோகிக்கின்றது. * SLAuS; 540 <u>(மறுசீரமைக்கப்பட்டது),</u> கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்பு பட்ட வெளிக்காட்டல்களைக் கணக்காய்வு செய்தல் |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 200 (SLAuS200 – சுயாதீனமான கணக்காய்வாளரின் பொதுவான நோக்கங்களும் இலங்கை கணக்காய்வு நியமத்திற்கு அமைவாக கணக்காய்வினை நடாத்துதலும்)** | | |
| *அடிக்குறிப்பு | ~~இந்த நியமத்தில் பக்கம் 1280 தொடக்கம் பக்கம் 1361 வரை அடையாளம் காணப்பட்டுள்ள திருத்தங்களானவை 31 மார்ச் 2018 இல் அல்லது அதற்குப் பின்னர் முடிவடையும் காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய கணக்காய்வுகளுக்கு வலுவுடையதாகும் என உறுதிப்படுத்தப்படுகின்றது.~~ | [உள்ளடக்கம் நீக்கப்பட்டுள்ளது] |
| A42 | SLAuSs கள் உள்ளார்ந்த இடர் மற்றும் கட்டுப்பாட்டு இடர்களை பொதுவாக குறிப்பிடுவதற்கு பதிலாக ''பொருண்மையான பிறழ்கூற்று இடர்'' பற்றிய இணைந்த மதிப்பீட்டினை குறிப்பிடுகிறது. எனினும் கணக்காய்வாளர் கணக்காய்வுச் செய்முறை மற்றும் நுட்பங்கள் அல்லது நடைமுறைக் கவனத்திற் கொள்ளல் அடிப்படையில், உள்ளார்ந்த மற்றும் கட்டுப்பாட்டு இடர் தொடர்பாக தனியான அல்லது இணைந்த மதிப்பீடுகளை மேற்கொள்ளலாம். ~~பிறழ்கூற்று இடர் தொடர்பான மதிப்பீடானது விகிதாசாரம் போன்ற அளவு ரீதியான சொற்களால் அல்லது அளவுரீதியிலல்லாத சொற்கள் மூலமாக வெளிப்படுத்தப்படலாம்.~~ எந்தச் சூழ்நிலைகளிலும், கணக்காய்வாளரால் பொருத்தமான இடர் மதிப்பீடுகளை மேற் | <u>பிறழ்கூற்று இடர் தொடர்பான மதிப்பீடானது விகிதாசாரம் போன்ற அளவு ரீதியான சொற்களால் அல்லது அளவுரீதியிலில்லாத சொற்கள் மூலமாக வெளிப்படுத்தப்படலாம்.</u> எந்த சூழ்நிலைகளிலும், கணக்காய்வாளரால் பொருத்தமான இடர்மதிப்பீட்டு நடைமுறைகள் உருவாக்கப்படுவதன் தேவையானது அவை எந்தெந்த வேறுபட்ட அணுகுமுறைகளில் உருவாக்கப்படுகின்றன என்பதைக் காட்டிலும் முக்கியமானதாகும். இலங்கை கணக்காய்வு நியமம் உள்ளார்ந்த இடர் மற்றும் கட்டுப் பாட்டு இடரினை தனித்தனியாக குறிப்பிடு வதற்கு பதிலாக ''பொருண்மையான பிறழ் கூற்று இடர்'' பற்றிய இணைந்த மதிப்பீட்டை குறிப்பிடுகின்றது. எனினும், SLAuS <u>330 க்கு அமைவாக உறுதிப்பாட்டு மட்டத்தில் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் கணிசமான இடர்களை உள்ளடக்கிய</u> |

| விபரம் | 2017 | 2020 |
|---|---|---|
| | கொள்வதன் தேவை, எத்தகைய வேறுபட்ட அணுகுமுறைகளில் மேற்கொள்ளப்பட்டன என்பதை காட்டிலும் முக்கியமானதாகும். | மதிப்பீடு செய்த பிறழ்கூற்று இடர்களுக்கான பதிலிறுக்கைகளாக மேலதிக கணக்கய்வுச் செயன்முறைகளை வடிவமைத்தல் மற்றும் செயற்படுத்துதல் என்பவற்றின் பொருட்டு உள்ளார்ந்த இடர் மற்றும் கட்டுப்பாட்டு இடர் என்பவற்றுக்கான தனித்தனியான மதிப்பீட்டினை SLAuS 540 (மறுசீரமைத்த)*. தேவைப்படுத்தும் **கணிசமான ஊடுசெயல் வகுப்புகள், கணக்கு மீதிகள் அல்லது கணக்கீட்டு மதிப்பீடுகள், வெளிப்படுத்தலில் பொருண்மையான பிறழ்கூற்றை இனம் காணல் மற்றும் மதிப்பிடுதலின் போது, தெரிவு செய்யப்பட்ட கணக்காய்வுச் செயன் முறைகள், நடைமுறைப் பிரயோகங்கள் மற்றும் நுட்பங்கள் என்பவற்றுக்கு அமைய கணக்காய்வாளரானவர் உள்ளார்ந்த மற்றும் கட்டுப்பாட்டு இடர் என்பவை தொடர்பில் தனியான மற்றும் இணைந்த மதிப்பீடுகளை மேற்கொள்ளலாம்.<br><br>* SLAuS 540 (மறுசீரமைக்கப்பட்டது), *கணக்கீட்டு மதிப்பீடுகளையும் தொடர்புடைய வெளிக்காட்டல்களையும் கணக்காய்வு செய்தல்*, பந்தி 16<br>** SLAuS 330, பந்தி 7(b) |
| A48 அடிக்குறிப்பு | SLAuS; 540, ~~*சீர்மதிப்புக் கணக்கீட்டு மதிப்பீடுகளை உள்ளடக்கிய கணக்கீட்டு*~~ *மதிப்பீடுகள் மற்றும் வெளிக்காட்டல்களை கணக்காய்வு செய்தல்*, மற்றும் SLAuS 700 (மீளமைக்கப்பட்டது), *நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தினை உருவாக்கம் மற்றும் அறிக்கையிடல்*, பந்தி 12 | SLAuS; 540 (மீளாக்கம்), *கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் அதன் தொடர்புடைய வெளிக்காட்டல்களை கணக்காய்வுசெய்தல்*, மற்றும் SLAuS 700 (மறுசீரமைக்கப்பட்டது), *நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தினை உருவாக்குதல் மற்றும் அறிக்கையிடல்*, பந்தி 12 |
| A71 | …<br>கணக்காய்வின் சிறப்பான அம்சங்களைக் கையாளுகின்ற ஒரு SLAuS ஆனது (உதாரணமாக, SLAuS 540, SLAuS; 315 (மறுசீரமைக்கப்பட்டது) மற்றும் SLAuS; 330 போன்ற இலங்கை கணக்காய்வு நியமங்களின் நோக்கங்கள் மற்றும் தேவைப்பாடுகள் ஆகியவை இந்த SLAuS இன் விடயப்பரப்போடு தொடர்பாக எவ்வாறு பிரயோகிக்கலாம் என்பதன் அடிப்படையில் விரிவடையலாம். ஆனால் இவற்றை மீளச்செய்வதில்லை. எனவே, SLAuS; 540 இல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைவதில், ஏனைய தொடர்புடைய இலங்கை கணக்காய்வு நியமங்களின் நோக்கங்கள் மற்றும் தேவைப்பாடுகளுடன் | …<br>கணக்காய்வு நியமமானது (உதாரணமாக, SLAuS; 540 (மறுசீரமைக்கப்பட்டது), SLAuS 315(மறுசீரமைக்கப்பட்டது) மற்றும் SLAuS 330 போன்ற இலங்கை கணக்காய்வு நியமங்களின் நோக்கங்கள் மற்றும் தேவைப்பாடுகள் ஆதியன இந்த SLAuS இன் விடயப்பரப்போடு தொடர்பாக எவ்வாறு பிரயோகிக்கப்படலாம் எனும் அடிப்படையில் விரிவுபடுத்தலாம். ஆனால் இவற்றை மீளச்செய்வதில்லை. எனவே, SLAuS; 540 (மறுசீரமைக்கப்பட்டது) இல் குறிப்பிட்ட நோக்கங்களை அடைவதில், ஏனைய தொடர்புடைய இலங்கை கணக்காய்வு நியமங்களின் நோக்கங்கள் மற்றும் தேவைப்பாடுகளுடன் தொடர்பான கவனத்தை கணக்காய்வாளர் கொண்டிருப்பர். |

| விபரம் | 2017 | 2020 |
|---|---|---|
| | தொடர்பான கவனத்தை கணக்காய்வாளர் கொண்டிருப்பார். | |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 210 (SLAuS 210- கணக்காய்வு பணிக்கமர்தலின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளுதல்)** | | |
| *அடிக்குறிப்பு | ~~இந்த நியமத்தில் பக்கம் 1280 தொடக்கம் பக்கம் 1361 வரை அடையாளம் காணப்பட்டுள்ள திருத்தங்களானவை 31 மார்ச் 2018 இல் அல்லது அதற்குப் பின்னர் முடிவடையும் காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய கணக்காய்வுகளுக்கு வலுவுடையதாகும் என உறுதிப்படுத்தப்படுகின்றது.~~ | [உள்ளடக்கம் நீக்கப்பட்டுள்ளது] |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 220 (SLAuS 220 – நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான தரக்கட்டுப்பாடு)** | | |
| *அடிக்குறிப்பு | ~~இந்த நியமத்தில் பக்கம் 1280 தொடக்கம் பக்கம் 1361 வரை அடையாளம் காணப்பட்டுள்ள திருத்தங்களானவை 31 மார்ச் 2018 இல் அல்லது அதற்குப் பின்னர் முடிவடையும் காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய கணக்காய்வுகளுக்கு வலுவுடையதாகும் என உறுதிப்படுத்தப்படுகின்றது.~~ | [உள்ளடக்கம் நீக்கப்பட்டுள்ளது] |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 230 (SLAuS 230 – கணக்காய்வு ஆவணப்படுத்தல்)** | | |
| *அடிக்குறிப்பு | ~~இந்த நியமத்தில் பக்கம் 1280 தொடக்கம் பக்கம் 1361 வரை அடையாளம் காணப்பட்டுள்ள திருத்தங்களானவை 31 மார்ச் 2018 திகதியில் அல்லது அதற்குப் பின்னர் முடிவடையும் காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய கணக்காய்வுகளுக்கு வலுவுடையதாகும் என உறுதிப்படுத்தப்படுகின்றது.~~ | [உள்ளடக்கம் நீக்கப்பட்டுள்ளது] |
| A7 | • …<br>• …<br>○ உதாரணமாக, கணக்காய்வாளர் தொழில்சார் சந்தேக மனநிலையை ஆவணப்படுத்த உகந்த வழிமுறை இல்லாமல் போகலாம். ஆனால் கணக்காய்வு ஆவணப்படுதலானது SLAuSக்கு அமைய தொழில்சார் சந்தேக மனநிலையுடன் கூடிய கணக்காளரின் செயற்பாட்டுக்கு சான்று வழங்குகிறது. இத்தகைய ~~சான்றுகள் கணக்காய்வாளரின் விசாரணைகளுக்கு பதிலிறுத்தலை உறுதிப்படுத்தக்கூடிய முக்கிய செயன்முறைகளை உள்ளடக்கும்.~~ | • …<br>• …<br>○ உதாரணமாக, கணக்காய்வாளரது தொழில்சார் சந்தேக மனநிலையை ஆவணப்படுத்துவதற்கு உகந்த வழிமுறையொன்றானது இல்லாமல் இருக்கலாம். ஆனால் கணக்காய்வு ஆவணப்படுதலானது SLAuS களுக்கு இசைவாக தொழில்சார் ஐயப்பாடான மனநிலையுடனான கணக்காளரது செயற்பாட்டுக்கான சான்றை தரும். <u>உதாரணமாக, கணக்கீட்டு மதிப்பீடு களுடன் தொடர்பாக, முகாமையின் உறுதிப்பாட்டிற்கு சாதகமான மற்றும் முரண்படும் கணக்காய்வுச் சான்று பெறப்படும்போது, பெற்றுக்கொண்ட சான்றுகளின் போதுமான மற்றும் பொருத்தமான தன்மை தொடர்பாக</u> |

| விபரம் | 2017 | 2020 |
|---|---|---|
| | | முடிவுக்கு வருவதற்கு மேற்கொண்ட தொழில்சார் தீர்மானங்களை அடக்கி மேற்படி சான்றை கணக்காய்வாளர் எவ்வாறு ஆராய்ந்தார் என்பது தொடர்பில் ஆவணப்படுத்துதலைக் குறிப்பிடலாம். |
| A10 | • …<br>• …<br>• அகவயத்தன்மைத் தீர்மானங்களின் பகுதிகளின் நியாயூர்வதன்மை மீது கணக்காய்வாளர் முடிவின் அடிப்படை ~~(உதா, கணிசமான கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயூர்வ தன்மை).~~ | • …<br>• …<br>• முகாமையின் அகவயத்தன்மையான தீர்மான பகுதிகளின் நியாயூர்வதன்மை மீதான கணக்காய்வாளரது முடிவுக்கான அடிப்படை.<br>• ஒரு கணக்கீட்டு மதிப்பீடு மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தலானது பிரயோகிக்கத்தகு நிதியறிக்கைச் சட்டக அடக்கத்துடன் நியாயூர்வமானதா அல்லது பிறழ்கூற்றானதா என்பதுபற்றி கணக்காய்வாளரது மதிபீட்டு அடிப்படை. |
| பின்னிணைப்பு | • SLAuS 540, ~~சீர்மதிப்புக் கணக்கீட்டு மதிப்பீடுகள் அடங்கலாக~~ கணக்கீட்டு மதிப்பீடுகளின் மற்றும் ~~தொடர்புடைய வெளிப்படுத்தல்களின்~~ கணக்காய்வு *பந்தி 23* | • SLAuS 540 (மறுசீரமைக்கப்பட்டது), கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் கணக்காய்வு – *பந்தி* 39 |
| **இலங்கை கணக்கீட்டு நியமம் 240 (SLAuS240 – நிதியறிக்கைகன் மீதான மோசடிகள் தொடர்பில் கணக்காய்வின் போதான கணக்காய்வாளரது பொறுப்புக்கள்)** | | |
| *அடிக்குறிப்பு | ~~இந்த நியமத்தில் பக்கம் 1280 தொடக்கம் பக்கம் 1361 வரை அடையாளம் காணப்பட்டுள்ள திருத்தங்களானவை 31 மார்ச் 2018 இல் அல்லது அதற்குப் பின்னர் முடிவடையும் காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய கணக்காய்வுகளுக்கு வலுவுடையதாகும் என உறுதிப்படுத்தப்படுகின்றது.~~ | [உள்ளடக்கம் நீக்கப்பட்டுள்ளது] |
| A47 | SLAuS 540 இனால் ஒரு முன்பிருந்தான மீளாய்வும் தேவைப்படுத்தப்படுகின்றது. இந்த மீளாய்வானது முகாமைத்துவத்தின் கடந்தகால மதிப்பீட்டுச் செயன்முறைகள், விளைவுத்திறன் பற்றிய கணக்காய்வுச் சான்றுகள், அல்லது பிரயோகிக்கத்தக்க சந்தர்ப்பங்களில் நிகழ்காலக் கணக்கீட்டு மதிப்பீடுகள் ஆக்கத்தில் முக்கியமானதும், கடந்த காலத்தில் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் மறுமதிப்பீடு, மற்றும் நிதிக்கூற்று வெளிப்படுத்தலை தேவைப்படுத்தும், நிச்சயமற்ற தன்மைகள் தொடர்பான மதிப்பீடுகள் போன்ற விடயங்கள் தொடர்பிலான கணக்காய்வுச் சான்றுகள் ஆகியவை தொடர்பில் தகவல்களை சேகரிக்கும் நோக்கத்தில் அமைந்த இடர்மதிப்பீட்டுச் செயன் முறையாக மேற்கொள்ளப்படுகின்றது. ஒரு நடைமுறையான விடயமாக, இந்தக் கணக்காய்வு நியமத்திற்கு ஒத்திசைவாக மோசடியின் காரணமாக எழக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் | SLAuS 540 (மீளமைக்கப்பட்டது) இனால் ஒரு முன்பிருந்தான மீளாய்வும் தேவைப்படும். இந்த மீளாய்வு முகாமையின் கடந்தகால கணக்கீட்டு மதிப்பீடுகளினது வினைதிறனைப் பற்றியதும், வெளிப்பாடு பற்றிய அல்லது பொருத்தமான போது, நிகழ்காலத்தில் பொருண்மையான பிறழ்கூற்று இடரினை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் உதவுவதற்கு அவற்றின் பின்னைய மீள்மதிப்பீட்டினைப் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பற்றிய நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டல்களைத் தேவைப்படுத்துகின்ற மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையைப் போன்ற விடயங்களைப் பற்றியதுமான, தகவலைப் பெற்றுக் கொள்வதற்கான இடர் மதிப்பீட்டுச் செயன்முறையாக முன்னெடுக்கப்படுகின்றது. ஒரு நடைமுறையான விடயமாகஇ இந்தக் கணக்காய்வு நியமத்திற்கு ஒத்திசைவாக மோசடியின் காரணமாக எழக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று தொடர்பான இடரைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய வழுக்களுக்கான முகாமைத்துவத்தின் |

| விபரம் | 2017 | 2020 |
|---|---|---|
| | தொடர்பான இடரைப் பிரதிநிதித்துவப் படுத்தக்கூடிய வழுக்களுக்கான முகாமை மதிப்பீடுகள், முடிவுகள் தொடர்பான கணக்காய்வாளரின் மீளாய்வு SLAuS 540 தேவைப்படுத்தும் மீளாய்வுடன் இணைத்து முன்னெடுக்கப்படலாம். ~~* SLAuS 540, மீள்மதிப்புக் கணக்கீட்டு மதிப்பீடுகளை உள்ளடக்கும் கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் கணக்காய்வு பந்தி 9~~ | மதிப்பீடுகள் மற்றும் முடிவுகள் தொடர்பான கணக்காய்வாளரது மீளாய்வானது SLAuS 540 (மீளமைக்கப்பட்டது) இனால் தேவைப் படுத்தப்படும் மீளாய்வுடன் இணைந்ததாக முன்னெடுக்கப்படலாம். |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 250 (SLAuS 250 – நிதிக்கூற்றுக்களுக்கான கணக்காய்வின் போது சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளைக் கவனத்திலெடுத்தல்)** | | |
| மாற்றங்கள் எவையுமில்லை | | |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 260 (மறுசீரமைக்கப்பட்டது) (இ.க.நி 260 (மறுசீரமைக்கப்பட்டது) – ஆளுமை பாரப்படுத்தப்பட்டோருடனான தொடர்பாடல்)** | | |
| 7 | சில ~~நியாயாதிக்கங்களில்~~ சட்டம் அல்லது ஒழுங்குவிதிகள் சில விடயங்களுக்கான ஆளுமை பாரப்படுத்தப்பட்டோருடனான கணக்காய்வாளரது தொடர்பாடலை மட்டுப்படுத்தலாம். ~~சட்டம்~~ அல்லது ஒழுங்குவிதியானது, பொருத்தமானவொரு ஆணையத்தினது ஒரு விசாரனையை உண்மையான, அல்லது சந்தேகத்துக்கு இடமான, சட்டவிரோதமான செயற்பாடாக பாரபட்சமானதாகக்கூடிய குறித்தவொரு தொடர்பாடலை, அல்லது ஏனைய செயற் பாட்டினை தடைசெய்யக்கூடும். இது ~~உரிமத்தினை எச்சரிக்கை செய்வதையும் உள்ளடக்கலாம். உதாரணமாக, பணச் சலவைக்கு எதிரான சட்டமுறைக்கு அமைய, கணக்காய்வாளர் இனங்கண்ட அல்லது சந்தேகத்திற்கு இடமான சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்காத செயற்பாடுகளை பொருத்தமான அமைப்பு ஒன்றிற்கு அறிக்கையிடவேண்டிய தேவை களைப்பற்றி குறிப்பிடலாம்.~~ இத்தகைய சூழ்நிலையில், ~~பிரச்சினைகளை சிக்கலானவையாகக் கணக்காய்வாளர் கருதுவதோடு இதற்கான பொருத்தமான நடைமுறையாக சட்ட~~ ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுவதைக் கருத்தில் கொள்ளலாம். | சட்டம் அல்லது ஒழுங்குவிதிகள் சில விடயங்கள் தொடர்பில் ஆளுமை பாரப் படுத்தப்பட்டோருடனான கணக்காய்வாளரது தொடர்பாடலை மட்டுப்படுத்தலாம். உதா: சட்டம் அல்லது ஒழுங்குவிதி பொருத்தமான ஒரு ஆணையத்தினது ஒரு விசாரனையை உண்மையான, அல்லது சந்தேகத்திற்கு இடமான, சட்டவிரோதமான செயற்பாடாக பாரபட்சமானதாகக்கக்கூடிய குறிப்பான ஒரு தொடர்பாடலை, அல்லது பிற செயற்பாட்டை தடைசெய்யலாம். சில சந்தர்ப்பங்களில் ,ரகசியத்தன்மைக்கான கணக்காய்வாளரது கடப்பாட்டிற்கும் தொடர்பாடல் செய்வதன் கடப்பாடுகளுக்கும் இடையே எழுகின்ற முரண்பாடுகள் சிக்கற்தன்மையானவையாக அமையலாம். அத்தகைய சூழ்நிலைகளில், சட்ட ஆலோசனையை பெற்றுக்கொள்வதில் கணக்காய்வாளர் கவனஞ்செலுத்தலாம். |
| A19 | கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் வெளிக்காட்டலுக்கான கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்களை மேற்கொள்வதை | கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நிதிக்கூற்று வெளிப்படுத்தல் ஆகியவற்றின் கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்களை கம்பனி மேற்கொள்வதை |

| விபரம் | 2017 | 2020 |
|---|---|---|
| | நிதிக்கூற்றுச் சட்டகங்கள் வழமையாகவே அனுமதிக்கின்றன. உதாரணமாக, நிச்சயமற்ற தன்மை தொடர்பான கணிசமான அளவீட்டு நிச்சயமற்ற தன்மை காணப்படும் போது கணக்கீட்டு மதிப்பீட்டினை உருவாக்குவதற்கு முக்கிய எடுகோள்களை பயன்படுத்துவதுடன் தொடர்புடைய வெளிக்காட்டல்களை குறிப்பிடலாம். மேலும், நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமை கடைப்பிடிக்கும் மிகவும் சிக்கலான அல்லது அகவயத் தன்மையான தீர்மானங்கள் பற்றிய மேலதிக தகவல்களைப் பயனாளர்கட்கு வழங்குவதற்கு கணிசமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்க வெளிக்காட்டல் அல்லது இக்கட்டான கணக்கீட்டு மதிப்பீடு (critical accounting estimates) அல்லது இக்கட்டான கணக்கீட்டு கொள்கைகளும் நடைமுறைகளும் (critical accounting policies and practices) ஆகியவற்றுக்கான குறிப்புரையினை சட்டம், ஒழுங்குவிதிகள் அல்லது நிதிக்கூற்றுச் சட்டகங்கள் தேவைப்படுத்தலாம். | நிதிக்கூற்றுச் சட்டகங்கள் வழமையாகவே அனுமதிக்கின்றன,உதாரணமாக, கணக்கீட்டு மதிப்பீடுகளின் ஆக்கத்தின் போதான எடு கோள்களின் உபயோகத்தை குறிப்பிடலாம். மேலும், நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது முகாமையால் மேற்கொள்ளப்படும் மிகவும் சிக்கலான அல்லது அகவயத் தன்மையான தீர்மானம் பற்றிய மேலதிக தகவல்களை பயனாளர்களுக்கு வழங்க கணிசமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கமான வெளிப்படுத்துதலையோ அல்லது இக்கட்டான கணக்கீட்டு மதிப்பீடு (critical accounting estimates) அல்லது இக்கட்டான கணக்கீட்டு கொள்கைகளும் நடைமுறைகளும (critical accounting policies and practices ஆகியவற்றுக்கான குறிப்புரையினை சட்டம், ஒழுங்குவிதிகள் அல்லது நிதிக்கூற்றுச் சட்டகங்கள் தேவைப்படுத்தலாம். |
| A20 | இதன்விளைவாக, ஆளுமை பாரப்படுத்தப் பட்டோருக்கு நிதியறிக்கைச் செயன்முறை களில் தங்களது கவனயீனம் சார்ந்த கடப்பாடுகளை விடுவிப்பதில், நிதிக்கூற்று களின் அகவயத்தன்மையான விடயங்கள் மீதான கணக்காய்வாளரது எண்ணங்கள் முக்கியமான தேவைப்பாடொன்றாக அமையலாம். உதாரணமாக, பந்தி A19 இல் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களுடன் தொடர்பான, கணிசமான இடர்களில் அதிகரிப்பை ~~ஏற்படுத்தக்கூடிய கணக்கீட்டு மதிப்பீட்டுடன் தொடர்புடைய நிச்சயமற்ற தன்மைக்கான வெளிப்படுத்தல்களின் போதுமானதன்மை கணக்காய்வாளரது அளவீடுகள்மீது ஆளுமை பாரப்படுத்தப் பட்டோர்~~ ஆர்வம் கொண்டிருக்கலாம். நிறுவன கணக்கீட்டு செயன்முறைகளின் கணிசமானதும் அளவுசார்ந்ததுமான விடயங்களைப் பற்றிய வெளிப்படையான மற்றும் பயனுடையதுமான தொடர்பாடல் என்பது, கணக்கீட்டுச் செயன்முறைகளின் ஏற்றுக்கொள்ளக்கூடிய தன்மை மற்றும் வெளிப்படுத்தல்களின் தரம் என்பவற்றை உள்ளடக்கலாம். இத் தொடர்பாடல்களில் உள்ளடக்கப்படக்கூடிய விடயங்களைப் பின்னிணைப்பு 2 இனங்காண்கின்றது.. | இதன்விளைவாக, நிதிக்கூற்றுக்களிலுள்ள அகவயத்தன்மையான விடயங்கள் மீதான கணக்காய்வாளரது எண்ணங்கள் ஆளுமை பாரப்படுத்தப்பட்டோருக்கு நிதியறிக்கைச் செயன்முறைகளில் தங்களது கவனயீனம் சார்ந்த கடப்பாடுகளை விடுவிப்பதில் முக்கியமான தேவைப்பாடொன்றாகும். உதாரணமாக, பந்தி A19 இல் விவரித்த விடயங்களுக்குத் தொடர்பாக, கணிசமான கணக்கீட்டு மதிப்பீட்டின் ஆக்கத்தில் பயன்படுத்திய செய்முறை, எடுகோள்கள், தரவு ஆகியவற்றின் தெரிவு அல்லது பிரயோகத்தினை சிக்கல், அகவயத்தன்மை, அல்லது ஏனைய உள்ளார்ந்த இடர்க் காரணிகள் எந்தளவுக்கு பாதிக்கும் என்பதன் மீதான கணக்காய்வாளரது எண்ணத்திலும் மற்றும் முகாமையின் புள்ளி மதிப்பீடு மற்றும் நிதிக்கூற்றுக்களிலுள்ள தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தின் உள்ளடகத்திற்கு அமைவாக நியாயூர்வமானதா இல்லையா *என்பது பற்றிய கணக்காய்வாளரின் மதிப்பீடு மீதும் ஆளுமை பாரப்படுத்தப்பட்டவர்கள் ஆர்வமுடையவராக இருக்கலாம்.* நிறுவன கணக்கீட்டு செயல்முறைகளின் கணிசமான, அளவுசார்ந்த விடயங்கள் பற்றிய |

| விபரம் | 2017 | 2020 |
|---|---|---|
| | | வெளிப்படையான மற்றும் பயனுடையதுமான தொடர்பாடல் என்பது, கணக்கீட்டுச் செயல்முறைகளின் ஏற்றுக்கொள்ளக்கூடிய தன்மை மற்றும் வெளிப்படுத்தல்களின் தரம் என்பவற்றை உள்ளடக்கும். பொருத்தமான போது, உரிமத்தின் கணக்கீட்டு மதிப்பீடுகள தொடர்புடைய கணிசமான கணக்கீட்டு நடைமுறையானது கணக்காய்வாளரினால் உரிமத்தினது குறித்த சூழ்நிலைக்கு மிகவும் பொருத்தமற்றது எனக் கருதுவதையும் இது உள்ளடக்கும். உதா: கணக்காய்வாளரது தீர்மானத்தின்படி கணக்கீட்டு மதிப்பீட்டுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய மாற்றுச் செய்முறை மிகப்பொருத்தமாகவதை குறிப்பிடலாம். இத் தொடர்பாடலில் உள்ளடக்கப்படக்கூடிய விடயங்களை பின்னிணைப்பு 2 இனங் காண்கிறது. |
| பின்னிணைப்பு 1 | [ஒத்த பந்தி இல்லை] | • SLAuS 540 (மீளாக்கம்), கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் அவற்றோடு தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் கணக்காய்வு – பந்தி 38 |
| பின்னிணைப்பு 1 | • ~~SLAuS 610 (மீளாக்கம்), *அகக் கணக்காய்வாளரது செயற்பாடுகளை உபயோகித்தல்* பந்தி 18;~~ | [உள்ளடக்கம் நீக்கப்பட்டுள்ளது] |
| பின்னிணைப்பு 2 தலைப்பு | **கணக்கீட்டு மதிப்பீடுகள்**<br>• ~~மதிப்பீடுகள் கணிசமானவையாக அமைகின்ற விடயங்கள், இலங்கை கணக்காய்வு நியமம் 540* இல் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்கள் உதாரணமாகப் பின்வருவனவற்றை உள்ளடக்கியவை ஆகியவற்றுக்காக:~~<br>○ ~~நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யவேண்டிய மற்றும் வெளிப் படுத்தப்படவேண்டிய கணக்கீட்டு மதிப்பீடுகளின் தேவைப்பாட்டில் அதிகரிப்பை ஏற்படுத்தக்கூடிய அத்தகைய ஊடுசெயல், நிகழ்வு மற்றும் நிபந்தனைகளை முகாமை எவ்வாறு அடையாளப்படுத்துகிறது,~~<br>○ ~~தற்போதய கணக்கீட்டு மதிப்பீடுகளை மறுசீரமைப்பதற்கான அல்லது புதிய மதிப்பீட்டிற்கான தேவைப்பாட்டில் அதிகரிப்பினை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலைகளிலான மாற்றங்கள்.~~ | **கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்கள்**<br>SLAuS 540 (மறுசீரமைக்கப்பட்டது) இன் பின்னிணைப்பு 2, கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் சார்பில் நிறுவனத்தின் கணக்கீட்டு செயல்முறைகளைப் பற்றிய கணிசமானதும் அளவுரீதியானதுமான விடயங்களைப் பற்றிய தொடர்பாடலின் போது கணக்காய்வாளர் கருத்திலெடுக்கவேண்டிய விடயங்களை உள்ளடக்குகின்றது. |

| விபரம் | 2017 | 2020 |
|---|---|---|
| | ⊖ ~~பிரயோகிக்கக்கூடிய நிதிக்கூற்றுச் சட்டகங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு மதிப்பீடுகளை ஏற்பிசைவு செய்தல் அல்லது விலக்குதல் பற்றிய முகாமையின் தீர்மானமானத்தினது ஒத்திவைதன்மை.~~<br>⊖ ~~கணக்கீட்டு மதிப்பீடுகளை உருவாக்கும் கடந்தகால செய்முறைகளில் மாற்றம் செய்யப்பட்டதா அல்லது செய்யப்பட வேண்டியுள்ளதா என்பதும் அவ்வாறிருப்பின் கடந்தகாலத்தின் கணக்கீட்டு மதிப்பீட்டிற்கான காரணம் மற்றும் விளைவுத்திறன்~~<br>⊖ ~~கணக்கீட்டு மதிப்பீடொன்றுக்காகத் தெரிவு செய்யப்பட்ட அளவீட்டு முறையானது பிரயோகத்திலுள்ள நிதிக்கூற்றுச் சட்டகத்துக்கு ஒத்திசைவானதா இல்லையா என்பதை உள்ளடக்கியதும், கணக்கீட்டு மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கானதுமான முகாமையின் செயன்முறைகள் (உ.தா.முகாமையானது மாதிரியொன்றை உபயோகிக்கின்ற போது);~~<br>⊖ ~~கணக்கீட்டு மதிப்பீடொன்றினை உருவாக்குகின்ற போது முகாமையினால் உபயோகிக்கப் படுகின்ற கணிசமான அனுமானங்களின் நியாயபூர்வ தன்மை.~~<br>⊖ ~~முகாமையினால் உபயோகிக்கப்பட்ட கணிசமான எடுகோள்களினது நியாய''ர்வ தன்மைக்கும், அல்லது பிரயோகத் திலுள்ள நிதிறிக்கைச் சட்டகத்தின் பொருத்தமான பிரயோகத்திற்கும், சில காரியங்களை முன்னெடுப் பதற்கான முகாமையின் ஆர்வம் மற்றும் அதன் இயலுமைக்கும் பொருத்தகவுள்ள போது~~<br>⊖ ~~பொருண்மையான வழக்கூற்றுக்களுக்கான இடர்கள்.~~<br>⊖ ~~முகாமையின் சாதகமான பக்கச் சார்பிற்கான குறிகாட்டிகள்~~<br>⊖ ~~மாற்று அனுமானங்களை அல்லது விளைவுகளை முகாமைத்துவம்~~ | |

| விபரம் | 2017 | 2020 |
|---|---|---|
| | கையாண்ட விதம் மற்றும் அவை நிராகரிக்கப்பட்டமைக்கான காரணம், அல்லது கணக்கீட்டு மதிப்பீட்டினை மேற்கொள்ளும் போதான நிச்சயமற்றதன்மையை முகாமை எதிர்கொண்ட விதம்.<br>~~o நிதிக்கூற்றுக்களிலுள்ள மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை தொடர்பான வெளிப்படுத்தலின் போதுமை.~~<br><br>~~* SLAuS; 540, சீர்மதிப்புக் கணக்கீட்டு மதிப்பீடுகளை உள்ளடக்கிய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் வெளிக்காட்டல்களின் கணக்காய்வு~~ | |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 265 (SLAuS 265 – அகக் கட்டுப்பாடுகளின் குறைநிலைகளை ஆளுமை பாரப்படுத்தப்பட்டோருடனும் மற்றும் முகாமையுடனும் தொடர்பாடல் செய்தல்)** | | |
| மாற்றங்கள் இல்லை | | |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 300 (SLAuS 300 – நிதிக்கூற்றுக்களுக்கான கணக்காய்வினைத் திட்டமிடல்)** | | |
| *அடிக்குறிப்பு | ~~இந்த நியமத்தில் பக்கம் 1280 தொடக்கம் 1361 வரை அடையாளப்படுத்தப்பட்டுள்ள திருத்தங்கள் 31 மார்ச் 2018 இல் அல்லது அதற்குப் பின்னர் முடிவடையும் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வுகளுக்கே ஏற்புடையவை என உறுதிப்படுத்துகிறது.~~ | [உள்ளடக்கம் நீக்கப்பட்டுள்ளது] |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 315 (மறுசீரமைக்கப்பட்டது) (இ.க.நி 315 (மறுசீரமைக்கப்பட்டது) – உரிமத்தையும் அதன் சூழலையும் விளங்கிக்கொள்வதன் ஊடாக பொருணமையான பிறழ்கூற்று இடரை இனங்காணுதலும் மதிப்பிடலும்)** | | |
| *அடிக்குறிப்பு | ~~இந்த நியமத்தில் பக்கம் 1280 தொடக்கம் 1361 வரை அடையாளப்படுத்தப்பட்டுள்ள திருத்தங்கள் 31 மார்ச் 2018 இல் அல்லது அதன்பின் முடிவடையும் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வுகளுக்கு ஏற்புடையது என உறுதிப்படுத்தப்படுகின்றது~~ | [உள்ளடக்கம் நீக்கப்பட்டுள்ளது] |
| **இலங்கைக் கணக்காய்வு நியமம் 320 (SLAus 320 – கணக்காய்வொன்றினை திட்டமிடல் மற்றும் நிகழ்த்துதலில் பொருண்மை )** | | |
| *அடிக்குறிப்பு | ~~இந்த நியமத்தில் பக்கம் 1280 தொடக்கம் 1361 வரை அடையாளப்படுத்தப்பட்டுள்ள திருத்தங்கள் 31 மார்ச் 2018 இல் அல்லது அதற்குப் பின்னர் முடிவடையும் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வுகளுக்கே ஏற்புடையவையெனஉறுதிப்படுத்துகின்றது~~ | [உள்ளடக்கம் நீக்கப்பட்டுள்ளது] |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 330 (SLAus 330 – மதிப்பிப்பட்ட இடர்களுக்கு கணக்காய்வாளரது பதிலிறுப்புக்கள்)** | | |
| *அடிக்குறிப்பு | ~~இந்த நியமத்தில் பக்கம் 1280 தொடக்கம் 1361 வரை அடையாளப்படுத்தப்பட்டுள்ள திருத்தங்கள் 31 மார்ச் 2018 இல் அல்லது அதன்பின் முடிவடையும் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வுகளுக்கு ஏற்புடையதாகும்~~ | [உள்ளடக்கம் நீக்கப்பட்டுள்ளது] |

| விபரம் | 2017 | 2020 |
|---|---|---|
| | ~~என உறுதிப்படுத்தப்படுகின்றது~~ | |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 402 (SLAus 402 – சேவை அமைப்புக்களைப் பயன்படுத்தும் உரிமங்கள் தொடர்பான கணக்காய்வுக் கவனத்திற்கொள்ளல்கள்)** | | |
| மாற்றங்கள் இல்லை | | |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 450 (SLAuS 450 – கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட பொருண்மையான பிறழ்கூற்றுக்களின் மதிப்பீடு)** | | |
| *அடிக்குறிப்பு | ~~இந்த நியமத்தில் பக்கம் 1280 தொடக்கம் 1361 வரை அடையாளப்படுத்தப்பட்டுள்ள திருத்தங்கள் 31 மார்ச் 2018 இல் அல்லது அதன்பின் முடிவடையும் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வுகளுக்கு ஏற்புடையவையது என உறுதிப்படுத்தப்படுகின்றது~~ | [உள்ளடக்கம் நீக்கப்பட்டுள்ளது] |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 500 (SLAuS 500 – கணக்காய்வுச் சான்றுகள்)** | | |
| *அடிக்குறிப்பு | ~~இந்த நியமத்தில் பக்கம் 1280 தொடக்கம் 1361 வரை அடையாளப்படுத்தப்பட்டுள்ள திருத்தங்கள் 31 மார்ச் 2018 இல் அல்லது அதன்பின் முடிவடையும் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வுக்கு ஏற்புடையது என உறுதிப்படுத்தப்படுகின்றது~~ | [உள்ளடக்கம் நீக்கப்பட்டுள்ளது] |
| 5 (cA) | [ஒத்த பந்தி இல்லை] | <u>வெளிவாரித் தகவல்மூலம் – நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும்போது கம்பனி உபயோகித்த அல்லது பரந்த அளவிலான பயனாளர்களின் பயன்பாட்டிற்கு பொருந்தக்கூடிய வகையில் கணக்காய்வாளர் பெற்ற கணக்காய்வுச் சான்றுக்கான தகவலை வழங்கிய வெளிநபர் அல்லது நிறுவனம்,</u><br><u>முகாமைத்துவ நிபுணரினது, சேவை நிறுவனத்தினது*, அல்லது கணக்காய்வு நிபுணரது** இயலுமையில் செயற்படுகின்ற தனிநபர் அல்லது நிறுவனத்தினால் தகவலானது வழங்கப்படும்போது, குறித்த அந்தத் தகவலோடு தொடர்புபட்ட அந்தத் தனிநாபர் அல்லது நிறுவனம் வெளியார்ந்த தகவல் மூலமொன்றாகக் கொள்ளப்படாது. (பார்க்க பந்தி: A1a-A1c)</u><br><u>* SLAuS; 402, சேவை நிறுவனத்தினை உபயோகிக்கும் உரிமத்துடன் தொடர்படைய கணக்காய்வுக் கவனத்தில் கொள்ளல்கள், பந்தி 8.</u><br><u>** SLAuS; 620, கணக்காய்வ நிபுணரின் செய்கைகளைப் பயன்படுத்துதல், பந்தி 6</u> |
| 7 | கணக்காய்வு விதிமுறைகளை வடிவமைக்கும் போதும் நடைமுறைப்படுத்தும் போதும் கணக்காய்வுச் சான்றாக பயன்படுத்தப்படும் தகவலின் பொருத்தப்பாடு மற்றும் நம்பகத்தன்மை கணக்காய்வாளர் கருத்திலெடுக்க வேண்டும். (குறிப்பு: பந்தி. A26~~–A33~~) | கணக்காய்வு விதிமுறைகளை வடிவமைக்கும் போதும் நடைமுறைப்படுத்தும் போதும் கணக்காய்வுச் சான்றாக பயன்படுத்தப்படும் தகவலின் பொருத்தப்பாடு மற்றும் நம்பகத்தன்மை கணக்காய்வளர் கருத்திலெடுக்க வேண்டும். <u>இது வெளிவாரித் தகவல் மூலங்களிலிருந்து பெறப்படும் தகவல்களையும் அடக்கும்.</u> (குறிப்பு: பந்தி. A26–A33f) |

| விபரம் | 2017 | 2020 |
|---|---|---|
| A1a-<br>A1d | [ஒத்த பந்தி இல்லை] | **வெளிவாரித் தகவல் மூலம்** (பார்க்க: பந்தி 5(cA))<br>A1a. வெளிவாரித் தகவல் மூலம் என்பது விலையிடல்சேவை, அரச நிறுவனம், மத்தியவங்கி அல்லது அங்கீகரித்த பங்குப்பரிவர்த்தனை போன்றவற்றை உள்ளடக்கலாம். வெளிவாரித் தகவல் மூலங்களிலிருந்து பெறப்படக்கூடிய தகவல்களுக்கு உதாரணமாக:<br>• விலையிடல் மற்றும் விலையிடல் சார்ந்த தரவுகள்;<br>• வரலாற்று ரீதியான மற்றும் எதிர்வுகூறப்பட்ட வேலையின்மை வீதங்கள் மற்றும் பொருளாதார வளர்ச்சி வீதங்கள், போன்ற பேரினப் பொருளாதாரத் தரவுகள் இல்லது அறிக்கைத்தரவுகள்.<br>• கடன் வரலாற்றுத் தரவு<br>• பிரித்தெடுக்கும் தொழில்களின் மீட்புக் கிரயங்களுக்கான சுட்டி அல்லது களியாட்டத்தெழிலில் விளம்பர வருமானத்தை தீர்மானிக்க பயன்படுத்க்கூடிய பார்வையாளர்சார் தகவல்கள், அல்லது தரப்படுத்தல்கள் போன்ற தொழிற்துறை சார்ந்த தரவுகள் மற்றும்<br>• ஆயுட்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய துறையில் பரிப்புக்களை தீர்மானிக்க பயன்படும் மரணவீத அட்டவணை.<br>A1b. ஒரு குறிப்பிட்ட தொகுதி தகவலானது வெளிவாரி நபர் அல்லது நிறுவனம் ஒன்றின் வாயிலாக இலவசமாகவோ அல்லது, குறித்த ஒரு தொகைக் கொடுப்பனவுக்குப் பதிலீடாகவோ, பொதுமக்களுக்கு கிடைக்கும்போது, அது பரந்தளவு பயனாளர்களது பயன்பாட்டிற்கு பொருத்தமானதாகவும் ஏதாவதொரு குறித்த பயனாளருடைய செல்வாக்கிலிருந்து விடுபட்டதாகவும் அமையும். பரந்தளவான பயனாளரது பயன்பாட்டிற்கு ஒரு குறித்த தகவலின் பொருத்தப்பாடு பற்றியும் அதனை வழங்கிய வெளிவாரியான தகவல் மூலத்தின் மீது செல்வாக்குச்செலுத்தக் கூடிய நிறுவனத்தின் இயலுமை குறித்தும் கருத்திலெடுக்கப்பட்ட தீர்மானமொன்று தேவைப்படலாம். |

| விபரம் | 2017 | 2020 |
|---|---|---|
| | | A1c. ஒரு வெளிநபர் அல்லது நிறுவனம் குறித்தவொரு தொகுதித் தரவுகள் தொடர்பில் வெளிவாரியான தகவல் அளிக்கும் மூலமாகவும் அதேவேளை முகாமைத்துவ நிபுணராகவோ,அல்லது சேவை வழங்கும் நிறுவனமாகவோ அல்லது கணக்காய்வாரள் நிபுணராக அமைய முடியாது.<br>A1d. எவ்வாறாயினும், ஒரு தனிநபர் அல்லது நிறுவனம் குறித்தவொரு தொகுதித் தரவுகளை வழங்கும் போது முகாமைத்துவத்தின் நிபுணராகவும், வேறொரு தொகுதித் தரவுகளை வழங்கும் போது வெளிவாரியான தகவலளிக்கும் மூலமாவும் செயற்பட முடியும். சில சந்தர்ப்பங்களில், குறித்த தொகுதித் தரவுகள் தொடர்பாக, ஒரு தனிநபர் அல்லது ஒரு நிறுவனம் வெளிவாரித் தகவலளிப்பு மூலமாக, அல்லது முகாமைத்துவ நிபுணராக செயற்படுவதை தீர்மானிக்க தொழில் சார் தீர்மானமொன்று தேவைப்படலாம். இன்னும் சில சந்தர்ப்பங்களில், வேறுபாடு தெளிவாகக் காணப்படலாம். உதாரணமாக:<br>• ஒரு வெளிநபர் அல்லது நிறுவனம் நிலச்சொத்து விலைகள் பற்றிய பரந்தளவு பயனாளர்களது பயன் பாட்டிற்கு ஏற்புடைய தகவலை வழங்கக்கூடும். உதாரணமாக, பொதுவான ”கோளப்பகுதி ஒன்று தொடர்பாக கிடைக்கும் தகவல் மற்றும் அத் தகவல் தொடர்பாக, வெளியார்ந்த தகவல் மூலமாக இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு இருத்தலைக் குறிப்பிடலாம். உரிமத்தின் அந்த நிறுவனமே உரிமத்தின் உண்மைகள் மற்றும் புறநிலைகளுக்கு ஏற்ப குறிப்பாக வடிவமைத்த உரிமத்தின் நிலச் சொத்துக்கள் தொடர்பாக தரகுப் பெறுமதியிடலை மேற்கொள்வதில் முகாமையின் அல்லது கணக்காய் வாளரின் நிபுணராக செயற்பட முடியும்.<br>• சில ஆயட்காலமுறை கணிப்பீட்டு அமைப்புக்கள் பொதுவான பயன் பாட்டிற்கு ஏற்புடைய மரணவீத அட்டவணையை பிரசுரிக்கின்றன. ஒரு உரிமம் அதை பயன்படுத்தும் போது அது வெளிவாரித் தகவல் மூலமொன்றிலிருந்து பெறப்பட்ட தகவலாக பொதுவாக கொள்ளப் படும். அதே ஆயட்காலமுறைக் |

| விபரம் | 2017 | 2020 |
| --- | --- | --- |
| | | கணிப்பீட்டாளர் உரிமத்தின் பல ஓய்வூதிய திட்டங்களின் ஓய்வூதிய பரிப்புகளை தீர்மானித்தல் போன்ற உரிமத்திற்கு ஏற்புடைய வேறுபட்ட தகவல் வழங்குவதில் முகாமை நிபுணராகவும் இருக்கலாம்.<br>• அவதானிக்கத்தகு சந்தை இல்லா காப்பாவணங்களின் சீர்மதிப்பினை மதிப்பிடுவதற்கான மாதிரிகளைப் பிரயோகிப்பதில் ஒரு தனிநபரோ அல்லது ஒரு நிறுவனமோ தேர்ச்சி பெற்றிருக்கலாம். குறித்த ஒரு வெளிநிறுவனத்தினதோ அல்லது தனிநபரினதோ, மதிப்பீடுகளுடன் தொடர்புடைய மேற்படி நிபுணத்து வமானது வேறு நிறுவனத்திற்கு பயன்படுத்தப்பட்டு அதன் மூலம் அந்நிறுவனத்தின் நிதியறிக்கைகள் தயாரிக்கப்படின் தகவல வழங்கிய அந்த வெளிநபரோ அல்லது நிறுவனமோ, குறித்த தகவலைப் பயன்படுத்திய நிறுவனத்திற்கான முகாமைத்துவத்தின் நிபணராகவே கருதப்படும். வேறு வகையில் அந்த வெளிநிறுவனமோ அல்லது நபரோ பொதுமக்களுக்கு அதன் சொந்த மதிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்தி தனியார் ஊடுசெயல் களோடு தொடர்பான விலையிடல் மற்றும் விலையிடல் தொடர்புபட்ட தரவுகளை வழங்குமாயின் குறித்த அத் தகவல்கள் சார்பாக மேற்படி வெளிநிறுவனம் அல்லது நபர் வெளிவாரியான தகவலளிக்கும் மூலமாகக் கருதப்படுவர்.<br>• ஒரு தனிநபர் அல்லது நிறுவனம் குறித்தவொரு துறைசார் இடர்கள் மற்றும் நிபந்தனைகள் பற்றிய அதிக பயனாளர் பயன்பாட்டுக்கு பொருந்தக்கூடிய ஒரு தகவலைப் பிரசுரிக்கலாம். இந்த தகவலானது ஒருநிறுவன இடர் வெளிப்படுத்தல் களைத் தயாரிக்கும் போது (SLFRS 7* க்கு ஒத்திசைவாக), பயன்படுத்தப்பட்டால் அத் தகவல் வெளிவாரி தகவலளிப்பு மூலமாக கருதப்படும். எனினும், குறித்த இதே தகவல் அந்நிறுவனத்தால் அதன் சூழ்நிலைகளால் புனையப் பட்ட இடர்கள் பற்றிய தகவலை அதிகரிப்பதற்கான நோக்கில் பெறப்பட்டால், அந்தத் தகவலை வழங்கிய நிறுவனமோ அல்லது தனிநபரோ அந் நிபுணத்துவத்தை பயன்படுத்திய நிறுவனத்திற்கு |

| விபரம் | 2017 | 2020 |
|---|---|---|
| | | முகாமைத்துவத்தின் நிபுணராகவே கருதப்படுவர். <br>• ஒரு வெளிநபர் அல்லது நிறுவனம் பரந்தளவிலான பயனாளர்களது பயன்பாட்டிற்குப் பொருந்தக்கூடிய தகவலொன்றை வழங்கும் போது தன்னுடைய நிகழ்கால மற்றும் எதிர்கால சந்கைப்போக்கு பற்றிய நிபுணத்துவத்தை பயன்படுத்தலாம். இத்தகைய தகவல் நிறுவனத்தால் கணக்கீட்டு மதிப்பீடுகளை ஆக்கும் போது உதவகின்ற எடுகோள்களின் தீர்மானங்களில் பயன்படுத்தப்படின், குறித்த அத் தகவல் வெளியார்ந்த தகவலளிப்பு மூலத்திலிருந்தான தகவலாகவே கருதப்படும். மாறாக, இதே தகவல் ஒரு நிறுவனத்தினால் அதன் சூழ்நிலைகள் மற்றும் நிபந்தனைகளுக்குத் தேவையான கடந்தகால மற்றும் நிகல்காலப் போக்கினை எதிர்கொள்ளவதற்காக பெறப்படின் குறித்த நிறுவனத்திற்கு தகவலை வழங்கிய வெளிநபர் அல்லது நிறுவனம் முகாமைத்துவ நிபுணராகவே கொள்ளப்படும். <br>* இலங்கை கணக்கீட்டு நியமம் – SLFRS 7, நிதிச்சாதனங்கள்: வெளிக்காட்டல்கள் |
| A1 | கணக்காய்வுச் சான்றுகள் கணக்காய்வாளர் அபிப்பிராயம் மற்றும் அறிக்கைக்கு வலுச் சேர்ப்பதில் இன்றியமையாததாகும். இது திரள் தன்மை கொண்டதாக இருப்பதுடன் கணக்காய்வில் செய்கின்ற கணக்காய்வு செயன்முறைகளிலிருந்து பெறப்படுகின்றன. எனினும் இவை, கடந்தகால கணக்காய்வு (நடப்புக் கணக்காய்வில் தொடர்புபடுவதை பாதிக்கின்ற மாற்றங்கள் கடந்தகால கணக்காய்வின் பின்னர் நிகழ்ந்திருப்பதாக கணக்காய்வாளர் தீர்மானித்தால்) அல்லது ~~வாடிக்கையாளர் ஏற்பு அல்லது தொடர்தல் நிறுவனத்தின் தரக்கட்டுப்பாட்~~டு விதிமுறை போன்ற பிற மூலங்களில் இருந்து பெற்ற தகவலையும் உட்படுத்த முடியும். நிறுவனத்திற்கு உள்ளே மற்றும் வெளியே பிற மூலங்களுக்கு மேலாக நிறுவனத்தின் கணக்கீட்டு அறிக்கைகள் மிகமுக்கியமான கணக்காய்வுச் சான்று மூலங்களாகும். மேலும், கணக்காய்வுச் சான்றாக உபயோகிக்கப்படும் தகவலானது முகாமைத்துவ நிபுணரது செய்கைகளை பயன்படுத்தியதன் மூலமாகவும் தயாரிக்கப் பட்டிருக்கலாம். கணக்காய்வுச் சான்றானது | கணக்காய்வுச் சான்றுகள் கணக்காய்வாளர் அபிப்பிராயம் மற்றும் அறிக்கைக்கு வலுச் சேர்ப்பதில் இன்றியமையாததாகும். இது திரளும் தன்மை கொண்டதாக இருப்பதுடன் கணக்காய்வில் செய்கின்ற கணக்காய்வு செயன்முறைகளிலிருந்து பெறப்படுகின்றன். எனினும் இவை, கடந்தகால கணக்காய்வு (நடப்புக் கணக்காய்வில் தொடர்புபடுவதை பாதிக்கின்ற மாற்றங்கள் கடந்தகால கணக்காய்வின் பின்னர் நிகழ்நிதிருப்பதாக கணக்காய்வாளர் தீர்மானித்தால்) அல்லது வாடிக்கையாளர் ஏற்பு அல்லது தொடர்வதில் தலுக்கான நிறுவனத்தின் தரக்கட்டுப்பாட்டு விதிமுறைகள் போன்ற பிற மூலங்களில் இருந்து பெற்ற தகவலையும் உட்படுத்த முடியும். நிறுவனத்திற்கு உள்ளே மற்றும் வெளியே பிற மூலங்களுக்கும் மேலாக, ஒரு நிறுவனத்தின் கணக்கீட்டு அறிக்கைகள் முக்கிய கணக்காய்வுச்சான்று மூலங்களாகும். மேலும், கணக்காய்வுச் சான்றாக உபயோகிக்கும் தகவல் முகாமைத்துவத்தின் நிபுணரது செய்கைகளைப் பயன்படுத்தியதன் மூலமாக தயாரிக்கப்பட்டிருக்கலாம் அல்லது வெளியார்ந்த மூலமொன்றிலிருந்து பெறப்பட்டு |

| விபரம் | 2017 | 2020 |
|---|---|---|
| | முகாமைத்துவத்தின் உறுதிச்சொற்களுக்கு வலுச்சேர்க்கின்ற மற்றும் முரண்படுகின்ற தகவல்களை ஒன்றுசேர்த்து உள்ளடக்கும். இவற்றுக்கும் மேலாக, தகவல் ஒன்றினது இல்லாமையும் (உதாரணமாக, கோரப்பட்ட முன்னிலைப்படுத்தலை வழங்குவதற்கான முகாமையின் தயக்கம்) கணக்காய்வாளர் உபயோகப்படுத்துவதால் கணக்காய்வுச் சான்றாக அமையும்.<br>~~*SLAuS 315 (மறுசீரமைக்கப்பட்டது), பந்தி 9~~ | இருக்கலாம். கணக்காய்வுச் சான்றானது முகாமைத்துவத்தின் உறுதிச் சொற்களுக்கு வலுச்சேர்க்கின்ற மற்றும் முரண்படுகின்ற தகவல்களை ஒன்றுசேர்த்து உள்ளடக்கும். இவற்றுக்கும் மேலாக, தகவல் ஒன்றினது இல்லாமை (உதாரணமாக, கோரப்பட்ட முன்னிலைப்படுத்தலொன்றினை வழங்குவதற்கான முகாமையினது தயக்கம்) கணக்காய்வாளரினால் உபயோகிக்கப்படுவதனால் அதுவும் கணக்காய்வுச் சான்றாக அமையும்.<br>* SLAuS 315 (மறுசீரமைக்கப்பட்டது), பந்தி 9 |
| A9 | கணக்காய்வாளரினால் கணக்காய்வின் போது பயன்படுத்தப்படும் நிறுவனத்திற்கு வெளிப்புறமானதும் சுதந்திரமானதுமான மூலங்களிலிருந்து பெற்ற தகவல் என்பது மூன்றாம் தரப்பினரிடமிருந்தான உறுதிப் படுத்தல்கள், பகுப்பாய்வு அறிக்கைகள் மற்றும் போட்டியாளர்பற்றி ஒப்பிடக்கூடிய தரவுகளை உள்ளடக்கும். (மட்டக்குறித் தரவு). | கணக்காய்வாளரினால் கணக்காய்வின் போது பயன்படுத்தும், நிறுவனத்திற்கு வெளியான, சுதந்திரமான மூலங்களிலிருந்து பெறப்பட்ட தகவல் என்பது மூன்றாம் தரப்பினரிடமிருந்து உறுதிப்படுத்தல், பகுப்பாய்வு அறிக்கைகள் மற்றும் போட்டியாளர் பற்றிய ஒப்பிடக்கூடிய தரவுகளை அடக்கிய வெளிவாரி தகவலளிப்பு மூலங்களிலிருந்து தகவலை உள்ளடக்கும். (மட்டக்குறித் தரவு). |
| A31 | கணக்காய்வுச் சான்றாக பயன்படுத்தப்படும் தகவலினதும் கணக்காய்வுச் சான்றினதும் நம்பகத்தன்மை என்பது அதன் மூலம் மற்றும் அதன் இயல்பு என்பவற்றினாலும், அதன் உருவாக்கம் மீதாக கட்டுப்பாடுகள் மற்றும் மேம்படுத்தல்கள் என்பவற்றினை உள்ளடக்கி, எத்தகைய சந்தர்ப்பத்தின் போது அவை பெறப்பட்டது என்பதனாலும் செல்வாக்குச் செலுத்தப்படக்கூடியதாகும். எனவே, வெவ்வேறு கணக்காய்வுச் சான்றுகளின் நம்பகத்தன்மை பற்றிய பொதுப்படுத்தல்கள் என்பது முக்கியமான விதிவிலக்குகளுக்கு உட்பட்டதாகும். கணக்காய்வுச்சான்றாக உபயோகிக்கும் தகவலானது நிறுவனத்திற்கு வெளியே மூலகங்களிலிருந்து பெறப்பட்டாலும் அதன் நம்பகத்தன்மையை பாதிக்கும் சந்தர்ப்பம் காணப்படலாம். உதா: ஒரு சுதந்திரமான வெளியார் மூலமொன்றிலிருந்து பெறப்பட்ட தகவல், குறித்த மூலகம் அறிவற்றதாக காணப்படும்போதோ அல்லது முகாமையின் நிபுணர் குறிக்கோள் அற்றவராகவோ காணப்படும் போதோ நம்பகத்தன்மை அற்றதாகக் காணப்படலாம். எழக்கூடிய விதிவிலக்குகளை ஏற்பிசைவு செய்கின்ற | கணக்காய்வுச் சான்றாக பயன்படுத்தப்படும் தகவலினதும் கணக்காய்வுச் சான்றினதும் நம்பகத்தன்மை என்பது அதன் மூலம் மற்றும் அதன் இயல்பு என்பவற்றினாலும், அதன் உருவாக்கம் மீதாக கட்டுப்பாடுகள் மற்றும் மேம்படுத்தல்கள் என்பவற்றினை உள்ளடக்கி, எத்தகைய சந்தர்ப்பத்தின் போது அவை பெறப்பட்டது என்பதனாலும் செல்வாக்குச் செலுத்தப்படக்கூடியதாகும். எனவே, வெவ்வேறு கணக்காய்வுச் சான்றுகளின் நம்பகத்தன்மை பற்றிய பொதுப்படுத்தல்கள் என்பது முக்கியமான விதிவிலக்குகளுக்கு உட்பட்டதாகும். கணக்காய்வுச்சான்றாக உபயோகிக்கும் தகவலானது நிறுவனத்திற்கு வெளியே மூலகங்களிலிருந்து பெறப்பட்டாலும் அதன் நம்பகத்தன்மையை பாதிக்கும் சந்தர்ப்பம் காணப்படலாம். உதா: உரிமத்திற்கு சுதந்திரமான வெளியார் மூலமொன்றிலிருந்து பெறப்பட்ட தகவல், குறித்த மூலகம் அறிவற்றதாக காணப்படும்போதோ அல்லது முகாமையின் நிபுணர் குறிக்கோள் அற்றவராகவோ காணப்படும் போதோ நம்பகத்தன்மை அற்றதாகக் காணப்படலாம். எழக்கூடிய விதிவிலக்குகளை ஏற்பிசைவு செய்கின்ற |

| விபரம் | 2017 | 2020 |
|---|---|---|
| | போது கணக்காய்வுச்சான்றுகளின் நம்பகத் தன்மையைப் பற்றிய பின்வரும் பொதுப் படுத்தல்கள் பயன்படலாம்: | போது கணக்காய்வுச்சான்றுகளின் நம்பகத் தன்மையைப் பற்றிய பின்வரும் பொதுப் படுத்தல்கள் பயன்படலாம்: |
| A33a - A33f | [ஒத்த பந்தி இல்லை] | *வெளியார்ந்த தகவலளிக்கும் மூலங்கள்*<br>A33a. வெளியார்ந்த மூலமொன்றிலிருந்து பெறப்பட்டுக் கணக்காய்வுச் சான்றாக உபயோகிக்கப்படவுள்ள தகவலானது, நிறுவனம் நிதியறிக்கை தயாரிக்கும் போது உபயோகிக்கப்பட்டதா அல்லது கணக்காய்வாளரால் பெறப்பட்டதா என்பதை விடுத்து அந்தத் தகவலின் பொருத்தப்பாடு மற்றும் நம்பகத் தன்மையினை கருத்தில் கொள்வதற்கு பந்தி 7 இன் மூலம் கணக்காய்வாளர் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார். வெளிவாரி தகவலளிப்பு மூலமொன்றிலிருந்தான தகவலுக்கான இக் கருதுகோளானது, சிலசந்தர்ப்பங்களில், அந்த வெளிவாரி தகவல் மூலத்தைப்பற்றிய அல்லது அந்தத் தகவலின் உருவாக்கம் பற்றிய SLAuS 330 அல்லது பொருத்தமெனில் SLAuS 540 (மீளாக்கம்) க்கு இசைவாக மேலதிக கணக்காய்வு விதிமுறைகளின் வடிவமைப'பு மற்றும் நடைமுறைப்படுத்தல் மூலமாக பெற்ற கணக்காய்வுச் சான்றுகளை உள்ளடக்கலாம்.<br>* SLAuS 540 (மறுசீரமைக்கப்பட்டது), கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் வெளிப்படுத்தல்களின் கணக்காய்வு<br>A33b. முகாமை அல்லது தேவைப்படும் போது முகாமை நிபுணர் வெளிவாரி தகவல் மூலங்களைப் பயன்படுத்தும் காரணத்தையும் தகவலின் பொருத்தம் மற்றும் நம்பகத்தன்மை எவ்வாறு கவனத்திற்கொள்ளப்படுகின்றது (செம்மையையும் முழுமையையும் உள்ளடக்கிய) என்பது பற்றியதுமான புரிந்துணர்வினைப் பெற்றுக்கொள்வது, குறித்த தகவலின் பொருத்தம் மற்றும் நம்பகத்தன்மையின் கணக்காய்வாளர் கவனத்திற்கொள்ளல்களை தெரிவிக்க உதவும்.<br>A33c. வெளிவாரி தகவல் மூலங்களில் இருந்து பெறப்படுகின்ற தகவல்களின் செம்மைத்தன்மை மற்றும் முழுமை என்பவற்றை அடக்கிய நம்பகத்தன்மை மற்றும் பொருத்தப்பாட்டை கவனத்திற் கொள்ளும்போது பின்வரும் காரணிகள் |

| விபரம் | 2017 | 2020 |
|---|---|---|
| | | முக்கியமானவையாக அமையலாம். இவற்றுள் சில காரணிகள், நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும்போது குறித்த தகவலை முகாமையானது பயன்படுத்தும்போது அல்லது குறித்த தகவல் கணக்காய்வாளரால் பெறும் போது மட்டும பொருத்தமானவையாக அமையும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.:<br>• வெளிவாரி தகவலளிப்பு மூலத்தின் இயல்பு மற்றும் அதிகாரம். உதாரணமாக, பொது மக்களுக்கு துறைசார் தகவலை வழங்கும் சட்டரீதிக் கடப்பாட்டை கொண்ட அரச புள்ளிவிபர திணைக்களம் அல்லது மத்தியவங்கி போன்றன சிலவகையான தகவல்களுக்கு அதிகாரமுள்ளவையாகும்.<br>• உரிமத்துக்கும் தகவல் வழங்கிய மூலத்திற்குமான தொடர்பு மூலம் குறித்த பெற்றுக்கெள்ளப்பட்ட தகவலில் செல்வாக்குச் செலுத்தக் கூடிய இயலுமை;<br>• குறித்த தகவல் தொடர்பாக, கணக்காய்வாளரது தொழில்சார் தீர்மானத்தின் அடிப்படையில் அத் தகவலளிக்கும் மூலத்தினால் தெடர்ச்சியாக நம்பகமான தகவல் வழங்கப்பட்டதா இல்லையா என்பதற்கான தடயங்களின் திறன் மற்றும் நன்மதிப்பு;<br>• குறித்த வெளிவாரி மூலத்தினால் வழங்கப்பட்ட தகவலின் நம்பகத் தன்மைசார்ந்த கணக்காய்வாளரது கடந்தகால அனுபவங்கள்.;<br>• முகாமை அல்லது கணக்காய் வாளரால் எந்த நோக்கத்திற்காக குறித்த வெளிவாரி மூலத்தில் இருந்து பெறப்பட்ட தகவல் உபயோகிக்கப்படவுள்ளதோ, அத்தகவலின் பொருத்தப்பாடு மற்றும் நம்பகத்தன்மை பற்றியதும் அதே போன்ற நோக்கத்திற்காக குறித்த தகவலைப் பயன்படுத்திய பயனாளர்களினதுமான பொதுச் சந்தை ஏற்றுக்கொள்ளலுக்கான சான்றுகள்.;<br>• பெறப்பட்ட மற்றும் பயன்படுத்திய தகவலின் பொருத்தப்பாடு மற்றும் நம்பகத்தன்மையை விவரிக்கக் கூடிய கட்டுப்பாடுகள் உரிமத்தால் புகுத்தப்பட்டிருத்தல்.; |

| விபரம் | 2017 | 2020 |
|---|---|---|
| | | • வெளியாரித் தகவல் மூலம் ஒட்டு மொத்த சந்தைத் தகவல்களை திரட்டுகின்றதா அல்லது சந்தை ஊடுசெயல்களை நிர்ணயிப்பதில் நேரடியாக ஈடுபடுகின்றதா என்பது பற்றி;<br>• தகவல் உபயோகிக்கப்பட்டவாறே உபயோகிக்க பொருத்தமானதா என்பதும் பொருத்தமானதெனில் பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தை கருத்தில் கொள்வதன் மூலமாக உருவாக்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதும்<br>• உபயோகிக்கப்பட்ட தகவலுடன் முரண்படும் பதிலீட்டுத் தகவல்கள்<br>• பெறப்பட்ட தகவல் தொடர்பாக மறுப்புக்கள் அல்லது மொழிவரை யறை ஆகியவற்றினது தன்மை மற்றும் வீச்செல்லை;<br>• தகவலை உருவாக்கிய போது உபயோகித்த செய்முறைகள், அச் செய்முறைகள் எவ்வாறு பிரயோகி க்கப்பட்டன மற்றும் பொருத்தமான போது அந்த பிரயோகங்களில் மாதிரிகள் எவ்வாறு பயன்படுத்தப் பட்டன என்பதும் மற்றும் அந்த மாதிரிகள் மீதான கட்டுப்பாடுகள் ஆகியவற்றைப் பற்றிய தகவல் மற்றும்,<br>• கிடைக்குமிடத்து, பெற்ற தகவலை உருவாக்கியபோது குறித்த வெளி வாரித் தகவல் மூலத்தினால் பிரயோகிக்கப்பட்ட எடுகோள்கள் மற்றும் ஏனைய தரவுகளின் பொருத்தப்பாட்டினைக் கருத்தில் கொள்ளத் தேவையான தகவல்.<br>A33d. கணக்காய்வாளரின் கவனத்திற் கொள்ளலின் இயல்பு மற்றும் வீச்செல்லை, வெளிவாரித் தகவலின் பயன்பாடு தேவைப்படுத்தப்படுகின்ற உறுதிப்பாட்டு மட்டத்தில் மதிப்பிட்ட பொருண்மையான பிறழ்கூற்று மற்றும் இப்பிறழ்கூற்றுக்கான காரணங்களுக்கு குறித்த வெளிவாரித் தகவலின் பயன்பாடு பொருந்தக்கூடிய அளவு மற்றும் குறித்த வெளிவாரி தகவல் நம்பகமற்றதாகக் காணப்படுவதற்கான சாத்தியம் (உதாரணமாக, முறையற்ற மூலகமொன்றிலிருந்து பெறப்படுதல்) ஆகியவற்றை கருத்திலெடுக்கின்றது. பந்தி A34a இல் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கான கணக்காய்வாளரது கவனத்திற்கொள்ளல் அடிப்படையில், கணக்காய்வாளர் வெளிவாரி தகவல் |

| விபரம் | 2017 | 2020 |
|---|---|---|
| | | மூலமொன்றிலிருந்தான தகவலைப் பிரயோகிப்பதன் மூலமாக எழக்கூடிய இடர்களுக்குப் பதிலீடாக, SLAuS 315 க்கு ஒத்திசைவாக உரிமத்தினையும் அதன் அகக்கட்டுப்பாட்டு சூழலையும் மேலதிகமாகப் பரிந்துகொள்ளுவது தேவையானது எனவோ அல்லது, SLAuS 330* மற்றும் SLAuS 540 (மறுசீரமைக்கப்பட்டது) **க்கு ஒத்திசைவான மேலதிக கணக்காய்வுச் செயன்முறைகளோ பொருத்தமானவை எனத் தீர்மானிக்கலாம். இத்தகைய செயன்முறைகள் கீழ்வருவனவற்றை உள்ளடக்கலாம்:<br>• வெளிவாரி தகவல் மூலத்திலிருந்து பெற்ற தகவலை அதற்குப் பதிலீடாக ஒரு சுதந்திர தகவல் மூலத்திலிருந்து பெற்ற தகவலோடு ஒப்பீடு செய்தல்.<br>• வெளிவாரித் தகவல் மூலமொன்றின் முகாமை பயன்பாட்டை கவனத்தில் எடுக்கையில் தேவைப்படும் போது, இத்தகைய வெளியார் தகவல் மூலங்களிலிருந்து பெறப்படுகின்ற தகவலின் நம்பகத்தன்மையைக் கருத்திலெடுப்பதற்காக முகாமை புகுத்தியுள்ள கட்டுப்பாடுகளைப் புரிந்து கொள்ளுதலும், முறையான விதத்தில் இத்தகைய கட்டுப்பாடு களின் செயற்பாட்டு வினைதிறனை பரிசோதித்தலும்.<br>• வெளிவாரித் தகவல் மூலத்தில் இருந்து அதன் கட்டுப்பாடுகளை இனங்காணுதல், புரிந்துகொள்தல் மற்றும் தேவையெனில் அவற்றை சோதித்தல் ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் அதன் செய்முறை நுட்பங்கள் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கான செயற்பாடுகளை நிகழ்த்துதல்.<br>* SLAuS 330, பந்தி 6<br>** SLAuS 540 (மறுசீரமைக்கப்பட்டது), பந்தி 30<br>A33e. சிலவேளைகளில், குறித்த தகவலுக்கு ஒரேயொரு வழங்குநர் காணப்படுவார். உதாரணமாக, வட்டி வீதம் போன்ற மத்தியவங்கி அல்லது அரசாங்கத்தின் தகவல்கள் அல்லது ஏற்றுக்கொண்ட தனியான தொழிற்துறை அமைப்பு இந்த சூழ்நிலைகளில், கணக்காய்வுச் |

| விபரம் | 2017 | 2020 |
|---|---|---|
| | | செயன்முறைகளினது இயல்பு மற்றும் வீச்செல்லை குறித்த கணக்காய்வாளர் தீர்மானமானது, குறித்த தகவலை வழங்கும் மூலத்தினது நம்பகத்தன்மையினாலும், குறித்த வெளியார் தகவல் தேவைப்படும் மதிப்பிட்ட பொருண்மையான பிறழ்கூற்றுக்களாலும், இந்த மதிப்பிட்ட பிறழ்கூற்றுக்களுக்குக்கான காரணங்களுக்கு குறித்த தகவலது பயன்பாடு எந்தளவு பொருத்தமானது என்பதனாலும் செல்வாக்குச் செலுத்தப் படலாம். உதாரணமாக, தகவலானது ஒரு நம்பகமான மூலத்திடமிருந்து பெறப்படும்போது, கணக்காய்வாளரது மேலதிக கணக்காய்வுச் செயன்முறை குறுகியதாக அதாவது தகவல்மூல இணையதளத்திற்கு அல்லது பிரசுரித்த தகவலுக்கு உறுதிப்படுத்துதல் போன்ற குறைந்த விரிவெல்லையுடையதாகக் காணப்படும். வேறு சந்தர்ப்பங்களில், ஒரு மூலமானது நம்பகமற்றதாக மதிப்பிடப்படும்போது, கணக்காய்வாளர் விரிந்த செயன்முறை பொருத்தமென தீர்மானிக்கலாம், பதிலீடான சுதந்திர தகவல் மூலமொன்று ஒப்பிடுவதற்குக் கிடைப்பனவாக இல்லாதபோது, வெளிவாரி தகவல் மூலமொன்றிலிருந்து தகவலைப் பெற்றுக்கொள்ள உகந்த நடைமுறைகளை நிகழ்த்துவது பற்றிக் கவனத்திலெடுக்கலாம், பிரயோக ரீதியில் இது போதுமாக பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்ளுவதில் பொருத்தமானதாகும்.<br>A33f. வெளிவாரி தகவல் மூலமொன்றின் பொருத்தம் மற்றும் நம்பகத்தன்மை கருத்தில் கொள்ளப்படுவதற்கான போதுமானதொரு அடிப்படையைக் கணக்காய்வாளர் கொண்டிருக்காத பட்சத்தில் மாற்று செயன்முறைகளின் ஊடாக போதுமான, பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகள் பெறமுடியாதெனில் அடக்கத்தில் வரையறையை கணக்காய்வாளர் கொண்டிருக்கலாம். நடைமுறைப்படுத்திய ஏதேனுமொரு உள்ளடக்க வரையறையானது SLAuS; 705* (மறுசீரமைக்கப்பட்டது) இற்கு ஒத்திசைவாக மதிப்பிடப்படலாம். |

| விபரம் | 2017 | 2020 |
|---|---|---|
| | | * SLAuS 705 (மறுசீரமைக்கப்பட்டது), சுயாதீன கணக்காய்வாளரது அறிக்கையின் அபிப்பிராயத்திலான மாற்றங்கள், பந்தி13 |
| A35 | கணக்காய்வுச் சான்றாகப் பயன்படும் தகவலானது முகாமைத்துவ நிபுணரது செய்கையை பயன்படுத்தி தயாரிக்கப்படும் போது இந்த SLAuS இன் பந்தி 8 ஏற்புடையது. உதாரணமாக, அவதானிக் கப்படக்கூடிய சந்தையொன்று இல்லாத நிதிச்சாதனங்களின் சீர்மதிப்பை மதிப்பிடு வதற்காக மாதிரிகளை உபயோகப்படுத் துவதில் நிபுணத்துவம் பெற்றிருக்கலாம். குறித்த தனிநபரோ அல்லது நிறுவனமோ அத்தகைய நிபுணத்துவத்தை உரிமத்தின் நிதிக்கூற்றுக்களை தயாரித்தலில் உபயோகப்படுத்தினால், குறித்த தனிநபர் அல்லது நிறுவனம் முகாமைத்துவத்தின் நிபுணராக கருதப்படுவதுடன் பந்தி 8 அதற்கு ஏற்புடையதாகும். மாறாக, அந்தத் தனிநபரோ அல்லது நிறுவனமோ உரிமம் அதன் சொந்த மதிப்பீட்டு முறைகளை உபயோகிக்கும்போத கிடைக்கப்பெறாத தனியார் ஊடுசெயல்களுடன் தொடர்பு பட்ட விலைத்தரவுகளை வழங்கலாம். அத்தகைய தகவலானது, கணக்காய்வுச் சான்றாக உபயோகப்படுத்தப்படுகின்ற போது இந்த SLAuS இன் பந்தி 7 இல் அடங்கும். ஆனால், இது உரிமத்தினால் முகாமைத்துவ நிபுணரின் உபயோகமாக கருதப்படாது. | கணக்காய்வுச் சான்றாகப் பயன்படும் தகவலானது முகாமைத்துவ நிபுணரது செய்கையை பயன்படுத்தி தயாரிக்கப்படும் போது இந்த SLAuS இன் பந்தி 8 ஏற்புடையது. உதாரணமாக, அவதானிக் கப்படக்கூடிய சந்தையொன்று இல்லாத நிதிச்சாதனங்களின் சீர்மதிப்பை மதிப்பிடு வதற்காக மாதிரிகளை உபயோகப்படுத் துவதில் நிபுணத்துவம் பெற்றிருக்கலாம். குறித்த தனிநபரோ அல்லது நிறுவனமோ அத்தகைய நிபுணத்துவத்தை உரிமத்தின் நிதிக்கூற்றுக்களை தயாரித்தலில் உபயோகப்படுத்தினால், குறித்த தனிநபர் அல்லது நிறுவனம் முகாமைத்துவத்தின் நிபுணராக கருதப்படுவதுடன் பந்தி 8 அதற்கு ஏற்புடையதாகும். மாறாக, அந்தத் தனிநபரோ அல்லது நிறுவனமோ உரிமம் அதன் சொந்த மதிப்பீட்டு முறைகளை உபயோகிக்கும்போது கிடைக்கப்பெறாத தனியார் ஊடுசெயல்களுடன் தொடர்பு பட்ட விலைத்தரவுகளை வழங்கலாம். அத்தகைய தகவலானது, கணக்காய்வுச் சான்றாக உபயோகப்படுத்தப்படுகின்ற போது இந்த SLAuS இன் பந்தி 7 இல் வெளிவாரி தகவல் மூலமொன்றிலிருந்தான தகவலாக அடங்கும். ஆனால், இது உரிமத்தினால் முகாமைத்துவ நிபுணரின் உபயோகமாகக் கருதப்படாது. |
| A44 அடிக்குறிப்பு | [1]SLAuS 620, ~~கணக்காய்வு நிபுணரது செய்கையை உபயோகித்தல்~~, பந்தி7 | [1]SLAuS 620, பந்தி 7 |
| A48 | தொடர்புடைய உறுதிப்படுத்தலுக்கான கணக்காய்வுச் சான்றாக முகாமைத்துவ நிபுணரின் செய்கையைப் பயன்படுத்துவதன் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுவதற்கான கருதுகோள்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்:<br>• அந்த நிபுணரின் கண்டுபிடிப்புக்கள் அல்லது முடிவுகளின் பொருத்தப்பாடு மற்றும் நியாயபூர்வதன்மை, ஏனைய கணக்காய்வுச் சான்றுகளுடனான அவற்றின் நிலைத்த தன்மை, மற்றும் நிதிக்கூற்றுக்களில் பொருத்தமான | தொடர்புடைய உறுதிப்படுத்தலுக்கான கணக்காய்வுச் சான்றாக முகாமைத்துவ நிபுணரின் செய்கையைப் பயன்படுத்துவதன் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுவதற்கான கருதுகோள்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்:<br>• அந்த நிபுணரின் கண்டுபிடிப்புக்கள் அல்லது முடிவுகளின் பொருத்தப்பாடு மற்றும் நியாயபூர்வதன்மை, ஏனைய கணக்காய்வுச் சான்றுகளுடனான அவற்றின் நிலைத்த தன்மை, மற்றும் நிதிக்கூற்றுக்களில் பொருத்தமான |

| விபரம் | 2017 | 2020 |
|---|---|---|
| | விதத்தில் பிரதிபலிக்கப் பட்டுள்ளனவா இல்லையா என்பதை உள்ளடக்கும்<br>• அந்நிபுணரின் செய்கைகள் கணிசமான எடுகோள்கள் மற்றும் செய்கைகளின் உபயோகத்தை உள்ளடக்குமாயின், அத்தகைய எடுகோள்கள் மற்றும் செய்முறைகளின் நியாயபூர்வ தன்மை மற்றும்<br>• அந்த நிபுணரினது செய்கைகள் மூலத் தரவின் கணிசமான உபயோகத்தை அடக்குமானால் அந்த மூலத்தரவினது பொருத்தப்பாடு, ”ரணத்துவம் மற்றும் செம்மை. | விதத்தில் பிரதிபலிக்கப்பட்டுள்ளனவா இல்லையா என்பதை உள்ளடக்கும்<br>• அந்நிபுணரின் செய்கைகள் கணிசமான எடுகோள்கள் மற்றும் செய்கைகளின் உபயோகத்தை உள்ளடக்குமாயின், அத்தகைய எடுகோள்கள் மற்றும் செய்முறைகளின் நியாயபூர்வ தன்மை மற்றும்<br>• அந்த நிபுணரினது செய்கைகள் மூலத் தரவின் கணிசமான உபயோகத்தை அடக்குமானால் அந்த மூலத்தரவினது பொருத்தப்பாடு, ”ரணத்துவம் மற்றும் செம்மை. மற்றும்<br>• அந்த நிபுணரின் செய்கைகள் வெளிவாரி தகவல் மூலத்திலிருந்தான தகவலையும் உள்ளடக்குமானால், அந்தத் தகவலின் பொருத்தப்பாடு மற்றும் நம்பகத்தன்மை. |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 501 (SLAuS 501 – கணக்காய்வுச் சான்றுகள்—தெரிவு செய்யப்பட்ட விடயங்களுக்கான விசேடமான கவனத்திற்கொள்ளல்கள்)** | | |
| A19 | பொருண்மையான பிறகூற்று இடரில் அதிகரிப்பினை வழங்கும் வழக்கு மற்றும் கோரிக்கையை இனங்காணும் நோக்கில் சேகரிக்கப்பட்ட கணக்காய்வுச் சான்றானது வழக்கு மற்றும் கோரிக்கை தொடர்பாக அளவீடு அல்லது மதிப்பீடு போன்ற பிற பொருத்தமான கவனத்திற்கொள்ளல்களின் கணக்காய்வுச் சான்றினை வழங்கலாம். SLAuS 540* ஆனது நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு மதிப்பீடுகளையோ அல்லது தொடர்புடைய வெளிப்படுத்தல்களையோ தேவைப்படுத்துகின்ற வழக்கு மற்றும் கோரிக்கைகளுக்கான கணக்காய்வாளரது கவனத்திற்கொள்ளல்கள் தொடர்புடைய பொருத்தமான வழிகாட்டலை வழங்கும்<br>** SLAuS 540 சீர்மதிப்புக் கணக்கீட்டு மதிப்பீடுகளை உள்ளடக்கிய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிக்காட்டல்களின் கணக்காய்வு* | பொருண்மையான பிறகூற்று இடரில் அதிகரிப்பினை வழங்கும் வழக்கு மற்றும் கோரிக்கையை இனங்காணும் நோக்கில் சேகரிக்கப்பட்ட கணக்காய்வுச் சான்றானது வழக்கு மற்றும் கோரிக்கை தொடர்பாக அளவீடு அல்லது மதிப்பீடு போன்ற பிற பொருத்தமான கவனத்திற்கொள்ளல்களின் கணக்காய்வுச் சான்றினை வழங்கலாம். SLAuS 540* (மீளாக்கம்) ஆனது நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு மதிப்பீடுகளை அல்லது தொடர்புடைய வெளிப்படுத் தல்களை தேவைப்படுத்துகின்ற வழக்கு மற்றும் கோரிக்கைகளுக்கான கணக்காய்வாளரது கவனத்திற்கொள்ளல்கள் தொடர்புடைய பொருத்தமான வழிகாட்டலை வழங்கும்<br>** SLAuS 540 (மீளாக்கம்) சீர்மதிப்புக் கணக்கீட்டு மதிப்பீடுகளை உள்ளடக்கிய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிக்காட்டல்களின் கணக்காய்வு* |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 505 (SLAuS 505 – வெளிவாரி உறுதிப்படுத்தல்கள்)** | | |
| மாற்றங்கள் இல்லை | | |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 510 (SLAuS 510 – அகக்கணக்காய்வுப் பணிக்கமர்தல்கள் - ஆரம்ப மீதிகள்)** | | |
| *அடிக்குறிப்பு | ~~இந்த நியமத்தில் பக்கம் 1280 முதல் 1361 வரை இனங்காணப்பட்ட திருத்தங்கள் 31 மார்ச் 2018 இல் அல்லது அதற்குப் பின் முடிவடையும் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வுகளுக்கே ஏற்புடையவை என உறுதிப்படுத்தப்படுகின்றது~~ | [உள்ளடக்கம் நீக்கப்பட்டுள்ளது] |

| விபரம் | 2017 | 2020 |
|---|---|---|
| பின்னிணைப்பு | • …<br>• இந்த குறித்த நியாயாதிக்கத்தில் சட்டம் அல்லது ஒழுங்குவிதி நிதிச் செயற்பாடு மற்றும் காசுப்பாய்வுகள் பற்றி முனைப்பழி அபிப்பிராயமும் பற்றி திருத்தப்படாத அபிப்பிராயம் வழங்குவதற்கு கணக்காய்வாளரை தடைசெய்கின்றது. | • …<br>• இந்த குறித்த நியாயாதிக்கத்தில் சட்டம் அல்லது ஒழுங்குவிதி நிதிச் செயற்பாடு மற்றும் காசுப்பாய்வுகள் பற்றி முனைப்பழி அபிப்பிராயமும் நிதிநிலை பற்றி திருத்தப்படாத அபிப்பிராயம் வழங்குவதற்கு கணக்காய்வாளரை தடைசெய்கின்றது |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 520 (SLAuS 520 – பகுப்பாய்வு விதிமுறைகள்)** | | |
| மாற்றங்களில்லை | | |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 530 (SLAuS 530 – கணக்காய்வு மாதிரியெடுத்தல்)** | | |
| மாற்றங்களில்லை | | |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 540 (மறுசீரமைக்கபட்டது) (SLAuS 540 (மறுசீரமைக்கபட்டது) கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் கணக்காய்வு)** | | |
| முழு SLAuS உம் ஆவணத்தின் இறுதியில் தனியாக உள்ளடக்கப்பட்டுள்ளது. | | |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 550 (SLAuS 550 – உறவுமுறைத் தரப்பினர்)** | | |
| மாற்றங்களில்லை | | |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 560 (SLAuS 560 – பின்னைய நிகழ்வுகள்)** | | |
| *அடிக்குறிப்பு | ~~இந்த நியமத்தில் பக்கம் 1280 முதல் 1361 வரை இனங்காணப்பட்ட திருத்தங்கள் 31 மார்ச் 2018 இல் அல்லது அதற்குப்பின் முடிவடையும் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வுகளுக்கு ஏற்புடையவை என உறுதிப்படுத்துகின்றது~~ | [உள்ளடக்கம் நீக்கப்பட்டுள்ளது] |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 570 (மறுசீரமைக்கப்பட்டது) (SLAuS 570 (மறுசீரமைக்கப்பட்டது)- தொடர்ந்தியங்கும் தாபனம்)** | | |
| மாற்றங்களில்லை | | |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 580 (SLAuS 580 – எழுத்துமூலப் பிரதிநிதித்துவங்கள்)** | | |
| *அடிக்குறிப்பு | ~~இந்த நியமத்தில் பக்கம் 1280 முதல் 1361 வரை இனங்காணப்பட்டுள்ள திருத்தங்கள் 31 மார்ச் 2018 இல் அல்லது அதன்பின் முடிவடையும் காலத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வுக்கே ஏற்புடையதென உறுதிப்படுத்தப்படுகின்றது~~ | [உள்ளடக்கம் நீக்கப்பட்டுள்ளது] |
| **பின்னிணைப்பு 1** | • …<br>• SLAuS 540 ~~சீர்மதிப்பு கணக்கீட்டு மதிப்பீடுகளை அடக்கிய~~ கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிக்காட்டல்களின் கணக்காய்வு– பந்தி ~~22~~ | • …<br>• SLAuS 540 (மீளாக்கம்) கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப் படுத்தல்களின் கணக்காய்வு– பந்தி 37 |
| **பின்னிணைப்பு 2** | இந்த மற்றும் ஏனைய SLAuSs தேவைப் படுத்தும் எழுத்துமூல பிரதிநிதித்துவத்தை கீழ்வரும் விளக்கப்பதம் உள்ளடக்கும். இந்த விளக்கத்தில் பிரயோகிக்கத்தக்க நிதியறிக்கைச் சட்டகமாக இலங்கை | இந்த மற்றும் ஏனைய SLAuSs தேவைப் படுத்தும் எழுத்துமூல பிரதிநிதித்துவத்தை கீழ்வரும் விளக்கப்பதம் உள்ளடக்கும். இந்த விளக்கத்தில் பிரயோகிக்கத்தக்க நிதியறிக்கைச் சட்டகமாக இலங்கை |

| விபரம் | 2017 | 2020 |
|---|---|---|
| | கணக்காய்வு நியமங்களும், SLAuS 570* இன் தேவைப்பாட்டிற்கமைய எழுத்து மூல பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்ளுவது பொருத்தமற்றதெனவும், கோரப்பட்ட எழுத்து மூல பிரதிநிதித்துவத்திற்கு விதி விலக்கு இல்லை எனவும் கொள்ளப்பட்டு உள்ளது. விதிவிலக்கு இருப்பின் அந்த விதிவிலக்கினை பிரதிபலிக்கக்கூடியதாக எழுத்து மூலப் பிரதிநிதித்துவமானது மாற்றியமைக்கப்பட வேண்டும்.<br>…<br>• ~~சீர்மதிப்பில் மதிப்பிட்ட கணக்கீட்டு மதிப்பீடுகள் அடங்கலாக~~ கணக்கீட்டு மதிப்பீடுகளை உருவாக்குதலில் ~~எம்மால்~~ பயன்படுத்தப்பட்ட ~~கணிசமான~~ எடுகோள்கள், நியாயபூர்வமானவை (SLAuS 540~~)~~<br>* SLAuS 570, *தொடர்ந்தியங்கு தன்மை* | கணக்காய்வு நியமங்களும், SLAuS 570* <u>(மீளாக்கம்)</u> இன் தேவைப்பாட்டிற்கமைய எழுத்து மூல பிரதிநிதித்துவத்தை பெறுவது பொருத்தமற்றதெனவும், கோரப்பட்ட எழுத்து மூல பிரதிநிதித்துவத்திற்கு விதிவிலக்கு இல்லை எனவும் கொள்ளப்பட்டுள்ளது. விதிவிலக்கு இருப்பின் அந்த விதிவிலக்கை பிரதிபலிக்கக்கூடியதாக எழுத்து மூலப் பிரதிநிதித்துவமானது மாற்றியமைக்கப்பட வேண்டும்.<br>…<br>• கணக்கீட்டு மதிப்பீடு <u>மற்றும் அதனுடன் தொடர்புபட்டதான வெளிக்காட்டல்களை</u> ஆக்குவதில் உபயோகித்த <u>செய்முறை, தரவு, மற்றும் கணிசமான</u> எடுகோள்கள் <u>பிரயோகத்திலுள்ள நிதியறிக்கையிடற் சட்டகத்தின் உள்ளடக்கத்திற்கமைவாக</u> நியாயபூர்வமான <u>ஏற்பிசைவு, அளவீடு அல்லது வெளிப்படுத்தல் ஆகியவற்றை அடைவதற்குப் பொருத்தமானவை.</u> (SLAuS 540 <u>(மீளாக்கம்))</u><br>* SLAuS 570, *தொடர்ந்தியங்கு தன்மை* |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 600 (SLAuS 600 – விசேட கவனத்திற்கொள்ளல்கள்—குழும நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு (கூறுகளின் கணக்காய்வாளரின் வேலைகள் உட்பட)** | | |
| மாற்றங்களில்லை | | |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 610 (மீளாக்கம் 2013) (SLAuS 610 (மீளாக்கம் 2013) - அகக் கணக்காய்வாளர்களின் செய்கைகளைப் பயன்படுத்துதல்)** | | |
| மாற்றங்களில்லை | | |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 620 (SLAuS 620 – கணக்காய்வாளரின் நிபுணரது செய்கைகளைப் பயன்படுத்துதல்)** | | |
| A36 | SLAuS 540* சில சந்தர்ப்பங்களில் அதிக விசேடத்துவ, உரிமம் விருத்திசெய்த மாதிரிகளின் பாவனை உட்பட கணக்கீட்டு மதிப்பீடுகளை மேற்கொள்ளும்போது முகாமை பயன்படுத்தும் எடுகோள்கள் மற்றும் செய்முறைகள் ஆகியனபற்றி கலந்தாய்கின்றது. இந்தக் கலந்தாய்வு முகாமையின் எடுகோள்கள் மற்றும் செய்முறைகள் தொடர்பாக போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்றினை கணக்காய்வாளர் பெறும் நோக்கத்தில் மேற்கொள்ளப்படினும், கணக்காய்வாளர் நிபுணரின் எடுகோள்கள் மற்றும் செயன் முறைகளை மதிப்பீடு செய்யும்போது கணக்காய்வாளருக்கு உதவலாம்.<br>* SLAuS 540 ~~சீர்மதிப்புக் கணக்கீட்டு மதிப்பீடுகளை உள்ளடக்கிய~~ கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் கணக்காய்வு, பந்திகள் ~~8~~, 13 மற்றும் ~~15~~ | SLAuS 540 (மீளாக்கம்)* சில சந்தர்ப்பங் களில் அதிக விசேடத்துவ, உரிமம் விருத்தி செய்த மாதிரிகளின் பாவனை உட்பட கணக்கீட்டு மதிப்பீடுகளை மேற்கொள்ளும் போது முகாமை பயன்படுத்தும் எடுகோள்கள் மற்றும் செய்முறைகள் ஆகியனபற்றி கலந்தாய்கின்றது. இந்தக் கலந்தாய்வு முகாமையின் எடுகோள்கள் மற்றும் செய்முறைகள் தொடர்பாக போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்றினை கணக்காய்வாளர் பெறும் நோக்கத்தில் மேற்கொள்ளப்படினும், கணக்காய்வாளர் நிபுணரின் எடுகோள்கள் மற்றும் செயன் முறைகளை மதிப்பீடு செய்யும் போது கணக்காய்வாளருக்கு உதவலாம்.<br>* SLAuS 540 <u>(மீளாக்கம்)</u>, கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் கணக்காய்வு, பந்திகள் 13, <u>18</u> மற்றும் <u>20</u> |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 700 (மீளாக்கம்) (SLAuS 700 (மீளாக்கம்) – கணக்காய்வு அபிப்பிராயத்தினை ஏற்படுத்தி நிதிக்கூற்றுக்கள் மீதான அறிக்கையிடல்)** | | |

| விபரம் | 2017 | 2020 |
|---|---|---|
| 13 (c) | (a) முகாமை தயாரித்த கணக்கீட்டு மதிப்பீடுகள் நியாயபூர்வமானவை | (a) முகாமை தயாரித்த கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய வெளிக்காட்டல்கள் நியாயபூர்வமானவை |
| A3 | SLAuS 540, கணக்கீட்டு மதிப்பீடுகளை ஆக்கும்போது சாத்தியமான முகாமைப் பக்கச்சார்பினை விபரிக்கின்றது*. சாத்திய முகாமைப் பக்கச்சார்பின் காட்டிகள் தனித்தனியான கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயபூர்வதன்மை மீதான முடிவுகளை உருவாக்குவதில் பிறழ்கூற்றுக்களை ஏற்படுத்துவதில்லை. இருப்பினும், முழு நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான கணக்காய்வாளரது மதிப்பீட்டினை இவை பாதிக்கலாம்.<br>* SLAuS 540, ~~சீர்மதிப்புக் கணக்கீட்டு மதிப்பீடுகளைஉள்ளடக்கிய~~ கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் கணக்காய்வு. பந்தி ~~21~~ | SLAuS 540 (மீளாக்கம்) கணக்கீட்டு மதிப்பீடுகளை ஆக்கும்போது சாத்தியமான முகாமைப் பக்கச்சார்பினை விபரிக்கின்றது*. சாத்திய முகாமைப் பக்கச்சார்பின் காட்டிகள் தனித்தனியான கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயபூர்வதன்மை மீதான முடிவுகளை உருவாக்குவதில் பிறழ்கூற்றுக்களை ஏற்படுத்துவதில்லை. இருப்பினும், முழு நிதிக்கூற்றுக்களும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதன் கணக்காய்வாளரது மதிப்பீட்டினை இவை பாதிக்கலாம்.<br>* SLAuS 540 (மீளாக்கம்) கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிக்காட்டல்களின் கணக்காய்வு பந்தி 32 |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 701 (SLAuS 701 – சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கையில் முக்கிய கணக்காய்வு விடயங்களைத் தொடர்பாடல் செய்தல் )** | | |
| 4(b) | அதிகளவான மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை கொண்டதாக ~~இனங்காணப்பட்ட~~ கணக்கீட்டு மதிப்பீடுகளை உள்ளடக்கிய முகாமையின் கணிசமான தீர்மானத்தினை அடக்கும் நிதிக்கூற்றுக்களின் பகுதிகள் பற்றிய கணக்காய்வாளரின் கணிசமான தீர்மானங்கள் (பார்க்க பந்தி. A23–A24) | உயர்ந்த மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளை உள்ளடக்கிய முகாமையின் கணிசமான தீர்மானத்தை ஆக்கும் நிதிக்கூற்றுக்களின் பகுதிகள் பற்றிய கணக்காய்வாளரின் கணிசமான தீர்மானங்கள் (பார்க்க பந்தி. A23–A24) |
| A23 & A24 தலைப்பு | அதிகளவான மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை கொண்டதாக ~~இனங்காணப்பட்ட~~ கணக்கீட்டு மதிப்பீடுகளை உள்ளடக்கிய முகாமையின் கணிசமான தீர்மானத்தினை உள்ளடக்கும் நிதிக்கூற்றுப் பகுதிகள் பற்றிய கணக்காய்வாளரின் கணிசமான தீர்மானங்கள் (பார்க்க பந்தி. 9(b)) | அதிக மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளை உள்ளடக்கிய முகாமையின் கணிசமான தீர்மானத்தை அடக்கும் நிதிக்கூற்றுக்களின் பகுதிகள் தொடர்பாக கணக்காய்வாளரின் கணிசமான தீர்மானங்கள் (பார்க்க பந்தி. 9(b)) |
| A24 | எனினும், SLAuS 540* க்கு அமைவாக உயர் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை ~~கொண்டதாக இனங்கண்ட~~ உடைய நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துவோர், கணிசமான இடராக தீர்மானிக்காத கணக்கீட்டு மதிப்பீடுகளில் உள்ள தமது நாட்டத்தினை கோடிட்டுக் காட்டியுள்ளனர். ஏனைய விடயங்கள் உட்பட நிதிக் கூற்றுக்களின் சிக்கலான பகுதிகளான அத்தகைய மதிப்பீடுகள் முகாமையின் | எனினும், SLAuS 540 (மீளாக்கம்)* க்கு அமைய உயர்மட்ட நிச்சயமற்ற தன்மைக்கு ஆளாகும் நிதிக்கூற்றுக்களை பயன்படுத்து வோர், கணிசமான இடராக தீர்மானிக்காத கணக்கீட்டு மதிப்பீடுகளில் உள்ள தமது நாட்டத்தினை கோடிட்டுக் காட்டியுள்ளனர். ஏனைய விடயங்கள் உட்பட நிதிக்கூற்றுக் களின் சிக்கலான பகுதிகளான அத்தகைய மதிப்பீடுகள் முகாமையின் சுயதீர்மானத்தில் பெரிதும் தங்கியிருப்பதுடன் இவை |

| விபரம் | 2017 | 2020 |
|---|---|---|
| | சுயதீர்ப்பில் பெரிதும் தங்கியிருப்பதுடன் இவை முகாமைத்துவ நிபுணர் மற்றும் கணக்காய்வாளர் நிபுணர் ஆகிய இருவரின் ஈடுபாட்டினை தேவைப் படுத்தும். அத்துடன் நிதிக்கூற்றுக்களில் கணிசமான தாக்கம் கொண்ட கணக்கீட்டு கொள்கைகளை (அத்தகைய கொள்கை மாற்றங்கள் உட்பட) கோடிட்டுக் காட்டி உள்ளதுடன், நிதிக்கூற்றுக்கள் பற்றிய தமது விளக்கத்திற்கு அதிலும் குறிப்பாக உரிமத்தினது நடைமுறைகள் அதன் துறையிலுள்ள ஏனைய உரிமங்களுடன் இசைவாக இல்லாதபோது அதனை விளங்கிக்கொள்ள தேவையானவையென பயனாளர் கருதுகின்றனர்.<br>* SLAuS 540 – ~~சீர்மதிப்புக் கணக்கீட்டு மதிப்பீடுகளை உள்ளடக்கிய~~ கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிக்காட்டல்களின் கணக்காய்வு, பந்திகள் ~~10–11~~ ஐப் பார்க்கவும். | முகாமைத்துவ நிபுணர் மற்றும் கணக்காய்வாளர் நிபுணர் ஆகிய இருவரின் ஈடுபாட்டினை தேவைப்படுத்தும். அத்துடன் நிதிக்கூற்றுக்களில் கணிசமான தாக்கம் கொண்ட கணக்கீட்டு கொள்கைகளை (அத்தகைய கொள்கை மாற்றங்கள் உட்பட) கோடிட்டுக் காட்டி உள்ளதுடன், நிதிக்கூற்றுக்கள் பற்றிய தமது விளக்கத்திற்கு அதிலும் குறிப்பாக உரிமத்தினது நடைமுறைகள் அதன் துறையிலுள்ள ஏனைய உரிமங்களுடன் இசைவாக இல்லாதபோது அதனை விளங்கிக்கொள்ள தேவையானவையென பயனாளர் கருதுகின்றனர்.<br>*540 (மீளாக்கம்), கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் கணக்காய்வு நியம பந்திகள் 16–17 இனை பார்க்கவும். |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 705 (மீளாக்கம்) (SLAuS 705 (மீளாக்கம்) – சுயாதீன கணக்காய் வாளரின் அறிக்கையிலான மாற்றங்கள்)** | | |
| மாற்றங்களில்லை | | |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 706 (மீளாக்கம்) (SLAuS 706 (மீளாக்கம்) – சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கையில் விடய அழுத்த பந்திகள் மற்றும் ஏனைய விடயப் பந்திகள்)** | | |
| மாற்றங்களில்லை | | |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 710 (SLAuS 710 – ஒப்பீட்டுத் தகவல்கள், ஒத்த பெறுமதிகள் மற்றும் ஒப்பீட்டு நிதிக்கூற்றுக்கள்)** | | |
| *அடிக்குறிப்பு | ~~இந்த நியமத்தில் பக்கம் 1280 முதல் 1361 வரை இனங்காணப்பட்டுள்ள திருத்தங்கள் 31 மார்ச் 2018 இல் அல்லது அதன்பின் முடிவடையும் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வுகளுக்கே ஏற்புடையவை என உறுதிப்படுத்தப்படுகின்றது.~~ | [உள்ளடக்கம் நீக்கப்பட்டுள்ளது] |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 720 (மீளாக்கம்) (SLAuS 720 – ஏனைய தகவல்கள் தொடர்பாக கணக்காய்வாளரது கடப்பாடுகள்)** | | |
| மாற்றங்களில்லை | | |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 800 (மீளாக்கம்) (SLAuS 800 (மீளாக்கம்) – விசேட கவனத்திற் கொள்ளல்கள் —விசேட நோக்குச் சட்டகத்திற்கமைவாகத் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வுகள்)** | | |
| மாற்றங்களில்லை | | |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 805 (மீளாக்கம்) – (SLAuS 805 (மீளாக்கம்) – விசேட கவனத்திற் கொள்ளல்கள் — தனியான நிதிக்கூற்றுக்கள் மற்றும் நிதிக்கூற்றின் குறிப்பான மூலகங்கள், கணக்குகள் அல்லது உருப்படிகளின் கணக்காய்வு** | | |
| மாற்றங்களில்லை | | |
| **இலங்கை கணக்காய்வு நியமம் 810 (மீளாக்கம்) (SLAuS 810 (மீளாக்கம்) – தொகுக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மீது அறிக்கையிடுவதற்கான ஈடுபடுத்தல்)** | | |
| மாற்றங்களில்லை | | |

# இலங்கை கணக்காய்வு நியமம் 540 (மீளாக்கம்)
# கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் கணக்காய்வு

(2019 டிசம்பர் 15 அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் காலப்பகுதிகளுக்கான நிதியறிக்கைகளின் கணக்காய்வுகளுக்கு ஏற்புடையது)

## உள்ளடக்கம்

பந்தி

**அறிமுகம்**
இந்த SLAuS நியமத்தின் நோக்கம் 1
கணக்காய்வு மதிப்பீடுகளின் தன்மை 2-29
இந்த SLAuS இன் முக்கிய எண்ணக்கருக்கள் 4-9
அமுலுக்கு வரும் திகதி 10
**நோக்கம் 11**
**வரைவிலக்கணங்கள் 12**
**தேவைப்பாடுகள்**
இடர் மதிப்பீட்டு விதிமுறைகள் மற்றும் தொடர்புடைய செயற்பாடுகள் 13-15
பொருண்மையான பிறழ்கூற்றுக்களை இனங்காணுதல் மற்றும் மதிப்பிடல் 16-17
மதிப்பிடப்பட்ட பொருண்மையான பிறழ்கூற்று இடர்களுக்குக்கான பதிலிறுக்கைகள். 18-30
கணக்கீட்டு மதிப்பீடுகளுடன் தொடர்புபட்ட வெளிக்காட்டல்கள் 31
சாத்தியமான முகாமைப் பக்கச்சார்பிற்கான காட்டிகள் 32
மேற்கொண்ட கணக்காய்வுச் விதிமுறைகளின் அடிப்படையிலான ஒட்டுமொத்த மதிப்பீடு 33-36
எழுத்துமூலப் பிரதிநிதித்துவங்கள் 37
ஆளுமை பாரப்படுத்தப்பட்டவர்,முகாமை அல்லது ஏனைய தொடர்புபட்ட தரப்பினருடன் தொடர்பாடல் 38
ஆவணப்படுத்துதல் 39
**பிரயோக மற்றும் பிற விளக்கக்குறிப்புக்கள்**
கணக்கீட்டு மதிப்பீடுகளின் தன்மை A1 - A7
இந்த SLAuS இன் பிரதான கோட்பாடுகள் A8 - A13
வரைவிலக்கணங்கள் A14 - A18
இடர் மதிப்பீட்டு விதிமுறைகள் மற்றும் தொடர்புடைய செயற்பாடுகள் A19 - A63
பொருண்மையான பிறழ்கூற்று இடரினை இனங்காணுதல் மற்றும் மதிப்பிடல் A64 - A80
மதிப்பிட்ட பொருண்மையான பிறழ்கூற்று இடர்களுக்கான பதிலிறுக்கைகள் A81 - A132
சாத்தியமான முகாமைப் பக்கச்சார்புக்கான காட்டிகள் A133 - A136
மேற்கொண்ட கணக்காய்வு விதிமுறைகளின் அடிப்படையிலான ஒட்டுமொத்த மதிப்பீடு A137 - A144
எழுத்துமூலப் பிரதிநிதித்துவங்கள் A145
ஆளுமை பாரப்படுத்திய, முகாமை அல்லது பிற பொருத்தமான தரப்புடன் தொடர்பாடல் A146 - A148
ஆவணப்படுத்தல் A149 - A152
**பின்னிணைப்பு 1 உள்ளார்ந்த இடர்க்காரணிகள்**
**பின்னிணைப்பு 2 ஆளுமை பாரப்படுத்தப்பட்டோருடனான தொடர்பாடல்**

இலங்கை கணக்காய்வு நியமம் (SLAuS) 540 (மீளாக்கப்பட்டது), கணக்காய்வு கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் எனும் இந்த நியமமானது, SLAuS 200, சுயாதீன கணக்காய்வாளரது பொதுவான குறிக்கோள்கள் மற்றும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்திசைவாக கணக்காய்வொன்றினை நடாத்துதல் எனும் நியமத்துடன் இணைந்து வாசிக்கப்பட வேண்டியதாகும்.

## அறிமுகம்

### இந்த SLAuS நியமத்தின் நோக்கம்

1. இந்த இலங்கை கணக்காய்வு நியமமானது நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வின் போது கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் அதனோடு தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் தொடர்பான கணக்காய்வாளரது கடப்பாடுகளோடு தொடர்புபுடுகின்றது. குறிப்பாக, SLAuS 315 (மீளாக்கம்),[1] SLAuS 330,[2] SLAuS 450,[3] SLAuS 500[4] மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் வெளிப்படுத்தல்கள் தொடர்பாகப் பிரயோகிக்கப்படக்கூடிய ஏனைய பொருத்தமான SLAuS நியமங்களோடு தொடர்புபட்ட அல்லது அவற்றினை விரிவாக்கும் தேவைப்பாடுகள் மற்றும் வழிகாட்டுதல்களை உள்ளடக்குகின்றது. இது கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் வெளிப்படுத்தல்களிலான வழுக்கூற்றுக்களையும் மற்றும் முகாமையின் சாத்தியமான பிறழ்வுகளுக்கான குறிகாட்டிகளையும் மதிப்பிடுவதற்கான தேவைப்பாடுகளையும் வழிகாட்டல்களையும் உள்ளடக்குகின்றது.

### கணக்காய்வு மதிப்பீடுகளின் தன்மை

2. கணக்கீட்டு மதிப்பீடுகள் இயல்பிலேயே பரந்தளவில் வேறுபட்டவையாகும் மேலும் இவை பணப்பெறுமதியினை நேரடியாக அவதானிக்க முடியாத போது முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டியவையாகும். இந்த பணப்பெறுமதிகளின் அளவீடானது தரவு மற்றும் அது சார்ந்த அறிவு என்பவற்றிலுள்ள உட்கிடையான வரையறைகளைப் பிரதிபலிக்கக்கூடிய மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டவையாகும். இந்த வரையறைகள் இயல்பாக அமைந்த அகவயத்தன்மையிலும் மற்றும் அளவீட்டு வெளியீட்டில் எழக்கூடிய வேறுபாட்டிலும் அதிகரிப்பினை வழங்கும். கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரிக்கும் செயன்முறையானது எடுகோள்கள் மற்றும் தரவுகளைப் பயன்படுத்தி ஒரு செய்முறையைத் தெரிவு செய்தல் மற்றும் பிரயோகித்தல் என்பவற்றினை உள்ளடக்கும்.இது முகாமையின் தீர்மானத்தினைத் தேவைப்படுத்துவதோடு அளவீட்டிலுள்ள சிக்கலையும் அதிகரிக்கும். இந்தப் பணப்பெறுமதிகளின் அளவீட்டின் மீது சிக்கல் மற்றும் அகவயத்தன்மையின் தாக்கமானது அவற்றினது பிறழ்வுக்கான மாறுந்தன்மையினைப் பாதிக்கும். (பார்க்க பந்தி A1–A6, பின்னிணைப்பு 1)

3. இந்த SLAuS அனைத்து கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கும் பிரயோகிக்கப்படக் கூடியதெனினும், ஒரு கணக்கீட்டு மதிப்பீடானது மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மைக்குள் எந்தளவு உட்பட்டது என்பது கணிசமாக வேறுபடும். இடர் மதிப்பீட்டினதும் மற்றும் SLAuS இனால் தேவைப்படுத்தப்படுகின்ற மேலதிக கணக்காய்வுச் செயன்முறைகள் ஆகியவற்றின் தன்மை, நேரம் மற்றும் வீச்செல்லையானது மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை மற்றும் தொடர்புடைய பொருண்மையான பிறழ்கூற்றுக்களின் மதிப்பீடு ஆகியவற்றோடு தொடர்புபட்டு மாறுபடும் சில கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கு,மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை குறைவாகக் காணப்படலாம், அவற்றின் தன்மை, மற்றும் அவற்றை உருவாக்குவதிலுள்ள சிக்கல் மற்றும் அகவயத்தன்மை என்பவையும் குறைவாகவே காணப்படும்.அந்த வகையான கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கு, இல.கணக்காய்வு நியமத்தினால் தேவைப்படுத்தப்படுகின்ற இடர் மதிப்பீட்டுச் செயன்முறைகள் மற்றும் மேலதிக கணக்காய்வு நடைமுறைகள் ஆகியவை விரிந்தளவானவையாக இருக்குமென்று எதிர்பார்க்கப்பட முடியாதுமதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை, சிக்கலான தன்மை மற்றும் அகவயத்தன்மை ஆகியன அதிகமானதாகக் காணப்படும் போது இத்தகைய செயன்முறைகள் பரந்த அளவினதாக இருக்குமென எதிர்பார்க்கப்படலாம். இந்தக் கணக்காய்வு நியமத்தின் தேவைப்படுத்தல்கள் எப்படி அளவிடப்படலாம் என்பதற்கான வழிகாட்டல்களையும் இந்த நியமம் உள்ளடக்குகின்றது. (பார்க்க பந்தி A7)

---

[1] *SLAuS 315 (மறுசீரமைக்கப்பட்டது), உரிமத்தினையும் அதன் சூழலையும் விளங்கிக்கௌ்ளுதலும் மற்றும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கான இடரை மதிப்பிடலும்.*

[2] *SLAuS 330, மதிப்பீடு செய்யப்பட்ட இடருக்கு பதிலிறுத்தலாக கணக்காய்வாளரின் நடைமுறைகள்*

[3] *SLAuS 450, கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட பிறழ்கூற்றுக்களின் மதிப்பாய்வு.*

[4] *SLAuS 500, கணக்காய்வுச் சான்றுகள்*

**இந்த SLAuS இன் முக்கிய கோட்பாடுகள்**

4. இந்த SLAuS கணக்கீட்டு மதிப்பீடுகளின் உறுதிப்பாட்டு மட்டத்தில் பொருண்மையான பிறழ்கூற்றுக்களை மதிப்பிடும் நோக்கில் உள்ளார்ந்த இடரின் தனியான மதிப்பீட்டினைத் தேவைப்படுத்துகின்றது. ஒரு குறிப்பிட்ட கணக்கீட்டு மதிப்பீட்டின் தன்மையின் அடிப்படையில், பிறழ்கூற்றுக்கான ஒரு உறுதிப்பாட்டின் பொருண்மையான மாறுத்தகவானது மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை, சிக்கல்,அகவயத்தன்மை அல்லது ஏனைய உள்ளார்ந்த இடர்க்காரணிகளுக்கும் அவற்றுக்கிடையிலான தொடர்புக்கும் உட்பட்டதாக அல்லது அவற்றினால் பாதிப்படையக்கூடியதாக இருக்கலாம். SLAuS; 200,[5] இல் விளக்கப்பட்டுள்ளபடி, சில உறுதிப்பாடுகள் மற்றும் அவற்றோடு தொடர்புபட்ட ஊடுசெயல்கள், கணக்கு மீதிகள், மற்றும் வெளிப்படுத்தல்கள் ஆகியவற்றின் உள்ளார்ந்த இடரானது மற்றவையைக் காட்டிலும் உயர்வானதாகும். இதன்படி, இயல்பாயமைந்த இடரின் மதிப்பீடு, பிறழ்கூற்றின் சாத்தியம் அல்லது அளவினைப் பாதிக்கக்கூடிய இயல்பாயிணைந்த இடர்க்காரணிகளின் அளவில் தங்கியிருப்பதுடன் இந்த SLAuS இன் இயல்பாயிணைந்த இடரின் வீச்ச அளவாகக் குறிப்பிட்ட அளவிடையுடன் மாறுபடும் (பார்க்க பந்தி. A8–A9, A65–A66, பின்னிணைப்பு 1)

5. இந்த SLAuS ஆனது SLAuS 315 (மறுசீரமைக்கப்பட்டது) மற்றும் SLAuS 330 ஆகியவற்றின் தேவைப்படுத்தல்களுடன் தொடர்புபடுவதுடன், கணக்கீட்டு மதிப்பீடுகளுடன் தொடர்புபட்ட கட்டுப்பாடுகள் பற்றிய கணக்காய்வாளரது தீர்மானங்களது முக்கியத்துவத்தினை வலுப்படுத்துவதற்கான வழிகாட்டல்களையும் வழங்குகின்றது. மேலும் இந்தத் தீர்மானங்கள் கீழ்வருவனவற்றை உள்ளடக்கும்:

- வடிவமைப்பினை மதிப்பிடுவதற்குக் கணக்காய்வாளரினைத் தேவைப்படுத்துகின்றதும் மற்றும் அவை பிரயோகிக்கப்பட்டதா இல்லையா என்பது பற்றிய தீர்மானத்தினையும் தேவைப்படுத்துகின்ற கட்டுப்பாடுகள் காணப்படுகின்றதா இல்லையா என்பது பற்றியது,
- பொருத்தமான கட்டுப்பாடுகளின் செயற்பாட்டு வினைதிறனை மதிப்பிடுவதற்கானது

6. இந்த SLAuS ஆனது கணக்கீட்டு மதிப்பீடுதலின் பொருண்மையான பிறழ்கூற்று இடரை உறுதிப்பாட்டு மட்டத்தில் மதிப்பிடும்போது கட்டுப்பாட்டு இடருக்கென தனியானதொரு மதிப்பீட்டினை தேவைப்படுத்தும். கட்டுப்பாட்டு இடரை மதிப்பிடும்போது, கணக்காய்வாளரது மேலதிகக் கணக்காய்வு நடைமுறைகள் கட்டுபாடுகளின் வினைதிறன் மீதான தீர்மானிக்கப்பட்ட நம்பகத்தன்மையை மாற்றக்கூடும் என்பது பற்றி கணக்காய்வாளர் கவனத்திற் கொள்வார். கணக்காய்வாளர் கட்டுப்பாட்டு சோதனையை மேற்கொள்ளாத இடத்து, கணக்காய்வாளரினால் உறுதிப்பாட்டு மட்டத்தில் மதிப்பிடப்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றானது குறித்த அந்த உறுதிப்பாடு தொடர்பாக கட்டுப்பாடுகளின் வினைத்திறனான செயற்பாட்டிற்காகக் குறைக்கப்பட முடியாததாகும்.[6] (பார்க்க பந்தி. A10)

7. இந்த SLAuS ஆனது கணக்காய்வாளரின் மேலதிக கணக்காய்வு விதிமுறைகள், (பொருத்தமெனில், கட்டுப்பாட்டு சோதனைகளை உள்ளடக்கும்) உறுதிப்பாட்டு மட்டத்தில் மதிப்பிடப்பட்ட பொருண்மையான பிறழ்கூற்றுக்களுக்கான காரணங்களுக்கு பதிலிறுக்கையாக அமைய வேண்டுமென வலியுறுத்துகின்றது. இது, ஒன்று அல்லது மேற்பட்ட உள்ளார்ந்த இடர்க் காரணிகளின் தாக்கம் மற்றும் கணக்காய்வாளரது மதிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டு இடர் என்பவற்றையும் கருத்திலெடுக்கிறது.

8. கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்பில் தொழில்சார் சந்தேகப் பிரயோகமானது உள்ளார்ந்த இடர்க் காரணிகளுக்கான கணக்காய்வாளரது கருத்திற்கொள்ளலால் பாதிப்படையக்கூடியதாகும், மற்றும்

---

5 SLAuS 200, *சுயாதீன கணக்காய்வாளரின் ஒட்டுமொத்த நோக்கங்கள் மற்றும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக கணக்காய்வினை மேற்கொள்ளல்.* ப்தி A40

6 SLAuS 530, *கணக்காய்வு மாதிரியெடுத்தல்*, பின்னிணைப்பு 3

கணக்கீட்டு மதிப்பீடுகள் பெருமளவில் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மைக்குள் உள்ளடங்குகின்ற போது, இதன் முக்கியத்துவம் அதிகரிப்படையும் அல்லது சிக்கல், அகவயத்தன்மை அல்லது ஏனைய உள்ளார்ந்த இடர்க் காரணிகளால் அதிக அளவில் இது பாதிப்படையும். இதே போன்று, முகாமையின் வழு அல்லது தவறு காரணமான பிறழ்கூற்றுக்கான மாறுந்தகவானது அதிகமானதாகக் காணப்படும் போது தொழில்சார் சந்தேகப் பிரயோகமானது முக்கியமானதாக அமையும். (பார்க்க பந்தி. A11)

9. இந்த இலங்கைக் கணக்காய்வு நியமம் பிரயோகிக்கும் கணக்காய்வு விதிமுறைகளின் அடிப்படையிலும் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலும், அந்தக் கணக்கீட்டு மதிப்பீடுகளும் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தின் உள்ளடக்கத்திற்குப் பொருத்தமானதா[7] அல்லது பிறழ்கூறப்பட்டுள்ளதா என்பது பற்றிக் கணக்காய்வாளர் மதிப்பிடுவதற்கு தேவைப்படுத்தும். இந்தக் கணக்காய்வு நியமத்தின் நோக்கத்திற்காக, நிதியறிக்கைச் சட்டகத்தின் உள்ளடக்கத்திற்குப் பொருத்தமானதன்மை என்பது பிரயோகிக்கக்கூடிய நிதியறிக்கைச் சட்டகத்தின் பொருத்தமான தேவைப்பாடுகள் அனைத்தும் பொருத்தமான முறையில் பிரயோகிக்கப்படுவதுடன் கீழ்வருவனவற்றின் விவரிப்பினை விளக்குகின்றது: (பார்க்க பந்தி. A12–A13, A139–A144)

- கணக்கீட்டு மதிப்பீட்டினை உருவாக்குதல், இது செயன்முறையின் தெரிவு, எடுகோள்கள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீட்டின் தன்மை மற்றும் உரிமத்தின் சூழ்நிலை என்பவற்றின் கண்ணோட்டத்தில் தரவு ஆகியவற்றை உள்ளடக்கும்
- முகாமையின் புள்ளி மதிப்பீட்டின் தெரிவு மற்றும்
- கணக்கீட்டு மதிப்பீட்டினைப் பற்றிய வெளிக்காட்டல்கள், இது கணக்கீட்டு மதிப்பீடு எவ்வாறு உருவாக்கப்பட்டது என்பதைப் பற்றிய மற்றும் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையின் மூலங்கள், இயல்பு மற்றும் வீச்செல்லை பற்றிய வெளிப்படுத்தல்களையும் உள்ளடக்கும்.

**அமுலுக்கு வரும் திகதி**

10. இந்த இலங்கைக் கணக்காய்வு நியமமானது 15 டிசம்பர், 2019 இல் அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகின்ற காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வுக்கு நடைமுறைக்கு வரும்.

## நோக்கம்

11. கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிக்காட்டல்கள், பிரயோகிக்கத்தக்க நிதியறிக்கைச் சட்டகத்தின் உள்ளடக்கத்திற்கு பொருத்தமானவையா என்பது பற்றிப் போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதே கணக்காய்வாளரது நோக்கமாகும்.

## வரைவிலக்கணங்கள்

12. இந்த இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்காக, கீழ்வரும் சொற்றொடர்கள் கீழே விபரிக்கப்பட்ட விளக்கங்களைக் கொண்டனவாகும்:

(a) கணக்கீட்டு மதிப்பீடு – பிரயோகிக்கத்தக்க நிதியறிக்கைச் சட்டகத்திற்கமைவாக, மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மைக்குட்பட்ட அளவீட்டைக் கொண்ட ஒரு பணப்பெறுமதி .(பார்க்க பந்தி. A14)

(b) கணக்காய்வாளரின் புள்ளி மதிப்பீடு அல்லது கணக்காய்வாளரின் வீச்சம் – முகாமையின் புள்ளி மதிப்பீட்டினை மதிப்பாய்வு செய்யும்போது கணக்காய்வாளரினால் முறையே விருத்தி செய்யப்படும் தொகை அல்லது தொகைகளின் வீச்சம் (பார்க்க பந்தி. A15)

(c) மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை – அளவீட்டுத் துல்லியமற்ற தன்மைக்கான மாறுந்தகவு (பார்க்க பந்தி. A16, பின்னிணைப்பு 1)

[7] SLAuS 700 (மீளாக்கம்), *நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயத்தினை ஏற்படுத்தி அறிக்கையிடல்* பந்தி 13(c) இனையும் பார்க்க.

(d) முகாமைத்துவப் பக்கச்சார்பு – நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு மதிப்பீடாக ஏற்பிசைவு செய்தல் அல்லது வெளிக்காட்டலின் போதான முகாமையின் நடுநிலையற்ற தன்மை (பார்க்க பந்தி. A17)

(e) முகாமையின் புள்ளி மதிப்பீடு – கணக்கீட்டு மதிப்பீடொன்றாக நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்தல் மற்றும் வெளிக்காட்டலுக்காக முகாமையினால் தெரிவு செய்யப்பட்ட தொகை.

(f) கணக்கீட்டு மதிப்பீடொன்றின் வெளிப்பாடு – கணக்கீட்டு மதிப்பீட்டால் விபரிக்கப்படுகின்ற ஊடுசெயல், நிகழ்வுகள், அல்லது நிபந்தனை(கள்) போன்றவற்றின் தீர்மானங்களிலிருந்து விளையும் உண்மையான பணப்பெறுமதி. (பார்க்க பந்தி. A18)

## தேவைப்பாடுகள்

### இடர் மதிப்பீட்டு விதிமுறைகள் மற்றும் தொடர்புடைய செயற்பாடுகள்

13. இலங்கை கணக்காய்வு நியமம் 315 (மீளாக்கப்பட்டது),[8] இனால் தேவைப்படுத்தியபடி, உரிமமொன்றின் அகக்கட்டுப்பாடுகள் உட்பட அதன் சூழலை பற்றிய புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளும்போது, கணக்காய்வாளர் உரிமத்தின் கணக்கீட்டு மதிப்பீடுகளுடன் தொடர்புபட்ட பின்வரும் விடயங்கள் பற்றிய புரிந்துணர்வினைப் பெற்றுக்கொள்ளலாம். இத்தகைய புரிந்துணர்வினைப் பெற்றுக்கொள்ளுவதற்கான கணக்காய்வாளரது நடைமுறைகளாவை நிதிக்கூற்றுக்களிலும் மற்றும் உறுதிப்பாட்டு மட்டங்களிலுமான பொருண்மையான பிறழ்கூற்று இடரினை அடையாளங்காணுதல் மற்றும் மதிப்பிடுதல் ஆகியவற்றுக்கான அடிப்படையை வழங்குவதற்கு அவசியமான அளவில் மேற்கொள்ளப்படலாம். (பார்க்க பந்தி. A19–A22)

*உரிமமும் அதன் சூழலும்*

(a) நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்பட அல்லது வெளிப்படுத்தப்படுவதற்கான தேவையில் அல்லது இவற்றிலான மாற்றங்களுக்கான தேவையில் அதிகரிப்பினை ஏற்படுத்தக்கூடிய உரிமத்தின் ஊடுசெயல்கள், நிகழ்வுகள் மற்றும் நிபந்தனைகள். (பார்க்க பந்தி. A23)

(b) கணக்கீட்டு மதிப்பீடுகளுடன் தொடர்புடைய பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகமும் (ஏற்பிசைவு நியதி, அளவீட்டு அடிப்படை, மற்றும் தொடர்புடைய முன்னிலைப்படுத்தல் மற்றும் வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள் என்பவற்றை உள்ளடக்குகின்ற), உரிமத்தினதும் மற்றும் அதன் ஊடுசெயல்கள் பிற நிகழ்வுகள் மற்றும் நிபந்தனைகள் என்பவற்றினை உள்ளடக்கிய சூழலினதும் உள்ளடக்கத்திற்கு இவை எவ்வாறு பிரயோகிக்கப்படலாம் என்பதுவும் உள்ளார்ந்த இடர்க் காரணிகளுக்கு உட்பட்டவையாகவும் அல்லது அவற்றினால் தாக்கமடைபவையாகவும் அமையலாம். (பார்க்க பந்தி. A24–A25)

(c) பொருத்தமான இடத்து, புத்திசாதுர்யமான மேற்பார்வையுடன் தொடர்புபட்ட ஒழுங்குபடுத்தற் சட்டகம் உட்பட, உரிமத்தின் கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்புபட்ட ஒழுங்குபடுத்தல் காரணிகள் (பார்க்க பந்தி. A26)

(d) மேலே 13(a)–(c) இல் விபரித்த விடயங்களின் அடிப்படையில், உரிமத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டுமெனக் கணக்காய்வாளரினால் எதிர்பார்க்கப்படுகின்ற கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் அவற்றோடு தொடர்புபட்ட வெளிப்படுத்தல்கள். (பார்க்க பந்தி. A27)

*உரிமத்தின் அகக் கட்டுப்பாடுகள்*

(e) கணக்கீட்டு மதிப்பீடுகளுக்குப் பொருத்தமாக உரிமத்தினால் முகாமையின் நிதியறிக்கைச் செயன் முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மேற்பார்வை மற்றும் ஆளுகையின் தன்மை மற்றும் வீச்செல்லை. (பார்க்க பந்தி. A28–A30).

---

[8] SLAuS 315 (மீளாக்கம்), பந்திகள் 3, 5–6, 9, 11–12, 15–17, மற்றும் 20–21

(f) கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்பாக சிறப்பான ஆளுமைகள் மற்றும் அறிவு நுட்பங்கள் ஆகியவற்றின் தேவைப்பாட்டை முகாமை எவ்வாறு அடையாளங்காண்கிறது என்பது மற்றும் அவற்றை எவ்வாறு பிரயோகிக்கிறது என்பதுவும். இது பொருத்தமான போது முகாமைத்துவ நிபுணரைப் பயன்படுத்துவதையும் உள்ளடக்குகின்றது. (பார்க்க பந்தி. A31)

(g) கணக்கீட்டு மதிப்பீடுகளோடு தொடர்பான இடரை உரிமத்தின் இடர் முகாமைத்துவச் செயன் முறையானது எவ்வாறு அடையாளங்காண்கின்றது. (பார்க்க பந்தி. A32–A33)

(h) கணக்கீட்டு மதிப்பீட்டுடன் தொடர்புபடுவதால் உரிமத்தின் தகவல் முறைமை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:

(i) நிதிக்கூற்றுக்களுக்கு கணிசமான மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளிலும் தொடர்புடைய வெளிக்காட்டல்களிலும் மாற்றங்களுக்கான தேவைப்பாட்டினை ஏற்படுத்தக்கூடிய அல்லது இத்தகைய தேவைப்பாட்டில் அதிகரிப்பினை ஏற்படுத்தக்கூடியதுமான ஊடுசெயல் வகுப்புக்கள், நிகழ்வுகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் (பார்க்க பந்தி. A34–A35)

(ii) இத்தகைய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிக்காட்டல்களுக்கு முகாமையானது எவ்வாறு:

a. பிரயோகிக்கத்தக்க நிதியறிக்கைச் சட்டகத்தின் உள்ளடக்கத்திற்குப் பொருந்தக்கூடிய பொருத்தமான செய்முறைகள், எடுகோள்கள், அல்லது தரவு மூலங்கள் மற்றும் குறித்த மாற்றத்திற்கான தேவைப்பாடு ஆகியவற்றை அடையாளங்காணுகின்றது. இது முகாமை எவ்வாறு,: (பார்க்க பந்தி. A36–A37)

i. மாதிரிகளின் பிரயோகம் அடங்கலாக பயன்படுத்திய செய்முறைகளைத் தெரிவு செய்கின்றது, வடிவமைக்கின்றது, பிரயோகிக்கின்றது (பார்க்க பந்தி. A38–A39)

ii. மாற்றுவழிகளின் கவனத்திற் கொள்ளல் மற்றும் கணிசமான எடுகோள்களை இனங்காணல் அடங்கலாக பயன்படுத்த வேண்டிய எடுகோள்களைத் தெரிவு செய்கின்றது (பார்க்க பந்தி. A40–A43)

iii. உபயோகிக்க வேண்டிய தரவுகளை தெரிவு செய்கின்றது (பார்க்க பந்தி. A44)

b. சாத்தியமான அளவீட்டு விளைவுகளின் வீச்சத்தினைக் கருத்திலெடுப்பதன் ஊடாக மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையின் அளவினை விளங்கிக்கொள்ளல். மற்றும் (பார்க்க பந்தி. A45)

c. நிதிக்கூற்றுக்களில் உட்படுத்துவதற்காக புள்ளிமதிப்பீட்டினை தெரிவுசெய்தல் மற்றும் தொடர்புபட்ட வெளிக்காட்டல் அடங்கலாக மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையை விபரித்தல். (பார்க்க பந்தி. A46–A49)

(i) பந்தி 13(h)(ii) இல் விபரித்தபடி முகாமையின் கணக்கீட்டு மதிப்பீட்டை மேற்கொள்ளும் செயற் பாட்டிற்கும் மேலாக கணக்காய்வுக்குப் பொருத்தமான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள். (பார்க்க பந்தி. A50–A54)

(j) முன்னைய கணக்கீட்டு மதிப்பீடுகளின் விளைவினை முகாமை எவ்வாறு மீளாய்வு செய்கின்றது மற்றும் அந்த மீளாய்வுப் பெறுபேறுகளுக்கு எவ்வாறு பதிலளிக்கின்றது

14. கணக்காய்வாளரொருவர் கடந்தகாலக் கணக்கீட்டு மதிப்பீடுகளின் வருவிளைவினை மீளாய்வு செய்யலாம் அல்லது,பிரயோகிக்கத்தக்க போது, நிகழ்காலத்தின் பொருண்மையான வழுக்கூற்று இடரினை மதிப்பீடு செய்வதற்கு உதவியான வகையில் கடந்தகால கணக்கீட்டு மதிப்பீடுகளின் பின்னைய மறுமதிப்பீட்டினை மீளாய்வு செய்யலாம். கணக்காய்வாளர் இத்தகைய மீளாய்வின் தன்மை மற்றும் வீச்செல்லையைத் தீர்மானிக்கும் போது கணக்கீட்டு மதிப்பீட்டின் பண்புகளைக் கருத்திலெடுக்கலாம். கடந்த காலங்களில் உருவாக்கப்பட்டதும் மற்றும் அந்தக் காலப்பகுதியில் கிடைப்பனவாகவிருந்த தகவலினடிப்படையில் பொருத்தமானதெனக் கருதப்பட்டதுவுமான

எந்தவொரு கணக்கீட்டு மதிப்பீட்டினைப்பற்றிய தீர்மானங்களையும் கேள்வியெழுப்பும் நோக்கத்தில் இந்த மீளாய்வு முன்னெடுக்கப்படவில்லை. (பார்க்க பந்தி. A55–A60)

15. கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்பாக, இடர் மதிப்பீட்டுச் செயன்முறைகளை நிகழ்த்துவதற்கும், பொருண்மையான பிறழ்கூற்றுக்களை இனங்காணுதல் மற்றும் மதிப்பிடலுக்கும் அத்தகைய மதிப்பிடப்பட்ட இடர்களுக்கான பதிலிறுக்கையாக கணக்காய்வு விதிமுறைகளை வடிவமைத்தலுக்கும் அவற்றை நிகழ்த்துவதற்கும், அல்லது பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகளை மதிப்பிடுவதற்கும் குறித்த ஈடுபடுத்தல் அணிக்குச் சிறப்பான ஆளுமைகளோ அல்லது அறிவுத்தேர்ச்சியோ தேவைப்படுமா இல்லையா என்பது பற்றிக் கணக்காய்வாளர் தீர்மானிக்கலாம். (பார்க்க பந்தி. A61–A63)

**பொருண்மையான பிறழ்கூற்றுக்களை இனங்காணுதல் மற்றும் மதிப்பிடல்**

16. கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் மற்றும் அவற்றோடு தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களோடு தொடர்பாக, உறுதிச்சொல் மட்டத்திலான பொருண்மையான பிறழ்கூற்றுக்களை இனங்காணும் போதும் மற்றும் மதிப்பிடும் போதும், இலங்கைக் கணக்காய்வு நியமம் 315 (மறுசீரமைக்கப்பட்டது) [9] இனால் தேவைப்படுத்தப்படுவதன் படி, கணக்காய்வாளர் உள்ளார்ந்த இடரையும் கட்டுப்பாட்டு இடரையும் தனித்தனியாக மதிப்பிடலாம். பொருண்மையான பிறழ்கூற்று இடரினை இனங்காணும்போது மற்றும் உள்ளார்ந்த இடரினை மதிப்பிடும்போது கணக்காய்வாளர் பின்வருவனவற்றைக் கருத்திலெடுக்கலாம்: (பார்க்க பந்தி. A64–A71)

(a) அந்தக் கணக்காய்வு மதிப்பீடு மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையில் எந்தளவு தங்கியிருக்கின்றது மற்றும் (பார்க்க பந்தி. A72–A75)

(b) சிக்கல்,அகவயத்தன்மை மற்றும் ஏனைய உள்ளார்ந்த இடர்க் காரணிகளினால் பின்வருவன எந்தளவுக்கு தாக்கமடையும் என்பது: (பார்க்க பந்தி. A76–A79)

(i) கணக்கீட்டு மதிப்பீட்டு உருவாக்கத்தின் போது செய்கைகள்,எடுகோள்கள்,மற்றும் தரவுகளின் தெரிவு மற்றும் பிரயோகம் அல்லது

(ii) நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதற்காக முகாமையின் புள்ளி மதிப்பீடு மற்றும் அதனோடு தொடர்புபட்ட வெளிக்காட்டல்களின் தெரிவு.

17. கணக்காய்வாளர் பந்தி 16 க்கு ஒத்திசைவாக பொருண்மையான பிறழ்கூற்று இடர்களாக இனங் காணப்பட்டவற்றுள் தனது தீர்மானத்தினைப் பயன்படுத்துவதன் மூலமாக அவற்றுள் எவையாவது ஒரு கணிசமான இடரா[10] இல்லையா என்பதைத் தீர்மானிக்கலாம். கணக்காய்வாளர் கணிசமான இடர் காணப்படுவதாகத் தீர்மானிப்பாரானால், அத்ததைய இடரோடு தொடர்புபட்ட உரிமத்தின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை உள்ளடக்கிய கட்டுப்பாடுகள் பற்றிய[11] புரிந்துணர்வொன்றினை பெற்றுக்கொள்ளலாம். (பார்க்க பந்தி. A80)

**மதிப்பிடப்பட்ட பொருண்மையான பிறழ்கூற்று இடர்களுக்குக்கான பதிலிறுக்கைகள்.**

18. இலங்கைக் கணக்காய்வு நியமம் 330[12] இனால் தேவைப்படுத்தியபடி, உறுதிப்பாட்டு மட்டத்தில்[13] மதிப்பிட்ட பொருண்மையான பிறழ்கூற்று இடருக்கான பதிலிறுக்கையாக அத்தகைய மதிப்பீடுகளுக்கான காரணங்களை கவனத்திற்கொள்ளும் கணக்காய்வாளரது மேலதிகக்

---

[9] இலங்கை கணக்காய்வு நியமம் 315 (மறுசீரமைக்கபட்டது), பந்திகள் 25 மற்றும் 26

[10] இலங்கை கணக்காய்வு நியமம் 315 (மறுசீரமைக்கபட்டது), பந்தி 27

[11] இலங்கை கணக்காய்வு நியமம் 315 (மறுசீரமைக்கபட்டது), பந்தி 29

[12] இலங்கைக் கணக்காய்வு நியமம் 330, பந்திகள் 6–15 மற்றும் 18

[13] இலங்கைக் கணக்காய்வு நியமம் 330, பந்திகள் 6–7 மற்றும் 21

கணக்காய்வுச் செயன்முறைகள் அமையலாம். கணக்காய்வாளரது மேலதிகக் கணக்காய்வுச் விதிமுறைகள் பின்வருவனவற்றுள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ உள்ளடக்கலாம்:

(a) கணக்காய்வாளரது அறிக்கைத் திகதி வரையான காலப்பகுதிக்குள்ளான நிகழ்வுகளிலிருந்து கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல். (பந்தி 21 ஐப் பார்க்கவும்)

(b) முகாமையானது கணக்கீட்டு மதிப்பீடுகளை எவ்வாறு உருவாக்கியது என்பதனைப் பரிசோதித்தல் (பந்திகள் 22-27 ஐப் பார்க்கவும்) அல்லது

(c) கணக்காய்வாளரின் புள்ளிமதிப்பீடு அல்லது வீச்சத்தை உருவாக்குதல் (பார்க்க பந்திகள் 28–29)

மதிப்பிட்ட பொருண்மையான பிறழ்கூற்று இடர் எந்தளவு அதிகமானதோ அந்தளவு விபரமானதானதாக கணக்காய்வுச்சான்றுகள் அமையவேண்டும் என்பதனை கணக்காய்வாளரது மேலதிகக் கணக்காய்வு விதிமுறைகள் கவனத்திலெடுக்க வேண்டும்[14]. கணக்காய்வாளர் முரண்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை விலக்குதல் அல்லது வலுவளிக்கும் கணக்காய்வுச் சான்றுகளை நோக்கி பக்கச்சார்பின்றி செயற்படும் வகையில் மேலதிக கணக்காய்வு விதிமுறைகளை வடிவமைத்து மேற்கொள்வார். (பார்க்க பந்தி. A81–A84)

19. இலங்கைக் கணக்காய்வு நியமம் 330[15] இனால் தேவைப்படுத்தப்பட்டபடி, கட்டுப்பாடுகளின் வினைத் திறனைப் பற்றிய போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினைப் பெற்றுக்கொள்ள கணக்காய்வாளர் சோதனைகளை வடிவமைத்து மேற்கொள்ளலாம்:

(a) கணக்காய்வாளரின் உறுதிப்பாட்டு மட்டத்திலான பொருண்மையான பிறழ்கூற்று இடருக்கான மதிப்பீடானது கட்டுப்பாடுகள் வினைதிறனாகவுள்ளன என்னும் எதிர்பார்ப்பினையும் உள்ளடக்கும் போது அல்லது,

(b) உறுதிப்பாட்டு மட்டத்திலான போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச்சான்றினை வலுவளிப்புச் சோதனைகளினால் மாத்திரம் வழங்கமுடியாது.

கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்பாக, இத்தகைய கட்டுப்பாடுகளின் சோதனையானது பொருண்மையான பிறழ்கூற்று இடருக்கு வழங்கிய மதிப்பீட்டுக்கான காரணங்களுக்கான பதிலிறுக்கயையாக அமையலாம். கட்டுப்பாட்டுச் சோதனைகளை வடிவமைக்கும் போதும் மேற்கொள்ளும்போதும், கட்டுப்பாடுகளின் விளைதிறன் மீது கணக்காய்வாளர் எந்தளவு அதிகமான நம்பகத்தன்மையினைக் கொண்டிருக்கின்றாரோ அந்தளவுக்கு விபரமான கணக்காய்வுச் சான்றுகளைச் சேகரிக்கலம்.[16] (பார்க்க பந்தி. A85–A89)

20. கணக்கீட்டு மதிப்பீட்டுடன் தொடர்புபட்ட கணிசமான இடரின்போது, கணக்காய்வாளர் கட்டுப்பாடுகளில் நம்பியிருப்பதற்குத் திட்டமிடின் அக் கணக்காய்வாளரது மேலதிகக் கணக்காய்வு விதிமுறைகள் நிகழ்கால கட்டுப்பாட்டுச் சோதனைகளையும் உள்ளடக்கலாம். கணிசமான இடருக்கான விதிமுறையானது வலுவளிப்புச் சோதனைகளை மாத்திரம் உள்ளடக்கும் போது, அந்தச் செயன்முறைகள் கட்டுப்பாட்டுச் சோதனைகளையும் உள்ளடக்கலாம்.[17] (பார்க்க பந்தி. A90)

*கணக்காய்வாளரது அறிக்கைத் திகதி வரையில் ஏற்பட்ட நிகழ்வுகளிலிருந்து கணக்காய்வுச் சான்றினைப் பெற்றுக்கொள்ளுதல்.*

21. கணக்காய்வாளரது மேலதிகக் கணக்காய்வு விதிமுறைகள் கணக்காய்வாளரது அறிக்கைத் திகதி வரையில் நிகழ்ந்த நிகழ்வுகளிலிருந்து கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுவதனையும் உட்படுத்தும்போது, கணக்கீட்டு மதிப்பீட்டுடன் தொடர்புடைய பொருண்மையான பிறழ்கூற்று இடரினை விபரிப்பதற்கு அத்தகைய கணக்காய்வுச் சான்றானது

---

14 இலங்கைக் கணக்காய்வு நியமம் 330, பந்தி 7(b)

15 இலங்கைக் கணக்காய்வு நியமம் 330, , பந்தி 8

16 இலங்கைக் கணக்காய்வு நியமம் 330, பந்தி 9

17 SLAuS 330, பந்திகள் 15 மற்றும் 21

போதுமான மற்றும் பொருத்தமானதாக உள்ளதா எனக் கணக்காய்வாளர் பிரயோகிக்கத்தக்க நிதியறிக்கைச் சட்டகத்தின் உள்ளடக்கத்திற்கு அமைவாகக் குறித்த நிகழ்வுக்கும் அளவீட்டுத்திகதிக்கும் இடையிலான குறித்த கணக்காய்வுச் சான்றின் பொருத்தப்பாட்டினைப் பாதிக்கக்கூடியதுமான சூழ்நிலைகள் மற்றும் பிற நிபந்தனைகளைக் கவனத்திற் கொள்ளுவதன் ஊடாக மதிப்பீடு செய்யலாம். (பார்க்க பந்தி. A91–A93)

*முகாமையானது கணக்கீட்டு மதிப்பீட்டினை எவ்வாறு உருவாக்கியது என்பதைப் பரிசோதித்தல்*

22. முகாமை கணக்கீட்டு மதிப்பீட்டை எவ்வாறு உருவாக்கியது என்பதனை சோதிக்கும்போது, பின்வருவன தொடர்பாக பொருண்மையான பிறழ்கூற்றுக்களுக்கான போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்றினைப் பெற்றுக்கொள்வதற்காக, பந்திகள் 23-26 க்கு ஒத்திசைவாக வடிவமைக்கப்பட்ட மற்றும் நிகழ்த்தப்பட்ட விதிமுறைகளைக் கணக்காய்வாளரது மேலதிகக் கணக்காய்வு விதிமுறைகள் உள்ளடக்கலாம்: (பார்க்க பந்தி. A94)

(a) கணக்கீட்டு மதிப்பீடுகளை உருவாக்கும் போது செயன்முறைகள், கணிசமான எடுகோள்கள் மற்றும் தரவுகள் ஆகியவற்றின் தெரிவு மற்றும் பிரயோகம் மற்றும்

(b) முகாமையானது புள்ளி மதிப்பீட்டினை எவ்வாறு தெரிவு செய்தது என்பதும் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையைப் பற்றிய வெளிப்படுத்தல்களை எவ்வாறு அபிவிருத்தி செய்தது என்பதுவும்.

செய்முறைகள்

23. செய்முறைகள் தொடர்பாக, பந்தி 22 இன் தேவைப்பாடுகளை பிரயோகிக்கும்போது, கணக்காய்வாளரது மேலதிகக் கணக்காய்வு விதிமுறைகள் பின்வருவனவற்றை விபரிக்கலாம்:

(a) பிரயோகிக்கத்தக்க நிதியறிக்கையிடற் சட்டகத்தின் உள்ளடக்கத்திற்கு அமைவாகக் குறித்த செயன்முறை பொருத்தமானதா இல்லையா என்பதுவும் பொருத்தமெனின், கடந்தகாலத்தில் உபயோகித்த செயன்முறைகளிலிருந்தான மாற்றங்கள் பொருத்தமானவையா இல்லையா என்பதுவும் (பார்க்க பந்தி. A95, A97)

(b) செய்முறை தெரிவு செய்யும்போது, மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் முகாமைப் பக்கச் சார்புக்கு சாதகமான காட்டிகளில் அதிகரிப்பை ஏற்படுத்துமா இல்லையா என்பது (பார்க்க பந்தி. A96)

(c) பிரயோகிக்கப்பட்ட கணிப்பீடுகள் செய்முறைக்கு இசைவாகவும் கணிதச் செம்மையானதாகவும் உள்ளனவா இல்லையா என்பது

(d) செய்முறையின் முகாமைப் பிரயோகமானது சிக்கலான மாதிரியமைப்பினை உள்ளடக்கும்போது, தீர்மானங்கள் கொள்கை மாறாது பிரயோகிக்கப்பட்டனவா இல்லையா என்பதும் பிரயோகிக்கத்தக்க போது: (பார்க்க பந்தி. A98–A100)

   (i) பிரயோகத்திலுள்ள நிதியறிக்கையிடற் சட்டகத்தின் அளவீட்டு நோக்கத்திற்கு ஏற்புடைய மாதிரியின் வடிவமைப்பானது அந்தசூழ்நிலைகளுக்குப் பொருத்தமாகவுள்ளது என்பதும் மற்றும் தேவையான போது, கடந்தகாலத்திலிருந்தான மாற்றங்களும் சூழ்நிலைக்கும் பொருத்தமாகவுள்ளன என்பது பற்றி மற்றும்

   (ii) மாதிரியின் வருவிளைவுக்கான செம்மையாக்கங்கள் பிரயோகிக்கத்தக்க நிதியறிக்கைச் சட்டகத்தின் அளவீட்டு நோக்கத்தோடு நிலையாகவுள்ளனவா இல்லையா என்பதும் சூழ்நிலைகளுக்குப் பொருந்துகின்றனவா இல்லையா என்பதும் மற்றும்

(e) செய்முறையை பிரயோகிக்கும்போது கணிசமான எடுகோள்கள் மற்றும் தரவுகளின் ஒருமைப்பாடு பேணப்பட்டதா இல்லையா என்பது.(பார்க்க பந்தி. A101)

கணிசமான எடுகோள்கள்

24. கணிசமான எடுகோள்கள் தொடர்பாக பந்தி 22 இலுள்ள தேவைப்பாடுகளை பிரயோகிக்கும்போது, கணக்காய்வாளரது மேலதிகக் கணக்காய்வு விதிமுறைகள் பின்வருவனவற்றை விபரிக்கலாம்:

(a) பிரயோகிக்கத்தகு நிதியறிக்கையிடற் சட்டக உள்ளடக்கத்திற்கு அமைவாகக் குறித்த கணிசமான எடுகோள்கள் பொருத்தமானதா என்பதுவும் பொருத்தமானஇடத்து கடந்தகாலத்தில் இருந்தான மாற்றங்கள் பொருத்தமானவையா இல்லையா என்பதுவும் (பார்க்க பந்தி. A95, A102–A103)

(b) கணிசமான எடுகோள்களைத் தெரிவுசெய்கையில், மேற்கொண்ட தீர்மானங்கள் முகாமைப் பக்கச்சார்புக்கு சாதகமான காட்டிகளில் அதிகரிப்பை ஏற்படுத்துமா என்பது (பார்க்க பந்தி. A96)

(c) கணக்காய்வாளரினால் கணக்காய்வின் போது பெற்றுகொள்ளப்பட்ட அறிவின் அடிப்படையில் குறித்த கணிசமான எடுகோள்கள் அவற்றிடையேயும் பிற கணக்கீட்டு மதிப்பீடுகளில் பயன் படுத்தியவற்றோடும் உரிமத்தின் வணிகச் செயற்பாடுகளின் ஏனைய பகுதிகளில் உபயோகித்த வற்றோடும் கொள்கைமாறாது உள்ளனவா என்பதுபற்றி மற்றும் (பார்க்க பந்தி. A104)

(d) பொருத்தமான இடத்து முகாமை விசேட செயற்பாடுகளை முன்னெடுப்பதில் முனைப்பாகவுள்ளதா என்பதும் அவற்றைச் செய்யும் ஆளுமையைக் கொண்டுள்ளதா என்பதும். (பார்க்க பந்தி. A105)

தரவுகள்

25. தரவுகள் தொடர்பாக பந்தி 22 இன் தேவைப்பாடுகளைப் பிரயோகிக்கும்போது, கணக்காய்வாளரின் மேலதிகக் கணக்காய்வுச் விதிமுறைகள் பின்வருவனவற்றை விபரிக்கலாம்:

(a) பிரயோகிக்கத்தக்க நிதியறிக்கைச் சட்டகத்தின் உள்ளடக்கத்திற்கு அமைவாகக் குறித்த தரவுகள் பொருத்தமானதா என்பதுவும், பொருத்தமான இடங்களில், கடந்தகாலத்திலிருந்தான மாற்றங்கள் பொருத்தமானவையா இல்லையா என்பதுவும்.·. (பார்க்க பந்தி. A95, A106);

(b) தரவுகளைத் தெரிவு செய்யும்போது, உருவாக்கப்பட்ட தீர்மானங்கள் முகாமைப் பக்காச்சார்புக்கு சாதகமான குறிகாட்டிகளில் அதிகரிப்பை ஏற்படுத்துமா இல்லையா என்பது. (பார்க்க பந்தி. A96)

(c) குறித்த சூழ்நிலைகளில் அத் தரவுகள் பொருத்தமானவையாக, நம்பகத்தன்மை கொண்டவையாக உள்ளனவா என்பது. மற்றும் (பார்க்க பந்தி. A107)

(d) குறித்த தரவு அதன் ஒப்பந்தக் கட்டுறுப்புக்களை உள்ளடக்கி முகாமையினால் பொருத்தமான முறையில் புரிந்துகொள்ளப்பட்டதா அல்லது விளக்கப்பட்டுள்ளதா என்பது. (பார்க்க பந்தி. A108)

மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையைப் பற்றிய முகாமையின் புள்ளி மதிப்பீட்டினதும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினதும் தெரிவு

26. பிரயோகிக்கத்தகு நிதியறிக்கையிடற் சட்டகத்தின் கண்ணோட்டத்தில், பந்தி 22 இன் தேவைப்பாடுகளை பிரயோகிக்கும்போது, கணக்காய்வாளரின் மேலதிக கணக்காய்வு விதிமுறைகள் முகாமையானது பின்வருவனவற்றிற்காக பொருத்தமான படிமுறைகளை முன்னெடுத்துள்ளதா என்பதனை விபரிக்கலாம்:

(a) மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையினை விளங்கிக் கொள்ளுதல் மற்றும் (பார்க்க பந்தி. A109)

(b) பொருத்தமான புள்ளி மதிப்பீட்டினைத் தெரிவு செய்து, மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையைப்

பற்றிய வெளிக்காட்டல்களை மேற்கொள்வதன் மூலம் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையினை விளக்குதல். (பார்க்க பந்தி. A110–A114)

27. பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில், முகாமையால் மதிப்பீட்டு நிச்சமயற்ற தன்மையை விளங்கிக்கொள்வதற்கு அல்லது விபரிப்பதற்கு பொருத்தமான வழிமுறைகள் எவற்றையும் முகாமை எடுக்கவில்லை என கணக்காய்வாளர் தீர்மானிக்கும்போது: (பார்க்க பந்தி. A115–A117)

(a) முகாமையின் புள்ளிமதிப்பீட்டின் தெரிவினைக் கருத்திலெடுப்பதன் மூலம் அல்லது மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மைக்குத் தொடர்பாக மேலதிக வெளிப்படுத்தல்களை வழங்குவதைக் கவனத்திலெடுப்பதன் மூலமாக மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையினை விளங்கிக்கொள்ளவும் விபரிக்கவும் முகாமையினைக் கோரலாம், மற்றும் பந்தி 26 க்கு அமைவாக முகாமையின் பதிலிறுக்கைகளை மதிப்பீடு செய்யலாம்

(b) கணக்காய்வாளரது கோரிக்கைக்கான முகாமையின் பதிலிறுக்கையானது மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையினை போதுமாக மற்றும் பொருத்தமாக விபரிக்கவில்லையென கணக்காய்வாளர் தீர்மானிக்கும் போது நடைமுறைக்குப் பொருத்தமான வீச்செல்லையில் கணக்காய்வாளரின் புள்ளி மதிப்பீடு அல்லது வீச்சத்தினை பந்தி 28-29க்கு அமைவாக உருவாக்கலாம் மற்றும்

(c) அகக்கட்டுப்பாட்டில் குறைபாடுகள் காணப்படுகின்றதா என மதிப்பிடுவதோடு அவ்வாறு இருப்பின், இலங்கை கணக்காய்வு நியமம் 265[18] க்கு அமைவாகத் தொடர்பாடல் செய்யலாம்.

*கணக்காய்வாளரின் புள்ளி மதிப்பீடு அல்லது வீச்சத்தினை உருவாக்குதல்*

28. மதிப்பீட்டு நிச்சமற்ற தன்மை பற்றிய முகாமையின் புள்ளி மதிப்பீடு மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களை மதிப்பிடுவதற்காக கணக்காய்வாளர் புள்ளி மதிப்பீடு அல்லது வீச்சத்தினை உருவாக்கும்போது, பந்தி 27(b) இனால் தேவைப்படுத்தப்படும் போதும், கணக்காய்வாளரது மேலதிகக் கணக்காய்வு விதிமுறைகள் பயன்படுத்திய செய்முறைகள், எடுகோள்கள் மற்றும் தரவுகள் ஆகியன பிரயோகிக்கத்தக்க நிதியறிக்கைச் சட்டகத்தின் உள்ளடக்கதிற்குப் பொருத்தமானவையா இல்லையா என்பதை மதிப்பீடு செய்வர். கணக்காய்வாளர் தன்னுடைய சொந்தச் செய்முறைகள், எடுகோள்கள் மற்றும் தரவுகளை பயன்படுத்துகின்றாரா அல்லது முகாமையிடமிருந்து இவற்றைப் பெற்றுக் கொள்கின்றாரா என்பதை விடுத்து கணக்காய்வாளரது இந்த மேலதிகக் கணக்காய்வு விதிமுறைகள் பந்தி 23-25 இலுள்ள விடயங்களை விபரிப்பதற்கு வடிவமைத்து மேற்கொள்ளப்படலாம். (பார்க்க பந்தி. A118–A123)

29. கணக்காய்வாளர் கணக்காய்வாளரின் வீச்சத்தினை உருவாக்குவாரானால், கணக்காய்வாளர்:

(a) பிரயோகிக்கத்தகு நிதியறிக்கையிடற் சட்டகத்தின் அளவிடல் நோக்கங்கள் மற்றும் பிற தேவைப்பாடுகளின் கண்ணோட்டத்தில் நியாயபூர்வமாக அமையும் வகையில் கணக்காய்வாளரால் மதிப்பீடு செய்யப்பட்ட போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்றினால் வலுவளிக்கப்பட்ட தொகைகளை மட்டுமே வீச்சமானது உள்ளடக்குமென தீர்மானிக்கலாம் மற்றும் (பார்க்க பந்தி. A124–A125)

(b) மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையினை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களோடு தொடர்புபட்ட மதிப்பிட்ட பொருண்மையான பிறழ்கூற்று இடருடன் தொடர்புபட்ட போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்றினைப் பெற்றுக்கொள்வதற்காக மேலதிகக் கணக்காய்வுச் செயன்முறைகளை வடிவமைத்து மேற்கொள்ளலாம்.

---

[18] SLAuS 265, *உள்ளகக் கட்டுப்பாட்டிலுள்ள பின்னடைவை ஆளுமை பாரப்படுத்தப்பட்டோருடனும் முகாமையுடனும் தொடர்பாடல் செய்தல்*

*கணக்காய்வுச் சான்றுடன் தொடர்புபட்ட ஏனைய விடயங்கள்*

30. கணக்கீட்டு மதிப்பீடு தொடர்பான பொருண்மையான பிறழ்கூற்று இடருக்காக கணக்காய்வுச் சான்றினைப் பெற்றுக்கொள்வதில், கணக்காய்வுச் சான்றாக பயன்படுத்தவுள்ள தகவலின் மூலத்தினை விடுத்து கணக்காய்வாளர் இலங்கை கணக்காய்வு நியமம் 500 இன் தேவைப்படுத்தல்களோடு இணங்கலாம்.

முகாமை நிபுணரின் செய்கையினை உபயோகிக்கும்போது, இலங்கைக் கணக்காய்வு நியமம் 500 இன் பந்தி 8(c) க்கு அமைய ஒரு பொருத்தமான உறுதிப்பாட்டின் கணக்காய்வுச்சான்றாக முகாமை நிபுணரது செய்கையின் பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்கையில் இந்த இலங்கைக் கணக்கீட்டு நியமத்தின் 21-29 வரையான பந்திகளிலுள்ள தேவைப்பாடுகள் வழிகாட்டல்களை வழங்கும். முகாமை நிபுணரது செய்கையை மதிப்பீடு செய்கையில், மேலதிகக் கணக்காய்வு விதிமுறைகளின் தன்மை, நேரம், மற்றும் வீச்செல்லை ஆகியன குறித்த அந்த நிபுணரது தகுதி, இயலுமைகள், பக்கச்சார்பற்ற தன்மை பற்றிய கணக்காய்வாளரது மதிப்பீடு மற்றும் அந்த நிபுணரினால் செய்யப்படும் வேலையின் தன்மை பற்றிய கணககாய்வாளரது புரிந்துணர்வு, மற்றும் அந்த நிபுணரது நிபுணத்துவ துறை பற்றிய கணக்காய்வாளரது பரீட்சயத்தன்மை ஆகியவற்றினால் பாதிப்படையும். (பார்க்க பந்தி. A126–A132)

**கணக்கீட்டு மதிப்பீடுகளுடன் தொடர்புபட்ட வெளிக்காட்டல்கள்**

31. மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை தொடர்பாக பந்தி 26(b) மற்றும் 29(b) இல் விபரிக்கப்பட வைக்கும் மேலதிகமாக ஒரு கணக்கீட்டு மதிப்பீட்டுடன் தொடர்புபட்ட உறுதிப்பாட்டு மட்டத்தில் மதிப்பிடப்பட்ட பொருண்மையான பிறழ்கூற்று இடருக்கான போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்றினை பெறுவதற்கு மேலதிக கணக்காய்வு விதிமுறைகளை கணக்காய்வாளர் வடிவமைத்து மேற்கொள்ளலாம்.

**சாத்தியமான முகாமைப் பக்கச்சார்பிற்கான காட்டிகள்**

32. நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளை உருவாக்கும் போது முகாமையினால் உருவாக்கிய முடிவுகள் மற்றும் தீர்மானங்கள் தனித்தனியாக நியாயபூர்வமானவையாக காணப்படும் போது அவை முகாமையின் பக்கச்சார்புக்கு சாத்தியமான காட்டிகளா எனக் கணக்காய்வாளர் மதிப்பீடு செய்யலாம். முகாமைப் பக்கச்சார்புக்குச் சாத்தியமான காட்டிகள் அடையாளங் காணப்படும்போது, கணக்காய்வாளர் கணக்காய்வின் விளைவினை மதிப்பீடு செய்யலாம். தவறான வழிப்படுத்தலுக்கான முனைப்பு காணப்படும் போது முகாமைப் பக்கச்சார்பானது இயல்பிலேயே மோசடித் தன்மை வாய்ந்தது. (பார்க்க பந்தி. A133–A136)

**மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் செயன்முறைகளின் அடிப்படையிலான ஒட்டுமொத்த மதிப்பீடு**

33. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்காக இலங்கைக் கணக்காய்வு நியமம் 330[19] இனைப் பிரயோகிக்கும் போது, பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றின் அடிப்படையிலும் மேற்கொண்ட கணக்காய்வு விதிமுறைகளின் அடிப்படையிலும் பின்வருவனவற்றினை மதிப்பிடலாம்: (பார்க்க பந்தி. A137–A138)

(a) முகாமைப் பக்கச்சார்பிற்கான சாத்தியம் இனங்காணப்பட்ட போதிலும், உறுதிப்பாட்டு மட்டத்தில் மதிப்பிடப்பட்ட பொருண்மையான பிறழ்கூற்று இடர் பொருத்தமானதாக காணப்படுதல்.

(b) கணக்கீட்டு மதிப்பீடுகளை நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்தல், அளவிடல், முன்னிலைப் படுத்தல் மற்றும் வெளிக்காட்டல் ஆகியவை தொடர்பான முகாமையின் தீர்மானங்கள் பிரயோகிக்கத்தக்க நிதியறிக்கையிடற் சட்டகத்திற்கு இசைவாக இருத்தல் மற்றும்,

(c) போதுமான பொருத்தமாக கணக்காய்வுச் சான்றுகள் பெறப்பட்டிருத்தல்.

---

19 SLAuS 330, பந்திகள் 25–26

34. பந்தி 33(c) இன் தேவைப்படுத்தல்களின் படி, கணக்காய்வாளர் மதிப்பீட்டினை மேற்கொள்ளும் போது பொருத்ததான சகல கணக்காய்வுச் சான்றுகளையும் அவை இசைவானவையாகவோ அல்லது முரண்படுகின்றவையாகவோ இருப்பினும் அவை அனைத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும்[20]. கணக்காய்வாளரால் போதுமான பொருத்தமான கணக்காய்வுச்சான்று பெறப்படமுடியாதபோது இலங்கை கணக்காய்வு நியமம் 705 (மீளாக்கம்)[21] க்கு அமைவாக நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் அபிப்பிராயம் மீது அதன் தாக்கத்தினை மதிப்பீடு செய்யலாம்.

கணக்கீட்டு மதிப்பீடுகள் நியாயபூர்வமானதா அல்லது பிறழ்கூற்றானதா என்பதைத் தீர்மானித்தல்

35. பிரயோகிக்கத்தக்க நிதியறிக்கைச் சட்டகத்திற்கு அமைவாக கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் அவற்றோடு தொடர்புபட்ட வெளிப்படுத்தல்கள் நியாயபூர்வமானவையா இல்லையா என்பதனை கணக்காய்வாளர் தீர்மானிக்கலாம். இலங்கை கணக்காய்வு நியமம் 450[22] நிதிக்கூற்றுக்களில் செம்மை செய்யப்படாத பிறழ்கூற்றுக்களின் விளைவினை மதிப்பீடு செய்வதற்காக கணக்காய்வாளர் பிறழ் கூற்றுக்களை (உண்மையானதோ, தீர்மான அடிப்படையானதோ, அல்லது எதிர்வுகூறப்பட்டதோ) வேறுபடுத்துவதற்கான வழிகாட்டல்களை வழங்குகின்றது. (பார்க்க பந்தி. A12–A13, A139–A144)

36. கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்பாக கணக்காய்வாளர் கீழ்வருவனவற்றை மதிப்பாய்வு செய்வார்.

(a) நேர்மையான முன்னிலைப்படுத்தல் சட்டகத்தினை பொருத்தமட்டில், குறித்த சட்டகத்தினால் தேவைப்படுத்தியவற்றிற்கு அப்பால் ஒட்டுமொத்த ரீதியில்[23] நிதிக்கூற்றுக்களின் நேர்மையான முன்னிலைப்படுத்தலை அடைவதற்கு அவசியமான வெளிப்படுத்தல்களை முகாமை உள்ளடக்கி உள்ளதா என்பதை அல்லது

(b) ஒத்திசைவுச் சட்டகத்தினை பொருத்தமட்டில், வெளிக்காட்டல்கள் நிதிக்கூற்றுக்கள் தவறான வழிகாட்டல்களுக்கு வழிவகுக்கவில்லை என்பதற்கு அவசியமானதா என்பதனை.[24]

**எழுத்துமூலப் பிரதிநிதித்துவங்கள்**

37. பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்துடன் இசைவான ஏற்பிசைவு, அளவீடு மற்றும் வெளிப்படுத்தல் ஆகியவற்றினை அடைவதற்கு பொருத்தமான செய்முறைகள், கணிசமான எடுகோள்கள், மற்றும் தரவு ஆகியவை கணக்கீட்டு மதிப்பீடுகளை மேற்கொள்ளும்போது, உபயோகிக்கப்படனவா இல்லையா என்பதனைப் பற்றிய எழுத்துமூலப் பிரதிநிதித்துவத்தினை முகாமையிடமிருந்தும் மற்றும் பொருத்தமான போது ஆளுமை பாரப்படுத்தப்பட்டோரிடமிருந்தும் கணக்காய்வாளர் கோரலாம். உபயோகிக்கப்பட்ட செய்முறைகள், எடுகோள்கள் அல்லது தரவினை உள்ளடக்கிய எழுத்து மூலப் பிரதிநிதித்துவத்தினை குறிப்பான கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்பில் பெற்றுக்கொள்வதற்கான தேவையினை கணக்காய்வாளர் கருத்திலெடுக்கலாம். (பார்க்க பந்தி. A145)

---

20 SLAuS 500, பந்தி 11

21 SLAuS 705 (மறுசீரமைக்கப்பட்டது), சுதந்திரமான கணக்காய்வாளரது அறிக்கையிலான மாற்றங்கள்

22 SLAuS 450, பந்தி A6

23 SLAuS 700 (மறுசீரமைக்கப்பட்டது), பந்தி 14 ஐயும் பார்க்கவும்.

24 SLAuS 700 (மறுசீரமைக்கப்பட்டது), பந்தி 19 ஐயும் பார்க்கவும்

**ஆளுமை பாரப்படுத்தப்பட்டவர்கள், முகாமை அல்லது ஏனைய தொடர்புபட்ட தரப்பினருடனான தொடர்பாடல்**

38. இலங்கை கணக்காய்வு நியமம் 260 (மீளாக்கம்)[25] மற்றும் இலங்கை கணக்காய்வு நியமம் 265,[26] ஆகியவற்றைப் பிரயோகிக்கும் போது, கணக்காய்வாளர் ஆளுமை பாரப்படுத்தப்பட்டோருடன் முறையே உரிமத்தின் கணக்கீட்டுச் செயன்முறைகள் மற்றும் அகக் கட்டுப்பாட்டிலான கணிசமான குறைபாடுகள் ஆகியவற்றை அடக்கிய கணிசமான அளவுசார் விடயங்களை அடக்கிய முக்கியமான விடயங்களைப் பற்றித் தொடர்பாடல் செய்வதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ளார். இவ்வாறு செய்கையில் கணக்காய்வாளர் கணக்கீட்டு மதிப்பீடுகளுடன் தொர்பானவற்றைத் தொடர்பாடல் செய்யும்போது பொருண்மையான பிறழ்கூற்று இடருக்காக வழங்கப்பட்ட காரணங்கள், கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் அவற்றோடு தொடர்புபட்ட வெளிக்காட்டல்களை உருவாக்கும்போது, மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையோடு அல்லது சிக்கல், அகவயத்தன்மை, மற்றும் பிற உள்ளார்ந்த இடர்க்காரணிகளோடு தொடர்புபடுகின்றனவா என்பதையும், இவை காணப்படும்போது கவனத்திலெடுக்கலாம். இதற்கு மேலாக, சில சந்தர்ப்பங்களில், சட்டம் அல்லது ஒழுங்கு விதிகள் மூலமாகக் கணக்காய்வாளர் சில விடயங்களைப் பற்றி ஒழுங்குபடுத்துனர் அல்லது புத்திசாதுரியமான மேற்பார்வையாளர் (prudential supervisors) போன்றவர்களோடு தொடர்பாடல் செய்வதற்குத் தேவைப்படுத்தப்பட்டுள்ளார் (பார்க்க பந்தி. A146–A148).

**ஆவணப்படுத்துதல்**

39. கணக்காய்வாளர் கணக்காய்வு ஆவணப்படுத்தலில் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்[27] (பார்க்க பந்தி. A149–A152)

(a) உரிமத்தின் கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்புபட்ட அகக்கட்டுப்பாடுகள் அடங்கலாக, உரிமம் மற்றும் அதன் சூழலில் பற்றிய கணக்காய்வாளரின் புரிந்துணர்வின் முக்கிய மூலகங்கள்

(b) இடர்களுக்கான காரணங்களை (உள்ளார்ந்த இடராகவோ அல்லது கட்டுப்பாட்டு இடராகவோ இருக்கலாம்) தந்து, உறுதிப்பாட்டு மட்டத்தில்[28] மதிப்பிடப்பட்ட பொருண்மையான பிறழ்கூற்று இடருக்கும் கணக்காய்வாளரின் மேலதிகக் கணக்காய்வு விதிமுறைகளுக்குமுள்ள தொடர்பு.

(c) மதிப்பீட்டு நிச்சமற்ற தன்மையை விளங்கிக் கொள்வதற்கும் விபரிப்பதற்கும் பொருத்தமான வழிமுறைகளை முகாமை முன்னெடுக்காதபோது கணக்காய்வாளரின் பதிலிறுக்கை(கள்).

(d) கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்பாக சாத்தியமான முகாமைப் பக்கச்சார்புக்கான காட்டிகளும் அவை காணப்படும்போது, மற்றும் பந்தி 32 இல் தேவைப்படுத்தியதன்படி கணக்காய்வுக்கான இவற்றின தாக்கங்கள் பற்றிய கணக்காய்வாளரின் மதிப்பாய்வு. மற்றும்

(e) பிரயோகிக்கத்தகு நிதியறிக்கைச் சட்டகத்திற்கமைய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் நியாயபூர்வமானவையா அல்லது பிறழ்கூறப்பட்டுள்ளனவா என்பது பற்றிய கணக்காய்வாளரது தீர்மானங்கள் தொடர்புபட்ட கணிசமான சுய தீர்மானங்கள்.

* * *

---

25 SLAuS 260 (மறுசீரமைக்கப்பட்டது), ஆளுமை பாரப்படுத்தப்பட்டோருடனான தொடர்பாடல்,பந்தி 16(a)

26 SLAuS 265, பந்தி 9

27 SLAuS 230, *கணக்காய்வு* ஆவணப்*படுத்தல்* பந்திகள் 8–11, A6, A7 மற்றும் A10

28 SLAuS 330, பந்தி 28(b)

## பிரயோக மற்றும் ஏனைய விளக்கக் குறிப்புக்கள்

**கணக்கீட்டு மதிப்பீடுகளின் தன்மை** (பார்க்க பந்தி. 2)

*கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான உதாரணங்கள்*

A1. ஊடுசெயல் வகுப்புக்கள், கணக்கு மீதிகள் என்பவற்றோடு தொடர்புபட்ட கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் வெளிப்படுத்தல்களுக்கான உதாரணங்கள் கீழ்வருவனவற்றை உள்ளடக்கலாம்:

- தொக்கு வழக்கிழப்பு.
- ஆதனம் பொறி மற்றும் உபகரண பெறுமானத்தேய்வு
- உட்கட்டமைப்புச் சொத்துக்களின் மதிப்பீடு
- நிதிச்சாதனங்களின் மதிப்பீடு
- நிலுவையிலுள்ள வழக்கின் தீர்ப்பு.
- எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பிற்கான ஏற்பாடு
- காப்புறுதி ஒப்பந்தக் கடப்பாடுகளின் மதிப்பீடு
- உத்தரவாதக் கடப்பாடுகள்.
- ஊழியர் ஓய்வுப்பயன் கடப்பாடுகள்.
- பங்கு அடிப்படைக் கொடுப்பனவுகள்.
- நன்மதிப்பு மற்றும் அருவச்சொத்துக்கள் அடங்கலாக வியாபார இணைப்பின் போது வாங்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சீர்மதிப்பு.
- நீண்டகால ஆயுளைக் கொண்ட சொத்துகள் அல்லது ஆதனங்கள் அல்லது விற்பனைக்காக வைத்திருக்கப்படும் உபகரணங்களின் சேத இழப்பு.
- சுயாதீன தரப்பினருக்கிடையே சொத்துக்கள் அல்லது பரிப்புக்களின் நாணயம்சாரா பரிமாற்றம்.
- நீண்டகால ஒப்பந்தங்களுக்காக ஏற்பிசைவு செய்யப்பட்ட வருமானம்.

*செய்முறைகள்*

A2. செய்முறையென்பது தேவைப்படுத்தப்பட்ட அளவீட்டு அடிப்படைக்கு அமைய கணக்கீட்டு மதிப்பீட்டினை மேற்கொள்ள முகாமையினால் உபயோகப்படும் அளவீட்டு நுட்பமாகும். உதாரணமாக, பங்கு அடிப்படை கொடுப்பனவு ஊடுசெயல் தொடர்புபட்ட கணக்கீட்டு மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்படும் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறையானது பிளக்-ஸ்கோல் தேர்வு விலையிடல் சூத்திரத்தினை (Black-Scholes option pricing formula) பயன்படுத்தி கொள்கை ரீதியான தேர்வு அழைப்பு விலையை தீர்மானித்தலாகும். செயன்முறையொன்று சிலசமயங்களில் மாதிரிமுறை எனப்படும் கணிப்பீட்டு உத்திகள் அல்லது செயன்முறைகளை பிரயோகிப்பதுடன், எடுகோள்கள் மற்றும் தரவுகள் அத்துடன் அவற்றிற்கு இடையிலான தொடர்புகளின் தொடையினை பிரயோகிப்பது சம்பந்தப்பட்டதாகும்.

*எடுகோள்கள் மற்றும் தரவுகள்*

A3. எடுகோள்கள் என்பது வட்டிவீதம், கழிவு வீதம் அல்லது எதிர்கால புறநிலை அல்லது நிகழ்வு பற்றிய தெரிவு போன்ற கிடைக்கப்பெறும் தகவல்களின் அடிப்படையிலான சுயதீர்ப்புக்கள் சம்பந்தப்பட்டதாகும். ஒரு எடுகோள் கிடைக்கப்பெறும் பொருத்தமான பதிலீடுகளின் வீச்சத்திலிருந்து முகாமையினால் தெரிவு செய்யப்படலாம். முகாமையின் நிபுணரால் ஏற்படுத்தப்பட்ட அல்லது இனங்காணப்பட்ட எடுகோள்கள் கணக்கீட்டு மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்பட்டால் அவை முகாமையின் எடுகோளாக கருதப்படும்.

A4. இந்த SLAuS நியமத்தின் நோக்கத்திற்காக தரவு என்பது நேரடி அவதானிப்பின் மூலமாக அல்லது உரிமத்திற்கு வெளித்தரப்பிலிருந்து பெறக்கூடிய தகவலை குறிக்கும். தரவுகளுக்கு பகுப்பாய்வு அல்லது கருத்துக்கூறல் நுட்பங்களை பிரயோகித்து பெறப்படும் தகவல்கள் உய்த்தறியப்பட்ட தரவுகள் எனவும் அறியப்படும். அத்தகைய நுட்பங்கள் நன்கு தாபிக்கப்பட்ட கோட்பாட்டு அடிப்படையை கொண்டிருக்கும் போது, முகாமையின் சுயதீர்ப்பிற்கு தேவை இருக்காது. அல்லது அந்த தகவல் ஒரு எடுகோள் ஆகும்.

A5. தரவுக்கான உதாரணம் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- சந்தை ஊடுசெயல்களின்போது இணங்கப்பட்ட விலைகள்
- உற்பத்தி இயந்திரமொன்றின் தொழிற்பாட்டு நேரம் அல்லது உற்பத்திக் கணியம்.
- ஒப்பந்த வட்டி வீதம், கொடுப்பனவு அட்டவணை மற்றும் கடன் உடன்படிக்கையில் உட்படுத்திய கட்டுறுப்புக்கள் போன்ற ஒப்பந்தங்களில் உள்ளடக்கப்படும் வரலாற்றுக்கிரய விலைகள் அல்லது வேறு கட்டுறுப்புக்கள்.
- வெளிவாரித் தகவல் மூலத்திலிருந்து பெறப்படும் பொருளாதார அல்லது உழைப்பு எதிர்வுகூறல் போன்ற எதிர்காலம் நோக்கிய தகவல்கள். அல்லது
- எதிர்கால வட்டி வீதங்களிலிருந்து இடைச்சொருகல் நுட்பத்தினை பயன்படுத்தி தீர்மானிக்கப்படும் எதிர்கால வட்டி வீதம். (உய்த்தறியப்பட்ட தரவு).

A6. தரவானது பரந்தளவிலான மூலங்களிலிருந்து பெறப்படலாம். உதாரணமாக, தரவானது:

- நிறுனத்திற்குள்ளேயோ அல்லது வெளியிலிருந்தோ உருவாகலாம்;
- பொது அல்லது உப பேரேட்டுக்கு உள்ளே அல்லது வெளியே உள்ள ஒரு முறைமையிலிருந்து பெறப்படுதல்;
- ஒப்பந்தங்களிலிருந்து அவதானிக்கக்கூடியதாக இருத்தல்; அல்லது
- சட்ட அல்லது ஒழுங்குபடுத்தற் பிரகடனங்களிலிருந்து அவதானித்தல்.

*அளவிடற்தகவு* (பார்க்க பந்தி. 3)

A7. இந்த SLAuS இன் தேவைப்பாடுகள் எவ்வாறு அளவிடப்படலாம் என்பதற்கு வழிகாட்டல்களை அடக்கும் பந்திகளுக்கு உதாரணங்கள் பந்திகள் A20–A22, A63, A67, மற்றும் A84 இனை உள்ளடக்கும்.

**இந்த இலங்கை கணக்காய்வு நியமத்தின் முக்கிய எண்ணக்கருக்கள்**

*உள்ளார்ந்த இடர்க்காரணிகள்* (பார்க்க பந்தி 4)

A8. உள்ளார்ந்த இடர்க்காரணிகள் என்பது கட்டுப்பாடுகளைக் கருத்தில் கொள்வதற்கு முன்பு பிறழ்கூற்றுக்கான உறுதிப்பாட்டின் மாறுந்தகவினைப் பாதிக்கக்கூடிய நிகழ்வுகள் மற்றும் புறநிலைகளின் பண்புகளாகும். பின்னிணைப்பு 1 ஆனது கணக்கீட்டு மதிப்பீடுகளை உருவாக்குதல் மற்றும் அவற்றை நிதிக்கூற்றுக்களில் முன்னிலைப்படுத்துதல் ஆகியவற்றின் கண்ணோட்டத்தில் இந்த உள்ளார்ந்த இடர்க்காரணிகளின் தன்மை பற்றியும் அவற்றிற்கிடையிலான இடைத்தொடர்புகள் பற்றியும் மேலும் விளக்குகின்றது.

A9. மதிப்பீட்டு நிச்சயமற்றதன்மை, சிக்கல் மற்றும் அகவயத்தன்மையின் உள்ளார்ந்த இடர்க் காரணிகளுக்கு மேலாக, பொருண்மையான பிறழ்கூற்று இடரினை இனங்காணும்போது கணக்காய்வாளரால் கவனத்தில் எடுக்கக்கூடிய ஏனைய உள்ளார்ந்த இடர்க்காரணிகள் பின்வருவனவற்றினால் எந்தளவுக்கு கணக்கீட்டு மதிப்பீடுகளை பாதிக்கும் அல்லது இவற்றில் எந்தளவுக்கு உள்ளடங்கும் என்பதனையும் உள்ளடக்கும்:

- கணக்கீட்டு மதிப்பீட்டின் உருவாக்கத்தின் போது பயன்படுத்தப்பட்ட எடுகோள்கள் அல்லது தரவுகள் மற்றும் செய்முறைகளில் மாற்றத்தின் தேவைப்பாட்டில் அதிகரிப்பினை

ஏற்படுத்தக்கூடிய நிதிக்கூற்றுக்களிலுள்ள அல்லது பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்திலோ ஏற்படுகின்ற தன்மை மற்றும் சூழ்நிலை மாற்றங்கள்.

- கணக்கீட்டு மதிப்பீடுகளை உருவாக்கும்போது முகாமைப் பக்கச்சார்பின் காரணமாக பிறழ் கூற்றிற்கான மாறுந்தகவு.

*கட்டுப்பாட்டு இடர்* (பார்க்க பந்தி. 6)

A10. உறுதிப்பாட்டு மட்டத்தில் கட்டுப்பாட்டு இடரினை மதிப்பீடு செய்யும்போது கணக்காய்வாளரின் முக்கிய கவனத்திற் கொள்ளலானது, கணக்காய்வாளர் சார்ந்திருக்க முனைகின்ற கட்டுப்பாட்டு வடிவமைப்பின் விளைவுத்திறனும் உறுதிப்பாட்டு மட்டத்தில் மதிப்பிட்ட உள்ளார்ந்த இடரினைக் குறித்த கட்டுப்பாடானது எந்தளவில் விபரிக்கின்றது என்பதுவுமாகும். அந்த கட்டுப்பாடுகளின் விளைவுத்திறனாக வடிவமைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தல் பற்றிய கணக்காய்வாளரது மதிப்பீடு அவற்றினைச் சோதிப்பதா இல்லையா என்பது பற்றிய தீர்மானத்தில் அவற்றின் தொழிற்பாட்டு விளைதிறன் பற்றிய எதிர்பாரப்புக்கு வலுவூட்டும்.

*தொழில்சார் சந்தேகம்* (பார்க்க பந்தி. 8)

A11. பந்திகள் A60, A95, A96, A137 மற்றும் A139 கணக்காய்வாளர் தொழில்சார் சந்தேகத்தை பிரயோகிக்கும் வழிகளை விபரிக்கின்றன. பந்தி A152 கணக்காய்வாளரது தொழில்சார் சந்தேகத்தினைப் பிரயோகித்த வழிகளை ஆவணப்படுத்துவதற்கான வழிகாட்டலை வழங்குகின்றது, மற்றும் தொழில்சார் சந்தேகம் பிரயோகிக்கப்பட்டதற்கான சான்றினை ஆவணப்படுத்தல் வழங்குவதற்கான உதாரணங்களை இந்தக் கணக்காய்வு நியமத்தின் குறித்த சில பந்திகள் உள்ளடக்குகின்றன.

*"நியாயபூர்வதன்மை" எண்ணக்கரு* (பார்க்க பந்தி. 9, 35)

A12. பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தன் உள்ளடக்கத்திற்கு அமையக் கணக்கீட்டு மதிப்பீடுகளும் தொடர்புபட்ட வெளிக்காட்டல்களும் நியாயமானவையா என்பது பற்றிய கணக்காய்வாளரின் கவனத்திற்கு பொருத்தமான ஏனைய கவனத்திற் கொள்ளல்களாக பின்வருவன அமையலாம்:

- கணக்கீட்டு மதிப்பீட்டினை உருவாக்கும் போது பயன்படுத்திய தரவுகள் மற்றும் எடுகோள்கள் அவற்றிற்கிடையேயும் ஏனைய கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கு அல்லது வியாபார உரிமத்தின் செயற்பாட்டுப் பகுதிகளுக்கு பிரயோகிக்கப்பட்டவற்றோடும் கொள்கைமாறாது உள்ளனவா என்பது
- பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தால் தேவைப்படுத்தியபடி பொருத்தமான தகவல்களை கணக்கீட்டு மதிப்பீடு கவனத்திலெடுத்துள்ளதா என்பது.

A13. பந்தி 9 இல் பயன்படுத்திய "பொருத்தமாக பிரயோகிக்கப்பட்டுள்ளது" என்னும் சொற்றொடரானது பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தின் தேவைப்பாடுகளுக்கு இசைவாகவுள்ளது என்பது மட்டுமல்லாமல் அந்த நிதியறிக்கைச் சட்டகத்திலுள்ள அளவீட்டு நோக்கத்தோடு நிலையாகவுள்ள தீர்மானங்களையும் பிரதிபலிக்கிறது என்பதையும் விளக்குகிறது.

**வரைவிலக்கணங்கள்**

*கணக்கீட்டு மதிப்பீடு* (பார்க்க பந்தி. 12(a))

A14. கணக்கீட்டு மதிப்பீடுகள் என்பது நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்பட்ட அல்லது வெளிக் காட்டப்பட்ட ஊடுசெயல் வகுப்புக்கள் அல்லது கணக்கு மீதிகள் என்பவற்றோடு தொடர்புபடக்கூடிய பணப்பெறுமதிகளாகும். கணக்கீட்டு மதிப்பீடுகள் ஊடுசெயல் வகுப்புகள் அல்லது கணக்கு மீதிகளோடு தொடர்புபடுகின்ற எற்பிசைவு மற்றும் வெளிக்காட்டல்களைப்

பற்றிய தீர்மானங்களை உருவாக்குவதற்கு பயன்படுத்திய பணப்பெறுமதிகளையும் வெளிக்காட்டல்களில் உள்ளடக்கப்பட்ட பணப்பெறுமதிகளையும் உள்ளடக்குகின்றது

*கணக்காய்வாளரது புள்ளி மதிப்பீடு மற்றும் கணக்காய்வாளரது வீச்சம்* (பார்க்க பந்தி. 12(b))

A15. ஒரு கணக்காய்வாளரது புள்ளி மதிப்பீடு அல்லது வீச்சமானது கணக்கீட்டு மதிப்பீட்டினை நேரடியாகவோ (உதாரணமாக, சேத இழப்பீட்டிற்கான ஒதுக்கம் அல்லது வெவ்வேறு வகையான நிதிச்சாதனங்களின் சீர்மதிப்பு), அல்லது மறைமுகமாகவோ,(உதாரணமாக, ஒரு கணக்கீட்டு மதிப்பீட்டிற்குக் கணிசமான எடுகோளாகப் பயன்படுத்தப்பட்ட பெறுமதி) மதிப்பிடுவதற்கு உபயோகிக்கப்படலாம். இதே போன்ற முறையானது கணக்காய்வாளரினால் ஒரு எடுகோளினதோ அல்லது தரவினதோ பணப்பெறுமதியல்லாத விடயத்தினை மதிப்பிடும்போது ஒரு தொகையினையோ அல்லது வீச்சத்தினையோ உருவாக்குவதற்கு முன்னெடுக்கப்படலாம் (உதாரணமாக, ஒரு சொத்தின் எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலம்).

*மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை* (பார்க்க பந்தி. 12(c))

A16. எல்லா கணக்கீட்டு மதிப்பீடுகளும் உயர்ந்தமட்ட மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மைக்கு ஆளாவதில்லை. உதாரணமாக, நிதிக்கூற்றுக்களின் சில விடயங்கள் உண்மையான பரிமாற்றம் நிகழக்கூடிய விலைகளைப் பற்றிய தயார்நிலையில் கிடைக்கக்கூடிய மற்றும் நம்பகமான தரவுகளைக் கொண்ட செயற்திறனான திறந்த சந்தையைக் கொண்டிருக்கலாம். எனினும், மதிப்பீட்டு முறை மற்றும் தரவு நன்கு வரையறுக்கப்பட்டபோதிலும் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை காணப்படலாம். உதாரணமாக, செயற்திறனான, திறந்த சந்தையில் விலை குறிக்கப்பட்ட கேள்வுக்குள்ளாகும் சாதனங்களின் பட்டியற்படுத்தப்பட்ட சந்தை விலையானது வைத்திருப்புக்காலம் கணிசமானதாகவுள்ளபோது அல்லது சந்தைப்படுத்தும் தன்மையில் வரையறைகள் காணப்படும்போது செம்மையாக்கலை தேவைப்படுத்தும். இதற்கும் மேலாக, அந்த நேரத்திலுள்ள பொதுவான பொருளாதார நிபந்தனைகளும், உதாரணமாக, குறித்த சந்தையிலுள்ள திரவத்தன்மை மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையைப் பாதிக்கலாம்.

*முகாமைப் பக்கச்சார்பு* (பார்க்க பந்தி. 12(d))

A17. நிதியறிக்கையிடற் சட்டகம் எப்போதும் பக்கச்சார்புத் தன்மையிலிருந்து விடுபட்ட நடுநிலைத் தன்மை கொண்டதாக இருத்தல் வேண்டும். கணக்கீட்டு மதிப்பீட்டினை உருவாக்கும்போது மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையானது அகவயத்தன்மையில் அதிகரிப்பினை வழங்குகின்றது. அகவயத்தன்மையானது முகாமையினது தீர்மானத்திற்கான தேவையில் அதிகரிப்பினை வழங்குவதோடு தற்செயலான அல்லது உள்நோக்கத்துடனான பக்கச்சார்பின் மாறுந்தகவிலும் அதிகரிப்பினை வழங்குகின்றது (உதாரணமாக, ஊக்குவிப்பின் விளைவாக விரும்பிய இலக்கு இலாபத்தினை அல்லது மூலதன வீதத்தை அடைவதற்கு). முகாமைப் பக்கச்சார்பிற்கான கணக்கீட்டு மதிப்பீட்டின் மாறுந்தகவானது அக் கணக்கீட்டு மதிப்பீட்டினை உருவாக்கும்போது அகவயத்தன்மை அதில் எந்தளவு உள்ளது என்பதற்கமைய அதிகரிக்கும்.

*கணக்கீட்டு மதிப்பீடொன்றின் வெளிப்பாடு* (பார்க்க பந்தி. 12(f))

A18. சில கணக்கீட்டு மதிப்பீடுகள், அவற்றின் தன்மை காரணமாக இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கமைய கணக்காய்வாளரால் மேற்கொள்ளப்படும் செய்முறைக்கு பொருத்தமான வெளிப்பாட்டினை தருவதில்லை. உதாரணமாக, ஒரு கணக்கீட்டு மதிப்பீடு ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சந்தைப் பங்குபற்றுனர் ஒருவரின் அபிப்பிராயத்தின் அடிப்படையில் அமைந்திருக்கலாம். அதற்கமைவாக, விற்கப்பட்ட சொத்தின் அல்லது மாற்றப்பட்ட பரிப்பொன்றின் தேறிய விலை, அறிக்கையிடும் திகதியில் உருவாக்கப்பட்ட அதனோடு தொடர்புடைய கணக்கீட்டு மதிப்பீட்டிலிருந்து வேறுபடலாம். ஏனென்றால், காலமாற்றத்திற்கு அமைவாக சந்தைப் பங்குபற்றுனர்களின் அபிப்பிராயங்கள் மாற்றமடைவதாகும்.

**இடர் மதிப்பீட்டு விதிமுறைகள் மற்றும் தொடர்புடைய செயற்பாடுகள்**

*உரிமம் மற்றும் அதன் சூழல் பற்றிய புரிந்துணர்வினைப் பெற்றுக்கொள்ளல்* (பார்க்க பந்தி. 13)

A19. இலங்கைக் கணக்காய்வு நியமம் 315 (மீளாக்கம்) இன் பந்திகள் 11-24 உரிமத்தின் அகக் கட்டுப்பாடுள் அடங்கலாக உரிமம் மற்றும் அதன் சூழல் பற்றிய சில விடயங்களில் புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ள கணக்காய்வாளரைத் தேவைப்படுத்துகின்றது. இந்த கணக்காய்வு நியமத்தின் பந்தி 13 கணக்கீட்டு மதிப்பீடுகளோடு குறிப்பாகத் தொடர்புபடுவதோடு, இலங்கை கணக்காய்வு நியமம் 315 (மீளாக்கம்) இன் பரந்தளவான தேவைப்பாடுகளை நிர்ணயிக்கின்றது.

அளவிடைத் தகவு

A20. அகக் கட்டுப்பாடுகள் அடங்கலாக உரிமம் மற்றும் அதன் சூழலை விளங்கிக் கொள்வதற்கான கணக்கீட்டு மதிப்பீடுகளோடு தொடர்புபட்ட கணக்காய்வாளரது விதிமுறைகளது தன்மை, நேரம் மற்றும் அளவானது தரப்பட்ட சூழலில் தனித்தியான விடயம்(கள்) எந்தளவுக்கு பிரயோகிக்கப்படுகின்றதோ அந்த அளவுக்கு அதிகமானதாகவோ அல்லது குறைவாகவோ தங்கியிருக்கலாம். உதாரணமாக, உரிமம் கணக்கீட்டு மதிப்பீடுகளை தேவைப்படுத்தும் குறைந்தளவு ஊடுசெயல்கள், நிகழ்வுகள் மற்றும் புறநிலைகளை மாத்திரம் கொண்டிருப்பின், பிரயோகிக்கக்கூடிய நிதியறிக்கையிடற் சட்டகத்தின் தேவைப்பாடுகள் இலகுவானதாக இருப்பதுடன், தொடர்புபட்ட ஒழுங்குபடுத்தல் காரணிகள் இல்லாது போகலாம். மேலும், கணக்கீட்டு மதிப்பீடுகள் கணிசமான சுயதீர்மானங்களைத் தேவைப்படுத்தாமல் இருப்பதுடன், கணக்கீட்டு மதிப்பீடுகளின் உருவாக்கச் செயன்முறைானது சிக்கலற்றதாக இருக்கலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில், கணக்கீட்டு மதிப்பீடுகள் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை, சிக்கல், அகவயத் தன்மை, அல்லது ஏனைய உள்ளார்ந்த இடர்காரணிகளால் பாதிப்படைவது குறைந்த அளவிலேயே இருக்கும். மற்றும் இவைக்கான கணக்காய்வின் போது கட்டுப்பாடுகள் குறைவாகவே தேவைப்படும். அவ்வாறெனின், கணக்காய்வாளரது இடர் மதிப்பீட்டு விதிமுறைகள் குறைந்தளவு வீரியமுள்ளனவாகவும் நிதிக்கூற்றுக்களுக்கான பொருத்தமான கடப்பாடுகள் முதன்மையாக முகாமையுடனான விசாரணைகள் ஊடாகவும் மற்றும் முகாமையின் கணக்கீட்டு மதிப்பீட்டின் உருவாக்கச் செயன்முறையின் ஊடுசெல்லல் (walk-throughs) மூலமாகவும் பெற்றுக்கொள்ளப்படலாம்.

A21. இதற்கு முரணாக, கணக்கீட்டு மதிப்பீடுகள் கணிசமான தீர்மானங்களைத் தேவைப்படுத்துபவையாகவும் அவற்றின் உருவாக்கமானது சிக்கலானதாகவும் சிக்கலான மாதிரிகளை உள்ளடக்கியதாகவும் அமையலாம். இவற்றுக்கும் மேலாக, உரிமமானது மிகவும் நவீனமான தகவல் முறைமையையும் கணக்கீட்டு மதிப்பீடுகள் மீது பரந்தளவிலான கட்டுப்பாடுகளையும் கொண்டிருக்கலாம். இந்தச் சந்தர்ப்பங்களில், கணக்கீட்டு மதிப்பீடுகள் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை, சிக்கல், அகவயத்தன்மை அல்லது ஏனைய உள்ளார்ந்த இடர்க்காரணிகளால் பாதிப்படைவது அதிகளவானதாகவிருக்கும். அவ்வாறெனின், கணக்காய்வாளரது இடர் மதிப்பீட்டுச் செயன்முறைகளினது தன்மை அல்லது நேரம் ஆகியவை பந்தி A20 இல் உள்ள சந்தர்ப்பங்களிற்கு வேறுபாடானதாக, அல்லது அதை விட அதிக விரிவானதாக அமையலாம்..

A22. எளிய வியாபாரத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட, அதிக சிறிய உரிமங்களை உள்ளடக்கும் உரிமங்களுக்கு பின்வரும் கவனத்திற் கொள்ளல்கள் பொருத்தமானவையாக அமையும்.:

- வியாபார நடவடிக்கைகள் எளிமையானதாக அல்லது குறைந்தளவு மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை கொண்டதாக இருப்பதால் கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்பான செயன்முறைகள் சிக்கலற்றவையாக இருக்கலாம் அல்லது

- கணக்கீட்டு மதிப்பீடுகள் பொதுவான மற்றும் துணைப் பேரேடுகளுக்கு வெளியே உருவாக்கப்படலாம், அவற்றின் மீதான கட்டுப்பாடுகள் வரையறுக்கப்பட்டவையாக இருக்கலாம். அத்துடன், உரிமையாளர்- முகாமையாளர் வகிபாகமானது அவர்களது தீர்மானத்தின் மீது கணிசமான தலையிடற் தகவினை கொண்டிருக்கலாம். கணக்கீட்டு மதிப்பீடுகளை உருவாக்கும்போது உரிமையாளர்- முகாமையாளர் வகிபாகம் முகாமைப் பக்கச்சார்பினைக் கருத்தில் கொள்ளும் போதான பொருண்மையான பிறழ்கூற்று இடரினை இனங்காணும்போது கணக்காய்வாளரினால் கருத்திலெடுக்கப்படவேண்டிய ஒன்றாக அமையலாம்.

உரிமமும் அதன் சூழலும்

உரிமத்தின் ஊடுசெயல்கள் பிற நிகழ்வுகள் மற்றும் புறநிலைகள் (பார்க்க பந்தி. 13(a))

A23. கணக்கீட்டு மதிப்பீட்டுக்கான தேவையை அல்லது அதில் மாற்றத்தினை விளைவிக்கக்கூடிய சந்தர்ப்பங்களுக்கு உதாரணங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்:

- உரிமம் புதிய வகை ஊடுசெயல்களில் ஈடுபட்டுள்ளதா இல்லையா என்பது;
- ஊடுசெயல்களின் கட்டுறுப்புக்கள் மாற்றமடைந்துள்ளதா என்பது; அல்லது
- புதிய நிகழ்வுகள் மற்றும் புறநிலைகள் ஏற்பட்டுள்ளதா என்பது.

பிரயோகத்திலுள்ள நிதியறிக்கையிடற் சட்டகத்தின் தேவைப்பாடுகள் (பார்க்க பந்தி. 13(b))

A24. பிரயோகத்திலுள்ள நிதியறிக்கையிடற் சட்டகத்தின் தேவைப்பாடுகள் பற்றிய விளக்கத்தினை பெற்றிருத்தல் முகாமையுடனான கலந்தாய்வுக்கும், பொருத்தமான கணக்கீட்டு மதிப்பீட்டுடன் தொடர்புபட்ட தேவைப்பாடுகளை முகாமை எவ்வாறு பயன்படுத்தியது என்பது பற்றி ஆளுமை பாரப்படுத்தப்பட்டோருடன் கலந்தாய்வுக்கும் அவை முறையாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளனவா என்பது பற்றிய கணக்காய்வாளரின் தீர்மானத்திற்கும் ஒரு அடிப்படையினை வழங்குகின்றது. இந்தப் புரிந்துணர்வு, பிரயோகத்திலுள்ள நிதியறிக்கையிடற் சட்டகத்திற்கு ஏற்புடையபோதிலும் உரிமத்தின் புறநிலைக்கு பொருத்தமற்ற கணக்கீட்டு நடைமுறைகள்பற்றி ஆளுமை பாரப்படுத்தப்பட்டோருடன் கணக்காய்வாளர் தொடர்பாடல் செய்வதில் உதவுகின்றது[29].

A25. இந்தப் புரிந்துணர்வினை பெற்றுக்கொள்வதில், கணக்காய்வாளர் பின்வருவனவற்றை விளங்கிக்கொள்ள முனையலாம்:

- பிரயோகிக்கக்கூடிய நிதியறிக்கைச் சட்டகம்:
  - o கணக்கீட்டு மதிப்பீடுகளின் அளவீட்டின் ஏற்பிசைவுக்கான நியதிகளை அல்லது, அளவிடல் முறைகளை முன்மொழிகிறது;
  - o சீர்மதிப்பினை அனுமதிக்கும் அல்லது தேவைப்படுத்தும் சில நியதிகளை குறிப்பிடுகிறது. உதாரணமாக, சொத்து அல்லது பரிப்பு தொடர்பாக சில நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான முகாமையின் உள்நோக்கத்தோடு தொடர்புபடுவதன் மூலமாக; அல்லது
  - o கணக்கிட்டு மதிப்பீடுகள் தொடர்பாக மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை பற்றிய சுயதீர்ப்புகள், எடுகோள்கள் அல்லது பிற மூலங்கள் சம்பந்தப்பட்ட வெளிக்காட்டல்கள் உட்பட தேவைப்படுத்தப்பட்ட அல்லது பரிந்துரைக்கப்பட்ட வெளிக்காட்டல்கள்; மற்றும்
- கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்புபட்ட உரிமத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றத்தை தேவைப்படுத்தும் பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்திலான மாற்றங்கள்.

[29] SLAuS 260 (மீளாக்கம்), பந்தி 16(a)

ஒழுங்குபடுத்தல் காரணிகள் (பார்க்க பந்தி. 13(c))

A26. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்குப் பொருத்தமான ஒழுங்குபடுத்தல் காரணிகளைப் பற்றி அவை காணப்படும் போது புரிந்துணர்வினைப் பெற்றுக்கொள்வது, கணக்காய்வாளர் பிரயோகத்திலுள்ள ஒழுங்குபடுத்தல் சட்டகத்தினை விளங்கிக்கொள்ள உதவுவதோடு, (உதாரணமாக, வங்கி மற்றும் காப்புறுதித் துறைகளில் விவேக மேற்பார்வையார்களால் உருவாக்கப்பட்ட ஒழுங்கமைத்தல் சட்டகங்கள்), இத்தகைய ஒழுங்குபடுத்தல் சட்டகங்கள் குறித்த பின்வனவற்றைத் தீர்மானிப்பதிலும் உதவுகின்றது:

- கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான ஏற்பிசைவு நிபந்தனைகள், அல்லது அளவீட்டு செய்முறைகள் என்பவற்றை விபரிக்கின்றனவா, மற்றும் தொடர்புடைய வழிகாட்டல்களை வழங்குகின்றனவா;
- பிரயோகிக்கத்தகு நிதியறிக்கைச் சட்டகத்தின் தேவைப்பாடுகளுக்கு மேலாக வெளிக்காட்டலகள் பற்றி குறித்துரைக்கின்றனவா, அல்லது வழிகாட்டல்களை வழங்குகின்றனவா;
- ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளை அடைவதற்கு சாத்தியமான முகாமைப்பக்கச்சார்புகள் உள்ள பகுதிகளுக்கானகுறிகாட்டிகளை வழங்குகின்றனவா; அல்லது,
- பிரயோகிக்கத்தக்க நிதியறிக்கையிடற் சட்டகத்தின் தேவைப்பாடுகளுக்குப் பொருந்தாத ஆனால் ஒழுங்கமைத்தல் நோக்கத் தேவைப்பாடுகளுடன் இசைகின்ற சாத்தியமான பொருண்மையான பிறழ்கூற்றுக்கான குறிகாட்டியாக அமையும் தேவைப்பாடுகளை உள்ளடக்குகின்றமைமை. உதாரணமாக, சில ஒழுங்குபடுத்துனர்கள் பிரயோகிகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தினால் தேவைப்படுத்தியவற்றை விட அதிகரிக்கும் எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பின் ஒதுக்கங்களில் அதிகுறைந்த மட்டத்தில் செல்வாக்குச் செலுத்த முனைவார்கள்.

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டுமென கணக்காய்வாளரினால் எதிர்பார்க்கப்படுகின்ற கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தெடர்புடைய வெளிக்காட்டல்களின் தன்மை (பார்க்க பந்தி. 13(d))

A27. உரிமத்தால் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டுமென கணக்காய்வாளரால் எதிர்பார்க்கப்படும் கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தெடர்புடைய வெளிக்காட்டல்களின் தன்மை பற்றிய புரிந்துணர்வு அத்தகைய கணக்கீட்டு மதிப்பீடுகளின் அளவீட்டு அடிப்படையை விளங்கிக்கொள்ள உதவுவதுடன் பொருத்தமான வெளிக்காட்டல்களின் தன்மை மற்றும் வீச்செல்லையை விளங்கிக்கொள்வதிலும் உதவுகின்றது. இத்தகைய புரிந்துணர்வு முகாமை கணக்கீட்டு மதிப்பீடுகளை எவ்வாறு உருவாக்கியது என்பதைப் பற்றி அதனுடன் கலந்துரையடுவதற்கான அடிப்படையை வழங்குகின்றது.

*கணக்காய்வுக்குப் பொருத்தமான உரிமத்தின் அகக் கட்டுப்பாடுகள்*

மேற்பார்வை மற்றும் ஆளுகையின் தன்மை மற்றும் வீச்செல்லை (பார்க்க பந்தி. 13(e))

A28. இலங்கை கணக்காய்வு நியமம் 315 (மீளாக்கம்),[30] இனை பிரயோகிக்கும்போது, கணக்கீட்டு மதிப்பீடுகளை உருவாக்குவதற்கான முகாமையின் செயன்முறை மீது உரிமம் கொண்டுள்ள மேற்பார்வை மற்றும் ஆளுகைத் தன்மை மற்றும் வீச்செல்லை பற்றிய கணக்காய்வாளரின் புரிந்துணர்வு பின்வருவனவற்றுடன் தெடர்புபடுவதனால் கணக்காய்வாளரின் தேவைப்படுத்தப்பட்ட மதிப்பாய்வுக்கு முக்கியமானதாகும்:

[30] SLAuS 315 (மீளாக்கம்), பந்தி 14

- முகாமையானது ஆளுகை பாரப்படுத்தப்பட்டோரின் மேற்பார்வையுடன் நேர்மை மற்றும் ஒழுக்க நடைமுறைகளுக்கான கலாசாரத்தினை உருவாக்கி நடைமுறைப்படுத்தியிருத்தல் மற்றும்

- கட்டுப்பாட்டுச் சூழல் மூலகங்களின் ஒன்றுதிரண்ட வலிமையானது அகக் கட்டுப்பாட்டின் ஏனைய கூறுகளுக்கான பொருத்தமான அத்திவாரத்தினை வழங்குவதுடன், கட்டுபாட்டுச் சூழலிலுள்ள குறைபாடுகள் காரணமாக ஏனைய கூறுகள் கருத்திற் கொள்ளப்படவில்லையா எனபதற்குமான அடிப்படையினை வழங்குகின்றது.

A29. கணக்காய்வாளர் ஆளுகை பாரப்படுத்தப்பட்டோர்பற்றி பின்வரும் புரிந்துணர்வை பெற்றுக்கொள்ளலாம்:

- கணக்கீட்டு மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கான குறிப்பிட்ட செய்முறை அல்லது மாதிரியின் பண்புகளை அல்லது கணக்கீட்டு மதிப்பீடு தொடர்புபட்ட இடர்களை விளங்கிக் கொள்வதற்கான திறமை அல்லது அறிவினை கொண்டுள்ளனரா. உதாரணமாக, கணக்கீட்டு மதிப்பீடுகளை உருவாக்கும் போது உபயோகிக்கப்பட்ட தகவற் தொழில்நுட்பம் அல்லது செய்முறை தொடர்பான இடரினை விளங்கிக் கொள்வாதற்கான அறிவு அல்லது திறனை கொண்டுள்ளார்களா;

- பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்திற்கு அமைய முகாமை கணக்கீட்டு மதிப்பீடுகளை மேற்கொண்டனரா என்பதை விளங்கிக் கொள்ளும் அறிவு அல்லது திறனை கொண்டுள்ளனரா;

- முகாமையிலிருந்து சுதந்திரமாவுள்ளனரா மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளை முகாமை எவ்வாறு மேற்கொள்கின்றது என்பதனைக் குறித்த கால இடைவெளிகளுக்குள் மதிப்பீடு செய்வதற்கு தேவையான தகவலைக் கொண்டுள்ளனரா, மற்றும் அச் செயற்பாடுகள் பொருத்தமற்றவையாக அல்லது போதாதவையான உள்ளபோது முகாமைமீது கேள்வியெழுப்பக்கூடிய அதிகாரத்தை கொண்டுள்ளார்களா;

- கணக்கீட்டு மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான மாதிரிகளின் உபயோகத்தினையும் அடக்கிய முகாமையின் செயன்முறைகளை மேற்பார்வை செய்தல்; அல்லது

- முகாமையின் கண்காணிப்பு செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல். இது கணக்கீட்டு மதிப்பீடுகள் மீது கட்டுப்பாடுகளின் தொழிற்பாட்டு விளைதிறனின் குறைபாடுகளை கண்டறியவும் திருத்தவும் வடிவமைக்கபட்ட மேற்பார்வை மற்றும் மீளாய்வு நடைமுறைகளை உள்ளடக்கும்.

A30. ஆளுகை பாரப்படுத்தப்பட்டோரின் மேற்பார்வையினை விளங்கிக் கொள்ளல் பின்வரும் கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கு முக்கியமானதாகும்:

- அகவயத்தன்மையை விபரிக்க முகாமையின் கணிசமான தீர்மானங்களை தேவைப்படுத்துபவை;

- அதிக மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையைக் கொண்டிருப்பவை;

- உருவாக்குவதற்கு சிக்கலானவை, உதாரணமாக, அதிக செறிவான தகவல் தொழில் நுட்பத்தின, அதிகளவான தரவின் அல்லது வெவ்வேறு வகையான தகவல் மூலங்களின், சிக்கலான இடைத் தெடர்புள்ள எடுகொள்களின் பயன்பாடு காரணமாக;

- கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் தரவுகள், செய்முறைகள் மற்றும் எடுகோள்களில் மாற்றத்தை கொண்டுள்ளவை அல்லது கொண்டிருக்கவுள்ளவை; அல்லது

- கணிசமான எடுகோள்களை உள்ளடக்கியிருப்பவை.

முகாமை நிபுணரது பயன்பாட்டினை உள்ளடக்கிய முகாமையின் சிறப்பான திறன்கள் மற்றும் அறிவின் பிரயோகம் (பார்க்க பந்தி. 13(f))

A31. கணக்காய்வாளர் பின்வரும் சந்தர்ப்பங்கள் நிபுணரை நியமிப்பதற்கான சாத்தியத்தினை அதிகரிக்குமா இல்லையா என்பதனை கருத்தில்கொள்ள வேண்டும்:[31]

- மதிப்பீட்டினைத் தேவைப்படுத்தும் விடயத்தின் சிறப்பான தன்மை, உதாரணமாக, அகழ்வுத் தொழிற்துறையில் கணக்கீட்டு மதிப்பீடு கனிப்பொருட்கள் அல்லது ஐதரோக்காபன் ஒதுக்கங்களின் அளவீட்டினை அல்லது சிக்கலான ஒப்பந்தக் கட்டுறுப்புக்களை பிரயோகித்தலின் சாத்தியமான வெளிப்பாட்டின் மதிப்பாய்வினை சம்பந்தப்படுத்தும்.

- மட்டம் 3 சீர்மதிப்புப் போன்ற சில அளவீட்டுச் சூழ்நிலைகளில் பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தின் தொடர்புபட்ட தேவைப்பாடுகளைப் பிரயோகிப்பதற்குத் தேவையான மாதிரிகளின் சிக்கலான தன்மை[32]

- கணக்கீட்டு மதிப்பீட்டினை தேவைப்படுத்தும் ஊடுசெயல்கள், நிகழ்வுகள் மற்றும் புறநிலைகளின் வழமைக்கு மாறான அல்லது அடிக்கடி நிகழாத தன்மை.

உரிமத்தின் இடர்மதிப்பீட்டுச் செயன்முறை (பார்க்க பந்தி. 13(g))

A32. கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்புபட்ட இடர்களை உரிமத்தின் இடர்மதிப்பீட்டுச் செயன்முறை எவ்வாறு இனங்கண்டு மதிப்பிடுகின்றது என்பது பற்றி விளங்கிக்கொள்வது பின்வருவனவற்றிலான மாற்றங்களைக் கவனத்திலெடுப்பதில் உதவுகின்றது:

- கணக்கீட்டு மதிப்பீடு தொடர்புபட்ட பிரயோகத்திலுள்ள நிதியறிக்கையிடற் சட்டக தேவைப்பாடுகள்;

- கணக்கீட்டு மதிப்பீடுகளின் ஆக்கத்திற்கு பொருத்தமான அல்லது உபயோகிக்கப்படும் தரவுகளின் நம்பகத்தன்மையை பாதிக்கக்கூடிய தரவு மூலங்களின் கிடைப்பனவு அல்லது தன்மை;

- உரிமத்தின் தகவல் முறைமை அல்லது தகவல் தொழில்நுட்பச் சூழல்; மற்றும்

- முக்கிய நபர்கள்.

A33. கணக்கீட்டு மதிப்பீடுகளின் உருவாக்கத்தில் முகாமைப் பக்கச்சார்பின் அல்லது பிறழ்வின் காரணமாக பிறழ்கூற்றுக்கான மாறுந்தகவு முகாமையினால் எவ்வாறு அடையாளங்காணப்பட்டு மதிப்பிடப்படுகின்றது என்பது பற்றிய புரிந்துணர்வினை பெறும்போது, கணக்காய்வாளர் கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் முகாமை பின்வருவனவற்றை முன்னெடுக்கிறதா மற்றும் அவ்வாறு முன்னெடுத்தால் அது எவ்வாறு என்பதையும் உள்ளடக்குகின்றது:

- கணக்கீட்டு மதிப்பீடுகளை உருவாக்கும்போது செய்முறைகள், எடுகோள்கள், மற்றும் தரவுகளை தெரிவு செய்தலுக்கு அல்லது பிரயோகிப்பதற்கு சிறப்பான கவனத்தினை வழங்குதல்

- கடந்த கால அல்லது பாதிடப்பட்ட செயற்திறனோடு அல்லது ஏனைய அறியப்பட்ட காரணிகளுடன் ஒப்பிடுகையில் எதிர்பாராத அல்லது சீரற்ற பெறுபேற்றினை காட்டக்கூடிய முக்கிய செயற்திறன் காட்டிகளைக் கண்காணித்தல்.

- பக்கச்சார்புக்கு உந்தாக்கத்தை வழங்கக்கூடிய நிதிசார் அல்லது வேறு ஊக்குவிப்புக்களை இனங்காணுதல்

---

31 SLAuS 500, பந்தி 8

32 உதாரணமாக, பார்க்க இலங்கை கணக்கீட்டு நியமம் - SLFRS 13, *சீர்மதிப்பு அளவீடு*

- கணக்கீட்டு மதிப்பீடுகளை உருவாக்கும் போது உபயோகிக்கப்படும் செய்முறைகள், கணிசமான எடுகோள்கள், அல்லது தரவுகளில் மாற்றத்திற்கான தேவையைக் கண்காணித்தல்.
- கணக்கீட்டு மதிப்பீடுகளை உருவாக்குதலில் உபயோகிக்கப்பட்ட மாதிரிகளுக்கான பொருத்தமான மேற்பார்வை மற்றும் மீளாய்வினைக் கட்டமைத்தல்.
- கணக்கீட்டு மதிப்பீடுகளின் மேற்கொள்ளும்போது ஏற்படுத்திய கணிசமான தீர்மானங்கள் மீதான சுயாதீன மீளாய்வினை அல்லது அவற்றின் பகுத்தறிவான ஆவணப்படுத்தலைத் தேவைப்படுத்தல்.

கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்புபட்ட உரிமத்தின் தகவல் முறைமை (பார்க்க பந்தி. 13(h)(i))

A34. பந்தி 13(h) இல் அடங்கும் ஊடுசெயல் வகுப்புக்கள், நிகழ்வுகள் மற்றும் புறநிலைகள் இலங்கைக் கணக்காய்வு நியமம் 315 (மீளாக்கம்) இன் பந்திகள் 18(a) மற்றும் (d) இல் உள்ளடங்கும் கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட வெளிக்காட்டல் தொடர்புடைய ஊடுசெயல் வகுப்புக்கள், நிகழ்வுகள் மற்றும் புறநிலைகளை ஒத்தவையாகும். உரிமத்தின் தகவல் முறைமையைப் பற்றிய விளக்கத்தினைப் பெற்றுக்கொள்ளும் போது இவை கணக்கீட்டு மதிப்பீடுகளுடன் தொடர்புபடுவதனால் கணக்காய்வாளர் பின்வருவனவற்றைக் கருத்திலெடுக்கலாம்:

- கணக்கீட்டு மதிப்பீடுகள் வழமையான பதிவுகள் மற்றும் மீண்டும் மீண்டும் நிகழ்கின்ற ஊடுசெயல் மூலமாக எழுகின்றனவா அல்லது வழமைக்கு மாறான தொடர்ச்சியற்ற நிகழ்வுகள் மூலமாக எழுகின்றனவா என்பதைக் கருத்திலெடுத்தல்.
- கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் அவற்றோடு தொடர்புபட்ட வெளிக்காட்டல்களின் முழுமையை அதிலும் குறிப்பாக பரிப்புக்களோடு தொடர்புபட்ட கணக்கீட்ட மதிப்பீடுகளின் முழுமையை தகவல் முறைமை எவ்வாறு விவரிக்கின்றது என்பதைக் கருத்திலெடுத்தல்.

A35. கணக்காய்வின் போது, கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் அவற்றோடு தொடர்புடைய வெளிக்காட்டல்களுக்கான தேவையில் அதிகரிப்பை ஏற்படுத்தக்கூடிய ஆனால் முகாமை இனங்காணத் தவறிய ஊடுசெயல் வகுப்புகள், நிகழ்வுகள் மற்றும் புறநிலைகள் கணக்காய்வாளரினால் இனங்காணப்படலாம். உரிமத்தின் இடர் மதிப்பீட்டுச் செயன்முறையோடு தொடர்புபட்ட அகக் கட்டுப்பாடுகளில் கணிசமான குறைபாடுகள் காணப்படுகின்றதா என்பதை உள்ளடக்கிய முகாமையால் இனங்காணத்தவறிய ஆனால் கணக்காய்வாளரால் இனங்காணப்பட்ட பொருண்மையான பிறழ்கூற்று இடர்களுக்கான சந்தர்ப்பங்களை இலங்கைக் கணக்காய்வு நியமம் 315 (மீளாக்கம்) கையாள்கின்றது.[33]

முகாமையின் தொடர்புடைய செய்முறைகள், எடுகோள்கள் மற்றும் தரவு மூலங்களின் இனங்காணல் (பார்க்க பந்தி. 13(h)(ii)(a))

A36. கணக்கீட்டு மதிப்பீட்டினை ஆக்குவதற்கான செயன்முறையை முகாமை மாற்றும் போது, கவனத்திற் கொள்ள வேண்டியன, அந்த புதிய செய்முறை, உதாரணமாக, மிகப்பொருத்தமான, உரிமத்தினை பாதிக்கக்கூடிய சூழல் அல்லது புறநிலை மாற்றங்களுக்கு அல்லது பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தின் அல்லது ஒழுங்குபடுத்தல் சூழலின் தேவைப்பாடுகளின் மாற்றங்களுக்கு சுயமாகவே பதிலளிக்கக்கூடியதாக உள்ளதா அல்லது முகாமையிடம் அத்தகைய மாற்றத்திற்கு வலுவான ஏனைய ஏதேனும் காரணங்களுள்ளனவா என்பதை உள்ளடக்கும்.

A37. கணக்கீட்டு மதிப்பீட்டினை உருவாக்குவதற்கான செய்முறையினை முகாமை மாற்றியமைக்காத போது, கடந்தகால செய்முறைகளினதும், எடுகோள்களினதும் மற்றும் தரவினதும் தொடர்ந்த பயன்பாடானது நடைமுறைச்சூழல் அல்லது சந்தர்ப்பங்களின் பார்வையில் பொருத்தமனதா என்பதை கவனத்திற் கொள்ளல் உள்ளடக்கும்.

[33] SLAuS 315 (மீளாக்கம்), பந்தி17

செய்முறைகள் (பார்க்க பந்தி. 13(h)(ii)(a)(i))

A38. பிரயோகிக்கத்தகு நிதியறிக்கைச் சட்டகம் கணக்கீட்டு மதிப்பீடுகளின் ஆக்கத்திற்கு உபயோகிப்பதற்கான செய்முறையைப் பரிந்துரைக்கலாம். அநேக சந்தர்ப்பங்களில், பிரயோகிக்கத்தகு நிதியறிக்கைச் சட்டகம் தனியொரு செய்முறையை பரிந்துரைப்பதில்லை. அல்லது தேவைப்படுத்தப்பட்ட அளவீட்டு அடிப்டை மாற்று செயமுறைகளை பரிந்துரைப்பதில்லை அல்லது அனுமதிப்பதில்லை.

மாதிரிகள் (Models)

A39. முகாமையின் சொந்த மாதிரிகளோ, அல்லது வெளியார்ந்த மாதிரிகளோ, கணக்கீட்டு மதிப்பீடுகளின் ஆக்கத்தின் போது உபயோகிப்பதற்கான மாதிரிகளைச் சூழ முகாமையானது சிறப்பான கட்டுப்பாடுகளை வடிவமைத்து நடைமுறைப்படுத்தலாம். மாதிர சுயமாகவே எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பு மாதிரி அல்லது மட்டம் 3 உள்ளீடுகளை பயன்படுத்தும் சீர்மதிப்பு மாதிரி போன்ற அதிகரித்த சிக்கல் மட்டம் அல்லது அகவயத்தன்மையை கொண்டுள்ளபோது, அத்தகைய சிக்கற் தன்மையை அல்லது அகவயத் தன்மையை கையாளும் கட்டுப்பாடுகள் கணக்காய்வுடன் தொடர்பானவையாக இனங்காண்பதற்கு அதிக சாத்தியம் உண்டு. சிக்கற்தன்மையானது, மாதிரிகளுடன் தொடர்புபட்டதாக காணப்படுகின்றபோது, தரவு ஒருமைப்பாடு மீதான கட்டுப்பாடுகள் கணக்காய்வு சார்ந்தவையாக இருப்பதற்கு அதிக சாத்தியம் உண்டு. மாதிரி மற்றும் கணக்காய்வு தொடர்புபட்ட கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பற்றிய விளக்கத்தினை பெறுவதற்கு கணக்காய்வாளர் கருத்திலெடுக்க வேண்டிய காரணிகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- மாதிரியின் தொடர்புடமை மற்றும் செம்மையை முகாமை எவ்வாறு தீர்மானிக்கின்றது;
- மாதிரி அதன் கருதப்படும் பயன்பாட்டிற்கு தொடர்ந்தும் பொருத்தமானதாக உள்ளதா என்பதனை தீர்மானிப்பதற்கு ஏதுவாக மாதிரியானது பயன்பாட்டிற்கு முன்னதாகவும் செல்லுபடித் தன்மையை செவ்வைபார்த்தல் மற்றும் சீரான கால இடைவேளைகளில் அவற்றின் செல்லுபடித்தன்மையானது மீளவும் செவ்வைபார்த்தல் உட்பட, மாதிரியின் செல்லுபடித் தன்மையின் பரீட்சிப்பு; உரிமத்தின் மாதிரியின் செல்லுபடியாக்க சோதனை பின்வருவனற்றின் மதிப்பாய்வினை உள்ளடக்கும்:
    - o மாதிரியின் கொள்கை ரீதியான ஏற்றுக்கொள்ளும் தன்மை;
    - o மாதிரியின் கணித ரீதியான ஒருமைப்பாடு; மற்றும்
    - o மாதிரியில் பயன்படுத்திய தரவுகளின் செம்மை, முழுமைத்துவம் மற்றும் தரவு மற்றும் எடுகோள்களின் பொருத்தத்தன்மை.
- சந்தை மற்றும் ஏனைய காரணிகளில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்காக மாதிரியானது எவ்வாறு மாற்றம் செய்யப்படுகிறது அல்லது செம்மையாக்கப்படுகின்றது என்பதுவும்; மாதிரியின் மீது மாற்றக் கட்டுப்பாட்டுக் கொள்கைகள் எவையும் காணப்படுகின்றதா இல்லையா என்பதுவும்.
- மாதிரியின் வெளியீடுகளுக்கு, (சில துறைகளில் மேலடுக்குகள் எனவும் அழைக்கப்படுபவை) செம்மையாக்கம் செய்யப்படுகின்றனவா இல்லையா என்பதும், அத்தகைய செம்மையாக்கங்கள் சூழ்நிலைக்குப் பொருத்தமாகவும் பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்திற்கு இசைவாகவும் உள்ளனவா என்பதும் செம்மையாக்கங்கள் பொருத்தமற்றவையாக உள்ள போது, அத்தகைய செம்மையாக்கம் சாத்தியமான முகாமைப் பக்கச்சார்பிற்கான காட்டிகளாக அமையலாம். மற்றும்
- மாதிரியின் கருதப்படும் பயன்பாடுகள், வரையறைகள், முக்கிய அளவுருக்கள், தேவைப்படுத்திய தரவுகள் மற்றும் எடுகோள்கள், அதன் மீது மேற்கொண்ட செல்லுபடிச்

செவ்வைப் பெறுபேறுகள், மற்றும் அதன் வெளியீட்டிற்கு மேற்கொண்ட செம்மையாக்கங்களின் தன்மை மற்றும் அடிப்படை உட்பட மாதிரியானது முறையாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளதா என்பது.

எடுகோள்கள் (பார்க்க பந்தி.. 13(h)(ii)(a)(ii))

A40. கணக்கீட்டு மதிப்பீடுகளை ஆக்கும் போது முகாமையினால் உபயோகிக்கப்படும் எடுகோள்கள் எவ்வாறு தெரிவு செய்யப்பட்டன என்பதைப் பற்றிய தெளிவினைப் பெற்றுக்கொள்ளும் போது கணக்காய்வாளர் கருத்திலெடுக்க வேண்டிய காரணிகள் உதாரணமாகப் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்:

- முகாமையின் எடுகோள்களின் தெரிவுக்கான அடிப்படை மற்றும் தெரிவினை ஆதரிக்கும் ஆவணப்படுத்தல். பொருத்தமான நிதியறிக்கைச் சட்டகம் எடுகோள்களின் தெரிவிற்கு உபயோகிக்கக் கூடிய தேர்வு நிபந்தனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்கலாம்.
- எடுகோள்கள் தொடர்புடையதாகவும் முழுமையானதாகவும் உள்ளனவா என்பதை முகாமை எவ்வாறு மதிப்பிடுகின்றது.
- பொருத்தமான போது, எடுகோள்கள் அவற்றிற்கிடையேயும், ஏனைய கணக்கீட்டு மதிப்பீடுகளில் அல்லது உரிமத்தின் ஏனைய வியாபார செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்டவற்றோடும், கீழே விபரிக்கப்பட்டுள்ள விடயங்களோடும் கொள்கைமாறாது உள்ளனவா என்பதை முகாமை எவ்வாறு தீர்மானிக்கின்றது என்பது:
    - o முகாமையின் கட்டுப்பாட்டில் உள்ளவை (உதாரணமாக, ஒரு சொத்தின் பயன்தரு ஆயுட்காலத்தை பாதிக்கக்கூடிய பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டம் பற்றிய எடுகோள்கள்) மற்றும் அவை உரிமத்தின் வியாபாரத் திட்டங்களோடும் வெளியார் சூழலோடும் கொள்கைமாறாது உள்ளனவா என்பது, மற்றும்
    - o முகாமையின் கட்டுப்பாட்டிற்கு வெளியானவை (உதாரணமாக, வட்டி வீதங்கள், இறப்பு வீதங்கள், அல்லது சாத்தியமான நீதித்துறை அல்லது ஒழுக்காற்றுத்துறையின் நடவடிக்கைகள் போன்றவற்றைப் பற்றிய எடுகோள்கள்).
- எடுகோள்களின் வெளிக்காட்டல்களுடன் தொடர்புபட்ட பொருத்தமான நிதியறிக்கைச் சட்டகத்தின் தேவைப்பாடுகள்.

A41. சீர்மதிப்பிலான கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்பாக, எடுகோள்கள் தரவு மூலத்திற்கமையவும் மற்றும் அவற்றினை வலுப்படுத்தும் தீர்மானங்களுக்கான அடிப்படைக்கு அமையவும் பின்வருமாறு வேறுபடலாம்.

(a) அறிக்கையிடும் உரிமத்திற்குச் சுயாதீனமான மூலங்களிலிருந்து பெறப்பட்ட சந்தைத் தகவலை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தி செய்யப்பட்ட ஒரு சொத்தினை அல்லது பரிப்பினை விலையிடும்போது சந்தைப் பங்குபற்றுனர் பயன்படுத்துபவற்றை பிரதிபலிப்பவை,

(b) குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் கிடைக்கின்ற சிறந்த தகவலை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தி செய்யப்பட்ட ஒரு சொத்தினையோ அல்லது பரிப்பினையோ விலையிடும் போது, சந்தைப் பங்குபற்றுனர் பயன்படுத்தக்கூடும் என முகாமையால் தீர்மானிக்கப்பட்டவற்றை பிரதிபலிப்பவை,

நடைமுறையில் எவ்வாறு இருப்பினும், (a) மற்றும் (b) க்கு இடையில் வேறுபாடானது எப்போதும் வெளிப்படையற்றவையாக இருக்கலாம். மற்றும் இவற்றுக்கிடையிலான வேறுபடுத்தலானது தரவு மூலம் மற்றும் அந்த எடுகோளை வலுவூட்டுகின்ற தீர்மானங்களுக்கான அடிப்படை ஆகிவற்றில் தங்கியுள்ளது. மேலும், வெவ்வேறு சந்தைப் பங்கபற்றுனர்களால் பயன்படுத்தும் வெவ்வேறு எடுகோள்களிலிருந்து தெரிவு செய்வது முகாமைக்கு அவசியமானதாக அமையலாம்.

A42. எடுகோளில் ஏற்படும் மாற்றம் கணக்கீட்டு மதிப்பீட்டின் அளவீட்டினை பொருண்மையாக பாதிக்குமாயின், கணக்கீட்டு மதிப்பீடுகளின் ஆக்கத்தில் உபயேகிக்கப்பட்ட அத்தகைய எடுகோள்கள் இந்த இலங்கை கணக்காய்வு நியமத்தில் கணிசமான எடுகோள்களாக

கையாளப்பட்டுள்ளன. கணக்கீட்டு மதிப்பீட்டின் ஆக்கத்தில் பயன்படுத்தப்படும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எடுகோள்களுக்கு அமைய அளவீடு எந்தளவுக்கு மாற்றமடையும் என்பதை நிரூபிப்பதற்கு ஒரு உணர்திறன் பகுப்பாய்வு பயனுடையதாக அமையும்.

செயற்திறனற்ற அல்லது திரவத்தன்மையற்ற சந்தைகள்

A43. சந்தைகள் செயற்திறனற்றதாகவும் திரவத்தன்மையற்றவையாகவும் உள்ளபோது, முகாமை எவ்வாறு எடுகோள்களைத் தெரிவு செய்கின்றது என்பதுபற்றிய கணக்காய்வாளரின் புரிந்துணர்வானது, முகாமை பின்வருவனவற்றைக் கொண்டுள்ளதா இல்லையா என்பதனை உள்ளடக்கலாம்:

- அத்தகைய சூழ்நிலைகளில் செய்முறைகளின் பிரயோகத்தினைத் தழுவிக்கொள்ள பொருத்தமான கொள்கைகளை நடைமுறைப்படுத்தியிருத்தல். இத்தகைய பிரயோகமானது செய்முறைகளில் செம்மையாக்கங்களை மேற்கொள்ளுதல், அல்லது அந்தச் சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான புதிய செய்முறைகளை அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கலாம்;

- அவசியமான போது அவசர அடிப்படையில் ஒரு செய்முறையினை கடைப்பிடிக்க அல்லது விருத்தி செய்வதற்கு தேவையான அறிவு அல்லது திறனுடனான வளங்கள். இது அச் சூழ்நிலைக்கு பொருத்தமான மதிப்பீட்டு நுட்பத்தினை தெரிவு செய்யும் அறிவு அல்லது திறனை உள்ளடக்கும்;

- தொடர்புபட்ட நிச்சயமற்ற தன்மையைக் கருத்தில் கொண்டு, பெறுபேறுகளின்களின் வீச்சத்தினை தீர்மானிப்பதற்கான வளங்கள், உதாரணமாக, ஒரு உணர்திறன் பகுப்பாய்வினை நிகழ்த்துதல்;

- பொருத்தமான போது, சந்தைப் புறநிலைகளின் சீரழிவானது, உரிமத்தின் செயற்பாடுகள், சூழல், மற்றும் பொருத்தமான வணிக இடர்கள் ஆகியவற்றை எவ்வாறு பாதிக்கும் என்பதையும் அத்தகைய சந்தர்ப்பங்களில் உரிமத்தின் கணக்கீட்டு மதிப்பீடுகளின் தாக்கத்தினையும் எவ்வாறு மதிப்பிடலாம் என்பதற்கான வழிகள்; மற்றும்

- குறித்த வெளிவாரித் தகவல் மூலத்திலிருந்தான விலைத்தரவு மற்றும் அதன் பொருத்தப்பாடு ஆகியவை இத்தகைய சந்தர்ப்பங்களில் எவ்வாறு மாற்றமடையும் என்பது பற்றிய பொருத்தமான புரிந்துணர்வு.

தரவுகள் (பார்க்க பந்தி. 13(h)(ii)(a)(iii))

A44. கணக்கீட்டு மதிப்பீட்டிற்கு அடிப்படையாக அமைந்த தரவுகளை முகாமை எவ்வாறு தெரிவு செய்தது என்பது பற்றிய விளக்கத்தினை கணக்காய்வாளர் பெற்றுக்கொள்ளும் போது கருத்திலெடுக்க வேண்டிய விடயங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- தரவின் தன்மை மற்றும் அதன் மூலம், இது வெளிவாரி தகவல் மூலத்திலிருந்து பெறப்பட்ட தகவலையும் உள்ளடக்கும்.

- தரவின் தொடர்புடமை பற்றி முகாமை எவ்வாறு மதிப்பிடுகின்றது.

- தரவின் முழுமைத்தன்மை மற்றும் துல்லியம்.

- முன்னைய காலத்தில் உபயோகித்த தரவுடனான குறித்த தரவின் கொள்கைமாறாத் தன்மை.

- தரவினைப் பெற்று செய்முறைப்படுத்த பயன்படுத்திய தகவல் தொழில்நுட்ப முறைமையின் சிக்கற் தன்மை, இது, அதிக அளவான தரவுகளை கையாள்தல் அடங்கலாக.

- தரவு எவ்வாறு பெறப்பட்டு, பரிமாறப்பட்டு, செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டது என்பதும் மற்றும் செம்மைத்தன்மை எவ்வாறு பேணப்பட்டது என்பதும்.

முகாமையானது மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையை எவ்வாறு விளங்கிக்கொண்டு கையாளுகின்றது ((பார்க்க பந்தி. 13(h)(ii)(b)–13(h)(ii)(c))

A45. முகாமை, மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையின் அளவினை விளங்கிக்கொண்டதா என்பதையும் எவ்வாறு விளங்கிக் கொண்டுள்ளது என்பதையும் கணக்காய்வாளர் விளங்கிக்கொள்ளும்போது பொருத்தமான விடயங்கள், உதாரணமாக பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்திற்கு அமைய மாற்றுச் செயன்முறைகள், கணிசமான எடுகோள்கள், மற்றும் தரவு மூலங்கள் ஆகியவற்றை முகாமை இனங்கண்டுள்ளதா என்பதும் அவ்வாறு இனங்கண்ட போது எவ்வாறு அவற்றை இனங்கண்டுள்ளது என்பது.
- மாற்று வெளிப்பாடுகளை முகாமை கவனத்திலெடுத்துள்ளதா என்பதும் கவனத்திலெடுத்திருப்பின் அது எவ்வாறு என்பதும். உதாரணமாக, கணக்கீட்டு மதிப்பீட்டின் ஆக்கத்தின் போது பயன்படுத்திய கணிசமான எடுகோள்கள் அல்லது தரவுகளின் வெளிப்பாட்டினை தீர்மானிப்பதற்கு உணர்திறன் சோதனையொன்றை நிகழ்த்துதல்.

A46. நியாயமான சாத்தியமான அளவீட்டு பெறுபேறுகளிலிருந்து முகாமையின் புள்ளி மதிப்பீட்டினைத் தெரிவு செய்வதற்கான வழிமுறையை பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டக தேவைப்பாடுகள் குறிப்பிடலாம். நியாயமான சாத்தியமான அளவீட்டு பெறுபேறுகளிலிருந்து உரிய முறையில் தெரிவு செய்தவற்றையே பொருத்தமான தொகைகளாக பிரயோகத்திலுள்ள நிதியறிக்கையிடற் சட்டகம் ஏற்பிசைவு செய்யக்கூடும். அத்துடன், சில வேளைகளில் அந்த வீச்சத்தின் நடுப்பகுதியை பொருத்தமான பெறுபேறாக காட்டலாம்.

A47. உதாரணமாக, சீர்மதிப்பிலான மதிப்பீடுகள் தொடர்பாக, SLFRS 13[34] சீர்மதிப்பினை அளவிடுவதற்கு பல அளவீட்டு நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டால், பெறுபேறானது (அதாவது சீர்மதிப்புக்கான பொருத்தமான காட்டிகள்) அந்த பெறுபேறுகளினால் குறிப்பிடப்படும் தொகைகளின் வீச்சத்தின் நியாயபூர்வ தன்மையினை கருத்தில்கொண்டு மதிப்பிடப்படலாம் எனக் குறிப்பிடுகின்றது. அந்த வீச்சத்திற்குள் அந்தச் சூழ்நிலைக்கான பிரதியீடாக அமையும் புள்ளியே ஒரு சீர்மதிப்பிலான மதிப்பீடாகும். வேறு சில சந்தர்ப்பங்களில், பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகம் நியாயபூர்வமாக சாத்தியமான அளவீட்டு பெறுபேறுகளுக்கு அல்லது நிகழ்வதற்கு அதிக சாத்தியமுள்ள அல்லது நிகழாமலிருப்பதற்கான சாத்தியத்திற்கும் மேற்பட்ட அளவீட்டுத் தொகைக்கு நிகழ்தகவு- நிறையேற்றப்பட்ட சராசரியைக் குறிப்பிடலாம்.

A48. பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகம் கணக்கீட்டு மதிப்பீடுகளுடன் தொடர்புடைய வெளிக்காட்டல்கள் மற்றும் வெளிக்காட்டல்களுக்கான நோக்கங்கள் ஆகியவற்றைப் பரிந்துரை செய்யலாம். அத்துடன், சில உரிமங்கள் மேலதிக தகவலை வெளிக்காட்டுவதற்குத் தெரிவு செய்யலாம். இந்த வெளிக்காட்டல்களும் வெளிக்காட்டலுக்கான நோக்கங்களும் பின்வருவனவற்றை விபரிக்கலாம், உதாரணமாக:

- உபயோகித்த மதிப்பீட்டுச் செய்முறை, இது பொருத்தமான ஏதேனும் மாதிரிகளையும் அவற்றின் தெரிவுக்கான காரணங்களையும் உள்ளடக்கும்.
- மாதிரிகளிலிருந்து அல்லது நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்த அல்லது வெளிக்காட்டப்பட்ட மதிப்பீடுகளைத் தீர்மானிப்பதற்கு உபயோகித்த ஏனைய கணித்தல் செய்முறைகளிலிருந்து பெறப்பட்ட தகவல். இது அந்த மாதிரிகளில் பயன்படுத்தப்பட்ட அடிப்படை எடுகோள்கள் மற்றும் தரவுகளை உள்ளடக்கும். அதாவது:
    - o அகத்தே விருத்தி செய்யப்பட்ட எடுகோள்கள் அல்லது
    - o உரிமத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணிகளினால் பாதிப்படையக்கூடிய தரவு, அதாவது வட்டி வீதம் போன்றவை.
- கடந்தகாலத்து மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களின் விளைவுகள்;;

34 SLFRS 13, *சீர்மதிப்பு அளவீடு* பந்தி 63

- மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மைக்கான மூலங்கள்;
- சீர்மதிப்புத் தகவல்;
- முகாமையானது மாற்று எடுகோள்களைக் கருத்தில் கொண்டுள்ளது என்பதை நிரூபிக்கின்ற நிதிசார் மாதிரிகளிலிருந்து உய்த்தறியப்பட்ட உணர்திறன் பகுப்பாய்வினை பற்றிய தகவல்.

A49. வேறுசில சந்தர்ப்பங்களில், மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை தொடர்பான பிரயோகத்திலுள்ள நிதியறிக்கை சட்டகம் சிறப்பான வெளிக்காட்டல்களைத் தேவைப்படுத்தும், உதாரணமாக:

- எதிர்காலத்தைப் பற்றி மேற்கொள்ளப்பட்ட எடுகோள்கள் பற்றிய வெளிக்காட்டல்கள் மற்றும் காலத்தின் முடிவின் பின்னர் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் முன்கொணரற் தொகையில் பொருண்மையான செம்மையாக்கத்தின் அதிக சாத்தியம் மற்றும் அளவினை ஏற்படுத்தக்கூடிய மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையின் முக்கிய மூலங்கள். இத்தகைய தேவைப்பாடுகள் . ‘‘மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையின் பிரதான மூலங்கள்’’ அல்லது ‘‘இக்கட்டான கணக்கீட்டு மதிப்பீடுகள்’’ போன்ற பதங்களை பயன்படுத்தி விபரிக்கப்படலாம். முகாமையின் மிகவும் கடினமான, அகவயத்தன்மையான மற்றும் சிக்கலான தீர்மானங்களைத் தேவைப்படுத்தும் கணக்கீட்டு மதிப்பீடுகளுடன் அவை தொடர்புபடலாம். அந்தத் தீர்மானங்கள் அதிக அகவயத்தன்மை மற்றும் சிக்கலானதாக இருக்கக்கூடும்; அதன்படி, சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களுக்கான முன்கொணரற் தொகைகளுக்கு தொடர்விளைவாக அமையும் பொருண்மையான செம்மையாக்கத்திற்கான சாத்தியமானது, மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையின் சாத்தியமான எதிர்காலத் தீர்வினை பாதிக்கும் தரவுகள் மற்றும் எடுகோள் உருப்படிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அதிகரிக்கக்கூடும். வெளிக் காட்டப்படக்கூடிய தகவல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்:
    - o எடுகோளின் தன்மை அல்லது மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மைக்கான ஏனைய மூலங்கள்;
    - o பயன்படுத்தும் செய்முறைகள், எடுகோள்கள் என்பவற்றுக்கு முன்கொணரற் தொகையின் உணர்திறன், இது அந்த உணர்திறனுக்கான காரணங்களையும் உள்ளடக்கும்;
    - o நிச்சயமற்ற தன்மையின் எதிர்பார்க்கப்பட்ட தீர்வுகள் மற்றும் பாதிக்கப்படும் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் முன்கொண்டுவரப்பட்ட தொகைகள் தொடர்பாக நியாயமான சாத்தியமான வெளிப்பாடுகளின் வீச்சம்; மற்றும்
    - o நிச்சயமற்ற தன்மை தீர்க்கப்படாது தொடர்ந்து இருக்கும் பட்சத்தில் அந்தச் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் சம்பந்தப்பட்ட கடந்தகால எடுகோள்களுக்கு மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களின் விளக்கங்கள்.
- சாத்தியமான வெளிப்பாடுகளின் வீச்சத்தின் வெளிக்காட்டல் மற்றும் அந்த வீச்சத்தினைத் தீர்மானிப்பதில் பயன்படுத்திய எடுகோள்கள்.
- கீழ்வருவனபோன்ற குறிப்பான தகவல்களுக்கான வெனிக்காட்டல்:
    - o உரிமத்தின் நிதிச்செயற்பாடு மற்றும் நிதிநிலைமைக்கு சீர்மதிப்புக் கணக்கீட்டு மதிப்பீட்டு முக்கியத்துவம் தொடர்பான தகவல்கள்; மற்றும்
    - o சந்தையின் செயற்திறனற்ற அல்லது திரவநிலையற்ற தன்மை பற்றிய வெளிக்காட்டல்.
- இடருக்கான வெளிப்பாடுகள் மற்றும் அவை எவ்வாறு எழுகின்றன, இடர்களை முகாமை செய்வதற்கான உரிமத்தின் நோக்கங்கள், கொள்கைகள் மற்றும் விதிமுறைகள் மற்றும் இடரினை அளவீடு செய்வதற்கு பயன்படுத்திய செய்முறைகள் மற்றும் கடந்த காலத்திலிருந்து இத்தகைய தரம் சார்ந்த எண்ணக்கருக்களின் மாற்றங்கள்.

- கடன் இடர், திரவத்தன்மை இடர் மற்றும் சந்தை இடர் அடங்கலாக, உரிமத்தின் முகாமை ஆளணியினருக்கு உள்ளிருந்து வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், உரிமம் எந்தளவுக்கு இடருக்கு ஆளாகும் தகவினை கொண்டுள்ளது என்பது போன்ற அளவுசார் வெளிக்காட்டல்கள்.

கணக்கீட்டு மதிப்பீடுகளை ஆக்குவதற்கான முகாமையின் செய்முறைகள் மீதான கணக்காய்வுக்கு உரிய கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் (பார்க்க பந்தி.. 13(i))

A50. கணக்காய்வு தொடர்புபட்ட கட்டுப்பாடுகளை இனங்காண்பதில் கணக்காய்வாளரின் தீர்மானம் மற்றும் அதன் காரணமாக அந்தக் கட்டுப்பாடுகளின் வடிவமைப்பினை மதிப்பாய்வு செய்வதற்கான தேவை, மற்றும் அவை நடைமுறைப்படுத்தப்பட்டனவா என்பது பற்றிய தீர்மானம் ஆகியவை பந்தி 13(h)(ii) இல் விபரிக்கப்பட்டுள்ள முகாமையின் செயற்பாடுகளோடு தொடர்புபடுகின்றது. கணக்காய்வாளர் கணக்கீட்டு மதிப்பீடு தொடர்புபட்ட சிக்கற்தன்மையைப் பொறுத்து, பந்தி 13(h)(ii) இன் அனைத்து மூலகங்கள் தொடர்பிலும் தொடர்புடைய கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை இனங்காணாமல் விடலாம்.

A51. கணக்காய்வு தொடர்புபட்ட கட்டுப்பாட்டு செயற்பாடுகளை பெற்று விளங்கிக்கொள்ளுவதன் பகுதியாக, கணக்காய்வாளர் பின்வருவனவற்றைக் கருத்திலெடுக்கலாம்:

- கணக்கீட்டு மதிப்பீடுகளை ஆக்கும்போது பயன்படுத்தும் தரவின் தொடர்புடைமையை முகாமை எவ்வாறு தீர்மானிக்கின்றது, இது வெளிவாரித் தகவல் மூலத்தினை அல்லது பொதுவான மற்றும் துணைப் பேரேடுகளுக்கு வெளியேயான தரவுகளை உபயோகிக்கும் சூழ்நிலைகளையும் உள்ளடக்கும்.

- பொருத்தமான முகாமை மட்டத்தால், மற்றும் பொருத்தமானபோது ஆளுகை பாரப்படுத்தப் பட்டோரினால் கணக்கீட்டு மதிப்பீடுகளை விருத்தி செய்ய பயன்படுத்திய எடுகோள்கள் அல்லது தரவுகள் அடங்கலாக, கணக்கீட்டு மதிப்பீடுகளின் மதிப்பாய்வும் அங்கீகாரமும்.

- கணக்கீட்டு மதிப்பீடுகளை ஆக்கும் பொறுப்புடையோர் மற்றும் தொடர்புபட்ட ஊடுசெயல்களுடன் உரிமத்தினை ஈடுபடுத்துபவர்கள் ஆகியவர்களுக்கிடையிலான வேலைப்பகிர்வு. இது கடமைப் பகிர்வானது உரிமத்தின் தன்மை மற்றும் அதன் பொருட்கள் அல்லது சேவைகள் ஆகியவற்றை முறையாக் கருத்திலெடுத்துள்ளதா என்பதனையும் உள்ளடக்கும். உதாரணமாக, பாரிய நிதி நிறுவனங்களில், உரிய வேலைப் பகிர்வானது, அந்த உரிமத்தின் நிதித் தயாரிப்புக்களின் சீர்மதிப்பு விலையிடலின் மதிப்பீடு மற்றும் பரிசீலனைக்குப் பொறுப்பானதும் அந்தப் பொருட்களோடு பிணைக்கப்படாத ஊதியத்தினைப் பெறுகின்ற ஊழியர்களால் மேற்கொள்ளப்படும் சுதந்திரமான தொழிற்பாட்டினை உள்ளடக்கும்.

- கட்டுப்பாட்டு செயற்பாடுகள் வடிவமைப்பின் விளைவுத்திறன். இது பொதுவாக, சிக்கற்தன்மையை விபரிக்கின்ற கட்டுப்பாடுகளின் வடிவமைப் காட்டிலும், பொருண்மையான பிறழ்கூற்றுக்களை விளைதிறனான முறையில் தவிர்க்கக்கூடிய அல்லது, இனங்கண்டு திருத்தக்கூடிய வகையில் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை மற்றும் அகவயத்தன்மையை விவரிக்கக்கூடிய கட்டுப்பாடுகளை வடிவமைப்பது முகாமைக்கு மிகவும் கடினமானதாக இருக்கலாம். அகவயத்தன்மை மற்றும் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையை விவரிக்கின்ற கட்டுப்பாடுகள் அதிக கைமுறை மூலகங்களை உள்ளடக்கலாம், அவை இலகுவில் புறக்கணிக்கக் கூடியவையாகவும், தவிர்க்கக் கூடியவையாக அல்லது மீறப்படக்கூடியவையாக இருப்பதனால் இவை தன்னியக்க கட்டுப்பாடுகளைக் காட்டிலும் நம்பகத்தன்மை குறைந்தவையாக காணப்படலாம். சிக்கலை விவரிக்கின்ற கட்டுப்பாடுகளானவை அவற்றின் தன்மை மற்றும் அவற்றுக்கான காரணம், சிக்கற்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபடலாம். உதாரணமாக, கிரமமாக பயன்படுத்தப்படும் செயன்முறை தொடர்புபட்ட அல்லது தரவுகளின் ஒருமைப்பாடு மீதான மிகவும் விளைவுத்திறனான கட்டுப்பாடுகளை வடிவமைத்தல் இலகுவானதாக இருக்கக்கூடும்.

A52. முகாமை ஒரு கணக்கீட்டு மதிப்பீட்டினை உருவாக்கும் போது அதிகளவில் தகவல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்தும் போது, கணக்காய்வு தொடர்புபட்ட கட்டுப்பாடுகள்

பொதுவான தகவல் தொழில்நுட்ப கட்டுப்பாடுகள் மற்றும் பிரயோகக்கட்டுப்பாடுகளை அடக்குதல் சாத்தியம். அத்தகைய கட்டுப்பாடுகள் பின்வருவன தொடர்புபட்ட இடர்களை கையாளலாம்:

- தகவல் தொழில்நுட்ப முறைமை அதிகளவு தரவுகளை செயன்முறைப்படுத்தும் இயலுமையை கொண்டுள்ளதா என்பதும் அதற்கேற்ப பொருத்தமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளதா என்பதும்;
- ஒரு செயன்முறையை பிரயோகிக்கும் போது சிக்கலான கணிப்பீடுகள். குறிப்பாக, முறைமைகள் தன்னியக்க இடைமுகத்தை கொண்டிராத போது அல்லது கைமுறைப் பிரயோகத்திற்கு ஆளாகும் போது சிக்கலான ஊடுசெயல்களை செய்முறைப்படுத்துவதற்கு வேறுபட்ட முறைமைகள் தேவைப் படும்போது, முறைமைகளுக்கு இடையில் கிரமமான இணக்கங்கள் மேற்கொள்ளப்படல்;
- மாதிரிகளின் வடிவமைப்பு மற்றும் அளவிடல்கள் குறித்த கால இடைவெளிகளில் மதிப்பாய்வு செய்யப்படுதல்;
- கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்பாக உரிமத்தின் பதிவேடுகள் அல்லது வெளிவாரித் தகவல் மூலங்களில் இருந்து முழுமையான மற்றும் துல்லியமான தரவுகளை பிரித்தறிதல்;
- உரிமத்தின் தகவல் முறைமையின் ஊடாக துல்லியமான மற்றும் முழுமையான தரவுப் பாய்வு, கணக்கீட்டு மதிப்பீடுகளை மேற்கொள்ள பயன்படுத்தும் தரவிற்கான மாற்றங்கள் எதுவுமிருப்பின் அவற்றின் பொருத்தப்பாடு, தரவுகளின் ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்பினைப் பேணுதல் உட்பட தரவுகள்;
- வெளியார்ந்த தகவல் மூலங்களை உபயோகிக்கும் போது, தரவினை பதிலிடல் மற்றும் செயன் முறைப்படுத்தலோடு தொடர்புபட்ட இடர்கள்;
- கையடைகை, மாதிரிகளின் உற்பத்தி வகையின் உறுதிப்படுத்திய ஸ்திரமான கணக்காய்வுத் தடத்தினை பேணுவதற்கான தனித்தனி மாதிரிகளின் மாற்றம் மற்றும் பராமரிப்பு மற்றும் அந்த மாதிரிகளில் அங்கீகரிக்கப்படாத கையடைகை அல்லது திருத்தங்களை தடை செய்தல் ஆகியன பற்றி முகாமை கட்டுப்பாடுகளை கொண்டுள்ளதா என்பது; மற்றும்
- தினக்குறிப்புப் பதிவுகள் மீது பொருத்தமான கட்டுப்பாடுகள் உட்பட, கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்புபட்ட தகவல்களை பொதுப் பேரேட்டுக்கு மாற்றுதல் மீது பொருத்தமான கட்டுப்பாடுகள் உள்ளனவா என்பது.

A53. இலங்கை கணக்காய்வு நியமம் 315 (மீளாக்கம்)[35] க்கு அமைய வங்கி மற்றும் காப்புறுதி போன்ற சில துறைகளில், ஆளுகை என்னும் சொற்றொடரானது கட்டுப்பாட்டுச் சூழலுக்குள்ளான நடவடிக்கைகள், கட்டுப்பாடுகளின் மேற்பார்வை மற்றும் அகக்கட்டுப்பாட்டின் ஏனைய மூலகங்களை விபரிப்பதற்கு பயன்படுத்தப்படலாம்.

A54. அகக்கணக்காய்வுத் தொழிற்பாட்டினைக் கொண்ட உரிமங்களுக்கு, இந்த தொழிற்பாட்டின் செய்கைகள் கணக்காய்வாளருக்கு குறிப்பாகக் கீழ்வருவன பற்றிய விளக்கத்தினைப் பெற்றுக்கொள்ள உதவியாக அமையும்:

- முகாமையின் கணக்கீட்டு மதிப்பீடுகளினது உபயோகத்தின் தன்மை மற்றும் வீச்செல்லை;
- கணக்கீட்டு மதிப்பீடுகளின் உருவாக்கத்தின்போது உபயோகிக்கப்பட்ட மாதிரிகள், தரவு மற்றும் எடுகோள்கள் ஆகியவற்றினை விபரிக்கும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் வடிவமைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தல்;

35 SLAuS 315 (மீளாக்கம்) பந்தி A77

- கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கு அடிப்படையாக அமைகின்ற தரவுகனை உருவாக்கும் உரிமத்தின் தகவல் முறைமையின் அம்சங்கள் மற்றும்
- கணக்கீட்டு மதிப்பீடுகளுடன் தொடர்புடைய புதிய இடர்கள் எவ்வாறு இனங்காணப்பட்டு, மதிப்பிடப்பட்டு, முகாமை செய்யப்படுகின்றன என்பது பற்றி.

*முன்னயை கணக்கீட்டு மதிப்பீடுகளின் பெறுபேறுகளை அல்லது மறுமதிப்பீட்டினை மீளாய்வு செய்தல்* (பார்க்க பந்தி. 14)

A55. முன்னைய கணக்கீட்டு மதிப்பீடுகளின் பெறுபேறுகளின் அல்லது மறுமதிப்பீட்டின் மீளாய்வானது (முன்னர் இருந்தான மீளாய்வு) கடந்தகால கணக்கீட்டு மதிப்பீடுகள் நடப்புக் காலத்தில் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களுக்களின் விற்பனை அல்லது கைமாற்றத்தின் ஊடாக பெறுபேற்றினைக் கொண்டிருக்கும் போதோ அல்லது நடப்புக்காலத் தேவைக்காக மறுமதிப்பீடு செய்யப்படும் போதோ பொருண்மையான பிறழ்கூற்றுக்கான இடரினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தலில் உதவும். ஒரு முன்பிருந்தான மீளாய்வின் ஊடாக, கணக்காய்வாளர் பின்வருவனவற்றை பெற்றுக்கொள்ளலாம்:

- முகாமையின் முன்னைய மதிப்பீட்டுச் செய்முறையின் வினைதிறனுடன் தொடர்புடைய தகவல், இதன்மூலம் முகாமையின் இதேபோன்ற நிகழ்கால செய்முறை வினைதிறனுக்கான கணக்காய்வுச் சான்றினைக் கணக்காய்வாளர் பெற்றுக்கொள்ள முடியும்.
- நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டலுக்கு தேவைப்படும் மாற்றங்களுக்கான காரணங்கள் போன்ற விடயங்களுக்கான கணக்காய்வுச் சான்று.
- சிக்கற்தன்மை தொடர்புபட்ட தகவல் அல்லது கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்புபட்ட மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை.
- முகாமைப் பக்கச்சார்புக்கான அல்லது அவற்றின் காட்டிகளாக அமையக்கூடிய கணக்கீட்டு மதிப்பீடுகளின் மாறுந்தகவு தொடர்பான தகவல். இத்தகைய சந்தர்ப்பம் அல்லது புறநிலைகளை இனங்காண்பதிலும் மேலதிக கணக்காய்வுச் விதிமுறைகளின் தன்மை, நேரம் மற்றும் அளவை தீர்மானிப்பதிலும் கணக்காய்வாளரின் தொழில்சார் சந்தேக மனப்பாங்கு உதவும்.

A56. நடப்புக்காலத்தின் பொருண்மையான பிறழ்கூற்று இடர்களை இனங்கண்டு மதிப்பிடுதலில் உதவக்கூடிய கணக்காய்வுச் சான்றுகளை முன்பிருந்தான மீளாய்வு வழங்கலாம். இத்தகைய முன்பிருந்தான மீளாய்வு, கடந்தகால நிதிக்கூற்றுக்களுக்காக ஆக்கப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளுக்காக மேற்கொள்ளப்படலாம், அல்லது பல்வேறு காலப்பகுதிகளுக்காக மேற்கொள்ளப்படலாம் அல்லது குறுங்காலத்திற்காகவும் (அதாவது அரையாண்டு அல்லது காலாண்டு) மேற்கொள்ளப்படலாம். சில சந்தர்ப்பங்களில், கணக்கீட்டு மதிப்பீடொன்றின் வெளிப்பாடு நீண்டகாலமீறாக தீர்க்கப்படும்போது, பல காலங்கள் ஈறான முன்னர் இருந்தான மீளாய்வு பொருத்தமானதாக இருக்கலாம்.

A57. கணிசமான கணக்கீட்டு மதிப்பீடுகளுடன் தொடர்புடைய முகாமைத்தீர்மானங்கள் மற்றும் எடுகோள்களின் ஒரு முன்னர் இருந்தான மீளாய்வு, இலங்கை கணக்காய்வு நியமம் 240[36] இனால் தேவைப்படுத்தப் படுகின்றது. ஒரு நடைமுறை விடயமாக, இடர் மதிப்பீட்டுச் விதிமுறைகளில் ஒன்றான இந்த இலங்கைக் கணக்காய்வு நியமத்துக்கு இசைவாக முன்னைய கணக்கீட்டு மதிப்பீடுகளின் கணக்காய்வாளரினது மீளாய்வானது இலங்கை கணக்காய்வு நியமம் 240 இனால் தேவைப்படுத்தப்படுகின்ற மீளாய்வுடன் ஒன்றிணைந்து முன்னெடுக்கப்படலாம்.

A58. பொருண்மையான பிறழ்கூற்று இடருக்கான கணக்காய்வாளரது முன்னைய மதிப்பீட்டின் அடிப்படையில், உதாரணமாக, ஒன்று அல்லது மேற்பட்ட பொருண்மையான பிறழ்கூற்றுக்களுக்கான உள்ளார்ந்த இடரானது உயர்வானதாக மதிப்பிடப்படும் போது, அதிக விரிவான முன்னர் இருந்தான மீளாய்வு தேவைப்படுவதாக கணக்காய்வாளர் தீர்மானிக்கலாம்.

---

36 SLAuS 240, நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வின் போதான மோசடியுடன் தொடர்பாக கணக்காய்வாளரது கடப்பாடுகள், பந்தி 33(b)(ii)

அந்த விரிவான முன்பிருந்தான மீளாய்வின் ஒரு பகுதியாக, கணக்காய்வாளர் நடைமுறைச் சாத்தியமானபோது குறிப்பான கவனத்தினை, முன்னைய கணக்கீட்டு மதிப்பீடுகளை ஆக்குவதில் பயன்படுத்திய தரவுகள் மற்றும் கணிசமான எடுகோள்களின் விளைவுகட்கு வழங்கலாம். மாறாக, உதாரணமாக, வழமையான மற்றும் மீளநிகழும் ஊடுசெயல்களை பதிவிடும் போது ஏற்படும் கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கு, இடர் மதிப்பீட்டு விதிமுறையாக பகுப்பாய்வு விதிமுறைகளின் பிரயோகம் மீளாய்வுத் தேவைக்கு போதுமானதென கணக்காய்வாளர் தீர்மானிக்கலாம்.

A59. அளவீட்டு திகதியில் நடப்புக்கால புறநிலைகளின் அடிப்படையில், சீர்மதிப்புக் கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் ஏனைய கணக்கீட்டு மதிப்பீடுகளின் அளவீட்டின் நோக்கம், ஒரு குறித்த நேரத்தில் பெறுமதி தொடர்பான விளங்கிக்கொள்ளல் பற்றிக் கையாளுகின்றது. இது உரிமம் தெழிற்படுகின்ற சூழலின் மாற்றத்திற்கமைய துரிதமாகவும் கணிசமாகவும் மாற்றமடையலாம். எனவே, கணக்காய்வாளர் பொருண்மையான பிறழ்கூற்று இடரினை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் பொருத்தமான தகவலைப் பெற்றுக்கொள்வதற்காக மீளாய்வின் மீது கவனஞ்செலுத்தலாம். உதாரணமாக, சில சந்தர்ப்பங்களில், கடந்தகால சீர்மதிப்புக் கணக்கீட்டு மதிப்பீட்டின் பெறுபேற்றினை பாதிப்படையச்செய்த சந்தைப் பங்குபற்றுனர் எடுகோள்களில் மாற்றங்களைப் பற்றிய விளக்கத்தினைப் பெற்றுக்கொள்வது தொடர்பான கணக்காய்வுச் சான்றினை வழங்குதல் சாத்தியமற்றதாக அமையலாம். இத்தகைய சூழ்நிலைகளில், எடுகோள்களின் (காசுப்பாய்வு எதிர்வுகூறல் போன்ற) பெறுபேற்றினை விளங்கிக் கொள்வதன் மூலமாகவும், நடப்புக்காலத்தில் பொருண்மையான பிறழ்கூற்று இடரினை இனங்காணுதல் மற்றும் மதிப்பிடுதலில் உதவும் முகாமையின் கடந்தகால மதிப்பீட்டுச் செய்முறையின் விளைதிறனை விளங்கிக்கொள்வதன் மூலமாகவும் கணக்காய்வுச் சான்றினை பெறமுடியும்.

A60. கணக்கீட்டு மதிப்பீடொன்றின் வெளிப்பாட்டிற்கும் கடந்தகால நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகைக்கும் இடையிலுள்ள வேறுபாடானது கடந்தகால நிதிக்கூற்றுக்களிலுள்ள பிறழ்கூற்றுக்களை எப்போதும் முன்னிலைப்படுத்துவதில்லை. எனினும், அத்தகைய வேறுபாடு, உதாரணமாக, முன்னைய காலத்தின் நிதிக்கூற்றுக்களை முடிவுசெய்தபோது கிடைத்த தகவலிலிருந்து எழுமாயின், அல்லது, பிரயோகிக்கத்தகு நிதியறிக்கைச் சட்டகத்தின் கண்ணோட்டத்தில் பெறப்பட்டு கணக்கிற் கொள்ளப்பட்டு இருக்கக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படும்ம் சந்தா்ப்பத்தில், பிறழ்கூற்றினை பிரதிபலிக்கும்[37]. இத்தகைய வேறுபாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளை உருவாக்கும் போது முகாமையின் தகவல்களை கருத்திலெடுக்கும் செயன்முறையினை கேள்விக்குள்ளாக்கலாம். அதன் விளைவாக, கணக்காய்வாளர் கட்டுப்பாட்டு இடரினை மீள்மதிப்பீடு செய்வதோடு இந்த விடயத்திற்கு மிகப்பொருத்தமான கணக்காய்வுச் சான்று பெறப்படவேண்டுமெனத் தீர்மானிக்கலாம். பல நிதியறிக்கைச் சட்டகங்கள் பிறழ்கூற்றுக்களைக் கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் மாற்றங்கள் மற்றும் பிறழ்கூற்றுக்களை கொண்டிராத கணக்கீட்டு மதிப்பீடுகளின் மாற்றங்களை வேறுபடுத்துவதற்கான வழிகாட்டல்களையும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் கடைப்பிடிக்க வேண்டிய கணக்கீட்டு கையாள்கைகளையும் கொண்டுள்ளன.

*விசேடத்துவ திறன்கள் அல்லது அறிவு* (பார்க்க பந்தி. 15)

A61. ஈடுபடுத்தல் அணிக்கு விசேடமான திறன், அறிவு தேவைப்படுமா என்பது பற்றிய கணக்காய்வாளரது தீர்மானத்தினைப் பாதிக்கக்கூடிய விடயங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்,உதாரணமாக,:[38]

[37] SLAuS 560, பின்னைய நிகழ்வுகள், பந்தி14

[38] SLAuS 220, நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வின் தரக்கட்டுப்பாடு, பந்தி 14 மற்றும் SLAuS 300 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வினைத் திட்டமிடுதல், பந்தி 8(e)

- ஒரு குறித்த வியாபாரம் அல்லது துறைக்கான கணக்கீட்டு மதிப்பீடுகளின் தன்மை (உதாரணமாக, கனியப் படிவுகள், விவசாயச் சொத்துக்கள், சிக்கலான நிதிச் சாதனங்கள், காப்புறுதி ஒப்பந்தப் பரிப்புக்கள்).
- மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை மட்டம்.
- பயன்படுத்திய செய்முறை அல்லது மாதிரியின் சிக்கற்தன்மை.
- வேறுபட்ட கருத்துக்கூறல் அல்லது நடைமுறைகளுக்கு ஆளாகும் பகுதிகள் அல்லது கணக்கீட்டு மதிப்பீடுகள் எவ்வாறு மேற்கொள்ளப்படும் என்பதில் ஒவ்வாமை உடைய பகுதிகள் உட்பட, கணக்கீட்டு மதிப்பீடுகளுடன் தொடர்புடைய பிரயோகிக்கத்தகு நிதியறிக்கையிடல் சட்டகத்தின் தேவைப்பாடுகளின் சிக்கற்தன்மை.
- மதிப்பிட்ட பொருண்மையான பிறழ்கூற்றுக்கான பதிலிறுக்கையாக கணக்காய்வாளர் முன்னெடுக்க எதிர்பார்க்கும் விதிமுறைகள;
- பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தில் குறிப்பிடப்படாத விடயங்கள் பற்றிய தீர்மானத்தின் தேவை.
- தரவுகள் மற்றும் எடுகோள்களைத் தெரிவு செய்வதில் தேவைப்படும் சுயதீர்ப்பு மட்டம்.
- கணக்கீட்டு மதிப்பீடுகளை உருவாக்கும் போது உரிமத்தின் தகவல் தொழில்நுட்ப பயன்பாட்டின் சிக்கல்த்தன்மை மற்றும் அளவு.

கணக்காய்வு முழுவதும், விசேட திறமை மற்றும் அறிவுடைய நபர்களின் ஈடுபாட்டின் தன்மை, நேரம் மற்றும் அளவானது வேறுபடலாம்.

A62. குறித்த விடயம், கணக்கீடு மற்றும் கணக்காய்வு தவிர்ந்த வேறு துறைகளை சார்ந்ததாக உள்ளபோது (உதாரணமாக, மதிப்பிடல் திறன்கள்) கணக்காய்வாளர் தேவைப்படுகின்ற விசேடமான திறன்கள் மற்றும் அறிவினை கொண்டிராததுடன், கணக்காய்வு நிபுணர் ஒருவரின் பயன்பாடு தேவைப்படலாம்.[40]

A63. பல கணக்கீட்டு மதிப்பீடுகள் விசேடமான திறன்கள் மற்றும் அறிவினை தேவைப்படுத்துவதில்லை. உதாரணமாக, எளிமையானதொரு இருப்பு அழிவுக் கணிப்பீட்டிற்கு விசேடமான திறன்கள் மற்றும் அறிவு தேவைப்படாமல் இருக்கலாம். எனினும், உதாரணமாக, வங்கி நிறுவனமொன்றின் கடன் இழப்பு அல்லது காப்புறுதி நிறுவனமொன்றின் காப்புறுதி ஒப்பந்தப் பரிப்புக்கள் தொடர்பில் விசேட திறன்கள் மற்றும் அறிவு அவசியமானவையென கணக்காய்வாளர் முடிவுக்கு வரலாம்.

**பொருண்மையான பிறழ்கூற்று இடரினை இனங்கண்டு மதிப்பிடுதல்** (பார்க்க பந்தி. 4, 16)

A64. உறுதிப்பாட்டு மட்டத்தில் கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்பான பொருண்மையான பிறழ்கூற்று இடரினை இனங்கண்டு, மதிப்பிடலானது, நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கு மட்டுமல்லாது, நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்களில் உள்ளடக்கப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகள் உட்பட சகல கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கும் முக்கியமானதாகும்.

A65. SLAuS 200 இன் பந்தி A42 ஆனது, இலங்கை கணக்காய்வு நியமங்கள் இயல்பாக இணைந்த இடரையும் கட்டுப்பாட்டு இடரையும் வேறுபடுத்தி குறிப்பிடுவதில்லை எனக் கூறுகின்றது. எனினும், இந்த இலங்கைக் கணக்காய்வு நியமம், இலங்கை கணக்காய்வு நியமம் 330[41] க்கு அமைய கணக்கீட்டு மதிப்பீடுகளுக்காக உறுதிப்பாட்டு மட்டத்தில் கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான கணிசமான இடர்கள் உட்பட பெருண்மையான பிறழ்கூற்று இடர்களுக்கு பதிலிறுப்பாக, மேலதிகமான கணக்காய்வு விதிமுறைகளை வடிவமைத்து மேற்கொள்வதற்கான அடிப்படையை வழற்குவதற்கு ஏதுவாக இயல்பாக இணைந்த மற்றும் கட்டுப்பாட்டு இடர்களில் தனித்தனியான மதிப்பீடுகளைத் தேவைப்படுத்துகின்றது.

A66. பொருண்மையான பிறழ்கூற்று இடர்களை இனங்காணும் போதும் இயல்பாக இணைந்துள்ள இடரினை மதிப்பிடும் போதும், கணக்கீட்டு மதிப்பீடானது எந்தளவுக்கு மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை, சிக்கல், அகவயத்தன்மை, அல்லது ஏனைய இயல்பாக இணைந்த இடர்க்காரணிகளுக்கு ஆளாகின்றது அல்லது அவற்றால் பாதிப்படைகின்றது என்பதனை

கணக்காய்வாளர் கவனத்தில் கொள்ளவேண்டும். இயல்பாக இணைந்த இடர்காரணிகள் பற்றிய கணக்காய்வாளரின் கவனத்திற்கொள்ளல் பின்வருவனவற்றைத் தீரமானிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய தகவலை வழங்கலாம்:

- இயல்பாக இணைந்த இடர்கள் வீச்சத்திலிருந்து இயல்பாக இணைந்த இடரினை மதிப்பிடும்போது;
- உறுதிப்பாட்டு மட்டத்தில் பொருண்மையான பிறழ்கூற்று இடர்களின் மதிப்பீட்டிற்கு வழங்கப்பட்ட காரணங்கள், மற்றும் பந்தி 18க்கு அமைவாக கணக்காய்வாளரின் மேலதிக கணக்காய்வு விதிமுறைகள் இந்தக் காரணங்களுக்கு பதிலிறுக்கையாக அமைதல்.

இயல்பாக இணைந்த இடர்காரணிகளுக்கு இடையிலான இடைத்தொடர்புகள் பின்னிணைப்பு 1 இல் மேலும் விளக்கப்பட்டுள்ளன.

A67. உறுதிப்பாட்டு மட்டத்தில் கணக்காய்வாளரின் இயல்பாக இணைந்த இடர் மதிப்பீட்டிற்கான காரணங்கள் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை, சிக்கல், அகவயத்தன்மை அல்லது ஏனைய இயல்பாக இணைந்த இடர்காரணிகளின் ஒன்று அல்லது மேற்பட்டகாரணிகளினால் விளைவிக்கப்படலாம். உதாரணமாக:

(a) எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பிற்கான கணக்கீட்டு மதிப்பீடுகள் சிக்கலானவையாக இருக்கலாம். ஏனெனில், எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புக்கள் நேரடியாக அவதானிக்கப்பட முடியாதவையாகவும் சிக்கலான மாதிரியின் பயன்பாட்டினைத் தேவைப்படுத்துவதாகவும் இருத்தல். இந்த மாதிரியானது வரலாற்றுத்தரவு மற்றும் உரிமம் சார்ந்த சூழ்நிலைகளின் எதிர்கால அபிவிருத்தியைப் பற்றிய எடுகோள்கள் ஆகிய சிக்கலான மற்றும் எதிர்வுகூறமுடியாத தருநிலைகளை பயன்படுத்தலாம். எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பிற்கான கணக்கீட்டு மதிப்பீடுகள் எதிர்கால நிகழ்வுகள் மற்றும் புறநிலைகள் பற்றிய தீர்மானங்களின் உருவாக்கத்தில் அதிகளவான மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மைக்கும் கணிசமான அகவயத் தன்மைக்கும் உட்பட்டவையாக அமையலாம். இதேபோன்ற கவனத்திற்கொள்ளல்கள் காப்புறுதி ஒப்பந்தக் கடப்பாடுகளிலும் பிரயோகிக்கப்படலாம்.

(b) பரந்த தொக்கு வகைகளை கொண்ட உரிமமொன்றின வழக்கிழப்பு ஒதுக்கத்திற்கான கணக்கீட்டு மதிப்பீடொன்று சிக்கலான செய்முறைகள், மற்றும் முறைமைகளை தேவைப்படுத்தலாம், ஆனால் தொக்கின் தன்மையின் அடிப்படையில், சிறிதளவான அகவயத்தன்மையை உள்ளடக்குவதோடு மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையின் அளவும் குறைவாகவிருக்கலாம்.

(c) ஏனைய கணக்கீட்டு மதிப்பீடுகள் உருவாக்குவதற்கு சிக்கலற்றவையாக இருக்கலாம். ஆனால் அதிகளவு மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையை கொண்டிருப்பதோடு கணிசமான தீர்மானத்தினைத் தேவைப்படுத்தலாம், உதாரணமாக, பரிப்பொன்றைப் பற்றிய ஒரு இக்கட்டான தீர்மானத்தினை தேவைப்படுத்தும் கணக்கீட்டு மதிப்பீடு, வழக்கொன்றின் பெறுபேற்றில் உறுமுரிமையாகவுள்ள தொகை.

A68. இயல்பாக இணைந்த இடர்க்காரணிகளின் தொடர்புடமை மற்றும் கணிசத்தன்மை மதிப்பீட்டிற்கு மதிப்பீடு வேறுபடும். இதற்கமைவாக, இயல்பாக இணைந்த இடர்க்காரணிகள், தனியாக அல்லது ஒன்றுசேர்ந்து எளிமையான கணக்கீட்டு மதிப்பீடுகளை குறைந்த அளவில் பாதிக்கலாம். அத்துடன், கணக்காய்வாளர், குறைந்தளவு இடர்களை இனங்காணலாம் அல்லது இயல்பாக இணைந்த இடரானது அதன் வீச்சத்தின் கீழ்மட்டத்தில் மதிப்பிடப்படலாம்.

A69. மாறாக, இயல்பாக இணைந்த இடர்க்காரணிகள், தனியாகவோ அல்லது இணைந்தோ சிக்கலான கணக்கீட்டு மதிப்பீடுகளை அதிகளவு பாதிப்பதோடு, இயல்பாக இணைந்த இடர்களை கணக்காய்வாளர் அதன் வீச்சத்தின் உயர்ந்த மட்டத்தில் மதிப்பிட வழிவகுக்கும். இந்த கணக்கீட்டு மதிப்பீடுகளுக்காக இயல்பாக இணைந்த இடர்க்காரணிகளின் தாக்கத்தின்

கணக்காய்வாளரின் கவனத்திற் கொள்ளலானது, இனங்காணப்பட்ட பொருண்மையான பிறழ்கூற்றுக்களின் எணிக்கை மற்றும் தன்மை, அந்த இடர்களின் மதிப்பீடு, மற்றும் இறுதியில் மதிப்பிடப்பட்ட இடர்களுக்கு பதிலிறுக்கையாக தேவைப்படும் கணக்காய்வுச் சான்றுகளின் தொடர்தேடுதலை நேரடியாக பாதிப்பது சாத்தியமாகலாம். அத்துடன், இந்த கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கு கணக்காய்வாளரின் தொழில்சார் சந்தேக மனப்பாங்கின் பிரயோகம் முக்கியமானது.

A70. நிதிக்கூற்றுத் திகதிக்கு பிந்திய நிகழ்வுகள் கணக்காய்வாளர் உறதிப்பாட்டு மட்ட பொருண்மையான பிறழ்கூற்று இடர்களை மதிப்பிட தொடர்புடைய மேலதிக தகவல்களை வழங்கும். உதாரணமாக, ஒரு கணக்கீட்டு மதிப்பீடின் வெளிப்பாடு கணக்காய்வின்போது அறியப்படலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில், கணக்கீட்டு மதிப்பீடுகள் சிக்கல், அகவயத்தன்மை, மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை அல்லது ஏனைய இயல்பாக இணைந்த இடர்க்காரணிகளுக்கு எந்தளவு உட்பட்டது அல்லது இவற்றினால் எந்தளவுக்கு பாதிப்படையும் என்பதை விடுத்து கணக்காய்வாளரானவர் உறுதிப்பாட்டு மட்டத்தில் பொருண்மையான பிறழ்கூற்றுக்களை மதிப்பீடு செய்யலாம் அல்லது மதிப்பீட்டினை மீளச்செய்யலாம்.[42] நிதிக்கூற்றுத் திகதிக்கு பிந்திய நிகழ்வுகள் பந்தி 18க்கு அமைவாக கணக்கீட்டு மதிப்பீடுகளை சோதிப்பதற்கான செய்முறையை கணக்காய்வாளர் தெரிவுசெய்வதில் செல்வாக்குச் செலுத்தும். உதாரணமாக, தெரிவு செய்யப்பட்ட ஊழியர்களுக்கான நேரடியான சதவீத இழப்பீட்டின் அடிப்படையிலான எளிய உபகார அட்டுறுத் தொகைக்காக கணக்கீட்டு மதிப்பீட்டினை மேற்கொள்ளலில் ஒப்பீட்டடிப்படையில் குறைவான சிக்கற்தன்மை அல்லது அகவயத்தன்மை இருக்குமென கணக்காய்வாளர் முடிவுசெய்யக்கூடும்; அதன் காரணமாக உறுதிப்பாட்டு மட்டத்தில் இயல்பாக இணைந்த இடரினை அதன் வீச்சத்தின் கீழ்மட்டத்தில் மதிப்பிடக்கூடும். காலத்தின் முடிவுக்குப் பின்னரான மேலதிக கொடுப்பனவானது உறதிப்பாட்டு மட்டத்தில் மதிப்பிட்ட பொருண்மையான பிறழ்கூற்று இடர்கள் தொடர்பாக போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்றினை வழங்கலாம்.

A71. முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட நுட்பங்கள் மற்றும் செய்முறைகளை பொறுத்து கட்டுப்பாட்டு இடர் பற்றிய கணக்காய்வாளரின் மதிப்பீடு வேறுபட்ட வழிகளில் மேற்கொள்ளப்படலாம். கட்டுப்பாட்டு இடர் மதிப்பீடானது தரரீதியான வகையில் (உதாரணமாக, அதிகூடிய, நடுநிலையான, அதிகுறைந்ததாக மதிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டு இடர்) அல்லது இனங்காணப்பட்ட இடரினை விபரிப்பதில் கட்டுப்பாடுகளின் விளைதிறன் பற்றிய கணக்காய்வாளர் எதிர்பார்ப்பிலமைந்த சொற்களில், அதாவது கட்டுப்பாடுகளின் செயற்பாட்டு விளைதிறனான தொழிற்பாட்டின் திட்டமிட்ட நம்பகத்தன்மையை விவரிக்கும் சொற்றொடர்களில் வெளிப்படுத்தப்படலாம். உதாரணமாக, கட்டுப்பாட்டு இடர் அதிகளவில் மதிப்பிடப்படும் போது, கட்டுப்பாடுகளின் தொழிற்பாட்டு விளைதிறனில் நம்பகத்தன்மை இல்லை என கணக்காய்வாளர் முடிவுக்கு வரலாம். கட்டுப்பாட்டு விளைதிறன் அதிகமான அளவுக்கு குறைவானதாக மதிப்பிடப்படும் போது, கட்டுப்பாடுகளின் தொழிற்பாட்டு விளைதிறனில் நம்பகத்தன்மை உள்ளது என கணக்காய்வாளர் முடிவுக்கு வரலாம்.

*மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை* (*பார்க்க பந்தி.* 16(a))

A72. கணக்கிட்டு மதிப்பீடு எந்தளவுக்கு மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டது என்பதை கவனத்தில் கொள்ளும்போது, கணக்காய்வாளர் பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்ளலாம்:

- பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகம் பின்வருவனவற்றைத் தேவைப்படுத்துகின்றதா என்பது:
    - o இயல்பாக அதிகளவு மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை கொண்ட கணக்கீட்டு மதிப்பீட்டினை ஆக்குவதற்கான செய்முறையின் பயன்பாடு. உதாரணமாக, தயார்நிலையில் அவதானிக்க முடியாத உள்ளீடுகளை பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகம் தேவைப்படுத்தலாம்.
    - o நீண்ட எதிர்வுகூறல் காலத்தை கொண்ட எடுகோள்கள், நேரடியாக அவதானிக்க முடியாத தரவுகளின் அடிப்படையிலான மற்றும் இதன் காரணமாக முகாமையினால்

விருத்தி செய்வதற்கு அல்லது, இடைத்தொடர்புகளைக் கொண்ட வேறுபட்ட எடுகோள்களை பயன்படுத்துதல் கடினமானது போன்ற, இயல்பாக அதிகளவு மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை கொண்ட எடுகோள்களின் உபயோகம்.

- o மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையினைப் பற்றிய வெளிக்காட்டல்கள்.

- வியாபாரச்சூழல். உரிமமானது கொந்தளிப்பு அல்லது சாத்தியமான இடையூறுகளைக் கொண்ட (உதாரணமாக, பாரிய நாணய அசைவுகள் அல்லது செயலற்ற சந்தைகள்) சந்தையில் செயற்படுவதாக இருக்கக்கூடும். அதன் காரணமாக கணக்கீட்டு மதிப்பீடு நேரடியாக அவதானிக்க முடியாத தரவுகளில் தங்கயிருக்கலாம்.

- இது முகாமைக்கு சாத்தியமானதா என்பது (பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தினால் அனுமதித்து நடைமுறைச் சாத்தியமானதா என்பது):

  - o கடந்தால ஊடுசெயல் ஒன்றின் (உதாரணமாக, உறுமுரிமை ஒப்பந்தக் கட்டுறுப்பின்கீழ் செலுத்தப்படவுள்ள தொகை) எதிர்கால தேறுகை பற்றிய அல்லது எதிர்கால நிகழ்வு மற்றும் புறநிலைகளின் தாக்கத்திற்கு உள்ளாக்கும் நிகழ்வு பற்றிய (உதாரணமாக, எதிர்கால கடன் இழப்பின் தொகை, அல்லது காப்புறுதி கோரிக்கைகள் வழங்கப்படவுள்ள தொகை மற்றும் அதனது நேரம்) தாக்கம் பற்றிய துல்லியமான மற்றும் பொருத்தமான கணிப்பினை மேற்கொள்ளல்; அல்லது,

  - o நிகழ்கால புறநிலை பற்றிய துல்லியமான மற்றும் முழுமையான தகவலை பெறுவதற்கு. (உதாரணமாக, சீர்மதிப்பு மதிப்பீட்டினை உருவாக்குவதற்கு, நிதிக்கூற்றுத் திகதியில் சந்தைப் பங்குபற்றுனரின் எண்ணநோக்கங்களை பிரதிபலிக்கக்கூடிய மதிப்பீட்டு பண்புகள் பற்றிய தகவல்.

A73. கணக்கீட்டு மதிப்பீடொன்றுக்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்த அல்லது வெளிக்காட்டப்பட்ட தொகையின் அளவானது அதாகவே பிறழ்கூற்றிற்கான மாறுந்தகவின் காட்டியாக அமையாது. ஏனெனில், அந்தக் கணக்கீட்டு மதிப்பீடானது குறைத்து மதிப்பிடப்பட்டிருக்கலாம்.

A74. சில சந்தர்ப்பங்களில், மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையானது நியாயமான கணக்கீட்டு மதிப்பீட்டினை மேற்கொள்ள முடியாத வகையில் அதிகமானதாக காணப்படலாம். பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகமானது ஒரு விடயத்தினை நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்வதனைத் தடுக்கலாம் அல்லது அதன் சீர்மதிப்பு அளவீட்டினை தடுக்கலாம். அத்தகைய சூழ்நிலைகளில், ஒரு கணக்கீட்டு மதிப்பீட்டினை ஏற்பிசைவு செய்வதா இல்லையா என்பதில் அல்லது அது சீர்மதிப்பில் அளவிடப்படவேண்டுமா என்பதில் மட்டுமல்லாது வெளிக்காட்டல்களின் நியாயூர்வ தன்மையிலும் பொருண்மையான வழுக்கூற்று இடர்கள் காணப்படலாம். அத்தகைய கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்பாக, அந்த கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை பற்றிய வெளிக்காட்டல்களை மேற்கொள்ள வேண்டுமென பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகம் தேவைப்படுத்தலாம். (பந்திகள் A112–A113, A143–A144 இனை பார்க்கவும்).

A75. சில சந்தர்ப்பங்களில், கணக்கீட்டு மதிப்பீடு தொடர்புபட்ட மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையானது உரிமத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமை மீது கணிசமான சந்தேகத்தினை ஏற்படுத்தலாம். இத்தகைய சூழ்நிலைகளுக்கான வழிகாட்டல்களையும் தேவைப்பாடுகளையும் இலங்கை கணக்காய்வு நியமம் 570 (மீளாக்கம்) வழங்குகின்றது.

*சிக்கற்தன்மை அல்லது அகவயத்தன்மை (பார்க்க பந்தி.*16(b))

செய்முறையின் தெரிவு மற்றும் பிரயோகத்தினை சிக்கற்தன்மை எந்தளவுக்கு பாதிக்கும் என்பது.

A76. கணக்கீட்டு மதிப்பீட்டினை உருவாக்கும் போது உபயோகிக்கப்படுகின்ற செய்முறையின் தெரிவு மற்றும் பிரயோகம் என்பவை சிக்கற்தன்மையினால் எந்தளவு பாதிப்படையும் என்பதைக் கருத்திலெடுக்கும் போது கணக்காய்வாளர் பின்வருவனவற்றை கவனத்திலெடுக்கலாம்:

- கணக்கீட்டு மதிப்பீட்டினை உருவாக்குகையில் உபயோகிக்கப்படுகின்ற செய்முறை இயல்பிலேயே சிக்கலாக இருப்பதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்று இடருக்கான மாறுந்தகவினை அதிகளவில் கொண்டிருப்பதனால் முகாமையின் விசேடமான திறன்கள் மற்றும் அறிவுக்கான தேவைப்பாடு. முகாமையானது மாதிரியொன்றினை அகத்தே உருவாக்கும் போதும் அவ்வாறு உருவாக்குவதற்கான அனுபவம் ஒப்பீட்டளவில் குறைவானதாகவிருக்கும் போது அல்லது குறித்த துறையில் அல்லது சூழலில் பொதுவாக பயன்படுத்தப்படாத அல்லது தாபிக்கப்படாததாகக் காணப்படும்போதும் அங்கு பொருண்மையான பிறழ்கூற்று இடருக்கான மாறுந்தகவு அதிகமாக காணப்படலாம்.

- பல்வேறு விதமான வரலாற்று மற்றும் எதிர்கால தரவு மூலங்கள், அல்லது அவற்றிற்கிடையே இடைத்தொடர்பை கொண்ட எடுகோள்களை தேவைப்படுத்தும் சிக்கலான செய்முறையின் தேவைப்பாட்டினை ஏற்படுத்தும் பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தால் தேவைப்படுத்தும் அளவீட்டு அடிப்படையின் தன்மை. உதாரணமாக, ஒரு எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பு ஒதுக்கம் எதிர்கால கடன் மீள்கொடுப்பனவு மற்றும் ஏனைய காசுப்பாய்வுகள் ஆகியவற்றைப் பற்றிய, தீர்மானங்களை கடந்தகால அனுபவத் தரவு மற்றும் எதிர்காலத்தை நோக்கிய எடுகோள்களினது பிரயோகத்தினது அடிப்படையில் தேவைப்படுத்தலாம். இதே போன்று, காப்புறுதி ஒப்பந்த கடப்பாடு ஒன்றின் அளவீடானது கடந்தால அனுபவத்தின்படி முன்னுணரப்பட்ட மற்றும் நிகழ்கால மற்றும் எதிர்காலப் போக்கின் அடிப்படையில் அனுமானிக்கப்பட்ட எதிர்காலக் காப்புறுதி ஒப்பந்தக் கொடுப்பனவுகளைப் பற்றிய தீர்மானங்களைத் தேவைப்படுத்தலாம்.

தரவின் தெரிவு மற்றும் பிரயோகம் ஆகியவற்றினை சிக்கற் தன்மை எந்தளவுக்கு பாதிக்கும் என்பது

A77. கணக்கீட்டு மதிப்பீட்டினை உருவாக்க பயன்படும் தரவின் தெரிவு மற்றும் பிரயோகம் என்பவை சிக்கற் தன்மையினால் எந்தளவு பாதிப்படையும் என்பதைக் கருத்திலெடுக்கும் போது கணக்காய்வாளர் பின்வருவனவற்றை கவனத்திலெடுக்கலாம்:

- தரவு மூலத்தின் தொடர்புடைமை மற்றும் நம்பகத்தன்மையை கவனத்திற்கொண்டு தரவினை உய்த்தறியும் செய்முறையின் சிக்கற்தன்மை. சில மூலங்களிலிருந்து பெறப்படும் தரவானது ஏனையவற்றுடன் ஒப்பிடும்போது அதிக நம்பகமானதாக அமையலாம். மேலும், இரகசியத்தன்மை மற்றும் தனியுரிமைக் காரணங்களுக்காக, சில வெளிவாரித் தகவல் மூலங்கள் அவை வழங்கும் தரவின் நம்பகத்தன்மையினை கருத்திலெடுக்கும் போது பொருத்தமான தகவலை (அல்லது முழுமையானதாக) வழங்குவதில்லை. அதாவது, அவை உபயோகித்த அடிப்படைத்தரவு அல்லது அவர்கள் பயன்படுத்திய தரவின் மூலம் மற்றும் எவ்வாறு திரட்டப்பட்டு செயன்முறைப் படுத்தப்பட்டது ஆகிய விடயங்களை வெளிப்படுத்தாமலிருக்கலாம்.

- தரவின் ஒருமைப்பாட்டினை பேணுவதிலுள்ள இயல்பான சிக்கற்தன்மை. தரவு அதிகளவிலும் பல மூலங்களை கொண்டதாகவும் இருக்கும்போது, கணக்கீட்டு மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு பயன்படுத்தும் தரவுகளின் ஒருமைப்பாட்டை பேணுவதில் இயல்பான சிக்கற்தன்மை இருக்கலாம்.

- சிக்கலான ஒப்பந்தக் கட்டுறுப்புக்களை பொருள்விளக்கம் செய்வதற்கான தேவை. உதாரணமாக, வர்த்தக வழங்குனர் அல்லது கடன்பட்டோர் தள்ளுபடியிலிருந்து எழுகின்ற காசு உட்பாய்வு அல்லது வெளிப்பாய்வின் தீர்மானம், சிறப்பான அனுவபம் அல்லது

விளங்கிக்கொள்ளுவதற்கான அல்லது விபரிப்பதற்கான திறன் ஆகியவற்றைத் தேவைப்படுத்துகின்ற மிகச்சிக்கலான ஒப்பந்தக் கட்டுறுப்புக்களில் தங்கியிருக்கலாம்.

செய்முறை, எடுகோள்கள் அல்லது தரவின் தெரிவு மற்றும் பிரயோகத்தினை அகவயத்தன்மை பாதிக்கும் அளவு

A78. கணக்கீட்டு மதிப்பீட்டினை மேற்கொள்ளும்போது பயன்படுத்தப்படும் செய்முறை, எடுகோள்கள் அல்லது தரவின் தெரிவு மற்றும் பிரயோகம் ஆகியன அகவயத்தன்மையினால் எந்தளவு பாதிப்படையும் என்பதை கருத்திலெடுக்கும் போது கணக்காய்வாளர் பின்வருவனவற்றை கவனத்திலெடுக்கலாம்:

- பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகமானது மதிப்பீட்டுச் செய்முறைக்கு பயன்படுத்தக்கூடிய அளவீட்டு அணுகுமுறைகள், கோட்பாடுகள், நுட்பங்கள் மற்றும் காரணிகளை எந்தளவுக்குக் குறிப்பிட்டுக் காட்டவில்லை என்பது.

- எதிர்வுகூறல் கால நீட்டம் அடங்கலாக, தொகை அல்லது காலமிடல் தொடர்புபட்ட நிச்சயமற்ற தன்மை. தோகை மற்றும் காலமிடல் ஆகியன இயல்பான மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையின் மூலமொன்றாக இருப்பதுடன், புள்ளி மதிப்பீட்டினை தெரிவு செய்வதில் முகாமையின் சுயதீர்மானத் தேவைக்கு வழிவகுக்கும். இதன் காரணமாக இது முகாமைப் பக்கச்சார்புக்கு சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தும். உதாரணமாக, முன்னோக்கிய எடுகோள்களை அடக்கும் கணக்கீட்ட மதிப்பீடொன்று முகாமைப் பக்கச்சார்புக்கு மாறும்தகவுடைய உயர்மட்ட அகவயத்தன்மையை கொண்டிருக்கலாம்.

*ஏனைய இயல்பாக இணைந்த இடர்க்காரணிகள் (பார்க்க பந்தி.* 16(b))

A79. கணக்கீட்டு மதிப்பீட்டுடன் அகவயத்தன்மை எந்தளவுக்கு தெடர்புபட்டுள்ளது என்பது முகாமையின் பக்கச்சார்பு மற்றும் மோசடியின் காரணமான பிறழ்கூற்றுக்கான கணக்கீட்டு மதிப்பீட்டின் மாறுந்தகவில் செல்வாக்கு செலுத்தும். உதாரணமாக, கணக்கீட்டு மதிப்பீடு அகவயத்தன்மையின் உயர்மட்டத்திற்கு ஆளாகும் போது முகாமையின் பக்கச்சார்பினதும் மோசடியினதும் விளைவான பிறழ்கூற்றுக்கான குறித்த கணக்கீட்டு மதிப்பீட்டின் மாறுந்தகவானது அதிகமானதாகக் காணப்படும், அத்துடன் இது சாத்தியமான வெளிப்பாடுகளின் பரந்த வீச்சத்தினை விளைவிக்கலாம். முகாமையானது, அந்தச் சூழ்நிலைகளுக்குப் பொருத்தமற்ற, அல்லது தற்செயலான அல்லது வேண்டுமென்றே ஏற்படுத்திய முகாமைப் பக்கச்சார்பால் பாதிக்கப்படும் வீச்சத்திலிருந்து ஒரு புள்ளி மதிப்பீட்டினைத் தெரிவு செய்யலாம். இதன் காரணமாக, அது பிறழ்வு கூறப்படலாம். தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் கணக்காய்வுகளை பொறுத்தமட்டில் முன்னைய காலத்தில் இனங்காணப்பட்ட சாத்தியமான முகாமைப் பக்கச்சார்பின் காட்டிகள் நிகழ்கால இடர் மதிப்பீட்டு விதிமுறைகள் மற்றும் திட்டமிடலில் செல்வாக்குச் செலுத்தலாம்.

*கணிசமான இடர்கள்* (*பார்க்க பந்தி.* 17)

A80. கணக்கீட்டு மதிப்பீடுகள் எந்தளவுக்கு மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை, சிக்கற்தன்மை, அகவயத்தன்மை அல்லது பிற இயல்பாக இணைந்த இடர்க்காரணிகளுக்கு ஆளாகின்றது என்பதனைக் கருத்திலெடுத்த கணக்காய்வாளரின் இயல்பாக இணைந்த இடரின் மதிப்பீடு இனங்கண்டு மதிப்பிட்ட பொருண்மையான பிறழ்கூற்று இடர்கள் கணிசமான இடர்களா என்பதைத் தீர்மானிப்பதில் உதவும்.

**மதிப்பிட்ட பொருண்மையான பிறழ்கூற்று இடர்களுக்கான பதிலிறுத்தல்கள்**

*கணக்காய்வாளரின் மேலதிக கணக்காய்வு விதிமுறைகள்* (பார்க்க பந்தி. 18)

A81. மேலதிக கணக்காய்வு விதிமுறைகளை வடிவமைத்து நடைமுறைப்படுத்தும்போது கணக்காய்வாளர் பந்தி 18க்கு அமைய மூன்று சோதனை அணுகுமுறைகளை (தனியாகவோ

அல்லது இணைந்ததாகவோ) பயன்படுத்தலாம். உதாரணமாக, கணக்கீட்டு மதிப்பீடொன்றினை உருவாக்கும்போது அதிகளவான எடுகோள்களை பயன்படுத்தும்போது, சோதிக்கப்படுகின்ற ஒவ்வொரு எடுகோளுக்கும் கணக்காய்வாளர் வெவ்வேறு சோதனை அணுகுமுறைகளை பயன்படுத்தத் தீர்மானிக்கலாம்.

உறுதிப்படுத்தும் அல்லது முரண்படும் தொடர்புடைய கணக்காய்வுச் சான்றினைப் பெறுதல்

A82. முகாமையின் உறுதிப்பாடுகளுக்கு சாதகமான மற்றும் வலுச்சேர்க்கின்ற தகவலையும் அத்தகைய உறுதிப்பாடுகளுடன் முரண்படுகின்ற தகவலையும் கணக்காய்வுச் சான்று உள்ளடக்கும்[44]. பக்கச்சார்பற்ற முறையில் கணக்காய்வுச் சான்றினைப் பெற்றுக்கொள்ளல் உரிமத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பல்வேறு மூலகங்களிலிருந்து சான்றுகளைப் பெறுவதனை உள்ளடக்கும். எனினும், கணக்காய்வுச் சான்றுக்குச் சாத்தியமான அனைத்து மூலங்களையும் இனங்காணக்கூடிய முழுமையான தேடலை கணக்காய்வாளர் நிகழ்த்த வேண்டியதில்லை.

A83. இலங்கை கணக்காய்வு நியமம் 330 ஆனது கணக்காய்வாளரின் மதிப்பிடப்பட்ட இடர் அதிகமாகவுள்ள போது அதிக தொடர்தேடற் தேவையினை தேவைப்படுத்தும் (persuasive) கணக்காய்வுச் சான்றுகளைச் சேகரிக்கக் கணக்காய்வாளரினைத் தேவைப்படுத்துகின்றது[39]. இதன் காரணமாக, கணக்கீட்டு மதிப்பீடு தொடர்புபட்ட இயல்பாக இணைந்த இடர்கள், இயல்பாக இணைந்த இடர் வீச்சத்தின் உயர்ந்த அந்தலைக்கு சமீபமாக மதிப்பிடப்படும் போது கணக்கீகணக்காய்வுச் சான்றின் தன்மை மற்றும் கணியத்தின் கவனத்திற் கொள்ளல்கள் மிகவும் முக்கியமானதாக இருக்கும்.

அளவிடக்கூடிய தன்மை

A84. கணக்காய்வாளரின் மேலதிகக் கணக்காய்வு விதிமுறைகளின் நேக்கம், காலம், மற்றும் வீச்செல்லை உதாரணமாக பின்வருவனவற்றால் பாதிக்கப்படலாம்:

- தேவையான கணக்காய்வுச் சான்றின் தொடர்தேடற் தேவையினை (persuasiveness) பாதிக்கக் கூடிய மற்றும் கணக்கீட்டு மதிப்பீட்டினை கணக்காய்வு செய்வதற்கு கணக்காய்வாளர் தெரிவு செய்யும் அணுகுமுறையை பாதிக்கக்கூடிய மதிப்பிட்ட பொருண்மையான பிறழ்கூற்று இடர்கள். உதாரணமாக, காலத்தின் இறுதிக்குப்பின் குறுங்காலத்தில் ஊழியர்களுக்கு செலுத்தப்படும் உபகாரக் கொடுப்பனவின் நேரடி அட்டுறுத் தொகைக்கான இருப்பு மதிப்பீட்டு உறுதிப்பாடுகள் தொடர்புபட்ட பொருண்மையான பிறழ்கூற்று மதிப்பிடப்பட்ட இடர்கள். இத்தகைய சூழ்நிலைகளில், ஏனைய சோதனை அணுகுமுறைகளை காட்டிலும் கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையான நிகழ்வுகளை மதிப்பாய்வுசெய்தல் மூலம் போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை கணக்காய்வாளர் பெற்றுக்கொள்ளுவது அதிகம் பயனுடையதாகும்.
- மதிப்பிடப்பட்ட பொருண்மையான பிறழ்கூற்று இடர்களுக்கான காரணங்கள்

*தொடர்புடைய கட்டுப்பாடுகளின் தொழிற்பாட்டு விளைதிறனில் தங்கியிருப்பதற்கு கணக்காய்வாளர் முனைதல்* (பார்க்க பந்தி. 19)

A85. கணிசமான இடர்கள் உட்பட இயல்பாக இணைந்த இடர் அதன் வீச்சத்தில் உயர்வாக மதிப்பிடப்படும் போது தொடர்புபட்ட கட்டுப்பாடுகளின் தொழிற்பாட்டு விளைவுத்திறனை சோதித்தல் பொருத்தமானதாக இருக்கலாம். இது ஒரு கணக்கீட்டு மதிப்பீடு அதிகளவு அகவயத்தன்மைக்கு உட்பட்டு அல்லது அதனால் பாதிப்படையும் சூழ்சிலைகளிலாக இருக்கலாம். கணக்கீட்டு மதிப்பீடு அகவயத்தன்மையினால் அதிகம் பாதிப்படைவதாக இருக்கும்போதும், அதன் விளைவாக முகாமை கணிசமான தீர்மானங்களை தேவைப்படுத்தும்போதும், கட்டுப்பாடுகளின் வடிவமைப்பின் விளைவுத்திறன் இயல்பான வரையறைகள் குறித்த கட்டுப்பாடுகளைச் சோதிப்பதைக்காட்டிலும் வலுவளிப்புச் சோதனைகளை நிகழ்த்துவதில் கணக்காய்வாளர் தன் கவனத்தைச் செலுத்துவதற்கு வழிவகுக்கும்.

44 SLAuS 330, பந்திகள் 7(b) மற்றும் A19

A86. கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்புபட்ட கட்டுப்பாடுகளின் தொழிற்பாட்டு விளைதிறனை சோதிப்பதற்கான தன்மை, காலத்தேர்வு மற்றும் அளவை தீர்மானிக்கின்ற போது கணக்காய்வாளர் பின்வரும் காரணிகளை கருத்திலெடுக்கலாம்:

- ஊடுசெயல்களின் தன்மை, மீடிறன் மற்றும் அளவு;
- கட்டுப்பாடுகள் மதிப்பிடப்பட்ட இயல்பாக இணைந்த இடருக்குப் பதிலிறுக்கும் வகையில் பொருத்தமாக வடிவமைக்கப்பட்டுள்ளதா மற்றும் ஆளுகையின் வலிமை உட்பட கட்டுப்பாடுகளின் வடிவமைப்பின் விளைதிறன்.
- ஊடுசெயல்களுக்கு ஆதரவளிப்பதற்கு தகவல் முறைமையின் தொழில்நுட்பம் உட்பட உரிமத்தின் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டு நோக்கம் மற்றும் செயன்முறைகளுக்கு குறித்த கட்டுப்பாடுகளின் முக்கியத்துவம்.
- கட்டுப்பாடுகளின் கண்காணிப்பு மற்றும் அகக்கட்டுப்பாட்டில் இனங்காணப்பட்ட குறைபாடுகள்;
- கட்டுப்பாடுகள் கையாள எதிர்பார்க்கின்ற இடர்களின் தன்மை, உதாரணமாக, ஆதரவளிக்கும் தரவுகள் மீதான கட்டுப்பாடுகளுடன் ஒப்பிடுகையில் சுயதீர்மானங்களை எடுப்பது தொடர்புபட்ட கட்டுப்பாடுகள் ;
- கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்டோரின் தகுதி;
- கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்ளலின் மீடிறன் ;
- கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் செயற்பாட்டிற்கான சான்றுகள்;

போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்றினை வலுவளிப்பு சோதனைகளால் மட்டும் வழங்கமுடியாது

A87. நிதிச்சேவைகள் துறை போன்ற சில துறைகளில், வியாபாரத்தினைக் கொண்டு நடத்துவதற்கு முகாமை விரிவான தகவல் முறைமையின் பயன்பாட்டினை மேற்கொள்ளும். சில கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்பு பட்ட இடர்களுக்கு வலுவளிப்பு விதிமுறைகள் மாத்திரமே போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்றினை வழங்கமுடியாமைக்கு காரணமாக இது அமையும்.

A88. வலுவளிப்பு விதிமுறைகளால் மட்டும் போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை வழங்க முடியாத உறுதிப்பாட்டு மட்ட இடர்கள் காணப்படும் சந்தர்ப்பங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்:

- பொதுவான மற்றும் துணைப் பேரேடுகளுக்கு வெளியிலிருந்து பெறப்படும் தகவலை ஆரம்பித்தல், பதிவுசெய்தல், செய்முறைப்படுத்தல் அல்லது அறிக்கையிடல் தொடர்புபட்ட இடர்களைக் குறைப்பதற்கு கட்டுப்பாடுகள் அவசியமான போது.·.
- ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உறுதிப்பாடுகளுக்குச் சாதகமான தகவல் இலத்திரணியலில் நிறுவப்படுதல், பதியப்படுதல், செயன்முறைப்படுத்தல், அல்லது அறிக்கையிடுதல். தகவலினது முழுமைத்தன்மை மற்றும் செம்மைத்தன்மையினை உறுதி செய்வதற்கு தகவல் தொழில்நுட்பத்தின் செறிவான பயன்பாட்டினை தேவைப்படுத்தும் சிக்கலான மாதிரியொன்று உபயோகிக்கப்படுகின்ற போது அல்லது அதிகளவான தரவு அல்லது ஊடுசெயல்கள் காணப்படுகின்ற சூழ்நிலைகளுக்குச் சாதகமானதாகும். ஒரு சிக்கலான எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பு ஒதுக்கமானது நிதிநிறுவனம் அல்லது பயன்பாட்டு உரிமத்தினால் தேவைப்படுத்தப்படலாம். உதாரணமாக, ஒரு பயன்பாட்டு உரிமம் ஒன்றில், எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பு வீதத்தினை ஆக்குகையில் உபயோகிக்கப்பட்ட தரவானது பாரியளவான ஊடுசெயல்களிலிருந்து வெளிப்பாடான சிறிய மிகுதிகளை அதிகளவில் கொண்டிருக்கலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில், எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பு

ஒதுக்கத்தினை உருவாக்குகையில் பயன்படுத்தப்பட்ட மாதிரியினைச் சூழ்ந்த கட்டுப்பாடுகளை சோதிக்காமல் போதிய பொருத்தமான கணக்காய்வுச் சான்றினை பெற்றுக்கொள்ள முடியாதென கணக்காய்வாளர் முடிவுக்கு வரலாம்.

அத்தகைய சூழ்நிலைகளில், கணக்காய்வுச் சான்றின் போதுமான பொருத்தமான தன்மை தகவலின் முழுமை மற்றும் செம்மை மீதான கட்டுப்பாடுகளின் விளைவுத்திறனில் தங்கியிருக்கலாம்.

A89. சில உரிமங்களின் (அதாவது வங்கி அல்லது காப்புறுதி போன்ற) நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வின் ஒரு பகுதியாக, சட்டம் அல்லது ஒழுங்குவிதிகளால் தேவைப்படுத்தியபடி, கணக்காய்வாளருக்கு அகக் கட்டுப்பாட்டிற்காக மேலதிக விதிமுறைகளை மேற்கொள்ளவோ அல்லது அதன்மீது உறுதிப்பாட்டு முடிவினை வழங்குவதற்கோ தேவைப்படலாம். இத்தகைய அல்லது இதே போன்ற சூழ்நிலைகளில், அத்தகைய மேலதிக நடைமுறைகளை நிகழ்த்துவதன் மூலமாக பெறப்படும் தகவலை கணக்காய்வுச் சான்றாக உபயோகிக்க முடியும். ஆனால் இது கணக்கீட்டின் நம்பகத்தன்மையினைப் பாதிக்கக்கூடிய பின்னைய மாற்றங்கள் எவையும் நிகழ்ந்துள்ளனவா என்பதைப்பற்றிய தீர்மானத்திற்கு உட்படலாம்.

*கணிசமான இடர்கள்* (*பார்க்க பந்தி.*20)

A90. கணிசமான இடருக்கு பதிலிறுக்கையான கணக்காய்வாளரின் மேலதிக விதிமுறைகள் வலுவளிப்பு விதிமுறைகளை மட்டும் உள்ளடக்குகின்ற போது இந்த விதிமுறைகள் விபரங்களின் சோதனைகளையும் உள்ளடக்க வேண்டுமென இலங்கை கணக்காய்வு நியமம் 330[40] தேவைப்படுத்துகின்றது. இத்தகைய விபரங்களின் சோதனைகள் இந்த இலங்கை கணக்காய்வு நியமத்தின் பந்தி 18 இல் விபரித்தபடி ஒவ்வொரு அணுகுமுறையின் கீழும் அந்த சூழ்நிலைக்கான கணக்காய்வாளரின் தொழில்சார் தீர்மான அடிப்படையில் வடிவமைத்து மேற்கொள்ளப்படலாம். கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்பான கணிசமான இடர்களுக்கான சோதனைத் தரவுகளுக்கு உதாரணங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்:

- பரீட்சிப்பு, உதாரணமாக, கட்டுறுப்பு அல்லது எடுகோள்களின் இணக்கத்திற்கு ஒப்பந்தங்களை பரீட்சித்தல்
- மீள்கணிப்பீடு, உதாரணமான, மாதிரியொன்றின் கணிதரீதியான செம்மையினை உறுதிப்படுத்துதல்
- ஆதரவான ஆவணங்களுக்கு பயன்படுத்திய எடுகோள்களுடன் இணங்குதல், ஏதாவது மூன்றாம் தரப்பினர் பிரசுரித்த தகவல் போன்றவை.

*கணக்காய்வாளர் அறிக்கைத்திகதிக்கு பின்னரான நிகழ்வுகளிலிருந்து கணக்காய்வுச் சான்றினைப் பெற்றுக்கொள்ளுதல்* (*பார்க்க பந்தி.* 21)

A91. சில சமயங்களில், கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதிக்கு பிந்திய நிகழ்வுகளிலிருந்து கணக்காய்வுச் சான்றினை பெற்றுக்கொள்ளுவது பொருண்மையான பிறழ்கூற்று இடரினை விபரிப்பதற்கு போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்றினை வழங்கலாம். உதாரணமாக, கைவிடப்பட்ட பொருளொன்றின் முழுமையான தொக்கு விற்பனையானது காலப்பகுதி முடிவிலான அதன் தேறிய நிகர பெறுமதிக்கான போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்றினை வழங்கலாம். ஏனைய சூழ்நிலைகளில், பந்தி 18 இன் மற்றைய அணுகுமுறைக்காக இந்த சோதனை அணுகுமுறையினை பயன்படுத்துவது அவசியம்.

A92. சில கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கு, கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு பிந்திய நிகழ்வுகள் கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்பாக போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்றினை வழங்கும் சாத்தியம் இருப்பதில்லை. உதாரணமாக, கணக்கீட்டு மதிப்பீடுகளுடன் தொடர்புபட்ட புறநிலைகள் அல்லது நிகழ்வுகள் நீண்டகாலத்திற்கு மட்டுமே உரியவை. சீர்மதிப்புக் கணக்கீட்டு மதிப்பீடுகளின் அளவீட்டு நோக்கங்களின் காரணமாக காலத்தின் முடிவிற்குப் பின்னரான

[40] SLAuS 330, பந்தி 21

தகவல்கள் ஐந்தொகைத் திகதியிலுள்ள நிகழ்வுகள் அல்லது புறநிலைகளை பிரதிபிலிப்பதில்லை. இதன் காரணமாக, சீர்மதிப்புக் கணக்கீட்டு மதிப்பீடுகளின் அளவீட்டிற்கு இவை பொருத்தமற்றவையாக இருக்கலாம்.

A93. விசேட கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்பாக இந்த சோதனை அணுகுமுறையை முன்னெடுக்காமலிருக்க கணக்காய்வாளர் தீர்மானிக்கின்ற போது, இலங்கை கணக்காய்வு நியமம் 560 உடன் இணங்குவதற்கு கணக்காய்வாளர் தேவைப்படுத்தப்படுவார். நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கத்தை தேவைப்படுத்தும் அல்லது வெளிக்காட்டலை தேவைப்படுத்தும் நிதிக்கூற்றுத் திகதிக்கும் கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கும் இடையிலான அனைத்து நிகழ்வுகளும் இனங்காணப்பட்டும்[41] பொருத்தமான முறையில் நிதிக்கூற்றுக்களில் பிரதிபலிக்கப்பட்டும் உள்ளமைக்கான[42] போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ள கணக்காய்வு விதிமுறைகளை வடிவமைத்து மேற்கொள்ள இலங்கை கணக்காய்வு நியமம் 560 கணக்காய்வாளரைத் தேவைப்படுத்துகின்றது. ஏனெனில், சீர்மதிப்புக் கணக்கீட்டு மதிப்பீடுகள் தவிர்ந்த பல கணக்கீட்டு மதிப்பீடுகளின் அளவீடுகள் எதிர்கால புறநிலைகள், ஊடுசெயல்கள், அல்லது நிகழ்வுகளின் வெளிப்பாடுகளில் தங்கியிருப்பதுடன் இலங்கை கணக்காய்வு நியமம் 560 இன் கீழான கணக்காய்வாளரது செய்முறைகள் குறிப்பாக முக்கியமானவையாகும்.

*கணக்கீட்டு மதிப்பீட்டினை முகாமை எவ்வாறு மேற்கொண்டது என்பதனை சோதித்தல்* (*பார்க்க பந்தி.* 22)

A94. முகாமையானது கணக்கீட்டு மதிப்பீட்டினை எவ்வாறு மேற்கொண்டது என்பதனை சோதிப்பது பின்வரும் சந்தர்ப்பங்களில் பொருத்தமான அணுகுமுறையாக காணப்படும்., உதாரணமாக:

- முகாமையின் தற்கால செயன்முறை பொருத்தமானதென காட்டும், கடந்தகால நிதிக்கூற்றுக்களில் கணக்காய்வாளர் மேற்கொண்ட அதுபோன்ற கணக்கீட்டு மதிப்பீடுகளின் மீளாய்வு.
- தனித்தனியாக கணிசமானதாக அமையாத, ஒத்த தன்மைகொண்ட உருப்படிகளின் பெரிய குடிலத்தினை அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டு மதிப்பீடு.
- முகாமை கணக்கீட்டு மதிப்பீட்டினை எவ்வாறு மேற்கொள்ள எதிர்பார்க்கின்றது என்பதனை பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகம் குறிப்பிடுதல். உதாரணமாக, எதிர்பார்க்கும் கடன் இழப்பு ஒதுக்கத்தின் போது இது ஏற்படலாம்.
- தரவுகளின் வழமையான செய்முறையிலிருந்து உய்த்தறியப்படும் கணக்கீட்டு மதிப்பீடு

முகாமை கணக்கீட்டு மதிப்பீட்டினை எவ்வாறு மேற்கொள்கின்றது என்பதற்கான சோதனை ஏனைய சோதனை அணுகுமுறைகள் நடைமுறைக்குச் சாத்தியமானவையாக இருக்கும்போது பொருத்தமான அணுகுமுறையாக அமையலாம் அல்லது, ஏனைய ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சோதனை அணுகுமுறைகளுடன் இணைந்த பொருத்தமான அணுகுமுறையாக இது அமையலாம்.

முன்னைய காலங்களின் செய்முறைகள், கணிசமான எடுகோள்கள், மற்றும் தரவுகளில் மாற்றங்கள் (பார்க்க பந்தி.23(a), 24(a), 25(a))

A95. முன்னைய காலங்களின் செய்முறைகள், கணிசமான எடுகோள்கள், அல்லது தரவுகளில் மாற்றமானது புதிய சந்தர்ப்பங்களை அல்லது புதிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டிருக்காத போது, அல்லது கணிசமான எடுகோள்கள் அவற்றிற்கு இடையே அல்லது

[41] SLAuS 560, பந்தி 6

[42] SLAuS 560, பந்தி 8

கணக்கீட்டு மதிப்பீடுகளில் பயன்படுத்தப்பட்டவற்றுடன் அல்லது உரிமத்தின் வியாபார நடவடிக்கைகளின் ஏனைய பகுதிகளில் பயன்படுத்தப்படும் தொடர்புடைய எடுகோள்களுடன் ஒவ்வாதபோது, கணக்காய்வாளர் இத்தகைய சூழ்நிலைகளைப் பற்றி முகாமையுடன் கலந்தாய்வதோடு, அவ்வாறு செய்கையில் அவர்கள் பயன்படுத்திய எடுகோள்களின் தொடர்புடைமையை சவாலுக்குள்ளாக்கலாம்.

முகாமைப் பக்கச்சார்பிற்கான காட்டிகள் (பார்க்க பந்தி. 23(b), 24(b), 25(b))

A96. சாத்தியமான முகாமைப் பக்கச்சார்பிற்கான காட்டிகளை கணக்காய்வாளர் இனங்காணுகின்றபோது, முகாமையுடனான மேலதிக தொடர்பாடல் ஒன்றினைக் கணக்காய்வாளர் தேவைப்படுத்தலாம் மற்றும் பயன்படுத்தப்பட்ட செய்முறைகள், எடுகோள்கள் மற்றும் தரவு ஆகியவை அந்தச்சூழ்நிலைகளுக்குச் சாதகமான மற்றும் பொருத்தமானவை என்பதற்கான போதுமான பொருத்தமான கணக்காய்வுச்சான்று பெறப்பட்டமையை மறுபரிசீலனை செய்வதற்கும் தேவைப்படலாம். குறித்த கணக்கீட்டு மதிப்பீட்டின் முகாமைப் பக்கச்சார்பிற்கு உதாரணமாக, முகாமை பல்வேறுபட்ட எடுகோள்களுக்கு பொருத்தமான வீச்சத்தினை கொண்டுள்ளபோது, ஒவ்வாரு சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தப்படும் எடுகோளானது மிகவும் சாதகமான அளவீட்டு பெறுபேற்றினை விளைவிக்கக்கூடிய அந்த வீச்சத்தின் அந்தலையில் இருக்கும் சந்தர்ப்பத்தினைக் குறப்பிடலாம்.

செய்முறைகள்

செய்முறையின் தெரிவு (பார்க்க பந்தி. 23(a))

A97. பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தின் கண்ணோட்டத்தில் பொருத்தமான செயன்முறையை தெரிவு செய்தல் மற்றும் பொருத்தமான சந்தர்ப்பங்களில், முன்னைய காலத்திலிருந்தான மாற்றங்களின் பொருத்தம் தொடர்பாக, கணக்காய்வாளரின் கவனத்திற்கொள்ளல் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்:

- தெரிவுசெய்த செயன்முறைக்கான முகாமையின் பகுத்தறிவுக்கோட்பாடு பொருத்தமானதா;
- தரப்பட்ட கணக்கீட்டு மதிப்பீட்டின் சூழ்நிலைக்கு செய்முறை, பிரயோகத்தலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தின தேவைப்பாடுகள், கிடைக்கக்கூடிய ஏனைய அளவீட்டு கோட்பாடுகள் அல்லது நுட்பங்கள், ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள், மற்றும் உரிமம் தொழிற்படும் வணிகம், தொழிற் துறை மற்றும் சூழல் ஆகியவற்றுக்கு குறித்த செய்முறை பொருத்தமானதா;
- வெவ்வேறு வகையான செய்முறைகள் கணிசமானளவில் வேறுபட்ட மதிப்பீடுகளை விளைவிக்கும் என முகாமை தீர்மானிக்கும் போது, இத்தகைய வேறுபாடுகளுக்கான காரணங்களை முகாமை எவ்வாறு விசாரணை செய்தது என்பது; மற்றும்
- குறித்த மாற்றமானது புதிய சந்தர்ப்பங்களையோ அல்லது புதிய தகவலையோ அடிப்படையாகக் கொண்டுள்ளதா என்பதனை உள்ளடக்கலாம். அவ்வாறு இல்லாத போது, குறித்த மாற்றமானது நியாயமானதாக அல்லது பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தின் தேவைப்பாடுகளுடன் இசைவதாக இல்லாமலிருக்கலாம். காலத்திற்கு மேலாக நிலையற்ற நிதிக்கூற்றுக்களை விளைவிக்கக்கூடிய தன்னிச்சையான மாற்றங்கள் காலங்களுக்கு இடையில் இசைவற்ற நிதிக் கூற்றுக்களை தருவதுடன், நிதிக்கூற்றுக்களில் பிறழ்கூற்றுக்களுக்கு வழியமைக்கலாம் அல்லது சாத்தியமான முகாமைப் பக்கச்சார்பிற்குக் காட்டியாக அமையலாம்.(பந்திகள் A133–A136 இனை பார்க்கவும்)

பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகம் அளவீட்டிற்கான செய்முறையை பரிந்துரை செய்யாதபோது அல்லது பல செய்முறைகளை அனுமதிக்கின்றபோது இத்தகைய விடயங்கள் முக்கியமானவையாகும்.

சிக்கலான மாதிரியமைப்பு (பார்க்க பந்தி. 23(d))

A98. ஒரு மாதிரி, மற்றும் அதனுடன் தொடர்புபட்ட செய்முறை, பின்வரும் சந்தர்ப்பங்களில் சிக்கலானதாக அமைதல் அதிக சாத்தியமானதாகும்:

- மாதிரியினை விளங்கிக் கொள்ளுதல் மற்றும் பிரயோகித்தல். இது மாதிரியினை வடிவமைத்தல், மற்றும் பொருத்தமான எடுகோள்கள் மற்றும் தரவுகளைத் தெரிவுசெய்து பயன்படுத்துதலை உள்ளடக்குவதோடு விசேடமான திறன்கள் அல்லது அறிவினைத் தேவைப்படுத்தும்;

- தரவின் கிடைப்பனவு அல்லது அவதானிக்கக்கூடிய தன்மை, அல்லது அடையக்கூடிய தன்மை, ஆகியவற்றிலுள்ள வரையறையின் காரணமாக உபயோகத்திற்குத் தேவைப்படுகின்ற தரவினைப பெற்றுக்கொள்ள முடியாமை; அல்லது

- வேறுபட்ட மதிப்பீட்டு இயல்புகள், அவற்றிற்கிடையே பல இடைத்தொடர்புகள் மற்றும் பலதரப்பட்ட கணிப்பீட்டு முறைகள் காரணமாக, குறித்த மாதிரியில் உபயோகப்படுத்தப்பட்ட தரவுகள் மற்றும் எடுகோள்களின் ஒருமைப்பாட்டினை (உதாரணமாக, செம்மை, கொள்கை மாறாமை, அல்லது முழுமைத்தன்மை) பேண முடியாமை.

A99. முகாமை சிக்கலான மாதிரியை பயன்படுத்தும்போது கணக்காய்வாளர் கருத்திலெடுக்க வேண்டிய விடயங்கள் உதாரணமாக, பின்வருவனற்றை உள்ளடக்கும்:

- மாதிரி கருதப்படும் பயன்பாட்டிற்கு இன்னமும் பொருத்தமானதா என்பதனை உறுதிசெய்வதற்கு ஏதுவாக, பயன்பாட்டிற்கு முன்னர் அல்லது மாதிரியில் மாற்றமொன்று மேற்கொள்ளப்படும்போது, காலாந்த மீளாய்வுகள் மூலம் மாதிரியின் செல்லுபடித் தன்மையை பரிசீலனை செய்தல். உரிமத்தின் செல்லுபடிச் செயன்முறையானது பின்வருவனற்றின் மீளாய்வினை உள்ளடக்கலாம்:
    - o மாதிரியின் கொள்கை ரீதியிலான ஏற்றுக்கொள்ளும் இயலுமை;
    - o மாதிரியின் கணிதரீதியான ஒருமைப்பாடு;
    - o மாதிரியின் தரவுகள் மற்றும் எடுகோள்களின் செம்மை மற்றும் முழுமைத்தன்மை.ஃ மற்றும்
    - o உண்மையான ஊடுசெயலுடன் ஒப்பிடுகையில் மாதிரியின் வெளிப்பாடு;
- பொருத்தமான கட்டுப்பாட்டு மாற்ற கொள்கைகள் மற்றும் விதிமுறைகள் இருத்தல்.
- மாதிரியை பயன்படுத்துகையில் முகாமை பொருத்தமான திறன் மற்றும் அறிவவ பிரயோகித்தல்.

இத்தகைய கவனத்திற் கொள்ளல் சிக்கலான மாதிரியமைப்பினை சம்பந்தப்படுத்தாத செய்முறைக்கும் பயனுடையவையாகும்.

A100. பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தின் தேவைப்பாடுகளை நிறைவு செய்வதற்காக குறித்த மாதிரியின் பெறுபேறுகளில் முகாமை செம்மையாக்கங்களை மேற்கொள்ளலாம். சில கைத்தொழிற் துறைகளில், இத்தகைய செம்மையாக்கம் மேற்படிவுகள் (overlays) என அழைக்கப்படும். சீர்மதிப்புக் கணக்கீட்டு மதிப்பீடுகளின் போது, மாதிரியின் பெறுபேறுகளுக்கான செம்மையாக்கங்கள், எவையேனும் காணப்படின், அவை இதேபோன்ற சந்தர்ப்பங்களின் போது சந்தைப் பங்குபற்றுனர் பயன்படுத்தக்கூடிய எடுகோள்களை பிரதிபலிக்கின்றனவா என கருத்தில் கொள்ளுவது அவசியமானதாகும்.

செய்முறையை பிரயோகிப்பதில் பயன்படுத்தும் கணிசமான தரவுகள் மற்றும் எடுகோள்களின் ஒருமைப்பாட்டை பேணுதல் (பார்க்க பந்தி. 23(e))

A101. செய்முறையினை பிரயோகிப்பதில் தரவுகள் மற்றும் கணிசமான எடுகோள்களின் ஒருமைப்பாட்டினை பேணுதல் என்பது தகவற் செயன்முறைப்படுத்தலின் அனைத்துப் படிநிலைகளிலும் தரவுகள் மற்றும் எடுகோள்களின் செம்மை மற்றும் முழுமைத்தன்மையை பேணுதலோடு தொடர்புபடும். இத்தகைய ஒருமைப்பாட்டினை பேணத் தவறுதல் தரவினதும் எடுகொள்களினதும் பிறழ்வுக்கு வழிவகுப்பதுடன் பிறழ்கூற்றுக்கு வழிவகுக்கும். இதுதொடர்பில் கணக்காய்வாளருக்கு ஏற்ற கவனத்திற்கொள்ளலானது, தரவுகள் மற்றும் எடுகோள்கள் முகாமை கருதுகின்ற அனைத்து மாற்றங்களுக்கும் ஆளாகின்றதா என்பதையும், மற்றும் உள்ளீடு, களஞ்சிப்படுத்தல், மீள்பெறுகை, அனுப்புதல் மற்றும் செயன்முறைப் படுத்தல் போன்ற செயற்பாட்டின் போது எதிர்பார்க்கப்படாத எந்தவொரு மாற்றத்திற்கும் ஆளாகவில்லை என்பதையும் உள்ளடக்கும்.

கணிசமான எடுகோள்கள் (பார்க்க பந்தி. 24)

A102. பிரயோகத்திலுள்ள நிதியறிக்கையிடற் சட்டகத்தின் கண்ணோட்டத்தில் கணிசமான எடுகோள்களின் பொருத்தம் மற்றும் பொருத்தமானஇடத்து, கடந்தகாலத்திலிருந்தான மாற்றங்களின் பொருத்தப்பாடு பற்றிய கணக்காய்வாளரின் உரிய கவனத்திற்கொள்ளல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்:

- எடுகோளின் தெரிவிற்கான முகாமையின் பகுத்தறிவுக் காரணங்கள்;
- கணக்கீட்டு மதிப்பீட்டின் தன்மை, பிரயோகத்திலுள்ள நிதியறிக்கையிடற் சட்டகத்தின் தேவைப் பாடுகள், மற்றும் உரிமம் தொழிற்படும் வணிகம், துறை, மற்றும் சூழல் ஆகிய சந்தர்ப்பங்களில் குறித்த எடுகோள்கள் பொருத்தமானவையா; மற்றும்
- எடுகோள்களை தெரிவு செய்யும்போது கடந்தகாலத்திலிருந்தான மாற்றம் புதிய சந்தர்ப்பங்களை அல்லது புதிய தகவலை அடிப்படையாகக் கொண்டதா; அவ்வாறு இல்லாதபோது அந்த மாற்றம் நியாயமற்றதாக, பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்துடன் இணங்காததாக அமையலாம். ஒரு கணக்கீட்டு மதிப்பீட்டின் தன்னிச்சையான மாற்றங்கள் நிதிக்கூற்றுக்களில் பொருண்மையான பிறழ்கூற்றுக்களில் அதிகரிப்பை ஏற்படுத்தலாம் அல்லது சாதகமான முகாமைப் பக்கச்சார்புக்கான காட்டிகளாக அமையலாம் (பார்க்க பந்திகள். A133–A136).

A103. முகாமை மாற்று எடுகோள்களை அல்லது கணக்கீட்டு மதிப்பீடுகளை மதிப்பாய்வு செய்யலாம். இவை சூழ்நிலையின் பொறுத்து, பல அணுனுமுறைகளின் ஊடாக நிறைவேற்றப்படலாம். சாத்தியமான ஒரு அணுகுமுறை உணர்திறன் பகுப்பாய்வு ஆகும். இது கணக்கீட்டு மதிப்பீட்டின் பணப்பெறுமதி வெவ்வேறு எடுகோள்களுடன் எவ்வாறு மாறுபடும் என்பது சம்பந்தப்பட்டதாகும். சீர்மதிப்பில் மதிப்பிட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளை பொறுத்தவரையும் வெவ்வேறு சந்தைப்பங்குபற்றுனர் வெவ்வேறு எடுகோள்களை பயன் படுத்துவதனால் அவற்றில் வேறுபாடுகள் காணப்படலாம். ஒரு உணர்திறன் பகுப்பாய்வானது பல்வேறு வெளிப்பாடுகளின் சூழ்நிலைகளின் அபிவிருத்திக்கு வழிவகுக்கலாம். இது சில சந்தர்ப்பங்களில் பெறுபேறுகளுக்கான வீச்சம் என வகைப்படுத்தப்படுவதுடன், இது மிகமோசமான (‘pessimistic’) மற்றும் உத்தம (‘optimistic’) சந்தர்ப்பங்களை காட்டலாம்.

A104. கணக்காய்வினை மேற்கொள்ளும்போது பெற்றுக்கொண்ட அறிவின் ஊடாக, உரிமத்தின் வியாபாரப் பகுதிகளில் பயன்படுத்திய எடுகோள்களைப் பற்றி விழிப்புடன் இருக்கலாம் அல்லது அவற்றை விளங்கிக்கொள்ளலாம். அத்தகைய விடயங்கள், உதாரணமாக, வியாபார வாய்ப்புக்கள், தந்திரோபாய ஆவணங்களிலுள்ள எடுகோள்கள் மற்றும் எதிர்கால காசுப்பாய்வுகள் ஆகியவற்றை உள்ளடக்கலாம். அத்துடன், ஈடுபடல் பங்காளர் உரிமத்திற்கு வேறு ஈடுபடுத்தல்களை மேற்கொண்டிருந்தால், அதிலிருந்து பெற்றுக்கொண்ட தகவல்கள் பொருண்மையான பிறழ்கூற்று இடர்களை இனங்காண்பதில் தொடர்பினை கொண்டுள்ளனவா என்பதனை கவனத்திற்கொள்ள வேண்டுமென SLAuS 315 (மீளாக்கம்)[49] தேவைப் படுத்துகின்றது. அத்தகவல் கணிசமான எடுகோள்கள் அவற்றிற்கு இடையேயும் ஏனைய கணக்கீட்டு

மதிப்பீடுகளுக்கு பயன்படுத்தியவற்றோடும் கொள்கை மாறாது உள்ளனவா என்பதை விபரிப்பதற்கு கவனத்தில் கொள்ள முக்கியமானதாகும்.

A105. பிரயோகத்திலுள்ள நிதியறிக்கையிடற் சட்டகத்தின் தேவைப்பாடுகளின் கண்ணோட்டத்தில், கணிசமான எடுகோள்களின் பொருத்தப்பாடு சில நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முகாமையின் நோக்கம் மற்றும் இயலுமையில் தங்கியிருக்கலாம். முகாமை குறித்த சில சொத்துக்கள் அல்லது பரிப்புக்கள் சார்ந்த திட்டங்கள் மற்றும் எண்ணங்களை பெரும்பாலும் ஆவணப்படுத்துவதுடன், பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகம் அவ்வாறு செய்வதற்கு முகாமையினைத் தேவைப்படுத்தலாம். முகாமையின் எண்ணம் மற்றும் இயலுமை பற்றி பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய கணக்காய்வுச் சான்றினது தன்மை மற்றும் அளவானது தொழில்சார் தீர்மானம் பற்றிய விடயமாகும். பிரயோகிக்கக்கூடிய இடங்களில், கணக்காய்வாளரின் விதிமுறைகள் கீழ்வருவனவற்றை உள்ளடக்கலாம்:

- முகாமையின் குறிப்பிட்ட எண்ணங்களை மேற்கொள்வதற்கான முகாமையின் வரலாற்று மீளாய்வு
- பொருத்தமான இடத்து, முறையாக அனுமதியளிக்கப்பட்ட பாதீடுகள், அங்கீகாரங்கள் அல்லது கூட்டஅறிக்கைகள் அடங்கலாக எழுதப்பட்ட திட்டங்கள் மற்றும் பிற ஆவணப்படுத்தல்களின் சோதனை.
- ஒரு குறிப்பிட்ட நடவடிக்கைக்கான காரணங்கள் பற்றி முகாமையிடம் விசாரித்தல்.
- நிதிக்கூற்றுத் திகதிக்கு பின்னர் மற்றும் கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையான நிகழ்வுகளின் மீளாய்வு.
- முகாமையின் செயற்பாடுகளின் சாத்திய இயலுமையை பாதிக்கக்கூடிய அதன் அர்ப்பணிப்புக்கள் மற்றும் சட்ட, ஒழுங்குபடுத்தல், அல்லது ஒப்பந்த வரையறைகள் ஆகியன அடங்கலாக தரப்பட்ட உரிமத்தின் பொருளாதாரச் சூழ்நிலைகளில் குறித்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கான உரிமத்தின் இயலுமைக்கான மதிப்பாய்வு.
- பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தின் ஆவணப்படுத்தல் தேவைப்பாடுகள் எவையேனும் இருப்பின் அவற்றினை முகாமை நிறைவேற்றியுள்ளதா என்பதனை கவனத்திற்கொள்ளல்.

எனினும், சில பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகங்கள், கணக்கீட்டு மதிப்பீடுகளை உருவாக்கும் போது முகாமை கணக்கிற்கொள்ள விளையும் எண்ணங்கள் அல்லது திட்டங்களை அனுமதிக்காமல் இருக்கலாம். இது அநேகமாக சீர்மதிப்புக் கணக்கீட்டு மதிப்பீடுகள் பற்றிய சூழ்நிலைகளில் இடம்பெறும். ஏனெனில், அவர்களின் அளவீட்டு நோக்கங்கள் சந்தைப் பங்குபற்றுனர்கள் பயன்படுத்திய கணிசமான எடுகோள்களை தேவைப்படுத்துவதனாலாகும்.

தரவுகள் (பார்க்க பந்தி. 25(a))

A106. பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகக் கண்ணோட்டத்தில் பயன்படுத்துவதற்கு தெரிவு செய்யப்பட்ட தரவுகளின் பொருத்தத் தன்மை மற்றும், பொருத்தமான போது, கடந்தகாலத்திலிருந்தான மாற்றங்களின் பொருத்தத் தன்மை தொடர்பான கணக்காய்வாளரின் கவனத்திற்கொள்ளல்கள் பின்வருவனவற்றினை உள்ளடக்கலாம்:

- தரவுகளின் தெரிவிற்கான முகாமையின் பகுத்தறிவுக் காரணங்கள்;
- கணக்கீட்டு மதிப்பீட்டின் தன்மை, பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத் தேவைப்பாடுகள், மற்றும் உரிமம் தொழிற்படும் வணிகம், தொழிற்துறை, மற்றும் சூழல் ஆகியவற்றுக்கு குறித்த தரவுகள் பொருத்தமானதா என்பது.·. மற்றும்

- கடந்தகாலத்திலிருந்து தரவுமூலங்கள் அல்லது தெரிவுசெய்த தரவுகளில் மாற்றமானது புதிய சூழ்நிலைகள் அல்லது புதிய தகவலை அடிப்படையாகக் கொண்டுள்ளதா என்பது. அவ்வாறு இல்லாத போது அந்த மாற்றமானது நியாயமானதாக அமைவதோ மற்றும் பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்துடன் இணங்குவதோ சாத்தியமற்றதாகும். ஒரு கணக்கீட்டு மதிப்பீட்டில் தன்னிச்சையான மாற்றங்கள் நிதிக்கூற்றுக்களில் காலங்களுக்கு இடையில் ஒவ்வாமை, நிதிக் கூற்றுக்களில் பிறழ்கூற்றினை விளைவிக்கலாம் அல்லது சாதகமான முகாமைப் பக்கச்சார்பிற்கான காட்டிகளாக அமையலாம் (பார்க்க பந்திகள். A133–A136).

தரவினது பொருத்தப்பாட்டுத் தன்மை மற்றும் நம்பகத்தன்மை (பார்க்க பந்தி. 25(c))

A107. உரிமத்தினால் வழங்கப்பட்ட தகவலை பயன்படுத்தும்போது, கணக்காய்வாளரின் நோக்கத்திற்கு தகவல் போதுமானளவு நம்பகத்தன்மையுடையதா என்பதை மதிப்பீடு செய்வதற்கு இலங்கை கணக்காய்வு நியமம் 500 கணக்காய்வாளரினைத் தேவைப்படுத்துகின்றது. இது குறித்த தகவலானது அந்தச் சூழ்நிலைகளிற்குப் பொருத்தமானதா என்பதையும் அதன் செம்மையான மற்றும் முழுமையான கணக்காய்வுச் சான்றினைப் பெற்றுக்கொள்வதற்கும், அந்த தகவல் போதுமானளவு துல்லியமானதாகவும் கணக்காய்வாளரது நோக்கத்திற்கு விபரமானதாகவும் உள்ளதா என்பதையும் உள்ளடக்கும்.[50]

சிக்கலான சட்ட அல்லது ஒப்பந்தக் கட்டுறுப்புக்கள் (பார்க்க பந்தி. 25(d))

A108. கணக்கீட்டு மதிப்பீடு சிக்கலான சட்ட அல்லது ஒப்பந்தக் கட்டுறுப்புக்களை அடிப்படையாக கொண்டுள்ள போது கணக்காய்வாளர் கவனத்தில் எடுக்கக்கூடிய விதிமுறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்:

- ஒப்பந்தத்தினை விளங்கிக் கொள்வதற்கு அல்லது விபரிப்பதற்கு விசேடமான திறன்கள் அல்லது அறிவு தேவைப்படுமா என்பதைக் கவனத்திலெடுத்தல்;
- சட்ட அல்லது ஒப்பந்த கட்டுறுப்புக்கள் குறித்து உரிமத்தின் சட்ட ஆலோசகரை விசாரித்தல்; மற்றும்,
- அடிப்படையாக அமைந்த ஒப்பந்தங்களைப் பின்வருவனவற்றுக்காக சோதித்தல்:
  - o ஊடுசெயல் அல்லது உடன்படிக்கைக்கு அடிப்படையாக அமைந்த வியாபார நோக்கத்தின் மதிப்பாய்வு மற்றும்
  - o ஓப்பந்தக் கட்டுறுப்புக்கள் முகாமையின் விளக்கங்களுடன் ஒத்திசைவாக உள்ளனவா என்பதைக் கருத்திலெடுத்தல்.

மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையைப் பற்றிய முகாமையின் புள்ளி மதிப்பீடு மற்றும் தொடர்புடைய வெளிக்காட்டல்களின் தெரிவு

மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையை விளங்கிக் கொள்வதற்கும் கையாள்வதற்குமான முகாமையின் படிமுறைகள் (பார்க்க பந்தி. 26(a))

A109. மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையினை விளங்கிக் கொள்வதற்கும் கையாள்வதற்கும் பொருத்தமான படிமுறைகளை முகாமை முன்னெடுத்துள்ளதா என்பது பற்றிய உரிய கவனத்திற்கொள்ளல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

(a) மூலங்களை இனங்காணல், அளவீட்டுப் பெறுபேறுகளில் இயல்பான மாறுந்தன்மையின் அளவை மதிப்பிடல் மற்றும் நியாயமாக சாத்தியமான அளவீட்டுப் பெறுபேறுகளின் வீச்சத்தை மதிப்பிடுதல் ஊடாக மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையினை விளங்கிக் கொண்டிருத்தல்;

(b) முகாமையின் செயன்முறையில் சிக்கற்தன்மை அல்லது அகவயத்தன்மை பொருண்மையான பிறழ்கூற்று இடரினை எந்தளவுக்கு பாதிக்கும் என்பதை இனங்கண்டு, பின்வருவனவற்றினைப் பிரயோகிப்பதன் மூலம் பிறழ்கூற்று ஏற்படுவதற்கான சாத்தியத்தினை கையாளல்:

(i) கணக்கீட்டு மதிப்பீடுகளை மேற்கொள்வதில் பொருத்தமான திறன் மற்றும் அறிவு; மற்றும்,

(ii) முகாமைப் பக்கச்சார்பிற்கான மாறுந்தகவினை இனங்கண்டு கையாளதல் உட்பட தொழில்சார் சுயதீர்ப்பு; மற்றும்

(d) மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையினை விபரிக்கக்கூடிய முகாமையின் புள்ளி மதிப்பீடு மற்றும் தொடர்புடைய வெளிக்காட்டல்களை பொருத்தமாகத் தெரிவு செய்வதன் ஊடாக மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையினை விபரித்திருத்தல்

முகாமையின் புள்ளி மதிப்பீடு மற்றும் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை தொடர்புபட்ட வெளிக்காட்டல்களின் தெரிவு (பார்க்க பந்தி. 26(b))

A110. முகாமையின் புள்ளி மதிப்பீட்டின் தெரிவு மற்றும் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை பற்றிய தொடர்புடைய வெளிக்காட்டல்களை விருத்திசெய்தல் தொடர்பான விடயங்கள் பின்வருவனவற்றினை உள்ளடக்கலாம்:

- கணக்கீட்டு மதிப்பீட்டினை ஆக்குவதற்கு மாற்று வழிகளும், தரவுகளுக்கான மாற்று மூலங்களும் கிடைக்கின்றபோது உட்பட, பயன்படுத்தப்பட்ட செயன்முறைகள் மற்றும் தரவுகள் பொருத்தமாக தெரிவு செய்யப்பட்டுள்ளனவா;
- உபயோகிக்கப்பட்ட அளவீட்டுப் பண்புகள் பொருத்தமானவையாகவும் முழுமையானவையாகவும் உள்ளனவா;
- பயன்படுத்திய எடுகோள்கள் நியாயமாகச் சாத்தியமான தொகைகளின் வீச்சத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், அவை தொடர்புடைய, நம்பகமான பொருத்தமான தரவுகள் மூலம் ஆதரிக்கப்பட்டு உள்ளனவா;
- தரவுகள் பொருத்தமானதாக, நம்பகமானதாக, தொடர்புடையதாக உள்ளனவா மற்றும் தரவின் ஒருமைப்பாடு பேணப்பட்டதா;
- செய்முறைக்கு அமைவாக கணிப்பீடுகள் பிரயோகிக்கப்பட்டனவா மற்றும் எண்கணித ரீதியாக செம்மையாக உள்ளனவா;
- நியாயமாகச் சாத்தியமான அளவீட்டு வெளிப்பாடுகளிலிருந்து முகாமையின் புள்ளி மதிப்பீடானது பொருத்தமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதா;
- தொடர்புபட்ட வெளிக்காட்டல், தொகையினை ஒரு மதிப்பீடாக பொருத்தமாக விபரிக்கின்றனவா மற்றும் நியாயமாக சாத்தியமான வெளிப்பாடுகளின் மாறுந்தகவு அடங்கலாக மதிப்பீட்டுச் செயன்முறையின் தன்மை மற்றும் வரையறைகளை விளக்குதல்.

A111. முகாமையின் புள்ளி மதிப்பீட்டின் பொருத்தத் தன்மை தொடர்பாக கணக்காய்வாளரின் உரிய கவனத்திற் கொள்ளல் பின்வருவனவற்றினை உள்ளடக்கலாம்:

- பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தின் தேவைப்பாடுகள் மாற்று வெளிப்பாடுகள் மற்றும் எடுகோள்கள் ஆகியவற்றை கவனத்தில்கொண்ட பின்னரே புள்ளி மதிப்பீட்டினை பயன்படுத்த வேண்டுமெனவோ அல்லது குறிப்பான அளவீட்டு முறையொன்றையோ பரிந்துரை செய்யும்போது, முகாமை, பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தின் தேவைப்பாடுகளை பின்பற்றியுள்ளதா என்பதுபற்றி;
- நியாயமாகச் சாத்தியமான பெறுபேறுகளிலிருந்து ஒரு தொகையினை எவ்வாறு தெரிவு செய்ய வேண்டும் என்பதனை பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகம் குறிப்பிடாதபோது, முகாமை பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தின் தேவைப்பாடுகளைக் கருத்தில் கொண்டு சுயதீர்ப்பினை பயன்படுத்தியுள்ளதா என்பதுபற்றி.

A112. மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மைபற்றி முகாமையின் வெளிக்காட்டல் தொடர்பில் கணக்காய்வாளரின் உரிய கவனத்திற்கொள்ளல்கள், கீழ்வரும் வெளிக்காட்டல்களைத் தேவைப்படுத்துகின்ற பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தின் தேவைப்பாடுகளை உள்ளடக்கும்:

- நியாயமாகச் சாத்தியமான அளவீட்டுப் பெறுபேறுகளின் மாறுந்தகவு உட்பட தொகை ஒன்றினை மதிப்பீடொன்றாக விபரித்து, மற்றும் குறித்த மதிப்பீட்டின் ஆக்கச் செய்முறையின் தன்மை மற்றும் வரையறைகளை விபரிக்கும் வெளிக்காட்டல்கள். சட்டகம் வெளிக்காட்டல் நோக்கங்களை நிறைவு செய்வதற்காக மேலதிக வெளிக்காட்டல்களையும் தேவைப்படுத்தலாம்[51].
- கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்புபட்ட கணிசமான கணக்கீட்டுக் கொள்கைகள் பற்றிய வெளிக் காட்டல்கள். சூழ்நிலைகளுக்கு அமைய உரிய கணக்கீட்டுள் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு மதிப்பீடுகளை தயாரித்து முன்னிலைப்படுத்தலில் பிரயோகித்த குறிப்பான தத்துவம், அடிப்படைகள், மரபுகள், விதிகள் மற்றும் நடைமுறைகள் போன்ற விடயங்களை உள்ளடக்கலாம்.
- கணிசமான அல்லது இக்கட்டான சுயதீர்ப்புக்கள் (உதாரணமாக, நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்த தொகைகளில் கணிசமான பாதிப்பினைக் கொண்டவை) மற்றும் எதிர்காலம் நோக்கிய கணிசமான எடுகோள்கள் அல்லது மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையின் ஏனைய மூலங்கள்.

சில சந்தர்ப்பங்களில், நேர்மையான முன்னிலைப்படுத்தலை அடைவதற்காக அல்லது ஒத்திசைவுச் சட்டகத்திற்கு அமைய நிதிக்கூற்றுக்கள் தவறாக வழிநடத்தப்படாது இருப்பதற்காக நிதியறிக்கைச் சட்டகத்தில் வெளிப்படையாக தேவைப்படுத்தியவற்றிற்கு மேலாக வெளிக்காட்டல்கள் தேவைப்படலாம்.

A113. கணக்கீட்டு மதிப்பீடானது எந்தளவு அதிகமாக மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மைக்கு ஆட்பட்டுள்ளதோ, அந்தளவுக்கு பொருண்மையான பிறழ்கூற்றுச் சாத்தியம் அதிகமாக மதிப்பிடப்படும். அத்துடன், இதன் காரணமாக, பந்தி 35 க்கு இசைவாக, முகாமையின் புள்ளி மதிப்பீடு மற்றும் அதனுடன் தொடர்புபட்ட வெளிக்காட்டல் பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தின் கண்ணோட்டத்தில் நியாயூர்வமானதா அல்லது பிறழ்வுபடுத்தி கூறப்பட்டுள்ளதா என்பதனை தீர்மானிப்பதற்கு கணக்காய்வுச் சான்று அதிகளவு நம்பகமானதாகக் காணப்பட வேண்டும்.

A114. மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மைக்கான கணக்காய்வாளர் கவனத்திற்கொள்ளல் கணக்கீட்டு மதிப்பீட்டுடனும் அதனுடன் தொடர்புடைய வெளிக்காட்டலுடனும் தொடர்புபட்டு உள்ளபோது, அது கணக்காய்வாளரது கணிசமான கவனத்தினை தேவைப்படுத்தும் விடயமாக அமைவதோடு, அது ஒரு முக்கிய கணக்காய்வு விடயமாக அமையும்[52].

மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையினை விளங்கிக் கொண்டு விபரிப்பதற்கு பொருத்தமான படிமுறைகளை முகாமையானது முன்னெடுக்காத போது (பார்க்க பந்தி. 27)

A115. முகாமையானது மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையை விளங்கிக்கொண்டு கையாள்வதற்கு பொருத்தமான படிமுறைகளை முன்னெடுக்கவில்லையென கணக்காய்வாளர் தீர்மானிக்கும்போது, மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையை விளங்கிக்கொண்டு கையாள்வதற்கு மேலதிக விதிமுறைகளை பின்பற்ற கணக்காய்வாளர் முகாமையினைக் கோரலாம். இந்த செயன்முறைக்கு உதாரணமாக, மாற்று எடுகோள்களை கருத்திற் கொள்ளல் அல்லது உணர்திறன் பகுப்பாய்வினை நிகழ்த்துதல் ஆகியவற்றினைக் குறிப்பிடலாம்.

A116. புள்ளி மதிப்பீட்டினை அல்லது வீச்சத்தினை விருத்திசெய்வது நடைமுறைச் சாத்தியமானதா என்பதை கவனத்திற்கொள்கையில், கணக்காய்வாளர் கணக்கிற்கொள்ள வேண்டிய விடயங்கள் கணக்காய்வாளர் தமது சுயாதீனத் தேவைப்பாடுகளை இழக்காமல் இவ்வாறு செய்ய முடியுமா என்பதையும் உள்ளடக்கும். இது முகாமையின் பொறுப்புக்களை அனுமானிக்கின்ற போது தடைசெய்தல்களை கையாளும் உரிய நெறிமுறைத் தேவைப்பாடுகளை உள்ளடக்கலாம்.

A117. முகாமையின் பதிலிறுத்தலை கருத்திலெடுத்த பின்னர், கணக்காய்வாளரின் புள்ளி மதிப்பீட்டினை அல்லது வீச்சத்தினை விருத்திசெய்வது நடைமுறைச் சாத்தியற்றதென கணக்காய்வாளர் தீர்மானித்தால், பந்தி 34க்கு அமைவாக, நிதிக்கூற்றுக்களின் மீதான கணக்காய்வுக்கான அல்லது கணக்காய்வாளரின் அபிப்பிராயத்துக்கான தாக்கங்களை மதிப்பிடுவதற்கு கணக்காய்வாளர் தேவைப்படுத்தப்பட்டுள்ளார்.

*கணக்காய்வாளரின் புள்ளி மதிப்பீட்டினை விருத்தி செய்தல் அல்லது கணக்காய்வாளரின் வீச்சத்தினை பயன்படுத்துதல்* (பார்க்க பந்தி.28–29)

A118. மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை பற்றிய முகாமையின் புள்ளி மதிப்பீட்டினையும் அதனுடன் தொடர்புபட்ட வெளிக்காட்டல்களையும் மதிப்பாய்வு செய்வதற்காக கணக்காய்வாளரின் புள்ளி மதிப்பீடு அல்லது வீச்சத்தினை ஆக்குதல் பின்வரும் சந்தர்ப்பங்களில் பொருத்தமானதாக அமையலாம், உதாரணமாக:

- முன்னைய காலங்களில் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்ட இதே போன்ற கணக்கீட்டு மதிப்பீடுகளின் மீளாய்வானது, முகாமையின் நடப்புக்கால செயன்முறை விளைவுத்திறனாக இருக்கமுடியாது எனும் எதிர்பார்ப்பினை காட்டுதல்.
- கணக்கீட்டு மதிப்பீடுகளை ஆக்குவதற்கான முகாமையின் செய்முறைக்குட்பட்ட மற்றும் அவற்றின் மீதான உரிமத்தின் கட்டுப்பாடுகள் நன்கு வடிவமைக்கப்படாது அல்லது முறையாக நடைமுறைப் படுத்தப்படாமல் இருத்தல்.
- காலத்தின் இறுதிக்கும் கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கும் இடையிலான நிகழ்வுகள் அல்லது ஊடுசெயல்கள் முகாமையால் கணக்கிற்கொள்ளப்பட பொருத்தமானவையாக இருந்தபோதிலும் முகாமை அவ்வாறு செய்யாமை. அத்துடன், அத்தகைய நிகழ்வுகள் அல்லது ஊடுசெயல்கள் முகாமையின் புள்ளி மதிப்பீட்டுடன் முரண்படுபவையாகவிருத்தல்.
- கணக்காய்வாளரின் புள்ளி மதிப்பீடு அல்லது வீச்சத்தை விருத்தி செய்வதில் பயன்படுத்தக்கூடிய தொடர்புடைய தரவுகளின் பொருத்தமான மாற்று எடுகோள்கள் மற்றும் தரவுகள் காணப்படல்.
- மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையினை விளங்கிக்கொண்டு கையாள பொருத்தமான படிமுறைகளை முகாமை முன்னெடுக்காமை. (பந்தி 27 ஐப் பார்க்கவும்).

A119. புள்ளி மதிப்பீட்டினை அல்லது வீச்சத்தினை ஆக்குவதற்கான தீர்மானமானது, மாற்று வெளிப்பாடுகள் மற்றும் எடுகோள்களை கவனத்திற்கொண்ட பின்னர் பயன்படுத்தக்கூடிய புள்ளி மதிப்பீட்டினை பரிந்துரை செய்கின்ற, அல்லது குறிப்பிட்ட அளவீட்டு முறையினைப் பரிந்துரை செய்கின்ற (உதாரணமாக, கழிவீடு செய்யப்பட்ட நிகழ்தகவு நிறையேற்றிய சராசரி எதிர்பார்ப்புப் பெறுமதி, அல்லது அதிக சாத்தியமுள்ள வெளிப்பாடு) பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தின் தலையீட்டிற்கு ஆளாகலாம்.

A120. வீச்சத்திலும் பார்க்க புள்ளி மதிப்பீட்டினை ஆக்குவதா என்பது பற்றிய கணக்காய்வாளரின் தீர்மானம், மதிப்பீட்டின் தன்மை மற்றும் அச்சூழ்நிலைகளில் கணக்காய்வாளரின் சுயதீர்ப்பில் தங்கியிருக்கலாம். உதாரணமாக, நியாயமாக சாத்தியமான வெளிப்பாடுகளின் மாறுந்தன்மை குறைவாக எதிர்பார்க்கப்படக் கூடியதாக மதிப்பீட்டின் தன்மை காணப்படல். இத்தகைய சந்தர்ப்பங்களில், குறிப்பாக அதியுயர் துல்லிய மட்டத்தில் விருத்திசெய்யக்கூடியதாக

உள்ளபோது, புள்ளி மதிப்பீட்டை விருத்திசெய்தல் விளைதிறனான அணுகுமுறையாக அமையலாம்.

A121. கணக்காய்வாளர் ஒரு புள்ளி மதிப்பீட்டினை அல்லது வீச்சத்தினை பல்வேறு வழிகளில் உருவாக்கலாம், உதாரணமாக:

- முகாமை பயன்படுத்தியதை விட்டு வேறொரு மாதிரியை பயன்படுத்துதல். உதாரணமாக, குறித்த பிரிவில் அல்லது தொழிற்துறையில் உபயோகத்திற்கு வர்த்தகரீதியாக கிடைக்கின்ற அல்லது ஒரு உரிமைபெற்ற அல்லது கணக்காய்வாளர் விருத்தி செய்த மாதிரியொன்று.
- முகாமை பயன்படுத்தியவற்றிலிருந்து வேறுபட்ட மாற்று எடுகோள்கள் அல்லது தரவு மூலங்களை விருத்திசெய்து உபயோகிப்பதன் மூலம் முகாமையின் மாதிரியை பயன்படுத்ததல்.
- முகாமை பயன்படுத்தியவற்றிற்கு மாற்று எடுகோள்களை விருத்தி செய்து, கணக்காய்வாளரின் சொந்த மாதிரியினை உபயோகித்தல்.
- மாதிரியினை விருத்திசெய்தல் அல்லது நடைமுறைப்படுத்துதல் அல்லது உரிய எடுகோள்களை வழங்கக்கூடிய விசேட நிபுணத்துவமுடைய நபரை வேலைக்கமர்த்துதல் அல்லது ஈடுபடுத்துதல்.
- ஒப்பிடக்கூடிய ஏனைய புறநிலைகள், ஊடுசெயல்கள், நிகழ்வுகள், அல்லது பொருத்தமானபோது, ஒப்பிடக்கூடிய சொத்துக்கள் அல்லது பரிப்புக்களுக்கான சந்தைகளை கவனத்திற்கொள்ளல்.

A122. கணக்காய்வாளர் கணக்கீட்டு மதிப்பீட்டின் ஒரு பகுதிக்கு மாத்திரம் ஒரு புள்ளி மதிப்பீட்டினை அல்லது வீச்சத்தினை ஆக்கலாம். (உதாரணமாக, குறித்தவொரு எடுகோளுக்காக, அல்லது கணக்கீட்டு மதிப்பீட்டின் ஒரு பகுதி மட்டும் பொருண்மையான பிறழ்கூற்று இடரினை விளைவிக்கும் போது).

A123. ஒரு புள்ளி மதிப்பீட்டினை அல்லது வீச்சத்தினை விருத்தி செய்வதற்கு கணக்காய்வாளரின் சொந்த செய்முறைகள், எடுகோள்கள் அல்லது தரவுகளை உபயோகிக்கும்போது, முகாமையின் செய்முறைகள், எடுகோள்கள் அல்லது தரவுகளின் தொடர்புடைமை பற்றிய கணக்காய்வுச் சான்றினை கணக்காய்வாளர் பெறலாம். உதாரணமாக, முகாமையின் புள்ளி மதிப்பீடு நியாயமானதா என்பதனை மதிப்பாய்வு செய்வதற்காக ஒரு வீச்சத்தை விருத்தி செய்வதற்காக கணக்காய்வாளர் தனது சொந்த எடுகோள்களை உபயோகும்போது, கணக்கீட்டு மதிப்பீட்டிளை ஆக்குகையில் பயன்படுத்தும் கணிசமான எடுகோள்களின் தெரிவில் முகாமைத் தீர்மானம் முகாமையின் பக்கசார்பிற்கான காட்டிகளில் அதிகரிப்பினை ஏற்படுத்துமா என்பதுபற்றிய கண்ணோட்டத்தினையும் கணக்காய்வாளர் விருத்தி செய்யலாம்.

A124. போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்றினால் ஆதரவளிக்கப்படும் தொகைகளை உள்ளடக்கிய வீச்சத்தினை மாத்திரம் கணக்காய்வாளர் தீர்மானிக்க வேண்டுமெனும் பந்தி 29(a) இன் தேவைப்பாடு, குறித்த சாத்தியமான வீச்சத்தின் ஒவ்வொரு பெறுபேற்றையும் தனித்தனியாக ஆதரிக்கும் கணக்காய்வுச் சான்றினை பெறுவதனை தேவைப்படுத்தவில்லை. மாறாக, வீச்சத்தின் இரு அந்தலைகளிலும் உள்ள புள்ளிகள் சூழ்நிலைக்கு நியாயமானதாக இருப்பதற்கான சான்றினை பெறுவதன் மூலம் அந்த இரண்டு புள்ளிகளுக்கு இடையில் வருகின்ற தொகைகளும் நியாயமானவை என ஆதரவளிக்கலாம்.

A125. கணக்காய்வாளரின் வீச்சத்தின் அளவானது, குறிப்பாக பொருண்மை தொழிற்பாட்டு பெறுபேறுகளின் அடிப்படையில் அமைந்தும் (உதாரணமாக, வரிக்கு முந்திய இலாபம்), இந்த அளவீடு சொத்துக்கள் அல்லது ஏனைய ஐந்தொகை அளவீடுகளிலிருந்து ஒப்பீட்டளவில் சிறியதாகவும் உள்ளபோது, அது ஒட்டுமொத்த நிதிக்கூற்றுக்களின் பொருண்மையின் மடங்குகளாக இருக்கலாம். இந்தச் சூழ்நிலையானது கணக்கீட்டு மதிப்பீட்டுடன் தொடர்புபட்ட மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையே பொருண்மையின் மடங்காக அமைகின்றபோது சாத்தியமானதாகும். இது சில வகையான கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கு அல்லது மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையானது வழமையானதாக அமைவதால் பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச்

சட்டகத்தின் குறிப்பான தேவைப்படுத்தல்கள் காணப்படும் வங்கி, காப்புறுதி போன்ற துறைகளுக்கும் பொதுவானது. இந்த SLAuS இன் தேவைப்பாடுகளுக்கு அமைவாக நிகழ்த்தப்படுகின்ற விதிமுறைகள் மற்றும் பெறப்படும் கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில், பொருண்மையின் மடங்குகளாகவுள்ள வீச்சமானது, கணக்காய்வாளரின் சுயதீர்மானத்திற்கு அமைய சூழ்நிலைக்குப் பொருத்தமானது எனும் முடிவுக்கு கணக்காய்வாளர் வரலாம். இத்தகைய சந்தர்ப்பத்தில், மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையினைப் பற்றிய வெளிக்காட்டல்களின் நியாயபூர்வதன்மை தொடர்புபட்ட கணக்காய்வாளரின் மதிப்பாய்வானது அதிகளவில் முக்கியமானதாக அமைவதோடு, குறிப்பாக அத்தகைய வெளிக்காட்டல்கள் மதிப்பீட்டு நிச்சயமற்றதன்மையின் உயர்ந்த மட்டத்தினையும் சாத்தியமான பெறுபேறுகளின் வீச்சத்தினையும் பொருத்தமாக தெரிவிக்கின்றனாவா என்பதுவும் அதிமுக்கியமானதாக அமையும். பந்திகள் A139–A144 இச் சூழ்நிலைக்கு பொருத்தமான மேலதிக கவனத்திற்கொள்ளல்களை உள்ளடக்குகின்றன.

*கணக்காய்வுச் சான்றுகளுடன் தொடர்புடைய ஏனைய கவனத்திற்கொள்ளல்கள்* (பார்க்க பந்தி. 30)

A126. கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்புபட்ட பொருண்மையான பிறழ்கூற்று இடர் தொடர்பாக, கணக்காய்வுச் சான்றாக பயன்படுத்தக்கூடிய தகவல்கள், உரிமத்தினால் வழங்கப்படலாம், முகாமைத்துவ நிபுணரின் செய்கையைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படலாம், அல்லது வெளிவாரித் தகவலளிப்பு மூலத்தின் மூலம் வழங்கப்படலாம்.

வெளிவாரித் தகவலளிப்பு மூலங்கள்

A127. SLAuS; 500[53] இல் விபரிக்கப்பட்ட படி, வெளிவாரித் தகவலளிப்பு மூலமொன்றிலிருந்தான தகவலின் நம்பகத்தன்மையானது அதனது மூலம், அதன் தன்மை. மற்றும் அது எத்தகைய சூழ்நிலைகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது ஆகியவற்றின் தலையிடலுக்கு ஆளாகலாம். இதன் விளைவாக, கணக்கீட்டு மதிப்பீடுகளை ஆக்குவதற்கு பயன்படுத்தும் தகவலின் நம்பகத்தன்மையை கவனத்தில் கொள்வதற்கான கணக்காய்வாளர் மேலதிக கணக்காய்வு விதிமுறைகளினது தன்மை மற்றும் வீச்செல்லையானது இந்தக் காரணிகளின் தன்மையின் அடிப்படையில் மாறுபடலாம். உதாரணமாக:

- சந்தை அல்லது தொழிற்துறைத் தரவுகள், விலைகள், அல்லது விலையிடல் தொடர்புடைய தரவுகள் தனியொரு வெளிவாரி மூலத்திலிருந்து பெறப்படும்போது, அத்தகைய தகவலில் சிறப்புத் தேர்ச்சி பெறுவதற்கு கணக்காய்வாளர் ஒப்பிடுவதற்கு சுயாதீன மாற்று மூலமொன்றிலிருந்து விலையினை தேடலாம்.

- சந்தை அல்லது தொழிற்துறைத் தரவுகள், விலைகள், அல்லது விலையிடலுடன் தொடர்புடைய தரவுகள், பல சுயாதீனமான வெளிவாரித் தகவல் மூலங்களிலிருந்து பெறப்படும்போது, மற்றும் அந்த மூலங்களின் ஒருமித்த கருத்தினை காட்டும் போது, தனியான மூலத்தின் தகவலின் நம்பகத் தன்மைபற்றி குறைந்த கணக்காய்வுச் சான்றுகளே தேவைப்படலாம்.

- பல தகவல் மூலங்களிலிருந்து பெறப்படும் தகவல்கள் மாறுபட்ட சந்தைக் கண்ணோட்டத்தினை காட்டும்போது, இந்த மாறுபட்ட கண்ணோட்டத்திற்கான காரணங்களை விளங்கிக் கொள்வதற்கு கணக்காய்வாளர் முனையலாம். அந்த மாறுபட்ட தன்மையானது வெவ்வேறு செய்முறைகள், எடுகோள்கள், அல்லது தரவுகளின் பயன்பாட்டால் ஏற்படலாம். உதாரணமாக, ஒரு மூலம் நடப்பு விலைகளை உபயோகிக்கும் அதேவேளை மற்றைய மூலம் எதிர்கால விலைகளை பயன் படுத்தலாம். மாறுபட்ட தன்மையானது மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையுடன் தொடர்புபடும் போது. பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தின் கண்ணோட்டத்தின்படி நிதிக்கூற்றுக்களிலுள்ள மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையை விபரிக்கும் வெளிக்காட்டல்கள் நியாயமானவையா என்பதற்கு போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்றினைப் பெறுவதற்கு கணக்காய்வாளர் பந்தி 26(b) மூலம்

தேவைப்படுத்தப்படுகிறார். இத்தகைய சூழ்நிலைகளில் பிரயோகிக்கப்படும் செய்முறைகள், எடுகோள்கள், மற்றும் தரவுகளை கவனத்திற்கொள்வதில் தொழில்சார் சுயதீர்ப்பும் முக்கியமாகும்.

- வெளிவாரித் தகவல் மூலத்திலிருந்து பெறப்படும் தகவல்கள் அவற்றின் சொந்த மாதிரிகளைப் பயன்படுத்தி ஆக்கப்படும். SLAuS 500 இன் பந்தி A34e பொருத்தமான வழிகாட்டலை தருகிறது.

A128. சீர்மதிப்புக் கணக்கீட்டு மதிப்பீடுகளுக்காக, வெளிவாரித் தகவல் மூலங்களிலிருந்தான தகவல்களின் ஏற்புடமை மற்றும் நம்பகத்தன்மைக்கான மேலதிக கவனத்திற்கொள்ளல்கள் பின்வருவனவற்றினை உள்ளடக்கலாம்:

(a) சீர்மதிப்புக்கள் அதேபோன்ற சாதனத்தின் வர்த்தகத்தினை அல்லது செயற்திறனான சந்தைக் விலைக்கூறுகளை அடிப்படையாகக் கொண்டனவா என்பதுபற்றி.՝.

(b) ஒப்பிடக்கூடிய சொத்துக்கள் அல்லது பரிப்புக்களின் ஊடுசெயல்களையும், அத்தகைய ஊடுசெயல்கள் எவ்வாறு இனங்காணப்பட்டு ஒப்பிடக்கூடியவையாகக் கருதப்பட்டன என்பதையும் சீர்மதிப்புக்கள் அடிப்படையாகக் கொண்டுள்ளனவா என்பதுபற்றி;

(c) சொத்துக்கள் அல்லது பரிப்புகளுக்கு அல்லது ஒப்பிடத்தகு சொத்துக்கள் அல்லது பரிப்புகளுக்கு ஊடுசெயல்கள் எவையும் காணப்படாதபோது, தகவலானது எவ்வாறு ஆக்கப்பட்டது எனபதையும் மேலும் பொருத்தமானபோது, உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்ட உள்ளீடுகள் சொத்துக்கள் அல்லது பரிப்புக்களை விலையிடும்போது சந்தைப் பங்குபற்றுனர் சொத்து அல்லது பரிப்புக்கு பயன்படுத்தும் அதே எடுகோள்களை பிரதிபலிக்கின்றனவா என்பதுபற்றி; மற்றும்,

(d) சீர்மதிப்பு அளவீடு தரகர் விலைக்குறிப்பினை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும்போது, அந்தத் தரகர் விலைக்குறிப்பீடானது:

(i) அதே வகையான நிதிச்சாதனங்களை பரிமாற்றம் செய்யும் சந்தை ஆக்குனரிடமிருந்தா;

(ii) கட்டுப்படுத்தும் கொடைமுனைவு மீது விலைக்குறிப்பு அடிப்படையில் அதிக நிறையேற்றம் வைத்துள்ளபோது, கட்டுப்படுத்துவதா அல்லது கட்டுப்படுத்தாத. மற்றும்

(ii) பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தால் தேவைப்படுத்தப்படின், நிதிக்கூற்றுக்களின் திகதியிலான சந்தைப் புறநிலைகளை பிரதிபலிக்கின்றனவா.

A129. வெளிவாரித் தகவல் மூலமொன்றிலிருந்தான தகவலினை கணக்காய்வுச் சான்றாக பயன்படுத்தும்போது, கணக்காய்வாளரின் உரிய கவனத்திற்கொள்ளல்கள், அந்த வெளிவாரித் தகவல் மூலத்தினால் பயன் படுத்தப்பட்ட செய்முறைகள், எடுகோள்கள், மற்றும் ஏனைய தரவுகளை விளங்கிக்கொள்வதற்கு, தகவல்களை பெறமுடியுமா அல்லது தகவல் போதுமான அளவு விபரமானதா என்பதாக இருக்கலாம். சில விடயங்கள் தொடர்பில் இது வரையறுக்கப்பட்டு இருப்பதுடன், அதன் விளைவாக மேற்கொள்ள வேண்டிய விதிமுறைகளின் தன்மை, காலம் மற்றும் அளவு பற்றிய கணக்காய்வாளரின் கவனத்திற் கொள்ளலில் தாக்கம் ஏற்படுத்தலாம். உதாரணமாக, விலையிடற் சேவைகள் அனேகமாக தனித்தனிக் காப்பாவணங்களுக்குப் பதிலாக சொத்துக்களின் வகுப்புரீதியாக அவற்றின் செய்முறைகள் மற்றும் எடுகோள்கள் பற்றிய தகவலை வழங்குகின்றன. தனித்தனிக் காப்பாவணங்களுக்காக தரகர் குறிக்கும் விலைகளை வழங்குகின்றபோது, தரகர்கள் அனேகமாக தமது உள்ளீடுகள் மற்றும் எடுகோள்கள் பற்றிய வரையறுக்கப்பட்ட தகவல்களை மாத்திரம் வழங்குவர். SLAuS 500 இன் பந்தி A34f ஆனது துணைத்தகவல்களின் வழங்கல் மீது வெளிவாரித் தகவல் மூலங்களின் வரையறைக்கான வழிகாட்டலை தருகின்றது.

முகாமையின் நிபுணர்

A130. முகாமையின் நிபுணரால் ஆக்கப்பட்ட அல்லது இனங்காணப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளுடன் தொடர்பு பட்ட எடுகோள்கள், கணக்கீட்டு மதிப்பீட்டினை ஆக்கும்போது முகாமையினால் பயன்படுத்தப்படுமாயின் அவை முகாமையின் எடுகோள்களாகும். அதன்படி, அத்தகைய

எடுகோள்களுக்குக் கணக்காய்வாளர் இந்த இலங்கைக் கணக்காய்வு நியமத்தின் பொருத்தமான தேவைப்பாடுகளைப் பிரயோகிப்பார்.

A131.முகாமையின் நிபுணரின் வேலைகள் கணக்கீட்டு மதிப்பீடுகளுடன் தொடர்புடைய செய்முறைகள், அல்லது தரவு மூலங்களின் பயன்பாட்டினை அல்லது நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கத்திற்கான புள்ளி மதிப்பீடு அல்லது வெளிக்காட்டல்களுடன் தொடர்புடைய முடிவுகள் அல்லது கண்டுபிடிப்புக்களை விருத்திசெய்தல் அல்லது வழங்குதலை உள்ளடக்குமேயானால், இந்த SLAuS இன் பந்திகள் 21-29 SLAuS 500 இன் பந்தி 8(c) இனைப் பிரயோகிப்பதற்கான வழிகாட்டுதல்களை வழங்கும்.

சேவை அமைப்புக்கள்

A132. SLAuS 402[54] ஆனது சேவை அமைப்புக்களால் வழங்கப்படும் சேவைகளை கணக்காய்வாளர் விளங்கிக் கொள்வதோடு தொடர்புபடுகின்றது. இது அகக் கட்டுப்பாடுகளையும் மதிப்பிடப்பட்ட பொருண்மையான பிறழ்கூற்று இடர்களுக்கான கணக்காய்வாளரின் பதிலிறுக்கைகளையும் உள்ளடக்கும். உரிமமானது கணக்கீட்டு மதிப்பீடுகளை ஆக்குவதற்கு சேவை அமைப்பொன்று வழங்கும் சேவைகளை பயன்படுத்தும் போது, இந்த SLAuS இனைப் பிரயோகிப்பதற்கான வழிகாட்டலை SLAuS 402 வழங்குகின்றது.

**சாத்தியமான முகாமைப் பக்கச்சார்பிற்கான காட்டிகள்** (பார்க்க பந்தி. 32)

A133. முகாமைப் பக்கச்சார்பானது கணக்குமட்டத்தில் இனங்காணுதல் கடினமாக அமைவதுடன், கணக்கீட்டு மதிப்பீடுகளின் குழுக்களை இனங்காணும்போது, அனைத்து கணக்கீட்டு மதிப்பீடுகளையும் ஒட்டுமொத்த ரீதியாக இனங்காணும்போது அல்லது பல கணக்கீட்டு காலங்கள் அவதானிக்கப்படும்போது மட்டுமே கணக்காய்வாளரால் இனங்காணப்படலாம். உதாரணமாக, நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கிய கணக்கீட்டு மதிப்பீடுகள் தனித்தனியாக நியாயமானவையாக இருந்து, ஆனால் முகாமையின் புள்ளி மதிப்பீடானது முகாமைக்கு சாதகமான நிதியறிக்கைப் பெறுபேற்றினை வழங்கக்கூடிய கணக்காய்வாளரின் வீச்சத்தின் ஒரு அந்தலையை நோக்கிய போக்கினைக் கொண்டுமிருப்பின், அத்தகைய சூழ்நிலைகள் சாத்தியமான முகாமைப் பக்கச்சார்பினைக் குறிக்கலாம்.

A134. கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்பான சாத்தியமான முகாமைப் பக்கச்சார்பு காட்டிகளுக்கு உதாரணங்கள் பின்வருவனவற்றினை உள்ளடக்கும்:

- சூழ்நிலைகளில் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளதாக முகாமை அகநிலையான மதிப்பீடொன்றினை மேற்கொண்டுள்ள போதான கணக்கீட்டு மதிப்பீட்டிலான மாற்றங்கள் அல்லது அவற்றினை உருவாக்குவதற்கான செய்முறைகளிலான மாற்றங்கள் ஆகியவற்றினை உள்ளடக்கலாம்.
- முகாமையின் நோக்கங்களுக்கு சாதகமான புள்ளி மதிப்பீட்டினை விளைவிக்கக்கூடிய கணிசமான எடுகோள்கள் அல்லது தரவுகளின் தெரிவு மற்றும் உருவாக்கம்.
- உத்தமநோக்கு (optimism) அல்லது பாதகநோக்கு (pessimism) படிவமைப்பினைக் காட்டக்கூடிய புள்ளி மதிப்பீட்டின் தெரிவு.

அத்தகைய காட்டிகள் இனங்காணப்படும்போது, அங்கு உறுதிப்பாட்டு மட்ட அல்லது நிதிக்கூற்று மட்ட பொருண்மையான பிறழ்கூற்று இடர் காணப்படலாம். முகாமைப் பக்கச்சார்பின் காட்டிகள் தனித்தனியான கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயபூர்வத்தன்மை மீதான முடிவுகளை உருவாக்குவதற்காக தாமாகவே பிறழ்கூற்றுக்களை உருவாக்காது. எனினும், சில சந்தர்ப்பங்களில் கணக்காய்வுச் சான்றுகள் முகாமைப் பக்கச்சார்பிற்கான காட்டிக்குப் பதிலாக பிறழ்கூற்றினை காட்டலாம்.

A135. சாத்தியமான முகாமைப்பக்கச்சார்புக் காட்டிகள், கணக்காய்வாளரின் இடர்மதிப்பீடு மற்றும் தொடர்புடைய பதிலிறுக்கைகள் இன்னும் பொருத்தமானவையா என்பது தொடர்பில்

கணக்காய்வாளரின் முடிவினை பாதிக்கக்கூடும். கணக்காய்வாளர் கணக்கீட்டு மதிப்பீடுகளை ஆக்குதலில் முகாமையின் சுயதீர்ப்பின் பொருத்தப்பாட்டினை மேலும் கேள்விக்குள்ளாக்குதல் உட்பட, கணக்காய்வின் ஏனைய விடயங்களில் அதன் தாக்கத்தினை கவனத்தில் கொள்ளவேண்டி ஏற்படலாம். மேலும், SLAuS 700 (மீளாக்கம்)[55] இல் கலந்தாயப்பட்டபடி நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்த ரீதியில் பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான கணக்காய்வாளரின் முடிவினை சாத்தியமான முகாமைப் பக்கச்சார்பின் காட்டிகள் பாதிக்கலாம்.

A136. அத்துடன், SLAuS 240 இனை பிரயோகிக்கும்போது, நிதிக்கூற்றுக்களில் உட்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளை ஆக்கும்போது முகாமையின் சுயதீர்ப்புக்கள் மற்றும் தீர்மானங்கள் மோசடி காரணமாக பொருண்மையான பிறழ்கூற்று இடரினை பிரதிபலிக்கும் சாத்தியமான பக்கச்சார்பினைக் காட்டுகின்றதா என்பதை மதிப்பாய்வு செய்ய கணக்காய்வாளர் கேட்கப்பட்டுள்ளார்[56]. மோசடியான நிதியறிக்கையிடல் என்பது அநேகமாக கணக்கீட்டு மதிப்பீடுகளை வேண்டுமென்றே குறைத்து அல்லது மிகைப்படுத்தி மதிப்பிடுதல் உட்பட, கணக்கீட்டு மதிப்பீடுகளில் வேண்டுமென்றே மேற்கொள்ளும் பிறழ்கூற்றின் ஊடாக நிறைவேற்றப்படுகின்றது. மோசடி இடர்க் காரணிகளாகவும் இருக்கக்கூடிய சாத்தியமான முகாமைப் பக்கச்சார்பின் காட்டிகள், கணக்காய்வாளரின் இடர் மதிப்பீடுகள், குறிப்பாக மோசடி இடர் மதிப்பீடுகள் மற்றும் அவற்றோடு தொடர்புபட்ட பதிலிறுக்கைகள் தொடர்ந்தும் பொருத்தமானவையா இல்லையா என்பதனை கணக்காய்வாளரின் மீள்மதிப்பீட்டினை ஏற்படுத்தும்.

**மேற்கொண்ட கணக்காய்வு விதிமுறைகளின் அடிப்படையில் ஒட்டுமொத்த மதிப்பாய்வு** (பார்க்க பந்தி. 33)

A137. கணக்காய்வாளர் திட்டமிட்டவாறு கணக்காய்வு விதிமுறைகளை மேற்கொள்வதனால், சேகரிக்கப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் ஏனைய திட்டமிட்ட கணக்காய்வு விதிமுறைகளின் தன்மை, காலத்தேர்வு அல்லது அளவினை கணக்காய்வாளர் மாற்றியமைக்க வழிவகுக்கும்.[57] கணக்கீட்டு மதிப்பீடுகளுடன் தொடர்பாக, இடர்மதிப்பீட்டிற்கு அடிப்டையாகவமைந்த தகவலிலிருந்து மாறுபட்ட கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்காக நிகழ்த்தப்படுகின்ற நடைமுறைகளினூடாக தகவலானது கணக்காய்வாளரது கவனத்திற்கு வரலாம். உதாரணமாக, மதிப்பிடப்பட்ட பொருண்மையான வழுக்கூற்று இடரருக்கான ஒரே காரணம் கணக்கீட்டு மதிப்பீட்டினை உருவாக்குதலிலுள்ள அகவயத்தன்மையே எனக் கணக்காய்வாளர் இனங்கண்டிருக்கலாம்.எனினும், மதிப்பிடப்பட்ட பொருண்மையான வழுக்கூற்று இடருக்கான பதிலிறுக்கையாக நடைமுறைகளை நிகழ்த்திக்கொண்டிருக்கையில் உண்மையில் சிந்தித்ததைக் காட்டிலும் கணக்கீட்டு மதிப்பீடு மிகவும் சிக்கலானது எனக் கணக்காய்வாளர் கண்டுபிடிக்கலாம். இது இடர் மதிப்பீட்டின் மறுமதிப்பீட்டினை கேள்விக்குள்ளாக்கலாம் எனவும் இனங்காணலாம். (உதாரணமாக, சிக்கற் தன்மையின் தாக்கம் காரணமாக இயல்பாக இணைந்த இடர் அதன் வீச்சத்தின் உயர்வான அந்தலை நோக்கி மீள்மதிப்பு செய்யவேண்டி ஏற்படலாம்.) இதன் காரணமாக மேலதிக கணக்காய்வு நடைமுறைகள் போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்றினை பெற்றுக்கொள்ள கணக்காய்வாளர் தேவைப்படுத்துவார் [43].

A138. ஏற்பிசைவு செய்யப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளுடன் தொடர்பாக, கணக்காய்வாளரது மதிப்பீட்டினது குறிப்பான கவனம் பிரயோகிக்கத்தகு நிதியறிக்கை சட்டக அளவுகோள்கள் அடையப்பட்டுள்ளனவா இல்லயைா என்பதன் மீதிருக்கலாம். ஒரு கணக்கீட்டு மதிப்பீடானது ஏற்பிசைவு செய்யப்படாத போது, மற்றும் இந்த நடைமுறை பொருத்தமானது எனக் கணக்காய்வாளர் முடிவுக்கு வருகின்ற போது, சில நிதியறிக்கைச் சட்டகங்கள் நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்களில் சூழ்நிலை பற்றிய வெளிக்காட்டல்களைத் தேவைப்படுத்தலாம்.

---

43 SLAuS 315 (மீளாக்கம்), பந்தி 31 ஐயும் பார்க்கவும்.

கணக்கீட்டு மதிப்பீடுகள் நியாயபூர்வமானவையா அல்லது பிறழ்வுகூற்றிற்கு ஆளானவையா என்பதைத் தீர்மானித்தல் (பார்க்க பந்தி. 9, 35)

A139. நிகழ்த்திய கணக்காய்வு விதிமுறைகளினதும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளினது அடிப்படையில், முகாமையினது புள்ளி மதிப்பீடு மற்றும் அதனுடன் தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் நியாயபூர்வமானவையா அல்லது பிறழ்வுகூறப்பட்டுள்ளனவா என்பதைத் தீர்மானிக்கையில்:

- கணக்காய்வுச் சான்றானது ஒரு வீச்சத்தினை ஆதரிக்கின்றபோது அந்த வீச்சமானது பரந்ததாக இருக்கலாம், மற்றும், சில சந்தர்ப்பங்களில் அது ஒட்டுமொத்த ரீதியான நிதிக்கூற்றுக்களின் பொருண்மையினது மடங்காகவிருக்கலாம் (பந்தி A125 ஐயும் பார்க்கவும்). அந்தச் சூழ்நிலைகளுக்கு ஒரு பரந்த வீச்சமானது பொருத்தமானதாகவிருந்தாலும், அந்த வீச்சத்தினுள் உள்ளடங்குகின்ற தொகைகளினது நியாயபூர்வதன்மையுடன் தொடர்பாக போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்று பெறப்பட்டுள்ளதா இல்லையா என்பதைக் கருத்திலெடுப்பது கணக்காய்வாளருக்கு முக்கியமானதென இது குறிகாட்டலாம்.

- முகாமையினது புள்ளி மதிப்பீட்டிலிருந்து வேறுபடுகின்ற புள்ளி மதிப்பீடொன்றினை கணக்காய்வுச் சாள்றனாது ஆதரிக்கலாம்.அத்தகைய சூழ்நிலைகளில், கணக்காய்வாளரது புள்ளி மதிப்பீட்டிற்கும் முகாமையின் புள்ளி மதிப்பீட்டிற்கும் இடையிலான வித்தியாசமானது பிறழ்கூறொன்றினை விளைவிக்கலாம்.

- முகாமையின் புள்ளி மதிப்பீட்டினை உள்ளடக்காத வீச்சமொன்றினைக் கணக்காய்வுச் சான்றானது ஆதரிக்கலாம். அத்தகைய சூழ்நிலைகளில், முகாமையின் புள்ளி மதிப்பீட்டிற்கும் மற்றும் கணக்காய்வாளரது வீச்சத்தின் அண்மித்த புள்ளிக்குமிடையிலான வேறுபாடானது வழுக்கூற்றாகும்.

A140. பந்திகள் A110–A114 ஆகியவை நிதிக்கூற்றுகளில உள்ளடக்கப்பட்டுள்ள முகாமையின் புள்ளி மதிப்பீடு மற்றும் அதனுடன் தொடர்புபட்ட வெளிப்படுத்தல்கள் ஆகியவற்றை மதிப்பிடுவதில் கணக்காய்வாளருக்கு உதவியான வழிகாட்டுதலை வழங்கும்.

A141. கணக்காய்வாளரது மேலதிக கணக்காய்வு விதிமுறைகள் முகாமை எவ்வாறு கணக்கீட்டு மதிப்பீட்டினை உருவாக்குகின்றது என்பதை மதிப்பிடுவதையோ அல்லது கணக்காய்வாளரது புள்ளி மதிப்பீடு அல்லது வீச்சமொன்றினை உருவாக்குவதையோ உள்ளடக்குகின்ற போது, பந்திகள் 26(b) மற்றும் 29(b) க்கு அவைாக மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையினை விபரிக்கின்ற வெளிக்காட்டல்களையும் மற்றும் பந்தி 31 க்கு அமைவாக ஏனைய வெளிப்படுத்தல்களையும் பற்றிய போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினைக் கணக்காய்வாளர் பெற்றுக்கொள்ளத் தேவைப்படுத்தப்பட்டுள்ளார்.அதன் பின் பந்தி 35க்கு அமைவாக, கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்படைய வெளிப்படுத்தல்கள் அகியவை பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தின் நியாயபூர்வமாகவுள்ளனவா அல்லது பிறழ்வு கூறப்பட்டுள்ளனவா என்பதற்கான ஒட்டுமொத்த மதிப்பீட்டின் ஒரு பகுதியாக வெளிப்படுத்தல்களைப் பற்றிப் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளைக் கருத்தில் கொள்வார்.

A142. SLAuS 450 ஆனது அளவுசாரா வெளிப்படுத்தல்களுடன்[44] தொடர்பாகவும் மற்றும் வெளிப்படுத்தல்களிலுள்ள பிறழ்கூற்றுக்கள் மோசடிக்கான குறிகாட்டியாக.[45] அமையும் போதான வழிகாட்டுதலை வழங்குகின்றது.

---

44 SLAuS 450, பந்தி A17

45 SLAuS 450, பந்தி A22

A143. உண்மையான முன்னிலைப்படுத்தல் சட்டகத்திற்கமைவாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது, நிதிக்கூற்றுக்கள் நேர்மையான முன்னிலைப்படுத்தலை[46] அடைந்தனவா என்பது பற்றிய கணக்காய்வாளரது மதிப்பீடானது ஒட்டுமொத்த முன்னிலைப்படுத்தல், கட்டமைப்பு, மற்றும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கம், மற்றும் குறிப்புக்களை அடக்கிய நிதிக்கூற்றுக்கள் நேர்மையான முன்னிலைப்படுத்தலை அடைந்து கொள்ளும் விதத்தில் ஊடுசெயல்கள் மற்றும் நிகழ்வுகளை முன்னிலைப்படுத்துகின்றனவா என்பதையும் உள்ளடக்கும். உதாரணமாக, கணக்கீட்டு மதிப்பீடொன்றானது அதிகளாவான மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டிருக்கும் போது, உண்மையான முன்னிலைப்படுத்தலை அடைந்து கொள்வதற்கு மேலதிக வெளிக்காட்டல்கள் அவசியமானவை எனக் கணக்காய்வாளர் தீர்மானிக்கலாம். அத்தகைய வெளிக்காட்டல்களை முகாமையானது உள்ளடக்காத போது, நித்தகூற்றுக்கள் பொருண்மையாகப் பிறழ்வுகூறப்பட்டுள்ளன எனக் கணக்காய்வாளர் முடிவுக்கு வரலாம்.

A144. SLAuS 705 (மீளாக்கம்)[47] ஆனது நிதிக்கூற்றுக்களிலுள்ள முகாமையின் வெளிப்படுத்தல்கள் போதாதென கணக்காய்வாளர் நம்பும்போது கணக்காய்வாளரின் அபிப்பிராயத்தில் தாக்கங்களுக்கான வழிகாட்டலை வழங்குகின்றது. இது உதாரணமாக, மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையுடன் தொடர்பானவற்றை உள்ளடக்கும்.

**எழுத்துமூலப் பிரதிநிதித்துவங்கள்** (பார்க்க பந்தி. 37)

A145. குறிப்பிட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளைப் பற்றிய எழுத்து மூலப் பிரதிநிதித்துவமானது பின்வரும் பிரதிநிதித்துவங்களை உள்ளடக்கலாம்:

- கணக்கீட்டு மதிப்பீடுகளை உருவாக்கும் போது மேற்கொள்ளப்பட்ட கணிசமான தீர்மானங்கள் முகாமைக்குத் தெரிந்த அனைத்துப் பொருத்தமான தகவலையும் கணக்கிலெடுத்தமைக்கானது.
- கணக்கீட்டு மதிப்பீடுகளை உருவாக்கும்போது முகாமை உபயோகித்த செய்முறைகள், எடுகோள்கள், மற்றும் தரவு ஆகியவற்றின் தெரிவு அல்லது பிரயோகத்தின் நிலைத்தன்மை மற்றும் பொருத்தப்பாட்டுத்தன்மையைப் பற்றியது.
- கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் வெளிப்படுத்தல்களுக்குத் தேவைப்படுகின்ற போது, உரிமத்தின் சார்பாக சிறப்பான காரணகாரியங்களை முன்னெடுப்பதற்கான முகாமையின் எண்ணம் மற்றும் இயலுமையை எடுகோள்கள் பொருத்தமான முறையில் பிரதிபலிக்கின்றன என்பதற்கானது.
- மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையினை விபரிக்கின்ற வெளிப்படுத்தல்களையும் உள்ளடக்கிய கணக்கீட்டு மதிப்பீடுகளுடன் தொடர்புடைய வெளிப்படுத்தல்கள், முழுமையாகவும் பிரயோகத்தில் உள்ள நிதியறிக்கைச் சட்டகத்தின் உள்ளடக்கத்திற்கமைய நியாயபூர்வமானவைாகவும் உள்ளன என்பதற்கானது .
- கணக்கீட்டு மதிப்பீடுகளை உருவாக்கும் போது பொருத்தமான சிறப்புத்திறன்கள் அல்லது நிபுணத்துவங்கள் ஆகியவை பிரயோகிப்பட்டமைக்கானது.
- நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் ஆகியவற்றில் செம்மையாக்கலைத் தேவைப்படுத்துகின்ற பின்னைய நிகழ்வுகள் எவையும் இடம்பெறவில்லை என்பதற்கானது.
- கணக்கீட்டு மதிப்பீடுகள் நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு அல்லது வெளிப்படுத்தல் செய்யப்படாத போது, பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தின் ஏற்பிசைவு அல்லது வெளிக்காட்டலுக்கான அளவுகோல்கள் எதிர்கொள்ளப்படாமைக்கான முகாமையின் தீர்மானத்தினது பொருத்தப்பாட்டுத் தன்மை பற்றியது.

---

46 SLAuS 700 (மறுசீரமைக்கப்பட்டது), பந்தி 14

47 SLAuS 705 (மறுசீரமைக்கப்பட்டது), பந்திகள் 22–23

**ஆளுமை பாரப்படுத்தப்பட்டோர், முகாமை அல்லது ஏனைய பொருத்தமான தரப்பினருடனான தொடர்பாடல்** (பார்க்க பந்தி. 38)

A146. SLAuS 260 (மீளாக்கம்) இனை பிரயோகிக்கும்போது கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் வெளிக்காட்டல் தொடர்பாக உரிமத்தினது கணக்கீட்டு விதிமுறைகளின் கணிசமான அளவுசாரா விடயங்களைப் பற்றிய கணக்காய்வாளரது எண்ணங்களை கணக்காய்வாளர் ஆளுமை பாரப்படுத்தப்பட்டோருடன் தொடர்பாடல் செய்வார்.[48] பின்னிணைப்பு 2 கணக்காய்வாளர் ஆளுமை பாரப்படுத்தப்பட்டோருடன் தொடர்பாடல் செய்கையில் கருத்திலெடுக்கக்கூடிய கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்புடைய விடயங்களை உள்ளடக்குகின்றது.

A147. கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டுக் குறைநிலைகளை ஆளுமை பாரப்படுத்தப்பட்டோருடன் எழுத்துமூலமாகத் தொடர்பாடல் செய்வதற்கு SLAuS 265 கணக்காய்வாளரை தேவைப்படுத்துகின்றது.[49] அத்தகைய குறைநிலைகள் பின்வருவனவற்றின் மீதான கட்டுப்பாடுகளுடன் தொடர்புடையவற்றை உள்ளடக்கலாம்:

(a) கணிசமான கணக்கீட்டுக் கொள்கைகளின் தெரிவு மற்றும் பிரயோகம், மற்றும் செய்முறைகள், எடுகோள்கள் மற்றும் தரவு ஆகியவற்றின் தெரிவு மற்றும் பிரயோகம்

(b) இடர்முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய முறைமைகள்

(c) தரவு ஒருமைப்பாடு, இது தரவு வெளியார்ந்த தகவல் மூலத்திலிருந்து பெறப்பட்ட தகவலையும் உள்ளடக்குகின்றது மற்றும்

(d) மாதிரியின் உபயோகம், அபிவிருத்தி மற்றும் சோதனை, இது வெளிவாரி வழங்குனரிடமிருந்து பெறப்பட்ட மாதிரிகள் மற்றும் தேவைப்படுகின்ற ஏதேனும் செம்மையாக்கல்களை உள்ளடக்கும்.

A148. ஆளுமை பாரப்படுத்தப்பட்டோருடனான தொடர்பாடலுக்கும் மேலதிகமாக, ஒழுங்குபடுத்துனர்கள் அல்லது புத்திசாதுார்ய மேற்பார்வையாளருடன் நேரடியாகத் தொடர்பாடல் செய்வதற்கு கணக்காய்வாளர் அனுமதியளிக்கப்பட்டுள்ளார் அல்லது தேவைப்படுத்தப்பட்டுள்ளார். அத்தகைய தொடர்பாடலானது கணக்காய்வினூடாக அல்லது கணக்காய்வினைத் திட்டமிடுதல் அல்லது கணக்காய்வு அறிக்கையை இறுதியாக்குதல் போன்ற சில குறிப்பான கணக்காய்வுப் படிநிலைகளுக்கும் உபயோகமானதாகும். உதாரணமாக, சில வழக்காறுகளின் போது, ஏனைய ஒழுங்குபடுத்துனர்கள் உரிமத்தினது கிரய மதிப்பீடுகளை உள்ளடக்கிய முக்கிய விடயங்களுக்கான கணக்காய்வாளரது எண்ணங்களை விளங்கிக் கொள்ள முனைகையில், நிதி நிறுவன ஒழுங்குபடுத்துனர்கள், நிதிக்கருவிகளின் செயற்பாடுகள், தொழிற்படாத சந்தையின் நிதிக்கருவிகளை பெறுமதியிடுவதிலுள்ள சவால்கள், எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புகள், மற்றும் காப்புறுதி ஒதுக்கங்கள் ஆகியவற்றின் மீதான கட்டுப்பாடுகளின் தொழிற்பாடு மற்றும் வினைதிறன் ஆகியவற்றைப்பற்றிய தகவலைப் பகிர்ந்து கொள்வதற்காக கணக்காய்வாளருடன் ஒத்திசைய முனைவார்கள். இந்தத் தொடர்பாடலானது பொருண்மையான வழுக்கூற்றுக்களுக்கான இடர்களை இனங்காணுதல், மதிப்பிடுதல் மற்றும் பதிலளித்தலில் கணக்காய்வாளருக்கு உதவியாக அமையும்.

---

48 SLAuS 260 (மறுசீரமைக்கப்பட்டது), பந்தி 16(a)

49 SLAuS 265, பந்தி 9

**ஆவணப்படுத்தல்** (பார்க்க பந்தி. 39)

A149. SLAuS 315 (மீளாக்கம்)[50] மற்றும் SLAuS 330[51] ஆகியவை உரிமத்தைப் பற்றிய கணக்காய்வாளரது விளங்கிக்கொள்ளல்கள், இடர்மதிப்பீடுகள் மற்றும் மதிப்பிடப்பட்ட இடர்களுக்கான பதிலிறுக்கைகள் ஆகியவற்றை ஆவணப்படுத்துவதற்கான தேவைப்பாடுகளையும் வழிகாட்டல்களையும் வழங்குகின்றன. இந்த வழிகாட்டல்கள் SLAuS 230 இலுள்ள தேவைப்பாடுகள் மற்றும் வழிகாட்டல்களினை அடிப்படையாகக் கொண்டவையாகும்.[52] கணக்கீட்டு மதிப்பீடுகளின் கணக்காய்வின் நோக்கத்தில், கணக்கீட்டு மதிப்பீடுகளுடன் தொடர்புடைய உரிமத்தினையும் அதன் சூழலையும் பற்றிய கணக்காய்வாளரது புரிந்துணர்வின் முக்கிய மூலகங்களை பற்றிய கணக்காய்வு ஆவணப்படுத்தலைத் தயாரிப்பதற்குக் கணக்காய்வளர் தேவைப்படுத்தப்பட்டுள்ளார். இதற்கு மேலாக, கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்பாக மதிப்பிடப்பட்ட பொருண்மையான பிறழ்கூற்று இடர்களைப் பற்றிய கணக்காய்வாளரது தீர்மானங்கள், ஆளுமை பாரப்படுத்தப்பட்டோருடனான மற்றும் முகாமையுடனான தொடர்பாடலை ஆவணப்படுத்துவதன் மூலமாக வலுவூட்டப்படலாம்.

A150. SLAuS 330 க்கு ஒத்திசைவாக, உறுதிப்பாட்டு மட்டத்தில் மதிப்பிடப்பட்ட பொருண்மையான பிறழ்கூற்று இடர்களுக்கும் கணக்காய்வாளரது மேலதிகக் கணக்காய்வு நடைமுறைகளுக்கும் உள்ள பிணைப்பினை ஆவணப்படுத்தலில், உறுதிப்பாட்டு மட்டத்தில் மதிப்பிடப்பட்ட பொருண்மையான பிறழ்கூற்றுக்களுக்காக வழங்கப்பட்ட காரணங்களை கருத்திலெடுப்பதற்கு இந்த SLAuS கணக்காய்வாளரை தேவைப்படுத்துகின்றது. அத்தகைய காரணங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளார்ந்த இடர்க்காரணிகளுடன் அல்லது கட்டுப்பாட்டு இடருக்கான கணக்காய்வாளரது மதிப்பீட்டுடன் தொடர்புபடலாம். எனினும், ஒவ்வொரு கணக்கீட்டு மதிப்பீட்டுடனும் தொடர்பாக பொருண்மையான பிறழ்கூற்று இடர்களை இனங்காண்பதிலும் மதிப்பீடு செய்வதிலும் ஒவ்வொரு உள்ளார்ந்த இடர்க்காரணிகளும் எவ்வாறு கருத்திலெடுக்கப்பட்டன என்பதை ஆவணப்படுத்துவதற்குக் கணக்காய்வாளர் தேவைப்படுத்தப்படவில்லை.

A151. கணக்காய்வாளர் பின்வருவனற்றை ஆவணப்படுத்துவதைக் கருத்திலெடுக்கலாம்:

- முகாமையின் செய்முறையின் பிரயோகமானது சிக்கலான மாதிரியமைப்பினை ஈடுபடுத்துகையில், முகாமையின் தீர்மானங்கள் நிலையாகவுள்ளனவா என்பதையும், பொருத்தமான போது குறித்த மாதிரியின் வடிவமைப்பு பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தின் அளவீட்டு நோக்கங்களை எதிர்கொண்டுள்ளதா என்பதைப் பற்றியும் ஆவணப்படுத்தல்.

- செய்முறைகள், கணிசமான எடுகோள்கள், அல்லது தரவினது தெரிவு மற்றும் பிரயோகமானது சிக்கல் தன்மையினால் அதிகவில் பாதிப்படையும் போது, இடர் மதிப்பீட்டு நடைமுறைகளை மேற்கொள்ள, அத்தகைய இடர்களுக்கு பதிலிறுக்கையாக நடைமுறைகளை வடிவமைப்பதற்கு, அல்லது சேகரிக்கப்பட்ட கணக்காய்வுச் சான்றினை மதிப்பிடுவதற்கு சிறப்பான திறன்கள் தேவைப்படுமா என்பதைப்பற்றிய கணக்காய்வாளரது தீர்மானமானத்திற்கான ஆவணப்படுத்தல். இத்தகைய சூழ்நிலைகளில், தேவைப்படுத்தப்படுகின்ற திறன்கள் அல்லது அறிவானது எவ்வாறு பிரயோகிக்கப்பட்டது என்பதையும் ஆவணப்படுத்துதல் உள்ளடக்கும்.

A152. கணக்காய்வாளரது தொழில்சார் ஐயத்தின் பிரயோகத்தினை ஆவணப்படுத்துவதற்கு ஒரு வழிமுறை இல்லையென்றாலும், கணக்காய்வு ஆவணப்படுத்தலானது கணக்காய்வாளரது தொழில்சார் ஐயப்பாடான மனநிலையின் பிரயோகத்திற்கான சான்றினை வழங்கலாமென SLAuS 230 இன் பந்தி A7 குறிப்பிடுகின்றது. உதாரணமாக, கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்பாக, முகாமையின் உறுதிப்பாட்டுக்கு சாதகமான மற்றும் முரண்படுகின்ற சான்றுகளைக்

[50] SLAuS 315 (மறுசீரமைக்கப்பட்டது), பந்திகள் 32 மற்றும் A152–A155

[51] SLAuS 330, பந்திகள் 28 மற்றும் A63

[52] SLAuS 230, பந்தி 8(c)

கணக்காய்வுச் சான்றுகள் உள்ளடக்குகின்ற போது, ஆவணப்படுத்தலானது அத்தகைய சான்றுகளைக் கணக்காய்வாளர் எவ்வாறு மதிப்பிட்டார் என்பதையும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றின் போதுமான பொருத்தமான தன்மையைப் பற்றிய முடிவுக்கு வருவதில் உருவாக்கப்பட்ட தொழில்சார் தீர்மானமானத்தினையும் உள்ளடக்கலாம். கணக்காய்வாளரது தொழில்சார் ஐயத்தினது பிரயோகத்திற்கு ஆவணப்படுத்தலினால் சான்று வழங்கக்கூடிய, இந்த SLAuS இலுள்ள ஏனைய தேவைப்பாடுகளுக்கான உதாரணங்கள் பின்வருவனவற்றினை உள்ளடக்கலாம்:

- உரிமத்தினது நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டிய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் வெளிப்படுத்தல்களுக்கான கணக்காய்வாளரது சொந்த எதிர்பார்ப்புகளை விருத்தி செய்வதில் ஒரு புரிந்துணர்வினைக் கணக்காய்வாளர் எவ்வாறு பிரயோகித்துள்ளார் என்பதுடன் முகாமையால் தயாரிக்கப்பட்ட உரிமத்தின் நிதிக்கூற்றுக்களுடன் இந்த எதிர்பார்பார்ப்பு எவ்வாறு ஒப்பிடப்படும் என்பதுடனும் தொடர்புடைய பந்தி 13(d);

- சாதகமாக அமையக்கூடியவற்றை பெற்றுக்கொள்வதை நோக்கிய அல்லது முரண்படுகின்றவற்றை தவிர்ப்பதை நோக்கிய பக்கச்சார்பற்ற விதத்தில் போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்றினை பெற்றுக்கொள்வதற்காக வடிவமைக்கவும் மற்றும் நிகழ்த்தப்படவும் வேண்டிய மேலதிக கணக்காய்வு நடைமுறைகளை தேவைப்படுத்துகின்ற பந்தி

- சாத்தியமான முகாமைப் பக்கச்சார்பிற்கான குறிகாட்டிகளை விபரிக்கின்ற பந்திகள் 23(b), 24(b), 25(b) மற்றும் 32; மற்றும்,

- சாதகமான மற்றும் முரண்படுகின்ற அனைத்து பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளுக்குமான கணக்காய்வாளரது கருதுகோள்களை விபரிக்கின்ற பந்தி 34.

**பின்னிணைப்பு 1**

(பார்க்க பந்தி. 2, 4, 12(c), A8, A66)

## இயல்பாக இணைந்த இடர்க்காரணிகள்

**அறிமுகம்**

1. கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிக்காட்டல்களுக்காக உறுதிப்பாட்டு மட்டத்தில் மதிப்பிடப்பட்ட பொருண்மையான பிறழ்கூற்று இடர்களை இனங்காணல், மதிப்பிடல், மற்றும் பதிலிறுத்தல் ஆகியவற்றில், கணக்கீட்டு மதிப்பீடு எந்தளவுக்கு மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டது என்பதையும், கணக்கீட்டு மதிப்பீடுகளை ஆக்கும்போது உபயோகித்த செய்முறைகள், எடுகோள்கள், மற்றும் தரவுகள் ஆகியவற்றின் தெரிவு மற்றும் பிரயோகம் ஆகியவையும், நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்காக முகாமையின் புள்ளி மதிப்பீடு மற்றும் அதனுடன் தொடர்புடைய வெளிக்காட்டல் ஆகியவையும் எந்தளவுக்கு சிக்கல், அகவயத்தன்மை, அல்லது ஏனைய இயல்பாக இணைந்த இடர்க் காரணிகளால் பாதிப்படையும் என்பதையும் கருத்திலெடுப்பதற்கு இந்த SLAuS கணக்காய்வாளரைத் தேவைப்படுத்துகின்றது.

2. கணக்கீட்டு மதிப்பீடொன்று தொடர்பாக இயல்பாக இணைந்த இடர் என்பது கட்டுப்பாடுகளைக் கருத்திலெடுப்பதற்கு முன்பாக, பொருண்மையான பிறழ்கூற்றுக்கு கணக்கீட்டு மதிப்பீட்டினைப் பற்றிய உறுதிப்பாட்டின் மாறுந்தகவாகும். உள்ளார்ந்த இடரானது கணக்கீட்டு மதிப்பீட்டினை பொருத்தமாக ஆக்குவதிலுள்ள சவால்களுக்கு அதிகரிப்பினை வழங்கக்கூடிய இயல்பாக இணைந்த இடர்க்காரணி களிலிருந்து ஏற்படுவதாகும். கணக்கீட்டு மதிப்பீடுகளை உருவாக்குதல் மற்றும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்காக முகாமையின் புள்ளி மதிப்பீட்னையும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களையும் தெரிவு செய்தல் ஆகிய நோக்கத்திற்காக, மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை. அகவயத்தன்மை. மற்றும் சிக்கற்தன்மைக்கான இயல்பாக இணைந்த இடர்க் காரணிகளின் தன்மை, மற்றும் அவற்றுக்கிடையிலான இடைத்தொடர்புகளைப் பற்றிய மேலதிக விளக்கத்தினை இந்தப் பின்னிணைப்பு வழங்குகின்றது.

**அளவீட்டு அடிப்படை**

3. நிதிக்கூற்று விடயங்களின் தன்மை, புறநிலை மற்றும் சந்தர்ப்பங்கள் பொருத்தமான அளவீட்டுக் காரணிகளுக்கு அதிகரிப்பை வழங்கும். ஒரு விடயத்தின் கிரயம் அல்லது விலையானது நேரடியாக அவதானிக்கப்பட முடியாதபோது, பொருத்தமான செய்முறையினைப் பிரயோகிப்பதன் மூலமாகவும் மற்றும் பொருத்தமான எடுகோள்களதும் தரவினதும் உபயோகத்தின் மூலமாகவும் கணக்கீட்டு மதிப்பீடொன்று ஆக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்படும். தொடர்புடைய பெறுமதியிடல் காரணிகள் அந்த விடயத்தின் அளவீட்டு அடிப்படையில் கிரயம் அல்லது விலையினை எவ்வாறு பாதிக்கும் என்பதுபற்றிய கிடைக்கும் தகவலைப் பிரதிபலிப்பதற்காக செய்முறையானது பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தினால் குறித்துரைக்கப்பட்டிருக்கலாம், அல்லது முகாமையினால் தெரிவு செய்யப்பட்டிருக்கலாம்.

**மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை**

4. அளவீட்டின் துல்லியத்தின் பற்றாக்குறைக்கான மாறுந்தகவானது அநேகமாக கணக்கீட்டுச் சட்டகத்தில் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையாகக் கருதப்படும். இந்த SLAuS இல் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையானது அளவீட்டின் துல்லியத்திலுள்ள உள்ளார்ந்த குறைநிலைக்கான மாறுந்தகலொன்றாகவே வரையறை செய்யப்பட்டுள்ளது. நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்பட்ட அல்லது வெளிப்படுத்திய நிதிக்கூற்றின் ஒருவிடயத்திற்கு தேவைப்படுகின்ற பணப்பெறுமதியானது கிரயம் அல்லது விலையின் நேரடியான அவதானத்தின் மூலமாக அளவிடப்படமுடியாத போதே இது எழுகின்றது. நேரடியான அவதானமானது சாத்தியமற்றதாகவுள்ள போது, தொடர்புடைய அளவீட்டு காரணிகளினது அவதானிக்கப்படக்கூடிய தரவினை உபயோகிப்பதன் மூலமாக குறித்த விடயத்தினது கிரயம்

அல்லது விலையினைப் பற்றிய கிடைப்பனவாகவுள்ள அளவினைப் பிரதிபலிக்கக்கூடிய ஒரு செய்முறையை பிரயோகிப்பதுவே அடுத்த மிகச்சிறந்த துல்லியமான அளவீட்டு நுட்பமாகும்.

5. எவ்வாறாயினும், அத்தகைய அறிவு அல்லது தரவினது கிடைப்பனவிலுள்ள வரையறைகள் அளவீட்டுச் செயன்முறைக்கான அத்தகைய உள்ளீடுகளின் உறுதிப்படுத்தப்படு தன்மையினை வரையறுப்பதோடு அதன்விளைவாக அளவீட்டு பெறுபேறுகளின் துல்லியத்தன்மையினையும் வரையறுக்கும். மேலும், அநேக கணக்கீட்டுச் சட்டகங்கள் கருத்திலெடுக்கப்பட வேண்டிய தகவலின்மீது பெற்றுக் கொள்ளும் நன்மையைவிட செலவு அதிகமாகவிருத்தல் போன்ற பிரயோக வரையறைகள் காணப்படலாமென இனங்காணப்பட்டுள்ளன. இத்தகைய வரையறைகளிலிருந்து எழுகின்ற அளவீட்டுத் துல்லியத்தன்மைக் குறைநிலையானது, உள்ளார்ந்த ரீதியானதாகும் ஏனென்றால், இது அளவீட்டு செயன்முறையிலிருந்து அகற்றப்பட முடியாததாகும். இதற்கமைய, இந்த வரையறைகள் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மைக்கான மூலங்களாகும். செய்முறை பொருத்தமாகப் பிரயோகிக்கப்பட்டாலும் மற்றும் இதன் காரணமாக, மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மைக்கு அல்லாமல் சாத்தியமான பொருண்மையான பிறழ்கூற்றுக்களுக்கான மூலங்களாக அமைவதனாலும் அளவீட்டுச் செயன்முறையில் நிகழக்கூடிய அளவீட்டு நிச்சயமற்ற தன்மையின் ஏனைய மூலங்கள், கோட்பாட்டு ரீதியிலாவது, வெளியேற்றப்பட இயலுமானவையாகும்.

6. சொத்து அல்லது பரிப்பின் விளைவான நிச்சயமற்ற எதிர்கால பொருளாதார நன்மைகளின் உட்பாய்வு அல்லது வெளிப்பாய்வுடன் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை தொடர்புபடுகின்ற போது, இந்த பாய்வுகளின் பெறுபேறுகள் நிதிக்கூற்றுக்களின் திகதிக்குப் பின்னரே அவதானிக்கப்படக் கூடியவையாகும். பிரயோகத்திலுள்ள அளவீட்டு அடிப்படைக்கு அமைவாகவும், நிதிக்கூற்று விடயங்களின் தன்மை, புறநிலை மற்றும் சூழ்நிலைகளுக்கு அமையவும், இந்த பெறுபேறு நிதிக்கூற்றுக்கள் இறுதிப் படுத்தப்படுவதற்கு முன்பாக நேரடியாக அவதானிக்கப்படக் கூடியவையாக இருக்கலாம் அல்லது பிந்திய திகதியொன்றில் மட்டுமே நேரடியக அவதானிக்கப்படக்கூடியதாக இருக்கலாம். சில கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கு நேரடியாக அவதானிக்கப்படக்கூடிய பெறுபேறு இல்லாமலுமிருக்கலாம்.

7. சில நிச்சயமற்ற வெளிப்பாடுகள் ஒரு தனி விடயமொன்றுக்கான அதிகளவான துல்லியத்தன்மையுடன் எதிர்வுகூறப்படுவதற்கு ஒப்பீட்டளவில் இலகுவானவையாக இருக்கலாம். உதாரணமாக, ஒரு உற்பத்தி இயந்திரமொன்றின் பயன்தரு ஆயுட்காலமானது அதன் சராசரியான ஆயட்காலத்தைப்பற்றிய போதுமான நுட்பத்தகவல்கள் கிடைக்கும்போது இலகுவாக எதிர்வுகூறப்பட முடியும். செயற்பாட்டு எடுகோள்களின் அடிப்படையிலான தனியொருவரது ஆயுட்கால எதிர்பார்க்கையைப் போன்று எதிர்கால வெளிப்பாட்டினை நியாயபூர்வமான துல்லியத்தன்மையுடன் எதிர்வுகூறுவது சாத்தியமற்றதாகவுள்ள போது, தனிநபர் குழுவொன்றிற்கான வெளிப்பாட்டினை எதிர்வு கூறுவது அதிகமான துல்லித்தன்மையுடன் சாத்தியமானதொன்றாகவே அமையலாம். அளவீட்டு அடிப்படையானது, சில சூழ்நிலைகளில், அளவீட்டு நோக்கத்திற்காக, உள்ளார்ந்த மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையினைக் குறைக்கக்கூடிய தொகுதி மட்டத்தினை பொருத்தமான அலகாகக் குறிப்பிடலாம்.

**சிக்கல் தன்மை**

8. சிக்கல் தன்மையானது (குறிப்பாக: கட்டுப்பாடுகளைக் கருத்தில் கொள்வதற்கு முன்னராக, கணக்கீட்டு மதிப்பீடுகளை உருவாக்குவதற்கான செயன்முறையில் உள்ளார்ந்த சிக்கல் தன்மை) இயல்பாக இணைந்த இடருக்கு அதிகரிப்பினை வழங்கும். உள்ளார்ந்த சிக்கல்த்தன்மையானது பின்வருவனவற்றின் போது எழலாம்:

- தமக்கிடையே அதிகமான அல்லது பல நேரான தொடர்புமுறையை கொண்டுள்ள பல அளவீட்டு காரணிகள் காணப்படுதல்.

- பல்வேறு தரவுத் தொகுதிகளைத் தேவைப்படுத்துகின்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அளவீட்டுக் காரணிகளுக்காக பொருத்தமான பெறுமதிகளைத் தீர்மானித்தல்

- கணக்கீட்டு மதிப்பீடுகளை உருவாக்குவதற்கு அதிக எடுகோள்கள் தேவைப்படுதல், அல்லது தேவைப்படுத்தப்படுகின்ற எடுகோள்களுக்கு இடையில் இணைவுத்தன்மை காணப்படுதல்.

- உபயோகப்படுத்தவுள்ள தரவு அடையாளங் காண்பதற்கு உள்ளார்ந்த ரீதியாக கடினமானதாகவும் கைப்பற்றுவதற்கு, அடைவதற்கு அல்லது விளங்கிக் கொள்வதற்கு கடியமானதாகவிருத்தல்.

9. சிக்கற்தன்மையானது செய்முறையின் சிக்கல்தன்மையுடன் தொடர்பானதாக இருப்பதுடன், அதனைப் பிரயோகிப்பதற்கு உபயோகிக்கப்பட்ட கணித்தல் செயன்முறை அல்லது மாதிரியின் சிக்கற் தன்மையுடன் தொடர்புபடலாம். உதாரணமாக, மாதிரியிலுள்ள சிக்கற்தன்மையானது நிகழ்தகவு-அடிப்படையிலான பெறுமதியிடல் கோட்பாடுகளை அல்லது நுட்பங்ளை பிரயோகிக்கும் தேவையினை, மற்றும் நிச்சயமற்ற எதிர்கால பெறுபேறுகளை எதிர்வுகூறுவதற்காக தேர்வுநிபந்தனை விலையிடல் சூத்திரம் (option pricing formulae) அல்லது சாத்திய ஆய்வு நுட்பங்களை (simulation techniques) அல்லது கருதுகோள் நடத்தைகளை (hypothetical behaviors) பிரயோகிப்பதற்கான தேவையினை பிரதிபலிக்கலாம். இதேபோன்று, கணித்தல் செயன்முறைகள் பல்வேறு மூலங்களிலிருந்தான தரவினை, அல்லது எடுகோள்கள் அல்லது அதிநவீன கணித்தல் அல்லது புள்ளிவிபரவியல் கோட்பாடுகளின் ஆக்கத்திற்கு வலுச்சேர்க்கின்ற வெவ்வேறு தரவுத் தொகுதிகள் ஆகியவற்றினைத் தேவைப்படுத்தலாம்.

10. கணக்கீட்டு மதிப்பீடுகளை ஆக்கும்போது அல்லது முகாமைத்துவ நிபுணரொருவரைப் பணிக்கமர்த்தும் போது விசேட தேர்ச்சிகளை அல்லது அறிவினை முகாமை பிரயோகிப்பதற்கான சாத்தியமான சிக்கற்தன்மையானது எந்தளவுக்கு அதிகமாகவுள்ளதோ, அந்தளவுக்கு அதிகமானதாக, அமையலாம். உதாரணமாக பின்வருவனவற்றின் போதான நிலமைகளைக் குறிப்பிடலாம்:

- அளவீட்டு அடிப்படைக்கான மற்றும் குறிக்கோள்கள்களுக்கான அல்லது பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தின் ஏனைய தேவைப்பாடுகளுக்கான நோக்கத்தில் பயன்படுத்தப்படக் கூடிய பெறுமதியிடல் கோட்பாடுகள் மற்றும் நுட்பங்கள் மற்றும் அத்தகைய கோட்பாடுகளை அல்லது நுட்பங்களை எவ்வாறு பிரயோகிக்கலாம் என்பதற்கான நிலமைகள்;

- கணக்கீட்டு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும் நிதிக்கூற்று உருப்படிகளின் அளவீட்டு அடிப்படையின் தன்மை, தன்மை, புறநிலை, சூழல் தரப்பட்டுள்ளபோது, அதனுடன் தொடர்புபட்ட அடிப்படையாக அமைந்த மதிப்பீட்டு பண்புகள்; அல்லது

- உள்ளக மூலங்களிலிருந்து பொருத்தமான தரவு மூலங்களை இனங்காணுதல் (பொது அல்லது துணைப் பேரேடுகளுக்கு வெளியிலிருந்தான மூலங்களிலிந்தானவை அடங்கலாக), அத்தகைய மூலங்களிலிருந்து தரவினை பெற்றுக்கொள்வதிலுள்ள சாத்தியமான சாவால்களை எவ்வாறு விபரிப்பது என்பதைத் தீர்மானித்தல், அல்லது செய்முறையைப் பிரயோகிக்கும் போது அதன் ஒருமைப்பாட்டினை பேணுதல், அல்லது தரவினது பொருத்தப்பாடு மற்றும் நம்பகத்தன்மையினை விளங்கிக்கொள்ளல்.

11. உதாரணமாக, பின்வரும் சூழ்நிலைகளின் போது தரவுடன் தொடர்புடைய சிக்கல்தன்மை, எழலாம்:

(a) தரவு பெற்றுக்கொள்வதற்கு கடினமானதாகவுள்ள போது, அல்லது பொதுவாக அடைய முடியாத ஊடுசெயல்களோடு அது தொடர்புபடுகின்றபோது. அத்தகைய தரவானது அடையப்படக் கூடியதாக இருந்தாலும், உதாரணமாக, வெளிவாரி தகவல் மூலமொன்றிலிருந்தானதாக அது இருக்கும் போது அந்த வெளிவாரித் தகவல் வளம் ஏதேனும் தகவல் செயன்முறைப்படுத்தல் செயன்முறையைப் பயன்படுத்தியிருந்தால் அதன் அடிப்படையான தரவு மூலங்களைப் பற்றிய போதுமான தகவலை

வெளிப்படுத்தியிருந்தாலன்றி, அந்தத் தரவினது பொருத்தப்பாடு மற்றும் நம்பகத்தன்மையினைக் கருத்தில்கொள்வது கடினமானதாகும்.

(b) ஒரு எடுகோளுக்கான ஆதரவினை விருத்தி செய்வதற்குப் பொருத்தமான, எதிர்கால நிபந்தனைகள் அல்லது நிகழ்வுகளைப் பற்றிய அதன் எண்ணங்களை ஒரு வெளிவாரித் தகவல் மூலத்திலிருந்தான தரவானது பிரதிபலிக்கின்ற போது, பகுத்தறிவினைப் பற்றிய வெளிப்படைத்தன்மை இல்லாமலும் அந்த எண்ணங்களை உருவாக்கும் போது கருத்திலெடுக்கப்பட்ட தகவல் இல்லாமலும் அதனை விளங்கிக் கொள்வது கடினமானதாகும்.

(c) சிக்கலான நிதிச் சாதனங்கள் அல்லது காப்புறுதி உற்பத்திகளை சம்பந்தப்படுத்தும் ஊடுசெயல்கள் பற்றிய சட்டரீதியான உடன்படிக்கைக் கட்டுறுப்புக்களை உரியமுறையில் விளங்கிக் கொள்வதற்கு தேவைப்படுபவை போன்ற, நுட்பரீதியாக சிக்கலான வணிகம் அல்லது சட்டக் கோட்பாடுகளைப் பற்றிய விளக்கத்தினைப் பெறுதல் தேவைப்படுத்துவதனால், சில வகையான தரவுகள் உள்ளார்ந்த ரீதியாக விளங்கிக்கொள்ள கடினமானவையாக இருக்கும் போது.

**அகவயத்தன்மை**

12. அகவயத்தன்மை என்பது (அதாவது கட்டுப்பாடுகளைக் கருத்தில் கொள்வதற்கு முன்னர் கணக்கீட்டு மதிப்பீடுகளை உருவாக்கும் செயன்முறையின் போது இயல்பாக இணைந்த அகவயத்தன்மை) பெறுமதியிடல் பண்புக்கூறுகளைப் பற்றி நியாயபூர்வமாகக் கிடைப்பனவாகவுள்ள அறிவு அல்லது தரவிலுள்ள உள்ளார்ந்த வரையறைகளைப் பிரதிபலிப்பதாகும். அத்தகைய வரையறைகள் காணப்படும் போது, சில தீர்மானங்களை மேற்கொள்வதற்கு தேவைப்படும் அடிப்படையை வழங்குவதன் மூலமாக, பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகமானது அகவயத்தன்மையின் அளவினை குறைக்கலாம். அத்தகைய தேவைப்பாடுகள், உதாரணமாக. அளவீடு, வெளிப்படுத்தல், கணக்கின் ஒரு அலகு, அல்லது கிரயக் காரணியினது பிரயோகம் ஆகியவற்றுடன் தொடர்புடைய உட்கிடையான அல்லது வெளிப்படையான நோக்கங்களை வகுக்கலாம். பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகமானது அத்தகைய தீர்மானங்களினது முக்கியத்துவத்தினை அவற்றுக்கான வெளிக்காட்டல்களினூடாக முன்னிலைப்படுத்தலாம்.

13. முகாமையின் தீர்மானம் அநேகமாக அகவயத்தன்மையை உள்ளடக்கும் பின்வருவனவற்றில் சிலவற்றை அல்லது எல்லாவற்றினையும் தீர்மானிக்கையில் பொதுவாகத் தேவைப்படலாம்:

- பிரயோக்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தின் தேவைப்பாடுகளின் கீழ் குறிப்பிடப்படாத அளவு வரை, கிடைக்கப்பெறும் அறிவு தொடர்பாக, மதிப்பீட்டு முறையில் பயன்படுத்தவுள்ள பொருத்தமான பெறுமதியிடல் அணுகுமுறைகள், கோட்பாடுகள், நுட்பங்கள், மற்றும் காரணிகள்;
- சாத்தியமான வேறுபட்ட தரவு மூலங்கள் இருக்கும்போது, மதிப்பீட்டுப் பண்புகள் அவதானிக்கக் கூடியதாக இருக்கும் அளவுக்கு, பயன்படுத்துவதற்கான பொருத்தமான தரவு மூலங்கள்;
- மதிப்பீட்டுபபுபண்புகள் அவதானிக்க முடியாத அளவுக்கு, உதாரணமாக சந்தைக் கருத்துக்கள் உட்பட, கிடைக்கப்பெறும் சிறந்த தரவுகள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய பொருத்தமான எடுகோள்கள் அல்லது எடுகோள்களின் வீச்சம்;
- முகாமையின் புள்ளி மதிப்பீடு தெரிவுசெய்யப்படவுள்ள நியாயமாக சாத்தியமான வெளிப்பாடு களின் வீச்சம் மற்றும் அந்த வீச்சத்துள் சில புள்ளிகள் பிரயோகிக்கத்தகு நிதியறிக்கையிடற் சட்டகத்தினால் தேவைப்படுத்தப்படும் அளவீட்டு அடிப்படையின் நோக்கங்களுடன் இசைவாக இருப்பதற்கான ஒப்பீட்டுச் சாத்தியம் மற்றும்

- முகாமையின் புள்ளி மதிப்பீட்டின் தெரிவும், நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்படவுள்ள தொடர்பு பட்ட வெளிக்காட்டல்களும்.

14. எதிர்கால நிகழ்வுகள் அல்லது புறநிலைகள் பற்றிய எடுகோள்களை மேற்கொள்ளுதல், சுயதீர்மானப் பயன்பாட்டினை சம்பந்தப்படுத்துவதுடன், அதன் கடினத்தன்மை அந்த நிகழ்வுகள் அல்லது புறநிலைகளின் நிச்சயமற்ற தன்மையின் அளவுடன் மாறுபடுகின்றது. நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் அல்லது புறநிலைகளை துல்லியமாக தீர்மானிக்கும் சாத்தியமானது, எந்தளவுக்கு அத்தகைய நிகழ்வுகள் அல்லது புறநிலைகள் கடந்தகால நிகழ்வுகள் மற்றும் புறநிலைகள், மற்றும் தொடர்புடைய பெறுபேறுகள் ஆகியவற்றினை உள்ளடக்கிய அறிவின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட முடியுமென்பதில் தங்கியிருக்கும். மேலே விபரித்தபடி, துல்லியத்தன்மையின் பின்னடைவானது மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மைக்கு வழிவகுக்கும்.

15. எதிர்கால பெறுபேறுகள் தொடர்பில், பெறுபேறுகளின் நிச்சயமற்ற பண்பிற்காக மட்டுமே எடுகோள்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். உதாரணமாக, ஐந்தொகைத் திகதியில் பொருட்கள் விற்பனைக்கான வருமதிகளின் சாத்தியமான சேத இழப்பீட்டினை அளவீடு செய்வதைக் கருத்தில் கொள்ளும் போது, வருமதியாகவுள்ள தொகை ஐயத்திற்கு இடமின்றி தீர்மானிக்கப்படக் கூடியதாகவும், தொடர்புடைய ஊடுசெயல் ஆவணங்களிலிருந்து நேரடியாக அவதானிக்கக் கூடியதாகவும் இருக்கலாம். சேத இழப்பின் காரணமாக எழும் ஏதேனும் நட்டத் தொகையே நிச்சயமற்றதாக அமையும். இந்தச் சந்தர்ப்பத்தில், அத்தகைய நட்டத்தின் சாத்தியம் மற்றும் தொகை மற்றும் காலம் ஆகியவற்றின் சாத்தியத்தைப் பற்றிய எடுகோள்கள் மட்டுமே தேவைப்படலாம்.

16. எவ்வாறாயினும், ஏனைய சந்தர்ப்பங்களில், ஒரு சொத்துடன் தொடர்புபட்ட உரிமைகளில் பொதிந்துள்ள காசுப்பாய்வுத் தொகை நிச்சயமற்றவையாக இருக்கலாம். அந்தச் சந்தர்ப்பங்களில், காசுப்பாய்வுகளுக்கு அடிப்படையாகவுள்ள உரிமைகள் மற்றும் சேதத்தின் காரணமான சாத்தியமான நட்டங்களை பற்றியே எடுகோள்கள் மேற்கொள்ளப்படவேண்டி ஏற்படலாம்.

17. எதிர்கால மாற்றங்கள் பற்றிய தற்போதைய போக்குகள் மற்றும் எதிர்பார்ப்புக்களுடன், கடந்தகால புறநிலைகள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய தகவலைக் கருத்தில் கொள்வது முகாமைக்கு அவசியமாகும். எதிர்கால பெறுபேறுகளை மதிப்பிடுகையில் இடைச்சொருகக்கூடிய மீளமீள நிகழும் வரலாற்றுப் போக்குகளை கோடிட்டுக் காட்டக்கூடிய தகவலை கடந்தகால புறநிலைகள் மற்றும் நிகழ்வுகள் வழங்குகின்றன. அத்தகைய வரலாற்றுத் தகவலானது காலப்போக்கில் (சுழற்சிகள் அல்லது போக்குகள்) அத்தகைய நடத்தைகளின் போக்குகளில் மாற்றங்களையும் காட்டலாம். அடிப்படையாகவுள்ள வரலாற்று போக்குகளின் நடத்தையானது எதிர்கால பெறுபேறுகளை மதிப்பிடுகையில் அவை உய்த்தறியப்பட்ட எதிர்வுகூறப்படக்கூடிய வகையில் மாற்றமடைந்து வருவதையும் காட்டலாம். வரலாற்றுப் போக்கிலுள்ள அத்தகைய நடத்தைகள் மாற்றங்களை அல்லது தொடர்புடைய சுழற்சிகள் அல்லது போக்குகளிலான மாற்றங்களை காட்டக்கூடிய தகவலினது ஏனைய வகைகளும் கிடைப்பனவாக இருக்கலாம். அத்தகை தகவலிற்கு எதிர்பார்க்கப்படும் பெறுமதியைப் பற்றிய கடினமான தீர்மானங்கள் தேவைப்படலாம்.

18. கணக்கீட்டு மதிப்பீடுகளை உருவாக்கும்போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களினது (ஈடுபடுத்தப்பட்டுள்ள அகவயத்தன்மையின் அளவினை உள்ளடக்கும்) தன்மை மற்றும் வீச்சமானது முகாமையின்படி, கணக்கீட்டு மதிப்பீடுகளை உருவாக்கும்போது பொருத்தமானதாக அமைகின்ற செயற்பாடுகளைப்பற்றிய தீர்மானங்களின் போதான முகாமைப் பக்கச்சார்பிற்கு வாய்ப்பாக அமையும். அதிகளவு சிக்கல் தன்மை அல்லது மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை அல்லது அவையிரண்டும் காணப்படும்போது, முகாமைப் பக்கச் சார்பிற்கான அல்லது மோசடிக்கான வாய்ப்பும் அதிகரிக்கலாம்.

**அகவயத்தன்மை மற்றும் சிக்கற்தன்மைக்கு மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையினது தொடர்பு**

19. கணக்கீட்டு மதிப்பீட்டினை மேற்கொள்ளும்போது உபயோகிக்கப்படக்கூடிய சாத்தியமான செய்முறைகள், தரவு மூலங்கள், மற்றும் எடுகோள்களின் இயல்பான மாறுந்தன்மையை

மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை அதிகரிக்கச் செய்யும். இது அகயவத்தன்மையில் அதிகரிப்பை ஏற்படுத்துவதால், கணக்கீட்டு மதிப்பீட்டை உருவாக்குவதில் சுயதீர்மானத்திற்கான தேவையை ஏற்படுத்தும். நிதிக் கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு பொருத்தமான செய்முறைகள் மற்றும் தரவு மூலங்களை தெரிவு செய்வதற்கான எடுகோள்களின் ஆக்கம், முகாமையின் புள்ளி மதிப்பீடு மற்றும் தொடர்புடைய வெளிக் காட்டல்களை தெரிவு செய்தலின்போதும் அத்தகைய சுயதீர்மானங்கள் தேவைப்படும். பிரயோகிக்கத்தகு நிதியறிக்கைச் சட்டகத்தின் ஏற்பிசைவு, அளவீடு, முன்னிலைப்படுத்தல் மற்றும் வெளிக்காட்டல் தேவைப்பாடுகளின் கண்ணோட்டத்தில், இத்தகைய தீர்மானம் மேற்கொள்ளப்படும். எனினும், இத்தகைய தீர்மானங்களுக்கு ஆதரவாக தேவையான அறிவு அல்லது தகவல்களின் கிடைப்பனவு மற்றும் கையடைகைக்கு வரையறைகள் இருப்பதன் காரணமாக, இவை இயல்பிலேயே அகவயத்தன்மை உடையவையாகும்.

20. அத்தகைய தீர்மானங்களின் அகவயத்தன்மை அவற்றினை மேற்கொள்ளும்போது தற்செயலான மற்றும் உள்நோக்கத்துடனான முகாமைப் பக்கச்சார்புக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும். நிதிக்கூற்றுக்களில் உட்படுத்துவதற்காக தயாரிக்கப்படும் தகவல்கள் நடுநிலையானதாக (i.e., பக்கச்சார்பற்றதாக) இருக்க வேண்டுமெனப் பல கணக்கீட்டுச் சட்டகங்கள் வலியுறுத்துகின்றன. கொள்கை ரீதியிலாவது, மதிப்பீட்டுச் செயன்முறையில் பக்கச்சார்பு நீக்கப்படக்கூடியதாக இருப்பினும், அகவயத் தன்மையை தெரிவிப்பதில் மேற்கொள்ளும் சுயதீர்மானங்களில் சாத்தியமான பக்கச்சார்பு மூலங்கள் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை மூலங்களாக அல்லாது சாத்தியமான பிறழ்கூற்று மூலங்களாகக் கொள்ளப்படும்.

21. கணக்கீட்டு மதிப்பீட்டின் ஆக்கத்தில் பயன்படுத்தப்படும் சாத்தியமான செய்முறைகள், தரவு மூலங்கள், மற்றும் எடுகோள்களின் இயல்பான மாறுந்தன்மையானது (பந்தி 19 இனைப் பார்க்கவும்), சாத்தியமான அளவீட்டு பெறுபேறுகளின் மாறுந்தன்மையிலும் அதிகரிப்பினை வழங்கும். முதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையின் அளவின் காரணமாக ஏற்படும் நியாயபூர்வமான சாத்தியமான பெறுபேறுகளின் வீச்சத்தின் அளவானது கணக்கீட்டு மதிப்பீட்டின் உணர்திறனாக கொள்ளப்படும். அளவீட்டு பெறுபேறுகளை தீர்மானிப்பதுடன், ஒரு மதிப்பீட்டு செய்முறையானது சாத்தியமான செய்முறைகள், தரவு மூலங்கள், மற்றும் எடுகோள்களின் இயல்பான மாறுந்தன்மையின் தாக்கத்தினை பகுப்பாய்வு செய்வதையும் உள்ளடக்கும் (உணர்திறன் பகுப்பாய்வு எனப்படும்.).

22. பிரயோகிக்கத்தகு நிதியறிக்கையிடற் சட்டகத்தினால் நேர்மையான முன்னிலைப் படுத்தலினை அடைதல் தேவைப்படும்போது, கணக்கீட்டு மதிப்பீடொன்றின் நிதிக்கூற்று வெளிப்படுத்தலொன்றினை அபிவிருத்தி செய்தல் (அதாவது, முழுமை, நடுநிலைமை, மற்றும் வழுக்களிலிருந்து விடுபட்டிருத்தல்) மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையினை விபரிக்கின்ற நியாயபூர்வமாகச் சாத்தியமான அளவீட்டு பெறுபேறுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் வீச்சத்திற்குள் பொருத்தமாகத் தெரிவு செய்யப்பட்ட ஒரு புள்ளி மதிப்பீட்டினை தெரிவு செய்வதில் பொருத்தமான தீர்மானங்களை மேற்கொள்வதை உள்ளடக்கும். இத்தகைய விடயங்களை விபரிக்கும் பிரயோகிக்கத்தகு நிதியறிக்கைச் சட்டகத்தின் தேவைப்பாடுகளின் தன்மையின் அடிப்படையில் இத்தகைய தீர்மானங்கள் தாமாகவே அகவயத்தன்மையை உள்ளடக்கும். உதாரணமாக, புள்ளி மதிப்பீடொன்றினை தெரிவு செய்வதற்கான விசேடமான அடிப்படையொன்றினை (அதாவது நிகழ்தகவுச் சராசரி அல்லது ஒரு சிறந்த மதிப்பீடு) பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகம் தேவைப்படுத்தலாம். இதே போன்று, இந்தச் சூழ்நிலைகளில் நேர்மையான முன்னிலைப் படுத்தலை அடைந்து கொள்வதற்கு தேவைப்படுகின்ற விசேட வெளிப்படுத்தல் நோக்கங்கள் அல்லது மேலதிக வெளிக்காட்டல் நோக்கத்தினை நிறைவுசெய்யும் வெளிக்காட்டல்கள் அல்லது விசேடமான வெளிக்காட்டல்களை இது தேவைப்படுத்தலாம்.

23. அதிகளவான மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மைக்கு ஆளாகின்ற கணக்கீட்டு மதிப்பீடானது குறைவான மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மைக்கு ஆளாகும் கணக்கீட்டு மதிப்பீட்டிலும் பார்க்க குறைந்த துல்லியத்தில் அளவிடக்கூடியதாக இருப்பினும் கணக்கீட்டு மதிப்பீடானது பிரயோகிக்கத்தகு நிதியறிக்கையிடற் சட்டகம் அந்த உருப்படியின் நேர்மையான முன்நிலைப்படுத்தலை அடைவதனை தேவைப்படுத்தும்போது, அந்தக் கணக்கீட்டு மதிப்பீட்டினை நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவுசெய்தல் நிதிக்கூற்றுக்களின் பயனாளிகளுக்கு இன்னும் போதுமான தொடர்புடமையை கொண்டிருக்கலாம். சில சந்தர்ப்பங்களில், பிரயோகிக்கத்தகு நிதியறிக்கைச் சட்கத்தின் ஏற்பிசைவு நியதிகளை எதிர்கொள்ள முடியாதளவுக்கும் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடானது நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்பட முடியாதளவுக்கும் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை அதிகமானதாக அமையலாம். இருப்பினும், இச் சூழ்நிலைகளில், தொடர்புடைய வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள் காணப்படலாம். உதாரணமாக, புள்ளி மதிப்பீட்டினை, அல்லது நியாயபூர்வமான சாத்தியமுள்ள அளவீட்டு பெறுபேறுகளின் வீச்சத்தினையும் மற்றும் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையைப் பற்றியும் அவற்றினை ஏற்பிசைவு செய்வதிலுள்ள தடைகளையும் பற்றிய தகவலையும் வெளிக்காட்ட வேண்டியதற்கான சூழ்நிலையைக் குறிப்பிடலாம். இத்தகைய சூழ்நிலைகளில் பிரயோகிக்கப்படக்கூடிய நிதயறிக்கைச் சட்டகத்தின் தேவைப்பாடுகள் அதிகளவில் அல்லது குறைவானளவில் குறிப்பிடப்படலாம். இதற்கமை, இந்தச் சூழ்நிலைகளில், அகவயத்தன்மையினை ஈடுபடுத்துகின்ற மேலதிக தீர்மானங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

## பின்னிணைப்பு 2

(பார்க்க பந்தி. A146)

### ஆளுமை பாரப்படுத்தப்பட்டோருடனான தொடர்பாடல்

கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் தொடர்பாக, உரிமத்தின் கணக்கீட்டு நடைமுறைகளின் கணிசமான தரம்சார்ந்த பண்புகளைப்பற்றிய கணக்காய்வாளரின் கருத்துக்கள் தொடர்பாக ஆளுமை பாரப்படுத்தப்பட்டோருடனான தொடர்பாடலுக்கு கணக்காய்வாளர் கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் பின்வருவனவற்றினை உள்ளடக்கும்:

(a) கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் ஆகியவற்றுக்கான தேவையில் அல்லது அவற்றின் மாற்றத்திற்கான தேவையில் அதிகரிப்பை ஏற்படுத்தக்கூடிய ஊடுசெயல்கள், ஏனைய நிகழ்வுகள் மற்றும் புறநிலைகளை முகாமை எவ்வாறு இனங்காண்கின்றது என்பதனை.

(b) பொருண்மையான பிறழ்கூற்றுக்களுக்கான இடர்கள்.

(c) நிதிக்கூற்றுக்கள் முழுவதற்குமான கணக்கீட்டு மதிப்பீடுகளின் தொடர்புடைய பொருண்மை.

(d) கணக்கீட்டு மதிப்பீடுகளின் தன்மை, வீச்செல்லை, மற்றும் அவற்றுடன் தொடர்புடைய இடர்கள் ஆகியவற்றிற்கான முகாமையின் விளங்கிக்கொள்ளல் தன்மை (அல்லது அவற்றிலுள்ள பின்னடைவு).

(e) முகாமையானது பொருத்தமான விசேடமான திறன்களை அல்லது அறிவினைப் பிரயோகித்துள்ளதா அல்லது பொருத்தமான நிபுணர்களை பணிக்கமர்த்தியுள்ளதா என்பதும்.

(f) கணக்காய்வாளரின் புள்ளி மதிப்பீடு அல்லது வீச்சத்திற்கும் முகாமையின் புள்ளி மதிப்பீடிற்கும் இடையில் வேறுபாடுகளைப் பற்றிய கணக்காய்வாளரது அபிப்பிராயம்.

(g) கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்பான கணக்கீட்டுக் கொள்கைகளின் தெரிவின் பொருத்தத் தன்மை மற்றும் நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு மதிப்பீடுகளின் முன்னிலைப்படுத்தல் ஆகியவற்றைப் பற்றிய கணக்காய்வாளரின் கருத்துக்கள்.

(h) சாத்தியமான முகாமைப் பக்கச்சார்பிற்கான காட்டிகள்.

(i) கணக்கீட்டு மதிப்பீடுகளின் ஆக்கத்தின் செய்முறைகளில் கடந்தகாலத்துடன் ஒப்பிடுகையில் ஏற்பட்டுள்ள அல்லது ஏற்பட்டிருக்க வேண்டிய மாற்றங்கள் உள்ளனவா.

(j) கணக்கீட்டு மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான செய்முறைகளில் கடந்தகாலத்துடன் ஒப்பிடுகையில் மாற்றமொன்று உள்ளபோது, கடந்தாலத்தில் அதன் பெறுபேறுகள் மற்றும் அதற்குக் காரணங்கள்.

(k) முகாமையானது மாதிரியொன்றினை உபயோகிக்கும் சூழ்நிலையையும் உள்ளடக்கிய முகாமையின் கணக்கீட்டு மதிப்பீடுகளை ஆக்குவதற்கான செய்முறை, பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தின் அளவீட்டு நோக்கங்கள், தன்மை. புறநிலைகள் மற்றும் சூழ்நிலைகளுக்கு பொருத்தமாக உள்ளனவா என்பது.

(l) கணக்கீட்டு மதிப்பீடுகளில் உபயோகித்த கணிசமான எடுகோள்களின் தன்மை, தொடர்விளைவுகள் மற்றும் அவற்றின் ஆக்கத்தில் அகவயத்தன்மையின் அளவு.

(m) கணிசமான எடுகோள்கள் அவற்றிற்கு இடையேயும், கணக்கீட்டு மதிப்பீடுகளில் பயன்படுத்தியவற்றோடு அல்லது உரிமத்தின் வியாபார செயற்பாடுகளின் ஏனைய பகுதிகளில் உபயோகிக்கப்பட்டவற்றோடு இசைவான உள்ளனவா என்பது.

(n) கணிசமான எடுகோள்களின் பொருத்தப்பாட்டுத் தன்மைக்கு அல்லது பிரயோகத்திலுள்ள நிதியறிக்கைச் சட்டகத்தின் பொருத்தமான பிரயோகத்திற்கு தொடர்புடையபோது, முகாமை விசேட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முனைப்பையும் அதற்கான இயலுமையையும் கொண்டிருத்தல்.

(o) முகாமை, மாற்று எடுகோள்களை அல்லது பெறுபேறுகளை எவ்வாறு கருத்தில்கொண்டது என்பதும் அவற்றினை எதற்காக நிராகரித்தது என்பதும், அல்லது முகாமை எவ்வாறு கணக்கீட்டு மதிப்பீட்டினை உருவாக்கும் போது மதிப்பீட்டு நிச்யமற்ற தன்மையை ஏனைய வழியில் கையாண்டது என்பதும்.

(p) கணக்கீட்டு மதிப்பீட்டினை ஆக்கும்போது முகாமையினால் உபயோகிக்கப்பட்ட தரவு மற்றும் கணிசமான எடுகோள்கள் பிரயோக்கத்தகு நிதியறிக்கைச் சட்டகத்தின் கண்ணோட்டத்தில் பொருத்தமானவையா என்பது.

(q) வெளிவாரித் தகவல் மூலத்திலிருந்து பெறப்பட்ட தகவலின் பொருத்தம் மற்றும் நம்பகத்தன்மை

(r) வெளிவாரி தகவல் மூலத்திலிருந்து பெறப்படும் அல்லது முகாமை அல்லது முகாமை நிபுணரால் மேற்கொள்ளப்படும் மதிப்பீடுகள் தொடர்பில் போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்றினைப் பெறுவதில் முகங்கொடுக்கும் கணிசமான பிரச்சினைகள்.

(s) கணக்காய்வாளருக்கும் முகாமைக்கும் அல்லது முகாமையின் நிபுணருக்கும் இடையில் மதிப்பிடல் பற்றிய சுயதீர்மானம் தொடர்பிலான கணிசமான வேறுபாடுகள்.

(t) கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்புபட்ட மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை அடங்கலாக நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட வேண்டிய பொருண்மையான இடர்கள் மற்றும் புறத்தாக்கங்கள் நிதிக்கூற்றுக்கள்மீது கொண்டுள்ள சாத்தியமான தாக்கம்.

(u) நிதிக்கூற்றுக்களில் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை பற்றிய வெளிக்காட்டல்களின் நியாயபூர்வத்தன்மை.

(v) நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிக்காட்டல்களின் ஏற்பிசைவு, அளவீடு, முன்னிலைப்படுத்தல், மற்றும் வெளிக்காட்டல்களுடன் தொடர்புடைய முகாமைத் தீர்மானங்கள் பிரயோகிக்கத்தகு நிதியறிக்கையிடல் சட்டகத்திற்கு அமைவாக உள்ளனவா என்பது.

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.